# INDEX TO

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

*6th to 10th March* 1979

**VOLUME No. CLVII (Nos. 1 to 5)**

©
GOVERNMENT OF TAMIL NADU
1980

*Legislative Council Department*
*Fort. St George, Madras-600 001*

PRICE : 1 Rupee

121774.

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

6TH TO 10TH MARCH 1979.

VOLUME CL VII (Nos. 1 to 5.)

## TABLE OF CONTENTS.


| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu | i—iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... | vii—x |
| *Tuesday, the 6th March* 1979. | |
| I. Questions and Answers ... ... | 1-28 |
| II. Adjournment Motions— | |
| (i) Arrest of Communists ... ... | 29-32 |
| (ii) Disconnection of electricity to the farmers in Coimbatore district ... ... ... | 32—35 |
| III. Calling attention to non-reinstatement of the teachers on suspension by the Management of the Holy Cross College at Tiruchirappalli | 35-38 |
| IV. General discussion on the Budget for the year 1979-80 ... ... ... ... | 38—54 |


D-2 C 76---1

PAGES.

*Saturday, the 10th March 1979.*

I. Questions and Answers ... ... 371–394

II. Information *re* a report in "Indian Express" about a Question by Thiru A. R. Damodaran, M.L.C. ... ... ... ... ... 394—395

III. Call Attention Notices—

(i) Agitation by the Employees Union of Annamalai University ... ... ... 395–396

(ii) Bus accident at Vallam, Thanjavur district towards the end of January 1979 ... 397

IV. General discussion on the Budget for the year 1979-80 ... ... ... ... 398—448

V. Announcement *re* decision of the Business Advisory Committee ... ... ... 421–422

VI. Papers placed on the table of the House 449

Index ... ... ... ... 453–486

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers.*

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings] Establishment, Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-chai of Municipal Administration, Community Development, Panchaya and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdha

11. The HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Ministe in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tami Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommo dation Control.

12. The HONOURABLE THIRU P. SOUNDARAPANDIAN, Ministe in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press Newspaper Control, Hill Tribes and Bonded Labour.

13. The HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Ministe in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Enginee ing Wing, Agro-Service Co-operative Societies and Irrigation includi Minor Irrigation, Agro-Engineering.

15. The HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minist in-charge of Rural Industries including Village, Cottage and Sma Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The HONOURABLE THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The HONOURABLE SELVI P. T. SARASWATHI, Minister in charge of Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas Refugees and Evacuees and Correctional Administration.

18. The HONOURABLE THIRUMATHI SUBBULAKSHMI JEGA DEESAN, Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொதுநிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை. காவல். பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. க. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :-

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ப. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. அ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக்கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சின்கோனா தோட்டங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்டதுறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில்நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி. வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

PAGES.

*Wednesday, the 7th March 1979.*


I. Questions and Answers ... ... 55 91

II. Swearing-in of a Member ... ... 92

III. Privilege Issue *re*

(i) Intimidation of person concerned outside the precincts of the House for a Member delivering a speech in the House ... 92—94

(ii) Closure of M.L.C.'s Gallery in the Legislative Assembly Chamber ... ... 94 112

IV. Adjournment Motion *re* -

(i) Labour problem in relation to Simco Meters Factory at Tiruchirappalli ... 112-121

(ii) Disconnection of electricity to farmers in Coimbatore, Salem and Ramanathapuram districts ... ... ... 121-129

V. Call Attention Notices -

(i) Encroachment on and eviction from, private and public lands in Gudalur taluk in Nilgiris district ... ... ... 129

(ii) Bus accident at Thamaraikulam on Coimbatore-Pollachi road towards the end of January 1979 ... ... ... 130-132

VI. Presentation of the Report of the Committee of Privileges ... ... ... ... 132

VII. General discussion on the Budget for the year 1979-80 ... ... ... 132-149

**VIII. Papers laid on the table of the House ... 150**




PAGES.

*Thursday, the 8th March* 1979.


I. Questions and Answers ... ... 165-201

II. Call Attention Notices -

(i) Non-payment of salaries to teachers of Private High Schools in the Southern Educational District of Tirunelveli ... 201—202

(ii) Non-implementation of the demands of teachers in the schools of Harijan Welfare Department in North Arcot district ... 202-204

III. General discussion on the Budget for the year 1979 80 ... ... ... 204-248


*Friday, the 9th March* 1979.


I. Questions and Answers ... ... 267-292

II. Announcement *re* Message from the Assembly *re* ... ... ... ... ... 292

III. Statement under Rule 82 of the Council Rules *re* Electricity tariff rates for agriculturists ... ... ... ... 293—295

IV. Call Attention Notices -

(i) Agitation of the teachers of Haji Karutha Rowthar College, Uthamapalayam, Madurai district ... ... ... ... 295—296

(ii) Death of two labourers due to burst of turbine in E.I.D. Parry Sugar Factory at Nellikuppam ... ... ... ... 297-299

V. Bill -

The Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 12 of 1979) ... 299 315

VI. General discussion on the Budget for the year 1979 80 ... ... ... ... 316-362

VII. Papers placed on the table of the House ... 363

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்றுவாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக்கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்து துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.

15. மாண்புமிகு திரு. கா. இராசாமுகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறுதொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :— நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கைத்தறி, கதர், நெசவு, நூல்.



## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**

திரு. ம. பொ. சிவஞானம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**

திரு. ஜி. சுவாமிநாதன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. ஏ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

**மேலவைச் செயலாளர்**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**சார்புச் செயலாளர்**

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

**விவாதப் பதிவாளர்**

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

**தலைமை நிருபர்.**

திரு. ச. சுவாமிநாதன்.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், திரு. கே. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2 அறிவழகன், திரு. க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 ஆறுமுகம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| 6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி, மன்றத் தொகுதி. |
| 8 இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 எலமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.,ஏ. பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சங்கரலிங்கம், திரு. ம. எம்.ஏ. | திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 சந்தோஷம், திரு. டி., எம்.ஏ.,பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 49 வெற்றிடம் .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் .. .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

**செவ்வாய்க்கிழமை, 1979 மார்ச் 6.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை **மண்டபத்தில் பிற்பகல்** 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் **(திரு. ம. பொ. சிவஞானம்)** அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Arrears of Electricity Consumption Charges.*

* 111 *Q.*—THIRU A. NALLASIVAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that some big landlords of Tiruchirappalli, Salem, Coimbatore and North Arcot districts have not paid Electricity Consumption Charges; and

(*b*) if so, the action taken against them ?

### மின் கட்டண பாக்கி.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள சில பெரிய நிலச்சுவான்தார்கள் மின் கட்டணம் செலுத்தாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) பெரிய மற்றும் சிறிய விவசாயிகள் சிலர் மின் கட்டணம் செலுத்தாமலிருக்கிறார்கள். பெரிய நிலச்சுவான்தார்கள் குறித்து தனியாக விவரங்கள் இல்லை.

(இ) இது அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டிமாண்டி, திரு. டி. வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு. ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு. ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 வெற்றிடம் .. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசுவாமி திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு. மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு. ஸ். ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 36 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 39 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 40 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 41 ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 லெட்சுமிகாந்தன், திரு. மி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 43 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 44 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 45 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 47 ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 48 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |

[1979 மார்ச் 6

**திரு. ஆ. நல்லசிவன் :** நான்கு மாவட்டங்களிலும் மின் கட்டணத்திற்கான பணம் பாக்கி வைத்திருக்கிற பெரிய நிலச்சுவான்தார்களுடைய பட்டியல் ஏதாவது அரசு தயாரித்திருக்கிறதா? அவர்கள் யார் யார் என்ற விவரத்தை அவையிலே அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு மின் கட்டணம் கட்டாதவர்கள் அனைவருமே மின்சார இணைப்பு துண்டிப்புக்குத் தகுதியானவர்கள்தான். அதில் சிறிய விவசாயி பெரிய விவசாயி என்ற பேச்சுக்கு இடமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** மின்சாரத் துறையைப் பொறுத்தவரை, மின் கட்டணம் கணக்கிடப்படும்போது அவர்களுடைய நிலத்தின் அடிப்படையில் மின் கட்டணம் கணக்கிடப்படுகின்றதா, அல்லது வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நிலத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அய்ந்து ஏக்கர் புஞ்சை அல்லது 2½ ஏக்கர் நஞ்சைக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் பெரிய விவசாயிகள். அதற்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் சிறிய விவசாயிகள். அந்த அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** வரி கொடா இயக்கம் தென் மாவட்டங்களில் எங்கேயாவது இருக்கிறதா? மதுரை, இராமநாதபுரம் போன்ற தென் மாவட்டங்களில் வரி வசூலிக்கப்படாமல் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வரி கொடா இயக்கம் என்பது வேறு. மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய மின் கட்டணத்தைச் செலுத்தாமலிருப்பது என்பது வேறு.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நான் வரிகொடா இயக்கம் என்று குறிப்பிடுவது மின் கட்டணம் செலுத்தாமல் இருப்பதைப்பற்றித் தான். ஆகவே மதுரை, இராமநாதபுரம் போன்ற தெற்கு மாவட்டங்களில் கூட இதுமாதிரி யாராவது மின் கட்டணம் செலுத்தாமல் இருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தெற்கு மாவட்டங்களில் கூட மின் கட்டண பாக்கி இருக்கிறது.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம் :** விவசாயிகள் மின்சாரத் துறைக்குச் செலுத்த வேண்டிய மொத்த பாக்கித் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒன்பது கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது.



1979 மார்ச் 6]

**திரு. ம. சங்கரலிங்கம் :** விவசாயிகள் மின் கட்டண பாக்கியைக் கட்டாமலிருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன? அவர்கள் வைக்கின்ற கோரிக்கை என்ன? அதில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மின் கட்டணத்தைப் பொறுத்தவரை, அவர்களிடமிருந்து கோரிக்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே உயர்த்தப்பட்டிருந்த மின் கட்டணமான 16 காசைத் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். பெரிய விவசாயிகளுக்கு 14 காசு என்றும் சிறிய விவசாயிகளுக்கு 12 காசு என்றும் ஏற்கெனவே இருந்த மின் கட்டணம் குறைக்கப்பட்டது. ஆகையினால் மின் கட்டணத்தைப் பொறுத்தவரை, பிரச்சினை ஒன்றும் இல்லை. வேறு பல கோரிக்கைகளை அவர்கள் எழுப்பி வருகிறார்கள். அவைகளை உயர் மட்டக் குழு பரிசீலித்து வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** மின் கட்டணத்தைச் செலுத்தாத தொழிற்சாலையின் தொழிலதிபர்கள் குறிப்பிட்ட காலக் கெடுக்குள் மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென்று காலக் கெடு கொடுத்தது. அப்படியும் அவர்கள் கட்டவில்லையென்றால், மின்சார இணைப்பு துண்டிக்கப்படுகிறதா? நிலச் சொந்தக்காரர்களைப் பொறுத்தவரையிலும் கூட, அந்த முறைதான் கையாளப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** குறிப்பிட்ட காலக் கெடுக்குள் கட்டாதவர்களிடமிருந்து சில நேரங்களில் சர்சார்ஜ் பெனல்டி என்று வசூலிக்கப்படுகிறது. தொழிற்சாலை என்று சொல்லும்போது, மின்சார இணைப்புத் துண்டிப்பு என்று வரும்போது, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கு பணிபுரிவதால், பல்வேறு சிரமங்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. அதுமாதிரி ஒரு நிலை வர வேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறாரா?

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம்:** விவசாயிகளிடமிருந்து கட்டணம் வசூல் செய்ய வேண்டியிருந்தால், அது இன்ஸ்டால்மென்ட் பேசிஸ்-ல் வசூல் செய்யப்படுமா? அவர்களுக்கு அந்தச் சலுகையை வழங்கி மின் துண்டிப்பு செய்வதினின்று பாதுகாப்பு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஒழுங்காகக் கட்டிக்கொண்டிருக்கின்றவர்கள் என்றால், நிச்சயமாக இன்ஸ்டால்மென்ட் பேஸிஸ்-ல் கட்டுவது பற்றிக் கனிவாகப் பரிசீலிக்கலாம். தவணை முறையில் கட்டுவதைப் பொறுத்தவரை, இப்பொழுது அங்குள்ள நிலைமைகளுக்கேற்ப அவ்வப்போது அங்கேயுள்ள என்ஜினியர்களே தரலாம் என்று ஏற்கெனவே உத்தரவு இருக்கிறது. அப்படியும் கட்டாதவர்களுக்குத் தான் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Generation of Electricity.

* 112 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any scheme under the consideration of the Government to generate electricity by utilising sea water or sunlight; and

(b) if so, the details thereof ?

## மின் சக்தி உற்பத்தி.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடல்நீர் அல்லது சூரிய ஒளி ஆகியவற்றைப் பயன்படுத்தி மின் சக்தி உருவாக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இயற்கையாகக் கிடைக்கின்ற கடல்நீர் அல்லது சூரிய ஒளி ஆகியவற்றைப் பயன்படுத்தி மின்சாரத்தைத் தயாரிப்பதில் ஏதாவது தடைகள் இருக்கின்றனவா அல்லது வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இதெல்லாம் ஆய்வு என்கிற நிலையில் இருக்கின்றன.

A proposal has been received by the Tamil Nadu Electricity Board from Messrs. Sea-Solar Power Corporation of U.S.A. to undertake a preliminary investigation and feasibility study for harnessing Sea-Solar Power near the Tamil Nadu sea coast. The Ministry of Energy, Government of India has been addressed by the Tamil Nadu Electricity Board requesting the Central Government to obtain necessary assistance from the USAID Mission for taking up the investigation.



கள் இருப்பதால், பல்வேறு நாடுகளும் ஆராய்ந்து வருகின்றன. அதை வணிக ரீதியில் தயாரித்துப் பயன்படுத்துகின்ற அளவுக்கு இன்னும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ்:** பல்வேறு நாடுகள் கடல் அலைகளிலிருந்து மின்சாரத்தைத் தயாரித்திருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. நம்முடைய நாட்டிலே கிழக்குப் பகுதியிலே ஏராளமான கடல் பகுதிகள் இருப்பதால், அதைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கடல் பகுதி ஏராளம் இருப்பதால், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறோம்.

**திரு. பி. மாணிக்கம்:** சென்னையிலுள்ள இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் சூரிய வெப்பத்திலிருந்து கட்டுப்படி ஆகக்கூடிய கட்டணத்தில் மின்சாரத்தைத் தயாரிக்க முடியும் என்றும் ஏற்கெனவே அதுமாதிரி தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் செய்தி வந்திருக்கிறது. டொமஸ்டிக் அப்ளையன்ஸ்—வீடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய சிறிய சாதனங்களுக்குத் தேவைப்படும் மின்சாரத்தைத் தயாரிக்கக்கூடிய சக்தி அதனிடம் இருப்பதாலும், அதற்கு நிறைய தேவையிருப்பதாலும், அதைத் தமிழக அரசு பரிசீலித்து அதை உருவாக்க முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அதுபற்றி அரசு ஆராயும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சென்னை மாநகராட்சியிலே பணியாற்றக்கூடிய ஒரு மின்சார பொறியியல் வல்லுநர் தமிழகத்திலே அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவை விட கடல் அலைகளிலிருந்து எடுக்கின்ற மின்சாரத்தின் கட்டணம் செலவு குறைவாக இருக்கிறது என்றும் அதற்கான பரிசோதனை எல்லாம் செய்து, அதை மின்சார வாரியத்திற்கு அனுப்பியதாகவும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றிய தகவல் அரசுக்குத் தெரியுமா? நிலக்கரிப் பற்றாக்குறை, அதைக் கொண்டுவருவதில் உள்ள பிரச்சினை இப்படிப்பட்ட சிரமங்கள் எல்லாம் இருக்கின்ற இன்றைய சூழ்நிலையில் கடல் அலைகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா ?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய தகவல் ஒன்றை இப்பொழுது கொடுத்திருக்கின்றார்கள். இந்தத் தகவல் அரசுக்குக் கிடைக்குமேயானால், நிச்சயமாக அதுபற்றி ஆராயலாம்.

**திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்:** உண்மையிலே மதுரையிலே பள்ளிக்கூட மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து ஒரு பொருட்காட்சி நடத்தினார்கள். அதிலே கடல் நீரிலிருந்து எப்படி மின்சாரத்தைத் தயாரிப்பது என்பதை நடைமுறையில் காண்பித்தார்கள். அப்பொழுது அதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கூட பாராட்டினார்கள். உண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூட சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆய்வு துவங்கப்பட்டுள்ளது. நம்முடைய நாட்டிலுள்ள இளைஞர்களிடம் நல்ல ஆக்க சக்தி இருக்கிறது. இளைஞர்களிடம் நல்ல சக்தி இருக்கும்போது, அரசுத் துறையில் என் முயற்சி செய்து அவர்களது சக்தியை அரசாங்கம் பயன் படுத்தக்கூடாது? அவர்களது சக்தியை அரசாங்கம் ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கடல் அலைகளிலிருந்தும் சூரிய ஒளியிலிருந்தும் மின்சாரம் எடுப்பது சாத்தியமே. ஆனால் அதை வணிக ரீதியாகச் செய்ய முடியுமா என்பது சந்தேகம். அப்படித் தயாரிப்பதாக இருந்தால் யூனிட் ஒன்றுக்கு 50 காசு, 60 காசு என்று வருகிறது. அது கட்டுப் படி ஆகாது. ஆகவே இவற்றைத் தயாரிக்கும்போது முன்னேறிய நாடுகளை அணுக வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** திரு. வெங்கடராமன் அவர்கள் மின்சார அமைச்சராக இருந்தபோது வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார்கள். வெளி நாடுகளில் கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுகிறது—குறிப்பாக அமெரிக்காவில் கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுவதாக அறிக்கை கூடக் கொடுத்திருந்தார்கள். அப்போது அவர்கள் கடல் நீரிலிருந்து மின் சாரம் எடுப்பது பற்றிப் பரிசீலிப்போம் என்று கூடச் சொன்னார்கள். முன்னாள் அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி பரிசீலனை செய்யப்பட்டு ஒரு முடிவுக்கு வரப்பட்டதா? கட்டுப்படியாகக் கூடிய மின் சக்தியைத் தயாரிக்க முடியும் என்று அவர்கள் ஆராய்ந்திருக்கிறார்களா? அதைப்பற்றி இப் போதைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கு ஏதாவது தகவல் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** முன்னாள் மின்சார அமைச்சரவர்கள் வெளி நாடுகளுக்குப் போனது தெரியும். உறுப்பினர் சொன்ன விவரம் தெரியாது. இருந்தாலும் இன்றையதினம் கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுப்பதுபற்றி பல்வேறு நாடுகளும் ஆராய்ந்து வருகின்றன. குறிப்பாக இப் பொழுது பெட்ரோல் பற்றாக்குறை, விலை உயர்வு இப்படிப்பட்ட பிரச்சினை





எல்லைப் பொறுத்தவரை, இதுவரை ஆராய்ந்து பார்த்ததில் அனல் மின் சாரம் உற்பத்தி செய்ய ஆகின்ற செலவை விட கடல் அலைகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய ஆகின்ற செலவு குறைவாக இருப்பதாகத் தெரிய வில்லை. உறுப்பினர் சொல்லுவதுமாதிரி இருந்தால், அது வரவேற்கக்கூடிய தாக இருக்கும்.

## *Film Studios.*

* 113 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of acres of lands held by each Film Studio in Tamil Nadu?

### திரைப்படத் தயாரிப்பு நிலையங்கள்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் உள்ள திரைப்படத் தயாரிப்பு நிலையங்கள் Studios, ஒவ்வொன்றும் எத்தனை ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைந்துள்ளன?

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தமிழகத்திலுள்ள திரைப்படத் தயாரிப்பு நிலையங்களைப் பொறுத்தவரையில், சென்னையில் 4, செங்கற்பட்டு மாவட்டத்தில் 8, சேலம் மாவட்டத்தில் 2 என்றும் இருக்கின்றன. சென்னை மாவட்டத்தில் இருக்கிற 4 திரைப்படத் தயாரிப்பு நிலையங்களின் மொத்த விஸ்திரணம் 50.3 ஏக்கர். செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற 8 திரைப் படத் தயாரிப்பு நிலையங்களின் மொத்த விஸ்திரணம் 86.08 ஏக்கர். சேலம் மாவட்டத்தில் இருக்கிற 2 திரைப்படத் தயாரிப்பு நிலையங்களின் மொத்த விஸ்திரணம் 33.06 ஏக்கர்.

திரு. க. இராமமூர்த்தி: திரைப்படத் தயாரிப்பு நிலையங்களில் பல, நகர்ப்புற நில உச்சவரம்பிலிருந்து தப்பிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவர்களுடைய திரைப்படத் தொழிலைக் கைவிட்டு, அந்த நிலையங்களை Godown களாக மாற்றி வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன என்பதும், திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு சிலர்கூட தங்களிடம் தேவைக்கு அதிகமான நிலங்களை வைத்துக்கொண்டு எப்படியாவது சட்டத்தின் பிடி யிலிருந்து தப்பித்துக்கொண்டு வசதிபடைத்த புதிய நிலப் பிரபுக்களாக இருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அவர்கள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இத்திரைப்படத் தொழில் நிலையங்களை உடையவர்கள், புதிய நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தில் எவ்வாறு சிக்கிக்கொள்கிறார்கள் என்ற தகவலும், அப்படிச் சிக்கிக் கொள் வதிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்கிறார்கள் என்ற தகவலும், அப்படித் தப்பித்துக்கொள்வதற்கு அவர்கள் என்னென்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலும் என்னிடம் இல்லை. இப்படிப்பட்ட தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்தால், அரசு பரிசிலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறது என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: எல்லாத் துறைகளிலும் சமத்துவத்தை அடைய வேண்டுமென்ற நோக்கில் அதனை அடைய வேண்டுமென்று வேகமாக நடை போடும் இந்த அரசு, திரைப்படத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற சில மிகப்பெரிய முதலாளிகளுக்குத் தலைவணங்கிப் போகிறதோ என்ற நிலை இல்லாமலிருக்க, இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா? இதனை அரசு தன்னுடைய கொள்கையாக ஏற்று அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலை வணங்குவது எதற்கு, தலை வணங்காமலிருப்பது எதற்கு என்று பார்க்கிறபோது, இத்துறையி லுள்ள முதலாளிகளுக்குத் தலைவணங்கத் தேவையில்லை என்றே கருது கிறேன். இந்த அரசாங்கம் யாருக்கும் தலைவணங்காது. ஆனாலும் இத் துறையில் எங்கேனும் தவறுகள் இருந்தால், அவைகள் கண்டுபிடிக்கப்பட்டு தெரிவிக்கப்படுமானால் இந்த அரசு ஆவன செய்யத் தயாராக இருக்கிறது என் பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: சென்னை நகரத்திலுள்ள திரைப்படத் தயாரிப்பு நிலையங்களிலொன்றான "சத்தியா ஸ்டுடியோ" சென்னை நகரில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்திருந்ததா? தற்போது அந்த நிலம் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டதா? இல்லையென்றால் அரசாங்கம் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்த நிலம் அரசாங்கத்திற் குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டது.



## "Auroville" Nagar.

*114. Q.—Thiru K. Ramamoorthi: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the extent of dry, wet and other lands in Tindivanam taluk assigned by the State Government for the purpose of "Auroville" Nagar;

(b) the number of villages vacated for this purpose; and

(c) the extent of lands which the State Government acquired by way of land acquisition?

## "ஆரோவில்" நகர்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் வட்டத்தில், "ஆரோவில்" நகர் விரிவாக்கத்திற் கென்று மாநில அரசால் ஒதுக்கப்பட்ட நன்செய், புன்செய் மற்ற நிலங்களின் பரப்பளவு யாது?

(ஆ) இக்காரியத்திற்காகக் காலி செய்யப்பட்ட கிராமங்கள் எத்தனை?

(இ) நிலம் கையகப்படுத்துதல் மூலம் மாநில அரசுக்குக் கிடைத்த நிலத்தின் பரப்பளவு யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) முதல் (இ) வரை இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: ஆரோவில் நகரின் விரிவாக்கத்திற்காக அரசு தன்னுடைய நிலம் எதையும் கொடுக்கவில்லை என்றாலுங்கூட, ஆரோவில் நகரத்திற்காக என்று தனியாரிடமிருந்து நிலத்தை வாங்கிக்கொள்ள ஏற் கெனவே இருந்த அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதன் மூலமாக எவ்வளவு நிலப்பரப்பு ஆரோவில் நகரத்திற்காக அதன் அமைப்பாளர்கள் வாங்கியிருக்கிறார்கள்? அந்த நிலங்களெல்லாம் எந்தக் காரணத்திற்காக வாங்கப்பட்டனவோ அந்தக் காரணங்களுக்காகத்தான் பயன்படுத்தப் படுகின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆரோவில் நகரமைப்பிற்காக, இந்த அரசைப் பொறுத்தவரையில், நிலமேதும் அவர்களுக்குக் கொடுக்க வில்லை என்பதை நான் முன்னமேயே தெரிவித்துவிட்டேன் — தனியாரிடம் அந்த நகரமைப்பக்கா—

என்ற தகவல் என்னிடம் இல்லை. அதைப் போலவே அவ்வாறு வாங்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் அந்தக் காரணங்களுக்காகத்தான் பயன்படுகின்றனவா என்ற தகவலும் என்னிடமில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தர இயலும்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆரோவில் என்ற நகரமைப்பிற்காக மத்திய அரசு, நமது மாநில அரசு மற்றும் புதுவை மாநில அரசு ஆகிய மூன்று அரசுகளும் தொடர்புகொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன. அவைகளில் ஒன்று தமிழகத்தின் நிலங்களை ஆரோவில் நகர விஸ்தரிப்பிற்காக ஏற்பது. அந்தத் திட்டம் அன்றையதினம் எதற்காக அங்கீகரிக்கப்பட்டதோ அந்த எண்ணம் ஈடேறவில்லை, நிறைவேறவில்லை; அந்தத் திட்டம் தோற்றுவிட்டது என்று அந்த நிர்வாகஸ்தர்களே அறிவித்துவிட்டார்கள். அந்த நகரமைப்புக்காக திண்டிவனம் தாலுக்காவிலிருந்து ஏராளமான நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த நிலங்கள் மீண்டும் அவைகளுக்கு உரியவர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்ற வகையில் அரசு உதவுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** ஆரோவில் நகர நிர்வாகஸ்தர்களே இந்தத் திட்டம் தோற்றுவிட்டது என்றும், அந்த நகரமைப்புக்கான அடிப்படை எண்ணத்தை அடையத் தவறிவிட்டோம் என்றும் சொல்லிவிட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் கூறியது உண்மை என்றால், நான் அந்த நிர்வாகஸ்தர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், காரணம் அவர்கள் உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே அரசு அந்தத் திட்டத்திற்காக என்று நிலமேதும் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டேன். தனியாரிடம் அந்த நிருவாகம் நிலம் பெற்று, அந்த நிருவாகம் சரியாகச் செயல்படாமல் அந்தக் காரியத்திற்காக அந்த நிலங்கள் பயன்படவில்லை என்று தெரிந்தால், அந்த நிலங்களை மீண்டும் தனியார்கள் பெற விரும்பினால், அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவி அரசு தயாராக இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆரோவில் நகரத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய உடமையாளர்கள் நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு உட்படுகிறார்களா இல்லையா? ஒருவேளை அவர்களிடம் இருக்கும் நிலங்கள் உச்ச வரம்புச் சட்டத்திற்கு மேற்பட்டிருந்தால், அந்தச் சட்டத்திற்கு மீறியுள்ள, அதிகப்படியான நிலங்களை அரசு கைப்பற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நில உச்ச வரம்புச் சட்டம் வந்ததற்குப் பிறகுதான், இந்தத் திட்டமே ஆரம்பிக்கப்பட்டது என்று நான் கருதுகிறேன். உச்ச வரம்பிற்கு மேலும் அவர்களிடம் நிலம் இருக்கிறது என்ற நிலை வரும்போது, நிச்சயமாக அரசு அதை மேற்கொள்ளும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** வினாவின் 3-வது பிரிவில் "நிலம் கையகப் படுத்துதல் மூலம் மாநில அரசுக்குக் கிடைத்த நிலத்தின் பரப்பளவு யாது" என்று கேட்கப்பட்டிருக்கிறது. அரசு நிலம் மட்டுமல்லாமல் இத்திட்டத்திற்காக வேறு நிலங்களையும் கையகப்படுத்திக் கொடுத்திருக்கிறதா என்று கேட்கப்பட்டிருப்பதால், தனியாரிடம் நிலம் பெறப்பட்டிருந்தாலும் அது சம்பந்தமாகத் தகவல் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது சரியல்ல. அந்தத் தகவலையும் சேகரித்துக் கொடுப்பதுதான் முறையாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, அரசு நிலம் ஏதும் ஒதுக்கவில்லை என்று பதிலளித்த காரணத்தால், இந்தக் கேள்விக்கு இடமில்லை. இதுவரையிலும் அரசு நிலம் ஏதும் கையகப்படுத்திக் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 115, 116, 117, 118 ஆகிய வினாக்கள் ஒரே விஷயத்தைப் பற்றியவையாக இருப்பதால், அவைகள் மொத்தமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## *Remuneration for Paper Valuation.*

* 115. Q.—THIRU D. SANTOSHAM and THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the remuneration per paper that is now being paid to teachers who value the Secondary School Leaving Certificate Examination answer papers;

(b) when this rate was fixed; and

(c) whether there is any proposal to increase it ?

## விடைத்தாள் மதிப்பிடும் பணிக்கு ஊதியம்.

**திரு. டி. சந்தோஷம் & திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு விடைத்தாள்களை மதிப்பிடும் ஆசிரியர்களுக்கு ஒரு விடைத்தாளுக்கு எவ்வளவு ஊதியம் தற்பொழுது வழங்கப்படுகிறது?

(இ) இந்த வீதம் எப்பொழுது நிர்ணயிக்கப்பட்டது?

(உ) அதை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) செக்ரெடேரியல் பிரிவின் கீழ் உள்ள தட்டச்சுத்தாள் தவிர இரண்டு மணிக்கு மேல் கால அளவுள்ள வினைய பாட விடைத்தாள் ஒன்றை மதிப்பிடுவதற்கு ரூபாய் 1 ஊதியமாக வழங்கப் படுகிறது. இரண்டு தாள்கள் கொண்ட தட்டச்சுப் பாடத்தாளுக்கு ரூபாய் 1.25 ஊதியமாக வழங்கப்படுகிறது. (அதாவது முதல் தாளுக்கு 50 காசும் இரண்டாம் தாளுக்கு 75 காசும்).

(இ) இந்த ஊதியம் 1971-ம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

(உ) இல்லை.

* 116 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the rate of Daily Allowance paid to teachers who come to Madras from out-stations for Central Valuation of S.S.L.C. answer papers;

(b) the rate of Daily Allowance paid to such teachers, who come to Madurai for such purpose; and

(c) whether there is any proposal to increase the Daily Allowance of the latter to that of the former?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு விடைத்தாள்களைத் திருத்துவதற்காக வெளி இடங்களிலிருந்து சென்னைக்கு வரும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நாட்படி வீதம் எவ்வளவு?

(இ) இதற்காக மதுரைக்கு வரும் இத்தகைய ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் நாட்படி வீதம் எவ்வளவு?

(உ) பின்னவர்களுக்கு வழங்கப்படும் நாட்படி வீதத்தை, முன்னவர்களுக்கு வழங்கப்படும் வீதத்தைப் போல் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (இ) 1—10—1978-க்கு முன்பு (அதாவது மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்தப்பட்ட நாட்படி வெளியிடப்படுவதற்கு முன்) பல நிலை அரசு ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்ட நாட்படியின் வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நிலை. (1) | ஊதிய எல்லை. (2) | வீதம். (3) |
|---|---|---|
| பிரிவு 5 | சம்பளம் ரூ. 200-ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 400-க்குக் கீழ். | நாளொன்றுக்கு ரூ. 6 |
| பிரிவு 4 | சம்பளம் ரூ. 400-ம் அதற்கு மேலும். | நாளொன்றுக்கு ரூ. 8 |
| பிரிவு 3 | இந்திய அரசிதழ் பதிவு பெற்ற ஊழியர்கள் | நாளொன்றுக்கு ரூ. 10. |

மதுரையிலுள்ள மதிப்பீடு மையங்களில் பணிபுரிய வருபவர்களுக்கு மேற் குறிப்பிட்டவாறு நாட்படி வழங்கப்பட்டது. சென்னையிலுள்ள மதிப்பீடு மையங்களில் பணிபுரிய வருபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட விகிதத்தைப்போல் ஒன்றரை மடங்கு நாட்படி வழங்கப்பட்டது.

விதிகளின்படி பல நிலை அரசு ஊழியர்களுக்கு 1—10—1978 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ள நாட்படியின் வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| நிலை. 1 | ஊதிய எல்லை (திருத்தப்பட்டது). 2 | நாட்படி வீதம். 3 |
|---|---|---|
| பிரிவு 1 | அடிப்படை சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 1,200 அதற்கு மேலும் உள்ளவர்கட்கு. | ரூ. 15 |
| பிரிவு 2 | அடிப்படை சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 500 அதற்கு மேலும் ஆனால் ரூ. 1,200-க்குட்பட்டவர்கட்கு. | ரூ. 10 |
| பிரிவு 3 | அடிப்படைச் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 350-ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 500-க் குட்பட்டவர்களுக்கு. | ரூ. 6. |
| பிரிவு 4 | அடிப்படை சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 350-க்குக் குறைவாய் உள்ளவர் கட்கு | ரூ. 4. |

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இத்திரைப்படத் தொழில் நிலையங்களை உடையவர்கள், புதிய நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தில் எவ்வாறு சிக்கிக்கொள்கிறார்கள் என்ற தகவலும், அப்படிச் சிக்கிக் கொள்வதிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்கிறார்கள் என்ற தகவலும், அப்படித் தப்பித்துக்கொள்வதற்கு அவர்கள் என்னென்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலும் என்னிடம் இல்லை. இப்படிப்பட்ட தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்தால், அரசு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** எல்லாத் துறைகளிலும் சமத்துவத்தை அடைய வேண்டுமென்ற நோக்கில் அதனை அடைய வேண்டுமென்று வேகமாக நடைபோடும் இந்த அரசு, திரைப்படத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கி[ற] சில மிகப்பெரிய முதலாளிகளுக்குத் தலைவணங்கிப் போகிறதோ என்ற நிலை இல்லாமலிருக்க, இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா? இதனை அரசு தன்னுடைய கொள்கையாக ஏற்று அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலை வணங்குவது எதற்கு, தலை வணங்காமலிருப்பது எதற்கு என்று பார்க்கிறபோது, இத்துறையிலுள்ள முதலாளிகளுக்குத் தலைவணங்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன். இந்த அரசாங்கம் யாருக்கும் தலைவணங்காது. ஆனாலும் இத்துறையில் எங்கேனும் தவறுகள் இருந்தால், அவைகள் கண்டுபிடிக்கப்பட்டு சொல்லப்படுமானால் இந்த அரசு ஆவன செய்யத் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சென்னை நகரத்திலுள்ள திரைப்படத் தயாரிப்பு நிலையங்களிலொன்றான "சத்தியா ஸ்டூடியோ" சென்னை நகரில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்திருந்ததா? தற்போது அந்த நிலம் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டதா? இல்லையென்றால் அரசாங்கம் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அந்த நிலம் அரசாங்கத்திற்குத் திரும்பக் கொடுக்கப்பட்டுவிட்டது.



## "Auroville" Nagar.

* 111. Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the extent of dry, wet and other lands in Tindivanam taluk assigned by the State Government for the purpose of "Auroville" Nagar;

(b) the number of villages vacated for this purpose; and

(c) the extent of lands which the State Government acquired by way of land acquisition?

## "ஆரோவில்" நகர்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் வட்டத்தில், "ஆரோவில்" நகர் விரிவாக்கத்திற்கென்று மாநில அரசால் ஒதுக்கப்பட்ட நன்செய், புன்செய் மற்ற நிலங்களின் பரப்பளவு யாது?

(இ) இக்காரியத்திற்காகக் காலி செய்யப்பட்ட கிராமங்கள் எத்தனை?

(உ) நிலம் கையகப்படுத்துதல் மூலம் மாநில அரசுக்குக் கிடைத்த நிலத்தின் பரப்பளவு யாது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) முதல் (உ) வரை இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆரோவில் நகரின் விரிவாக்கத்திற்காக அரசு தன்னுடைய நிலம் எதையும் கொடுக்கவில்லை என்றாலும்கூட, ஆரோவில் நகரத்திற்காக என்று தனியாரிடமிருந்து நிலத்தை வாங்கிக்கொள்ள ஏற்கெனவே இருந்த அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதன் மூலமாக அதன் அமைப்பாளர்கள் எவ்வளவு நிலப்பரப்பு ஆரோவில் நகரத்திற்காக வாங்கியிருக்கிறார்கள்? அந்த நிலங்களெல்லாம் எந்தக் காரணத்திற்காக வாங்கப்பட்டனவோ அந்தக் காரணங்களுக்காகத்தான் பயன்படுத்தப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** ஆரோவில் நகரமைப்பிற்காக, இந்த அரசைப் பொறுத்தவரையில், நிலமேதும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்பதை நான் முன்னமேயே தெரிவித்துவிட்டேன். எங்கெந்தத் தனியாரிடம் அந்த நகரமைப்புக்காக அவர்கள் நிலம் வாங்கியிருக்கிறார்கள்

மதுரையிலுள்ள மதிப்பீடு மையங்களில் பணிபுரிய வருபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட வாறு திருத்தப்பட்ட நாட்படி வழங்கப்படுகிறது. சென்னையிலுள்ள மதிப்பீடு மையங்களில் பணிபுரிய வருபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட விகிதத்தைப்போல் ஒன்றரை மடங்கு நாட்படி வழங்கப்படுகிறது.

(உ) அத்தகைய கருத்துரு ஒன்றுமில்லை.

* 117 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state the Daily Allowance given for correcting S.S.L.C. Answer Papers, in the Cities of Madras, Coimbatore and Madurai respectively ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள் திருத்தும் பணிக்கு சென்னை, கோவை, மதுரை நகரங்களில் முறையே தரப்படும் தினப்படி எவ்வளவு

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தமிழ்நாடு பயணப்படி விதிகளின்படி பலநிலை அரசு ஊழியர்களுக்கு 1—10—1978 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ள நாட்படியின் விவரம் பின்வருமாறு :—

| நிலை. | திருத்தப்பட்ட ஊதிய எல்லை. | அனுமதிக்கப்படும் நாட்படி |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| பிரிவு 1 | அடிப்படைச் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 1,200—ம் அதற்கு மேலும் உள்ளவர்கட்கு. | ரூ. 15. |
| பிரிவு 2 | அடிப்படைச் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ.500-ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 1,200-க்குட்பட்டவர்கட்கு, | ரூ. 10. |

| லை. | திருத்தப்பட்ட ஊதிய எல்லை. | அனுமதிக்கப்படும் நாட்படி. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| பிரிவு 3 | அடிப்படைச் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 350-ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 500-க்குட்பட்டவர்கட்கு. | 6 |
| பிரிவு 4 | அடிப்படைச் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 350-க்குக் குறைவாய் உள்ளவர் கட்கு. | ரூ. 4 |



கோவை, மதுரை நகரங்களில் உள்ள மதிப்பீடு மையங்களில் பணிபுரிய வருபவர்களுக்கு மேற்குறிப்பிட்டவாறு நாட்படி வழங்கப்படும், சென்னையிலுள்ள மதிப்பீடு மையங்களில் பணிபுரிய வருபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட விகிதத்தைப்போல் ஒன்றரை மடங்கு நாட்படி வழங்கப்படும்.

* 118. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government have been disbursing the Travelling and Daily Allowances and Remuneration to the Chief Examiners and Assistant Examiners on the spot at the S.S.L.C. Valuation Centres ; and

(b) if so, whether there is any proposal to adopt the same procedure for the invigilation work also ?

**திரு. பி. ஆர். தாமஸ்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு விடைத்தாள்களைத் திருத்தும் இடங்களில் பணியாற்றும் தலைமைத் தேர்வாளர்களுக்கும் உதவித் தேர்வாளர்களுக்கும் உரிய பயணப்படிகள், தினப்படிகள் மற்றும் ஊதியங்களை, அரசு, அந்தந்த இடங்களிலேயே வழங்கி வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், தேர்வுக் கண்காணிப்புப் பணிக்கும் அதே நடைமுறையைப் பின்பற்றும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : (அ) ஆம்.

(இ) தேர்வு மையங்களில் பணிபுரியும் தலைமைக் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர் மற்றுமுள்ளோர்களுக்கு மதிப்பீடு மையங்களில் வரும் தலைமை ஆய்வாளர் மற்றுமுள்ளோருக்குக் கொடுப்பது போல பயணப்படி மற்றும் நாட்படி வழங்கும் யோசனை இல்லை. ஆயினும் நிலையான கைம்மாறு ஊதியம் அவர்களுக்கு கடைசித்தேர்வு நாளன்று கொடுக்கப்படுகிறது.

(பிற்பகல் 4-30)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : வினா எண் 115 மற்ற மூன்று வினாக்களிலிருந்து வேறுபட்ட ஒரு கேள்வி. இப்போது இந்த நான்கு கேள்விகளையும் ஒன்றாக இணைத்துவிட்டதால், 115-ம் கேள்விக்கான துணைக் கேள்வி போடுவது சிரமமாக இருக்கிறது.

[1979 மார்ச் 6

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீங்கள் எல்லாவற்றுக்கும் துணைக் கேள்வி கேளுங்கள், நான் அனுமதிக்கிறேன். ஆனால், விடைகள் எல்லாம் ஒன்று தான்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பள்ளி இறுதித் தேர்வில் விடைத் தாள்களை மதிப்பிடும் ஆசிரியர்களுக்கு ஒரு தேர்வுத்தாளுக்கு ரூ. 2 விதம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கை அனுப்பப் பட்டது. அதைப் பரிசீலனை செய்வதற்கு அமைச்சர் அவர்களிடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1971-லே இருந்து கொடுக்கப்பட்டு வரும் ஊதிய விதத்தைத் திருத்தியமைக்கும் யோசனை தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு விடைத் தாள்களை மதிப்பிட ஆசிரியர்களைத் தேர்ந்து எடுக்கப்படுவதற்குக் கடைப் பிடிக்கப்படுகிற விதிமுறைகள் யாவை? குறிப்பிட்ட ஒருசிலருக்கு மட்டுமே வாய்ப்பு அளிக்கப்படுவதாக ஆசிரியர்கள் குறைபடுகிறார்கள். ஆகவே தகுதி யுள்ள அனைவருக்கும் படிப்படியாக வாய்ப்பு அளிக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தகுதியுடையவர்களுக்கு எந்தவித வித்தியாசமும் இன்றி சரியான முறையிலே தருவதற்கு ஏற்பாடு செய்திருக் கிறோம். எங்காவது தவறுகள் நடைபெற்றிருக்குமானால், குறிப்பாக என்னுடைய கவனத்திற்கு அவைகள் கொண்டுவரப்படுமானால், விசாரித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : சென்னையில் திருத்துதல் பணி செய்பவர்களுக்கு ஒன்றரை மடங்கு தினப்படியும். மதுரையில் திருத்துதல் பணி செய்பவர் களுக்கு ஒரு மடங்கும் என்று இருப்பது ஏன்? மதுரையிலும் ஒன்றரை மடங்கு தினப்படி வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மற்ற ஊர்களிலே தருவதை விட சென்னையிலே ஒன்றரை மடங்கு தருகிறோம். காரணம் சென்னை மற்ற ஊர்களை விட வேறுபட்டு இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சென்னை மற்ற ஊர்களிலே இருந்து வேறுபட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மதுரை ஒரு கார்ப்பரேஷன், கோவை ஒரு கார்ப்பரேஷன் ஆகக்கூடிய நகரங்களிலே இருக்கின்றன. ஆக, விலைவாசிகள், வாழ்க்கைத்தரம் இவைகள் எல்லாம் ஒன்றாக இருக்கின்ற



1979 மார்ச் 6]

நிலையில் சென்னைக்கு மட்டும் ஒரு நீதி, மதுரை, கோவைக்கு இன்னொரு நீதி என்று வைத்துக் கொடுக்கின்ற அந்த ஏற்றத்தாழ்வை நீக்கி பயணப் படியும், தினப்படியும் ஒரே சீரான முறையில் வழங்க அமைச்சர் அவர்கள் முடிவு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குப் பிறகு சென்னையிலே இருக்கின்றவர்களுக்கு அதிகம் செலவாகும். ஆகவே, இங்கே அதிகம் தர வேண்டும் என்று ஒரு நிலை உருவாகும். அப்படி ஒரு நிலை உருவாகாமல் இருக்க வேண்டும். ஆகவே, எந்த அளவுக்கு முடியும் என்பதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : கோவை நகரத்தை விட, மதுரை நகரத்தை விட சென்னையிலே 1½ மடங்கு செலவாகும் என்று எதிர்பார்த்துத் தருகிறார்கள். அது எந்தவிதத்தில் என்று எங்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. மதுரைக்கு வருகின்ற ஆசிரியர்களும் வாடகைக்கு ரூம் எடுத்துத் தங்கி, வெளியில் உணவு சாப்பிடும் நிலை இருக்கிறது. ஆங்காங்கேதான் எங்கோ பள்ளியில் தங்கும் நிலைமை இருக்கிறது. இங்கே சென்னையிலேயும் அதே நிலைதான். ஆகவே, நிலைமை இப்படி இருக்கும்போது, சென்னையிலே தான் 1½ மடங்கு, கோவைக்கு, மதுரைக்கு இல்லை என்று சொல்லுவதற்கு என்ன அடிப்படை? ஆகவே, மேற்படி நிலைமைகள் இரு நகரங்களிலும் ஒன்றாக இருக்கும்போது, இந்த D.A. யும் ஒன்றாகத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வித்தியாசம் தெரியாததைப்போல் நாம் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. சென்னை ‘ஏ’ வகுப்பு நகரம். மற்றவைகள் எல்லாம் ‘பி’ வகுப்பு நகரங்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : சென்னையிலேயே எல்லா விடைத்தாள்கள் திருத்தும் மையங்களையும் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிர்வாக வசதிக்கேற்ப அவைகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கு இப்படி விடைத்தாள் திருத்தும் திட்டம் இருப்பதைப் போன்று—இப்போது 8-ம் வகுப்புக்கு “Common Examination” நடைபெறுகிறது—இந்த மைய விடைத்தாள் திருத்தும் திட்டத்தை அந்த 8-வது வகுப்புத் தேர்வுக்கும் பயன்படுத்தி, 8-வது வகுப்பிலே பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் அந்த வாய்ப்பு அளிக்கப்படுமா? அந்தத் திட்டம் அவர்களுக்கும் செயல்படுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 6

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசினுடைய உத்தரவைத் தவறாகப் புரிந்துகொண்டு, அதிகாரிகள் இப்படிச் செய்கிறார்கள். அதைப் பற்றிப் புகார்கள் தந்தால், விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Handloom Retail Shops.*

* 119 *Q.*—THIRU D. V. D'MONTE : Will the Hon. the Minister for Handlooms be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to open Handloom Retail Shops for providing employment to unemployed graduates under Self-Employment Scheme; and

(*b*) if so, the stage at which the matter now stands ?

## கைத்தறி சில்லறை விற்பனைக் கடைகள்.

**திரு. டி. வி. டி'மாண்டி :** மாண்புமிகு கைத்தறி-நெசவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டு "கைத்தறி சில்லறை விற்பனைக் கடைகளைத்" தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** வேலையில்லா பட்டதாரிகள் மூலமாக கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கான ஒரு திட்டத்தினை கோ-ஆப்டெக்ஸ் தீட்டியது. இதற்கு வங்கிகளிடம் இருந்தும் வேலையில்லா பட்டதாரிகளிடம் இருந்தும் போதிய ஆதரவு கிடைக்காததன் காரணமாக இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

THIRU D. V. D'MONTE : May I know the procedure to be followed for applying for this scheme ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் சிண்டிக்கேட் வங்கியுடன் தொடர்புகொண்டு இத் திட்டத்தின் நிபந்தனைகளை 14—12—1977-ல் வங்கிக்குத் தெரிவித்தார். இந்தத் திட்டத்தில் சேர விரும்பும்



1979 மார்ச் 6]

வேலையில்லா பட்டதாரிகள் ரூபாய் 10,000 முன்பணமாகத் தர வேண்டும். இந்தத் தொகையுடன் வங்கி 70,000 ரூபாய் கடனாக வழங்க வேண்டும். இவ்வாறு கிடைக்கும் தொகை 80,000 ரூபாயுடன் கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 20,000 ரூபாயையும் சேர்த்து ரூபாய் 1 லட்சம் அளவுக்கு முன்னதாகவே கோ-ஆப்டெக்ஸ் கைத்தறித் துணிகளை விற்பனைக்கு வழங்கும்.

(பிற்பகல் 4-30)

**திரு. க. இராமமூர்த்தி :** வேலையில்லாத பட்டதாரிகள் பல பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஓரளவுக்குப் பணம் இருந்தாலும், வேலை பெறக்கூடிய நிலையில் இருப்பார்கள். அந்த நிலை இல்லாமல் வேலையை பணம் கொடுத்து வாங்க முடியாத பட்டதாரிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் முன்பணமாகப் பத்தாயிரம் ரூபாயைக் கட்ட வேண்டுமென்று சொல்லுவதை விட, அவர்களுக்காக அரசாங்கமே முதலீடு செய்து துணியையோ, அல்லது பணத்தையோ கொடுத்து உதவுகிற வகையிலே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** கைத்தறித் துணிகள் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ளவற்றை இருப்பு வைத்து விற்பனை செய்தால்தான், பட்டதாரிகள் பயன் அடைய முடியும். அந்தத் தொகை முழுவதையும் கோஆப்டெக்ஸ் ஏற்றுக்கொள்ள இயலாது. வங்கியோடு தொடர்பு கொண்ட நேரத்தில், இவ்வளவு பெரிய தொகையை அவர்களும் தர முன்வரவில்லை. எனவேதான் இத்திட்டம் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது.

## *New Spinning Mills.*

* 120 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Handlooms be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open new Spinning Mills in the Co-operative Sector in Tamil Nadu; and

(*b*) if so, whether a Spinning Mill will be opened in Muthukulathur taluk, Ramanathapuram district a most backward area?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது 8-வது வகுப்பு அளவிலே நடைபெறுகின்ற பொதுப் பரிட்சை என்பது 8-வது வகுப்பிலே படிக்கின்ற மாணவர்களுக்கு அல்ல. பள்ளிக்கூடங்களிலே சென்று படிக்க முடியாமல், சொந்தத்திலே, வேறு வழியிலே தங்களுடைய கல்வித் தகுதியைப் பெருக்குகின்றவர்களுக்கு—பள்ளியிலே படித்துத்தான் பாஸ் செய்ய வேண்டும், அந்தத் தகுதியைப் பெற வேண்டும் என்று இல்லாத நிலையில் உள்ளவர்களுக்கு—வாய்ப்புத் தர வேண்டும் என்பதற்காகத்தான் பொதுப் பரிட்சை முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்தப் பரிட்சை நடத்தப்படும்போது, விடைத்தாள்கள் இப்படித் திருத்தப்பட வேண்டும் என்ற யோசனை இருக்கிறது.

**திரு. க. அறிவழகன் :** எஸ்.எஸ்.எல்.சி. இப்போது 10-வது வகுப்பு ஆகிவிட்டது. அந்த விடைத்தாள்களைத் திருத்த வழங்கப்படும் ஊதியத் தொகையை உயர்த்த முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது மேல்நிலைப் பள்ளிகளும் வந்துவிட்டன. அதே ஆசிரியர்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள். அதற்காவது, ஒரு விடைத்தாளைத் திருத்துவதற்கு ரூபாய் 2 வீதத்தில் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினர் அவர்களின் யோசனை, அந்தத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது, கவனத்தில் கொள்ளப்படும்.

**புலவர் புலமைப்பித்தன் :** கோவையிலே இருந்து சென்னைக்கு வந்து விடைத்தாள்களைத் திருத்துபவர்களுக்கு, அவர்கள் இங்கே வந்து தங்குவது, சாப்பிடுவது போன்ற இடையூறுகள் இருப்பதால், அந்தந்தப் பகுதியிலே இருக்கிற மதிப்பீட்டு மையங்களிலே எல்லாம், அந்தந்தப் பகுதியிலே வாழ்கிறவர்களுக்கு மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படுமேயானால், அவர்களுக்குப் பயணப் படி அளிக்கும் நிலை இல்லாமல் செய்வதன் மூலமாக, சிக்கனம் ஏற்படும் நிலை உருவாகும். ஆகவே, அப்படிச் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தேர்வு சம்பந்தப்பட்ட விடைத்தாள்களைத் திருத்துதல் என்பது ஒரு முக்கியமான கடமை. அதிலே தவறுகள் ஏற்பட்டுவிடக்கூடாது. நிர்வாகத்தினுடைய வசதிக்கேற்ப மையங்களை நாம் தேர்ந்தெடுத்து நடத்துகிறோம். வெறும் சிக்கனத்தை மட்டும் கருத்தில் வைத்துக்கொண்டு முடிவினை எடுப்போமானால், நாம் நடத்துகின்ற அந்தக் காரியத்தில் குறைபாடுகள் ஏற்பட்டுவிடக்கூடும்.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் முன்பு சொன்ன 8-வது வகுப்புத் தேர்வு என்பது அண்மையிலே அரசினால் அறிவிக்கப்பட்ட அந்தத் தேர்வல்ல. இப்போது 8-ம் வகுப்புக்கு மாவட்ட அளவில் "Common Examination" ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது. அந்தத் தேர்வுக்கான விடைத் தாள்களைத் திருத்துவதற்கு, மைய விடைத்தாள் திருத்தும் திட்டத்தைப் பயன்படுத்தினால், கல்வித் தரம் உயர்வதற்கு வழி ஏற்படும் என்பதால், அரசு அதைப் பரிசீலிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** தேர்வு, கண்காணிப்பு போன்ற பணிகளுக்குச் சென்ற ஆசிரியர்கள் பல மாதங்களாக அதற்குரிய பயணப்படியைப் பெற முடியவில்லை. ஆகையால்தான் இத்தகைய ஒரு கேள்வியைப் போட்டேன். மேலும் இந்த தினப்படி, பயணப்படி ஆகியவை 8 கிலோமீட்டருக்கு மேலாக இருந்தால், முழுமையாக அளிக்கலாம் என்று—அதாவது 'ஃபுல்' டி.ஏ., வழங்கலாம்—என்று விதி இருக்கிறது. ஆனால் சில கல்வி மாவட்டங்களிலே 20 கிலோமீட்டருக்கு மேலாக இருந்தால்தான் 'ஃபுல்' டி.ஏ., மற்றும் பயணப்படி என்று சொல்லுகிறார்கள். ஆதலால், இதைப்பற்றி உடனடியாக ஆணை பிறப்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தேர்வு மையங்களிலே பணிபுரிபவர்களுக்கு உரிய பயணப்படி மற்றும் நாள் படியை கடைசித் தேர்வு நாள் அன்று வழங்குவதற்கு உரிய யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. தேர்வு நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கு உரிய நிலையான கைமாறு ஊதியம் கடைசித் தேர்வு நாள் அன்று கொடுக்கப்படுகிறது. இம்முறையில் இடர்ப்பாடு ஏதும் இல்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** நான் கேட்டது அந்த மேற்பார்வையிடுவதற்கு அளிக்கப்படும் படியைப் பற்றியது அல்ல. பயணப் படியையும், தினப் படியையும் குறித்துக் கேட்டேன். எட்டு கிலோமீட்டர் தொலைவிற்குச் சென்று மேற்பார்வை செய்தால், அவர்களுக்கு முழுமையாக பயணப் படி, தினப் படி வழங்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், சில கல்வி மாவட்டங்களில், கல்வி அதிகாரிகள் 20 கிலோமீட்டருக்கு மேலாக இருந்தால் தான், முழுமையாகத் தர முடியும் என்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் தருகிறார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** அது ரொம்ப காலமாகவே ஆலோசனையில் இருப்பது. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பரிசீலிக்கப்படும் என்பதால் சந்தோஷப்படுகிறேன். அது எப்போது முடியுமோ தெரியவில்லை. சீக்கிரத்தில் கிழக்கு இராமநாதபுரத்தில், முதுகுளத்தூர், திருவாடானை ஆகிய பகுதிகளில் ஒரு ஆலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி :** அந்த ஆலைகளில் ஒன்றை கடையநல்லூரில் அமைத்துத் தர வேண்டும். அப்படி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** எந்தெந்த இடத்திலே அமைக்க வேண்டும் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனவே அவ்வாறு தேர்வு செய்யப்படுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரது ஆலோசனையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** 'இண்டஸ்டிரியலி பேக்வார்ட் டிஸ்ட்ரிக்ட்' என்று தர்மபுரி மாவட்டம் இருக்கிறது. பரிசீலனை செய்கிறபோது, அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

### *Sanitary Workers.*

@ * 79 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of Thiru P. YELLAMANDA) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received any representation in July 1977 that the payment of Family Benefit Fund Scheme amount has been delayed in respect of certain families of Sanitary Workers of the Corporation of Madras; and

(*b*) if so, the action taken thereon ?

### சுத்திகரிப்பு பணியாளர்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. பி. எலமந்தா சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

@ 28-2-1979ம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



(அ) சென்னை மாநகராட்சி சுத்திகரிப்பு பணியாளர்கள் சிலருடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய குடும்பநலத் திட்ட நிதி வழங்கப் படாமல் தாமதிக்கப்படுகிறது என, 1977-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Arignar Anna Government Hospital of Indian Medicine, Madras.*

@ 80 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that posts of Superintendents and other Medical Officers in Arignar Anna Government Hospital of Indian Medicine, Madras, are kept vacant for the last one year; and

(*b*) if so, the action taken by the Government to fill up the said vacancies?

### அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனை, சென்னை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனையில், கண்காணிப்பாளர்கள், ஏனைய மருத்துவ அதிகாரிகளின் பதவிகள் கடந்த ஓராண்டு காலமாகக் காலியாக உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், மேற்சொன்ன காலியிடங்களை நிரப்ப அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ) ஆம். சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனையில், கண்காணிப்பாளர் பதவியிடமும், இரண்டு மருத்துவ அதிகாரிகள் பதவியிடங்களும், மூன்று உதவி மருத்துவ அதிகாரிகள் பதவியிடங்களும் காலியாக இருந்து வருகின்றன.

@ 28—2—1979-ம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

[1979 மார்ச் 6

## புதிய நூற்பு ஆலைகள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு கைத்தறி-நெசவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாட்டில் புதிதாக, கூட்டுறவுத் துறையில் நூற்பு ஆலைகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், மிகவும் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் நூற்பாலை ஒன்று ஏற்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** (அ) ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1978-83) தமிழகத்தில் புதிதாக இரண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்சொன்ன இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளை அமைப்பதற்கான இடங்கள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் துவக்க இருக்கிற கூட்டுறவு நூற்பாலைகளில் ஏதாவது ஒன்றை கிழக்கு இராமநாதபுரத்தில் உள்ள முதுகுளத்தூர் வட்டத்திலே ஆரம்பிக்க பரிசீலனை செய்திருக்கிறதா ? இல்லையென்றால், இனியாவது அதைப் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** இராமநாதபுரம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தமது மாவட்டத்தில் கமுதி, தர்மபுரி, தேனி, விளாத்திகுளம் ஆகிய பகுதிகளில் கூட்டுறவு நூற்பாலைகளை அமைக்கக் கோரியுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஆரம்பிக்கிற ஆலைகளை எந்த இடத்திலே ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்படவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்திலே ஸ்ரீவில்லிபுத்தூரில் 25,000 கதிர்களைக் கொண்ட நூற்பாலை நல்ல முறையிலே இயங்கி வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இராமநாதபுரம் மாவட்டத்தைப் போலவே அதிகமாகப் பின்தங்கிய பகுதியாக உள்ள எங்கள் மாவட்டத்தில் செஞ்சி தாலுக்காவில் ஏற்கெனவே ஒரு நூற்பாலையை ஆரம்பிக்க உரிமம் தனியார் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான நிலத்தை வாங்கிய பிறகும், என்ன காரணத்தாலோ அவர் ஆர்வத்தைக் காட்டாததால், அந்த ஆலை அமையாத நிலை இருக்கிறது. எங்கள் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே உரிமம் வழங்கப்பட்ட நூற்பாலையை ஆரம்பிக்க, மீண்டும் அதைப் பரிசீலனை செய்ய, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?



1979 மார்ச் 6]

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** தனியார் துறையில் இது போன்ற நூற்பாலைகளை நிறுவுவதற்காக வருகின்ற விண்ணப்பங்களை நாங்கள் பம்பாயில் உள்ள மந்திராலய நிறுவனத்திற்குப் 'பார்வார்ட்' செய்துவிடுகிறோம். இது போன்று எத்தனையோ விண்ணப்பங்கள் அங்கு வந்து அவ்வாறு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே அமைக்கப்படவிருக்கிற இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளில், ஒன்று செயற்கை இழை நூற்பாலையாகவும், மற்றொன்று பருத்தி அதிகமாக விளையக் கூடிய பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை என்ற முறையிலும் ஏற்படுத்துவதாக திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையும் பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** ஸ்ரீவில்லிபுத்தூர், மேற்கு இராமநாதபுரத்தில் இருக்கிறது. கிழக்கு இராமநாதபுரத்தில், முதுகுளத்தூர், திருவாடானை ஆகிய பகுதிகள் பின்தங்கிய பகுதிகள். அங்கே ஒரு ஆலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** மாவட்டத்திற்கு ஒன்று என்ற அளவிலே, இன்னும் பல மாவட்டங்களில் அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்று பேசும்போது, நிதியமைச்சர் அவர்களிடமே நிறைய கோரிக்கைகளை விடுத்துள்ளார்கள். அந்த கோரிக்கைகளை நிச்சயமாக நிதித் துறை பரிசீலிக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** யாருக்கு ரொம்ப பசியிருக்கிறதோ அவன்தான் சாப்பாடு, சாப்பாடு என்று அலைகிறான். அவனுக்கு நீங்கள் சாப்பாடு போட்டு, எலும்பு தோல் இல்லாமல், மற்றவர்கள் போல் சதை பிடிக்க வைக்க வேண்டும். மேற்கு இராமநாதபுரத்தில் ஒரு ஆலை இருப்பது எங்களுக்குத் தெரியும். கிழக்கு இராமநாதபுரத்தில் எந்தவிதமான ஆலையும் இல்லை. முதுகுளத்தூர், திருவாடானை ஆகிய இரண்டு இடங்களிலே ஒரு இடத்தில் உங்களுக்கு வசதியான இடத்திலே ஆலை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டம், தனி மாவட்டமாக ஆகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று கருதுகிறேன். அப்படி தனி மாவட்டமாக ஆகக்கூடிய நிலையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு கண்காணிப்பாளர் பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஒரு யுனானி மருத்துவ அதிகாரி பதவியினை அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலமாகவும், ஒரு ஆயுர்வேத மருத்துவ அதிகாரிப் பதவியினை தற்போது உதவி மருத்துவ அதிகாரிகளாகப் பணியாற்றி வருபவர்களின் பணி நிலைகளை முறைப்படுத்தி, அவருள் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாகவும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மூன்று உதவி மருத்துவ அதிகாரிகளை வேலை வாய்ப்பு அமைப்பின் மூலமாக, தற்காலிகமாகப் பணியமர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. செ. முத்துசாமி:** மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்த வரையில், மிக வேகமாகச் செயல்படக்கூடிய அமைச்சர் அவர்கள் வந்த பிறகும், அந்தப் பதவியிடங்கள் இதுவரை காலியாக இருக்கின்றன என்பதை அறியும்போது வருத்தமாக இருக்கிறது. மருத்துவர் இல்லாமலே மருத்துவம் செய்யப்படக் கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. மற்ற துறைகளில் 10-வது (1) விதியின் கீழ் நியமிப்பதைப் போல், மருத்துவத் துறையிலும் நியமிக்க ஆட்கள் கிடைக்கவில்லையா? சர்வீஸ் கமிஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டு வராததால்தான் நியமிக்கப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** தேவையான அளவுக்குத் தகுதிகளைப் பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்ற நிலை இருப்பதால், அப்படித் தகுதி பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பதில் சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனே, அவர்களைப்பற்றி போலீஸ் விசாரணை நடைபெற்று முடிந்த பிறகுதான், பதவியிலே நியமனம் செய்வதற்கான ஆணை பிறப்பிக்கப்படும். குறிப்பாக ஆயுர்வேதப் பிரிவில் மருத்துவர்களை நியமிக்க அவர்கள் எந்தத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அந்த அளவுக்குத் தகுதி பெற்ற மருத்துவர்கள் இல்லையென்பதால், சில இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. 1—9—1977 முதல் கண்காணிப்பாளர் பதவியை இந்திய மருத்துவத் துறை இயக்குநர் கூடுதல் பொறுப்பாக நிர்வகித்து வருகிறார்கள். மருத்துவ மனையில் பணிகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்திய முறை மருத்துவ மனையில் காலியாக இருக்கின்ற மருத்துவ அதிகாரிகளின் பதவிகளைப் பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பது, இந்திய முறை மருத்துவத்தில் மக்களுக்கு



ஆர்வம் இல்லாத காரணத்தாலா அல்லது மக்களுடைய ஆதரவு இல்லாத காரணத்தாலா அல்லது மருத்துவத் துறை வல்லுநர்களாகப் பயிற்சி பெறுவதில் கோளாறு ஏதும் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** இந்திய முறை மருத்துவத்தில் மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதரவு நிறைய இருக்கிறது என்ற காரணத்தால்தான், சித்த மருத்துவப் பிரிவுகள் பல்வேறு பல்வேறு இடங்களில் துவங்கப்படுகின்றன. மருத்துவர்களாக நியமிக்கப்படுபவர்கள் சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் கிடைக்காத காரணத்தால்தான், நியமிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. தற்போது சில மாறுதலான விதிமுறைகள் இருப்பதால், அப்பதவிகள் மிக விரைவிலே பூர்த்தி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-40)

**திரு. ம. சங்கரலிங்கம்:** இந்திய மருத்துவ மனையில் இப்போது தமிழகத்தில் இருக்கக்கூடிய இந்திய மருத்துவக் கல்லூரி மூலம் நிரம்ப மருத்துவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆயுர்வேத மருத்துவப் பிரிவு தமிழகத்திலே இல்லை. இங்கே சித்த வைத்திய மருத்துவக் கல்லூரி இருக்கிறதே தவிர, ஆயுர்வேதக் கல்லூரி இல்லை. அதிலே ஒரு பிரிவை ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா? ஆயுர்வேதக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களை வரவழைத்து ஆயுர்வேதப் பிரிவை அரசு ஆரம்பிக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** ஆயுர்வேதப் பிரிவையும், யுனானி பிரிவையும் இந்தக் கல்லூரியில் ஆரம்பிக்க வேண்டும் என்று அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அந்த ஆய்வு மிகச் சீக்கிரத்தில் முடிந்து நல்ல முடிவு அடையும். தற்போது ஆயுர்வேத மருத்துவப் பிரிவில் பணியாற்றுகின்றவர்கள், இதற்கு முன்னாலே பயிற்சி பெற்றவர்கள்தான். பணியாற்றுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உறுப்பினர் பெயரின் தொடக்கத்தில் இடம்பெற்றிருக்கும் உடுக்குறி (*) அவ்வுறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**திரு. பி. மாணிக்கம்:** தலைவர் அவர்களே, விதி 157-ன் கீழ் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்ப விரும்புகிறேன். அதைப்பற்றி உங்களிடம் நான் ஏற்கெனவே முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

[1979 மார்ச் 6

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இன்னொரு மன்றத்தையும் சேர்ந்ததாக இருப்பதனால், அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அதைப்பற்றிப் பிறகு சொல்கிறேன்.

**திரு. பி. மாணிக்கம்:** நான் பேசும்போது, குறிப்பிட்ட ஒரு நபரைப் பற்றிய பிரச்சினையைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன். தயாரான பிறகு அதைப் பார்ப்போம்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரு. நல்லசிவன் அவர்கள் அவருடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதைப் பற்றி ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு இந்த விதியின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே 2, 3 தினங்களாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 120 பேர்கள் கைது செய்யப் பட்டிருப்பதாகச் செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தேன். இவர்களை எல்லாம் நக்சலைட்டுகள் என்று கருதுவதாக போலீஸ் கமிஷனர் அவர்கள் கூறுகிறார்கள். தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இரண்டு கொலைகள் நடந்ததன் காரணமாக அப்படிக் கைது செய்திருக்கிறார்கள். அதை நக்சலைட்டுகள் செய்திருக்கலாம் என்ற எண்ணத்தில் 120 பேர்களைக் கைது செய்திருப்பதாக போலீஸ் கமிஷனர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதிலே நக்சலைட்டுகள் பொறுப்பு எவ்வளவு என்பதை அரசு பரிசீலிக்கட்டும். இந்தக் கொலைகளைத் தனியார்களும் செய்திருக்கலாம். நக்சலைட்டுகள் செய்திருப்பார்கள் என்று சந்தேகிப்பதை அரசு பரிசீலனை செய்யட்டும். இப்படி நக்சலைட்டுகளைச் சொல்லிக்கொண்டு, எங்களுடைய கட்சியிலே உள்ளவர், திருநெல்வேலி மாவட்டக் குழு உறுப்பினர் திரு. ராசாங்கம் என்பவரையும், சென்னை மாவட்டக் குழு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவரையும் கூட கைது செய்திருக்கிறார்கள். போலீஸ் இலாகாவில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களைப் பல வருடங்களாக இருப்பவர்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே நக்சலைட்டுகள் என்று கைது செய்திருப்பது எப்படி என்பது புரியவில்லை.



1979 மார்ச் 6] [திரு. ஆ. நல்லசிவன்]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கைது செய்திருக்கிறார்கள். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் பல மாவட்டங்களிலே நக்சலைட்டுகள் என்று கூறி கைது செய்திருக்கிறார்கள். அது ஏனென்று புரியவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோபி என்பவரைக்கூட நக்சலைட்டுகள் என்று கைது செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், மக்கள் செய்திப் பத்திரிகை அலுவலகத்திலே கூட நேற்றைக்கு 'விகாஸ் சர்ச்' நடந்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எல்லா விவரங்களையும் தீர்மானத்தை அனுமதித்த பிறகு பேசலாம். அந்த விஷயம் எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் இப்போது சொல்ல வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** இந்த அரசைப்பற்றிப் பத்திரிகைகளிலே விமர்சித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் பத்திரிகையும் சோதனையிடப்படுகிறது. இதனால் ஜனங்களுக்கு மத்தியிலே ஒரு பதட்டமான நிலை உண்டாகிவிடும். இப்படிப்பட்ட விஷயத்தில் அரசு நக்சலைட் என்ற பெயராலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கைது பண்ண வேண்டுமா? இதன் மூலம் மக்களுடைய மத்தியிலே ஒரு பயத்தை உண்டாக்க வேண்டுமா? இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம் அவர்களை எதிர்ப்பவர்களை அடக்குவதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்று மக்களிடையே ஒரு எண்ணத்தை உண்டாக்க வேண்டுமா? பொதுமக்கள் மத்தியிலே இருக்கின்ற இந்தப் பிரச்சினையைப்பற்றி இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் எல்லா விவரங்களையும் எடுத்துப் பேசிவிட்டார்கள். இனி விவாதத்திற்கு ஒன்றுமே இல்லை.

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசும் பொழுது, எதிர்க் கட்சியினரை எல்லாம் அடக்க வேண்டும் என்பதற்காக இந்த முறை கையாளப்படுகிறது என்று சொல்கின்றார்கள். நான் முதலில் தெளிவித்துக்கொள்ள விரும்புவது நிச்சயமாக இந்த அரசு அந்த முறையைக் கையாள வேண்டிய அவசியத்தில் இல்லை. இந்த நடவடிக்கைக்கும் அரசியலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதைக்

தெரிவித்துக் கொள்கிறேன். அரசைப் பொறுத்த வரையிலே, எழுத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்பதில் நாங்கள் யாருக்கும் இளைத்தவர்கள் அல்ல. மக்கள் செய்தி பத்திரிகையானாலும் சரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களானாலும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களானாலும் சரி, அவர்களுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு, தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கு நிச்சயமாக இந்த அரசு குறுக்கே நிற்காது. இன்னும் கூட ஒரு படி அதிகம் சொல்ல வேண்டுமானால், நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு இந்த அரசு என்றும் தயக்கம் காட்டியதில்லை. ஆனால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, ஒரு வாரத்தில் இரண்டு இடங்களில் கொலைகள் நடந்திருக்கின்றன. திருவாடுதுறையில் ஒரு கிராம முன்சீப்பாக இருந்தவர், திரு. முத்துக்குமாரசாமி என்பவர் 26—2—1979 அன்று படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர் படுகொலை செய்யப்பட்டது மட்டுமல்லாமல், அங்கே போடப்பட்டிருக்கிற துண்டு அறிக்கைகள் நக்சலைட் கோஷங்களை உள்ளடக்கியிருக்கின்றன. அடுத்து, இராமநாதபுரத்தில் செய்யூர் என்ற ஊரில் தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்கள் 3—3—1979 அன்று கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கேயும் அத்தகைய துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டிருக்கின்றன. திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிடுகின்றதைப் போல, அவர்கள் அந்தத் தவறைச் செய்யாமல் இருந்து வேறு யாராவது தனிப்பட்டவர்கள் கொலை செய்துவிட்டு, இப்படிப்பட்ட துண்டுப் பிரசுரங்களைப் போட்டிருக்கலாம் அல்லவா என்று கேட்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கண்ணோட்டத்துடன்தான் காவல் துறையிலே இருப்பவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். இதிலே சம்பந்தப்பட்டவர்களை இந்தக் கொலையின் சம்பந்தமாக யார் மீது சந்தேகப்படுகிறார்களோ அவர்களைக் கைது செய்து தீவிர விசாரணை நடத்துகிறார்கள். காவல் துறையின் 'ஆதாரம்' என்ற அடிப்படையிலே பார்க்கிறபோது, கிடைத்திருக்கிற தகவல்கள் என்று பார்க்கின்றபோது, இது பலமான ஒரு திட்டமாக, நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் கொள்கையைக் கொண்டிருக்கிறார்களோ என்கின்ற சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால், நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில், 'அன்னிஹிலேஷன் ஆப் கிளாஸ் எனிமிஸ்', அதாவது வர்க்க எதிரிகளை தீர்த்துக் கட்டுவது அல்லது அழித்துவிடுவது என்று திட்டமிட்டு அந்த அடிப்படையில்தான் இச் சம்பவங்கள் நடைபெறுகின்றனவோ என்று காவல்துறை நிச்சயமாக சந்தேகிக்கின்றது. ஆகவே நடந்த கொலைகளில் சம்பந்தப்பட்டவர்களை நிச்சயமாக கண்டுபிடிக்கவும், அநாவசியமான கொலைகள் நடக்காமல் பாது



காக்கவும், அந்த நோக்கிலே ஒரு இயக்கம் வன்முறை இயக்கமாக தமிழ்நாடு முழுவதும் வளர்ந்துவிடாமல் இருக்கவும் சந்தேகப்பட்டவர்களை அல்லது சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து விசாரிக்கவும் ஒரு அரசுக்குக் கடமை இருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையிலேதான் நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை, அதிலே சம்பந்தப்பட்டிருப்பார்களோ என்ற சந்தேகத்துக்காளானவர்களைக் கைது செய்திருக்கலாம். சந்தேகத்திற்கு ஆளானவர்களை விசாரித்து என்ன நிலைமை என்பதை முன்கூட்டியே தெரிந்து நடவடிக்கை எடுப்பதற்குத்தான் இந்தக் காரியங்கள் நடக்கின்றன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதிலே சேர்த்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் சட்டப் பேரவையிலேகூட குறிப்பிட்டேன். சில நேரங்களில் சில அரசியல் கட்சிகளில் ஊடுருவல்கள் என்ற அடிப்படையிலேகூட சில செய்திகள் வருவது உண்டு. இது அந்த வகையிலே இருக்கும் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. இருப்பினும் கைது செய்யப்பட்டவர்களில் சம்பந்தப்படாதவர்கள் இருப்பின், அவர்கள் கஷ்டத்துக்காளாகாவண்ணம் பார்த்துக்கொள்ளப்படும் என்பதை பேரவையிலேயும் தெரிவித்திருக்கிறேன். அது போலவே பேரவையிலும் உறுதி தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை அரசியல் ரீதியானது அல்ல. ஒரு இயக்கத்தை முடிக்க வேண்டும் என்பதற்காக, ஒரு கட்சியைத் தடுப்பதற்காக அல்ல. பொதுவாக நாட்டில் எந்த அரசும் கடைப்பிடிக்க வேண்டிய ஜனநாயகக் கடமையான மக்கள் உயிரைப் பாதுகாப்பது என்ற முறையிலேதான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே அவையை ஒத்தி வைத்துத்தான் பேச வேண்டும் என்ற பிரச்சினை இல்லை என்பதை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திலிருந்து பிறகு இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

(பிற்பகல் 4.50)

## (2) கோவை மாவட்டத்தில் விவசாயிகள் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கோவை மாவட்டத்தில் விவசாயிகள் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதியின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பெரியநாயக்கன்பாளையம் என்ற கிராமத்தில் 41 விவசாயி களுடைய மின் இணைப்பையும், சேலம் மாவட்டத்தில் சக்கம்பட்டி என்ற கிராமத்தில் 21 விவசாயிகளுடைய மின் இணைப்பையும், மதுரை மாவட்டத்தில் [illegible] இருக்கும் மின் இணைப்புக்களையும் மின்சார இலாக்காவினர் துண்டித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் காலையிலே சட்டப் பேரவையில் சொல்லும் போது, விவசாயிகளுடைய சங்கத்தைத் தலைமை தாங்கி நடத்துகிற திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் விவசாயிகளுடைய கோரிக்கைகளுக்காக வாதாடுகிற நேரத்தில் குறிப்பாக மின்சாரத் துறையிலே மின் கட்டணத்தை உயர்த்தியதை . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினருடைய தீர்மானத்தை விவாதத்திற்கு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. தீர்மானம் கொண்டு வந்ததன் அவசியத்தைச் சொல்ல வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய அமைச்சர் அவர்கள், கொடுத்த விளக்கத்தைச் சுட்டிக் காட்டினேன்தான் . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்போது சொல்ல அவசியமிருந்தால், வேறு சொல்வதற்கு ஒன்றுமே இல்லையே.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நிறைய இருக்கிறது. சட்டப் பேரவை யிலே அமைச்சர் அவர்கள் கூறியது இந்த அரசாங்கம் ஏற் கெனவே மின்கட்டணத்தை 16 பைசாவாக உயர்த்தியதை சிறு விவசாயி களுக்கு 12 பைசா என்றும், பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் குறைத்தவுடன் அந்தச் சங்கத்தின் தலைவர் அரசாங்கத்தைப் பாராட்டி னார். ஆகவே இது குறித்து விவாதிக்க அவையின் நடவடிக்கையை ஒத்தி





வைக்க வேண்டியதில்லை என்ற கருத்துப்படச் சொன்னார்கள். பொதுவாக மின்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். விவசாயிகள் 1½ ஆண்டுக் காலமாக மொத்தமாகப் பணம் கட்டவில்லை என்ற நிலையில் ஒரே நாளில் அவர்கள் முழுத் தொகையையும் கட்ட வேண்டும், இல்லையென்றால் மின் துண்டிப்பு என்று அரசு தெரிவித்திருக்கிறது. இப்போது கிராமங்களில் அறுவடை நேரம். இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தால், ஒன்று உணவுப் பற்றாக்குறை இந்த நாட்டுக்கு வந்து விடும். இல்லையென்றால், விவசாயிகள் அச்சுறுத்தப்படுவார்கள். ஆதலால் விவசாயம் பாதிக்கப் படுமே என்ற நிலைமை மேலோங்கி இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை யில் தமிழகத்தில் பரவலாக மின்சாரத்தைத் துண்டித்து விடுவார்களோ என்ற பரபரப்பான நிலை இருக்கிறது. இன்னொன்று விவசாயிகளுடைய பிரச்சினையிலே மின்சாரக் கட்டணம் தீர்ந்து விட்ட பிரச்சினை என்று சொன்னது அவர்களுக்கே தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்படியே பேசினால், இது விவாத மாகி விடும். அவசியத்தைக் குறித்து சுருக்கமாகக் கூறுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அமைச்சர் அவர்களுக்கே தெரியும். தொழிலாளர்கள் சங்கங்கள் பல கோரிக்கைகளை வைக்கிறார்கள். போனஸ், சம்பள உயர்வு என்று ஐந்து, ஆறு கோரிக்கைகளை வைக்கும்பொழுது ஒரு கோரிக்கை ஏற்கப்பட்டு விட்டது, வேலைக்குப் போங்கள் என்றால், எந்தச் சங்கமும் கேட்காது. அப்படி விவசாயச் சங்கமும் கோரிக்கைகளை வைத்து, உயர்மட்டக் குழு ஏற்படுத்தி, அந்தக் கோரிக்கைகளை அந்தக் குழு பரிசீலித்துக் கொண்டிருக்கும்பொழுது, இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பது பரபரப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் மின்வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்பற்றிக் குறிப்பிட்டார்கள். கோவை மாவட்டத்தில் பெரியநாயக்கன்பாளையத்தில் 41 பேர்களின் பம்புசெட்டு களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. நான்கு பேர் பணம் கட்டியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் சக்கம்பட்டியில் 21 பேர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பேர்கள் பணம் கட்டி யிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் விவசாயிகள் மத்தியில் இது கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று குறிப்பிட்ட . . .

## திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரி நிர்வாகம் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் சேர்க்காததை எதிர்த்து அனைத்துக் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 மார்ச் 6

பொதுவாக தனியார் கல்லூரிகளில், தனியார் பள்ளிகளில் எல்லாம் ஆசிரியர்கள் பணியில் சேரும்போது, வெற்றுத் தாளில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, அவர்களாக அதில் என்ன எழுதிக்கொள்ள வேண்டுமோ அதை எழுதிக்கொள்கிறார்கள் என்பதை வெளிப்படையாக நிரூபிக்காவிட்டாலும், அது மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அப்படி ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் பணியிடங்கள் உருவாகும்போது, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, சேர்த்துக் கொள்ளப்படுவார்களா? அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, அந்த ஆசிரியர்கள், பணியிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் பணியில் சேர்க்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருந்தும், அதை ஏற்க மறுக்கும் நிலையிலே அந்தக் கல்லூரிக்கு அளிக்கும் மானியத் தொகையை நிறுத்துவது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மானியத் தொகையை நிறுத்துவதைவிட, எந்த ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறோமோ, அவர்களுக்கு நேரடியாகச் சம்பளத்தைப் பட்டுவாடா செய்துவிட்டு, ஏனைய ஆசிரியர்கள் சம்பளம் இல்லாமல் இருக்கும் நிலை உருவாகாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா?

(பிற்பகல் 5-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, தனியார் நிர்வாகங்களில் நடைபெற்று வருகின்ற பல்வேறு தவறுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தனியார் நிர்வாகங்களில் நடைபெறுகின்ற தவறுகளை நீக்க நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு எடுத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன யோசனையின் அடிப்படையில் தான் நாம் குறிப்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம். வேலையில்லாத ஆசிரியர்களுக்கு அவர்கள் வேலை செய்யாமலே சம்பளம் தருகின்ற நிலையை நாம் எப்போதும் விரும்பவில்லை. இப்போதும் விரும்பவில்லை. வேலையில்லாமல் இருக்கிறவர்களுடைய பல்வேறு பணியிடங்களை வேறு இடங்களில் ஆசிரியர்கள் தேவைப்படும் பள்ளிக்கூடங்களுக்கு மாற்றி சம்பளம் தருவதற்கான முயற்சியை அரசு எடுத்திருக்கிறது. ஆசிரியர் சங்கத்திடமும் பேசியிருக்கிறோம். ஆகவே வேலை இழந்தவர்களுக்கு நிச்சயம் நிவாரணம் கிடைக்குமென்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.



1979 மார்ச் 6]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, On a point of order திருச்சி சிம்கோ விவகாரம் மிக அவசரமான ஒன்றாகும். ஆயிரம் பேர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். உறுப்பினருக்கு அவையினுடைய நடைமுறை தெரியும். எதைக் கொண்டு வருவதாக இருந்தாலும், என்னுடைய அறைக்கு வந்து என்னுடைய முன் அனுமதியைப் பெற்றுத்தான் கொண்டுவர வேண்டும். யாருக்கும் முன் அறிவிப்பு இல்லாமல் சொல்கிறார்கள். முன்னதாக உறுப்பினர் என் அறைக்கு வந்தபோதே சொல்லியிருக்கலாம்.

**திரு. ஆ. நல்லசிவன்:** இதற்கு முன் எத்தனையோ ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இதுபற்றிக் கொடுத்திருக்கிறேன். தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். ஆனாலும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் இப்பொழுது அதை எழுப்புவது முறை அல்ல. என்னுடைய அறைக்கு வாருங்கள். ஏற்கெனவே இரண்டு முறை ஒத்திவைப்புத் தீர்மானம் எழுப்ப அனுமதித்திருக்கிறேன். நான் அப்பொழுதுகூட மறுத்திருக்கலாம். இருந்தாலும் அனுமதித்திருக்கிறேன். அதைத்தான் சொல்ல வருகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** அரசுத் தரப்பில் அறிக்கை கொடுத்தால் போதுமானது, அத்தோடு நின்றுவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள்.

**திரு. ஆ. நல்லசிவன்:** ஆயிரம் பேர் பட்டினி கிடக்கக்கூடிய மிக முக்கியமான விஷயம். முதலாளிக்குச் சாதகமான போக்கு தென்படுகிறது. அதனால்தான் அனுமதி மறுக்கிறீர்கள். அதனால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அனுமதி மறுக்கவில்லை. அறைக்கு வந்து நாளைக்குச் சொல்லுங்கள் என்று தான் சொல்கிறேன். தவறான எண்ணத்தை உறுப்பினர் உருவாக்கக்கூடாது. இதற்குப் பல முறைகள்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 6

நான் ஒன்றை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இல்லையென்று மறுக்கவில்லை. அவர்களுக்குக் கூட்டுறவுக் கடன், அரசாங்கத்திலிருந்து பெற்றிருக்கிற கடன், அதற்குச் செலுத்த வேண்டிய வட்டி, கொள்முதல் விலை கிடைக்காதது— இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் அதே நேரத்தில் மின்கட்டணத்தைப் பொறுத்தவரையில், எல்லா விவசாய சங்கத் தலைவர்களுடன் பேசி 16 பைசாவிலிருந்து 2 பைசா குறைத்து 14 பைசாவாக்க வேண்டுமென்று அவர்களெல்லாம் கேட்ட போது, நம்முடைய முதலமைச்சரவர்கள் பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்றும், சிறிய விவசாயிகளுக்கு 12 பைசா என்றும் அறிவித்தார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் அப்போது இருந்தேன். அப்போது எல்லா விவசாயச் சங்கத் தலைவர்களும் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் அறிக்கையை வரவேற்றார்கள். சிறு விவசாயிகளுக்கு 12 பைசா என்று அறிவித்தது அவர்கள் யாரும் எதிர்பாராத ஒன்று. குறிப்பாக திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் அப்போது ஒன்றைக் கூறினார்கள். அவர் கூறிய வாசகம் நினைவில் இருக்கிறது. என்னுடைய கையிலே மாலை இல்லையே என்று வருத்தப்படுகிறேன், மாலை இருந்தால் நிச்சயமாக முதலமைச்சரவர்களுக்கு அணிவிப்பேன் என்று அவர்கள் தெரிவித்தார்கள். மின்சாரக் கட்டணம் 16 பைசா என்றிருந்ததை நாம் இப்போது வெகுவாகக் குறைத்திருக்கிறோம். மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில், பிரச்சினைகள் இல்லை. உயர் மட்டக் குழு இன்றைக்கு மின் கட்டணத்தைப் பற்றிப் பரிசீலிக்கவில்லை. மற்ற பிரச்சினைகள் பற்றித்தான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே மின் கட்டணத்தை வாங்க வேண்டிய தலையாய கடமை அரசுக்கு இருக்கிறது. ஒன்பது கோடி ரூபாய்க்கு மேலே மின் கட்டண பாக்கி விவசாயத் துறையில் இருக்கிறது. இந்த 9 கோடி ரூபாயைக் கட்டுவதால் பெரிய இழப்பு விவசாயிகளுக்கு வந்துவிடாது. ஆனால் இதை வசூலிக்காவிட்டால் மின் வாரியத்திற்குப் பேரிழப்பு வந்துவிடும் என்பதை இந்த அவையினர் நன்கு உணர்வார்கள்.

ஒரு தொழிற் சங்கம் 7, 8 கோரிக்கைகள் வைக்கும், ஒரு கோரிக்கையை மட்டும் நிறைவேற்றிவிட்டு, மற்ற கோரிக்கைகளை நிறைவேற்றாமல், வேலைக்குப் போங்கள் என்றால், வேலைக்கு அவர்கள் போவார்களா என்று உறுப்பினரவர்கள் கேட்டார்கள். இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், மற்ற கோரிக்கைகளைக்கூட —கடன் செலுத்த வேண்டியதை வட்டி கட்ட வேண்டியதை—அரசாங்கம் வற்புறுத்தவில்லை. உயர் மட்டக் குழு பரிசீலித்து பரிந்துரை தந்த பிறகு, அதைப்பற்றித் தீர்மானிக்கலாமென்று



1979 மார்ச் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஒத்திப் போட்டிருக்கிறார்கள். இதில் முடிந்த பிரச்சினையில்தான் பணம் கட்டச் சொல்கிறோம். முடியாத பிரச்சினையில் எந்தவிதமான கஷ்டமும் தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஏற்றுக் கொண்ட கோரிக்கை அது. விவசாயிகள் மின்சாரக் கட்டணம் செலுத்துவதில் எந்தவிதமான கஷ்டமும் இராது. அவர்கள் அதைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின் கட்டணத்தை ஒரேயடியாகக் கட்டுவதில் கஷ்டம் ஏற்படுமென்றால், ஆங்காங்கே உள்ள மின் வாரியப் பொறியாளர்களுக்கு அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவர்கள் தவணையில் கட்டக் கூட வாய்ப்பு இருக்கிறது. கட்ட முன் வந்தால், தவணையில் கட்ட வாய்ப்பைத் தர மின் வாரியம் தயங்காது என்று கூறி, இது குறித்து அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்று கருதுவதால், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதியை மறுக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

**திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரி நிர்வாகம் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் சேர்க்காததை எதிர்த்து அனைத்துக் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"அரசு ஆணை பிறப்பித்தும், திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரி நிர்வாகம் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை பணியில் சேர்க்காததை எதிர்த்து அனைத்துக் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து"

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, ஓர் அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையிலே 10 பேர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்தின் பேரில் கல்லூரியிலிருந்து விலகியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

@ 54 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

இருக்கின்றன. ஊரை கட்டாயமாகக் கொண்டு வரலாம். ஒத்திவைப்புத் தீர்மானமாக வரும்போது, அதை வரும்படியாக இருந்தாலும், தலைவரிடம் அனுமதியைப் பெற்றுத்தான் வரும்படி வேண்டும். அதையெல்லாம் செய்யாமல் வெளியேற முயன்றால் என்ன அர்த்தம்?

**திரு. ஆ. நல்லசிவன் :** விதிக்குப் புறம்பாக வைக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்றோ, அனுமதி கிடைக்கவில்லை என்று குற்றம்சாட்டியோ நான் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தவறான சூழ்நிலையை உருவாக்குகிறீர்கள். விவாதத்திற்குரியதாக இதை ஆக்க வேண்டாம். நான் அனுமதியை மறுக்கவில்லை. என்னுடைய அறைக்கு நாளைக்கு வந்து சொல்லுங்கள்.

## 4. 1979-80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

*** திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை இந்த அவையிலே மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் வைத்ததையொட்டி என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே வைப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்ற ஆண்டு நிதியமைச்சரவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையை அவையிலே வைத்துப் பேசுகிறபோது, அவர்களுக்கே உரித்தான கம்பீரமான பாணியில் நாட்டுமக்களுக்கான உறுதி மொழிகளை அள்ளி அள்ளித் தந்தார்கள். தமிழகத்தின் பொருளாதார மறுமலர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுவோம், கிராமங்களுடைய வாழ்விலே புத்தொளி ஏற்படுத்துவோம் என்று அவர்கள் இந்திய அன்னை திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித்திருந்தது. அவ்வாறு அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லியிருந்தவற்றை நிறைவேற்றுகிறார்களா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்று அப்போது நான் சொல்லியிருந்தேன். சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலாகட்டும் அல்லது இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலாகட்டும், மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அவர்களுக்கே உரித்தான தாம்பத்தியத்தோடு மிக அழகாக அற்புதமாக விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே மிக அழகாகச் சொல்லியிருந்தார்கள். "சென்றடைய விரும்பும் இலட்சிய முகட்டின்





தோற்றம் கண்ணெதிரே தெரிகிறது. வயற்காடுகளில், தொழிற்சாலைகளில், மலைப் பகுதிகளில், கடலோரப் பகுதிகளில், பின்தங்கிய இடங்களில் தங்களது வியர்வையைச் சிந்தி, பிறருக்காக காலமெல்லாம் உழைத்து, தங்களை உருக்குலைத்துக் கொண்டு, மற்றவர்களை உருவாக்கி வாழவைக்கும் அந்த நடமாடும் தெய்வங்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை, மனமகிழ்ச்சியை, நிறைவை, நம்பிக்கையை ஏற்படுத்தி அவை பெற்றிடும் பல முயற்சிகளின் ஒரு கூறுதான் இந்த நிதி நிலை அறிக்கை" என்று மிக அற்புதமான விளக்கமளித்து நிதி நிலை அறிக்கையை சென்ற ஆண்டு அவை முன் வைத்துப் பேசினார்கள். "நடமாடும் தெய்வங்களுக்காக" பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று அற்புதமாக அவர் பாடித்ததை நாமெல்லாம் பார்த்தோம். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் கூட மிக அழகாகச் சொன்னார்கள். விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகள் இருக்கின்றன என்பதை இந்த அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அன்றையதினம் சொன்னார்கள். "ஏழையின் உள்ளத்திலே புயல் இருக்குமேயானால், மாளிகைகள் கூட முறியும்" என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். அண்ணா வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்த அரசு ஏழைகளுடைய பிரச்சினையை இன்றைய தினம் எப்படி அணுகுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் இன்றையதினம் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள். போர்க்கொடி தூக்கியும் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. தீர்வு கிடைக்காமல் ஏழைகள் இருக்கிறார்கள். உண்மை நிலை என்ன என்பதை உணர வேண்டும். சமீபத்தில் டெல்லியில் ஏழைகள் பேரணி நடந்தது. நாடு நகரங்களில் உள்ள ஏழைகள் எல்லாம் இந்தியா முழுவதும் உள்ள ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையிலே அந்த சமுதாயம் இன்றைக்கு விழித்தெழுந்திருக்கிறது. அவர்களுக்கு எப்படியெல்லாம் கஷ்டங்கள் இருந்தபோதிலும், தமிழ் பண்பாட்டின் காரணமாக அவர்கள் இதுவரை அமைதியாய் ஊமையாய் அடங்கி இருந்திருக்கலாம். பல சந்தர்ப்பங்களில் அப்படி அவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனைத்தனம் இன்றையதினம் அவர்களை 8 முறை தானே சுட்டோம் என்று சமாதானம் சொல்லலாம். அரசாங்கம் செய்கிற நன்மைகள் வயல் ஓரத்தில் இருக்கிற கட்டையனுக்கும் குப்பனுக்கும் போய்ச் சேருகிறதா என்றால், அது தான் இல்லை. இரண்டரை ஏக்கர் நஞ்சை இருந்தால், அவன் பெரிய நிலச்சுவான்தார் என்று சொல்லுகிறார்கள். ஒரு குடும்பம் 2½ ஏக்கர் நஞ்சை வைத்திருக்கிறது என்றால், அந்தக் குடும்பத்தில் 5 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அதிலிருந்து வருகிற வருமானம் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொள்கிற அளவுக்கு வருகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டரை ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருந்தால்,

அவன் சிறிய விவசாயி. அதேமாதிரி 5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்திருந்தால், அவன் பெரிய விவசாயியாம். தர்மபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில் இந்த 5 ஏக்கரிலிருந்து வருகின்ற வருமானத்தைக் கொண்டு 5 பேர்களைக் காப்பாற்ற முடியாத நிலையில் அந்த விவசாயி இருக்கிறான். இரண்டரை ஏக்கர் நிலம் வைத்திருந்தால், அவனுக்கு ஒரு பம்ப்செட் இருந்தால், பெரிய விவசாயி என்று கணக்கிடுகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இன்றையதினம் அவர்களுடைய கோரிக்கையில் முதன்மையான கோரிக்கையாகக் கேட்பது என்ன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு அரசாங்கம் கட்டுபடியான விலை கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். அது சம்பந்தமாக இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு மனுச் செய்திருக்கிறது என்று மட்டும் சொன்னால் போதாது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு அல்லது விளைபொருள்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை தர வேண்டுமென்று டில்லியிலே இருக்கிற திரு. சரண்சிங் அவர்களையோ, பிரதமர் திரு. மொரார்ஜிபாய் அவர்களையோ பார்த்துக் கேட்கமாட்டார்கள். நம்முடைய முதலமைச்சரைப் பார்த்துத் தான் கேட்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை டில்லிக்குக் கொண்டு போக வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. நீங்கள் அனிச்சையாக “ [illegible] ” என்ற ஒரு அறிவிப்பை அறிவிக்கலாம். அந்த ஆண்டு காலத்திற்கு விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்க வேண்டாமென்று சொல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு தொழிலுக்கும் அரசாங்கம் எவ்வளவு உதவிகளைச் செய்கிறது? தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்க வழிவகை செய்கிறது. அவர்களுக்கு எவ்வளவு பக்கபலமாக அரசாங்கம் இருக்கிறது! எவ்வளவு சலுகைகளை வழங்குகிறது! இன்றையதினம் [illegible] உரப் பொருளை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் உபயோகப்படுத்துகிற [illegible] பெர்டிலைசர், பெஸ்டிசைட்ஸ், பூச்சிக் கொல்லி மருந்து இவைகளுக்கெல்லாம் அரசாங்கம் என்ன சப்சிடி கொடுக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு என்ன வரி விலக்கு தருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். விவசாயிகளுக்கு மிகவும் தேவைப்படுகின்ற இந்தப் பொருள்களை அரசாங்கம் குறைவான விலைக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் உற்பத்தி செய்கின்ற உற்பத்திப் பொருள்களை நீங்கள் குறைந்த விலைக்கு வாங்கினால்கூட பரவாயில்லை. விளைச்சலில் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்





சொன்னார்கள். அரசாங்கத்தின் இலட்சியம் நிறைவேறுவதற்காக எந்த எதிர்பார்ப்பையும் பார்க்காமல், அவர்கள் கஷ்டப்பட்டு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உழவர் சமுதாயத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சரவர்களுடைய பட்ஜெட்டில் ஏமாற்றங்கள் இருக்கின்றன. ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயி எரிமலையாக மாறினால், அதைத் தடுப்பதற்கான சக்தி அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஓராண்டு காலமாக உயர் மட்டக் குழு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். மின் கட்டணத்தைக் கட்டக் கூடாது என்று எந்த விவசாயியும் விரும்புவதில்லை. கட்ட முடியாத நிலைமைக்கு அவன் தள்ளப்பட்டிருக்கிறான். மிகவும் அவல நிலையில் விவசாயி இருக்கிறான். நிதி அமைச்சரவர்கள் மிக அற்புதமாகச் சொன்னார்கள். விவசாயிகளுக்காக அவரே கண்ணீர் வடிப்பதுபோல் சொன்னார்கள். விவசாயிகள் மீது கண்ணும் கருத்துமாய் இருப்பது போல் சொன்னார்கள். “நூறு காத பயணத்துக்கு ஒரு சில அடிகளை” முன் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். சில அடிகளைத் துவக்கி வைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே நிலப்படை ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள்.

(பிற்பகல் 5-10)

அந்த அறிவிப்பு என்ன ஆயிற்று? இந்த நிலையில் இவ்வாண்டு புதிய திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். அது என்ன திட்டம்? படித்துப் பட்டம் பெற்ற அல்லது படிக்காத கிராமப்புறத்திலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம். இதன் மூலமாக வேலை செய்யும் நாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 3 கூலியாகக் கிடைக்கும். அதோடு அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை எதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கு இணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்த அமைச்சரவைக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை உண்மையிலேயே அமுல்படுத்த முடியும், நடைமுறைப்படுத்த முடியும் என்ற நல்லுணர்வோடுதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே அதைச் சொல்லியிருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை அரசாங்கம் அறிவிப்பதற்கு முன்னாலே தமிழ்நாட்டில் எத்தனை லட்சம் பேர் படித்த அல்லது படிக்காத இளைஞர்கள், 18 வயதுக்கு மேற்பட்டு வேலையற்று இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்திருக்கிறார்களா? இந்தத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் எத்தனை லட்சம்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 மார்ச் 6

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும் என்று கருதுகிறது? இதற்காக எத்தனை கோடி ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, என்னால் ஒன்றையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசாங்கம் நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பதைப்போல், நாளொன்றுக்கு 3 ரூபாய், சில இடங்களிலே கோதுமை, சில இடங்களிலே அரிசி என்றும், வேலை இல்லாத நாட்களுக்கு 1 ரூபாயும், கோதுமையும் அரிசியும் என்றால், இந்தத் திட்டத்திற்காக எத்தனை கோடி ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது? தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 4½ கோடி மக்களில் எத்தனை கோடி பேர்களுக்கு இந்தத் திட்டத்தாலே பயன் ஏற்படும் என்ற விவரங்களையும் ஆட்சித் தரப்பில் உள்ளவர்கள் சொன்னாலாவது பரவாயில்லை. வருகிற ஊராட்சி மன்றத் தேர்தல்களை மனதிலே வைத்துக்கொண்டு பத்திரிகையில் 8 காலச் செய்தியாக கிராமப்புறங்களில் வேலை இல்லாதவர்களுக்கு வேலை, வேலை செய்யும் நாட்களுக்கு 3 ரூபாய், கோதுமை, அரிசி, வேலை இல்லாத நாட்களுக்கு 1 ரூபாய் என்று போட்டுவிட்டு, ஒன்றியத் தேர்தல்களிலே அண்ணா தி.மு.க. கட்சிக்காரர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று மக்களை ஏமாற்றுகிற, மக்களை மயக்குகிற திட்டமாகத்தான் இருக்கிறதே தவிர, இந்தத் திட்டம் உண்மையிலேயே அமைச்சரவையாலே விவாதிக்கப்பட்டு இது நடைமுறைச் சாத்தியம் என்று உணர்ந்ததன் பின்னாலே சொல்லப்பட்ட திட்டமாக எனக்குப் புரியவில்லை. எனவேதான் நான் கேட்க விரும்புகிறேன், இந்த அரசாங்கத்திற்கு ஒரு "Scientific approach" இருக்கிறதா? பொருளாதாரக் கண்ணோட்டத்தோடுதான் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்களா? இந்த ஆண்டின் 850 கோடி ரூபாய் உள்ளடங்கிய வரவு-செலவுத் திட்டத்திலே அந்தத் திட்டத்தை மிகப் பெரிய திட்டமாக அறிவித்திருக்கிறார்கள். பார்ப்பதற்கும் படிப்பதற்கும் இது மிகப் பெரிய அற்புதமான திட்டமாகத்தான் தோன்றுகிறது. ஆனால் அமைச்சரவையில் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தை ஆலோசித்துப் பார்த்து இதை நடைமுறைப்படுத்த முடியும் என்று நம்பித்தான் கொண்டு வந்திருக்கிறார்களா? என்னைப் பொறுத்தவரை, இந்தத் திட்டமும் ஏற்கெனவே அண்ணா தி.மு.க. ஆட்சி அறிவித்த நிலப்படை திட்டத்தைப்போல்தான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. சென்ற ஆண்டிலே நிலப்படை அமைக்கும் திட்டத்தை அறிவித்தார்கள். அதன் மூலம் கிராமப்புறங்களில் வேலையில்லாத இளைஞர்களுக்கு அவர்களுடைய உடலுழைப்பைப் பயன்படுத்தி அவர்கள் செய்யும் பணிக்கு ஏற்ப கூலி வழங்கப்படும் என்றார்கள். சாதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வருகிறபோது, புயல் வருகிறபோது, வறட்சி வருகிறபோது அவைகளுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகளில் மனித உழைப்பைப் பயன்படுத்திக்கொண்டிருக்



1979 மார்ச் 6] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

கிறோம். ஆனால் நாட்டிலே தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தத் திட்டத்தையே ஏதோ அண்ணா தி.மு.க.வின் திட்டத்தைப்போல் அறிமுகப்படுத்தி இந்தத் திட்டத்தின் மூலம் கிராமத்திலுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறோம் என்றால், நான் கேட்கிறேன் : இதனால் எப்படி கிராமப்புறத்து மக்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்க முடியும்? நம்முடைய பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கால்நடைத் துறையில் புதிய திட்டம் ஒன்றைத் தந்து, அந்தத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு தற்போது கிடைக்கும் வருமானத்தைவிட அதிகமாக வருவாய் கிடைக்க வழி செய்தால், அதைப் புதிய திட்டம் என்று சொல்லலாம். ஆனால் ஏற்கெனவே நாம் எந்தப் பணியைச் செய்கிறோமோ அந்தப் பணிகளுக்கு ஆட்படுத்தப்படும் வேலையாட்களுக்கு இந்த அரசாங்கத்தின் புதிய திட்டம் மூலமாகத்தான் வேலை கிடைக்கிறது என்றால், இது எப்படி சரியாகும்? இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக கிராமத்தில் இருக்கிற மக்களுக்கு அவரவர்களுடைய கிராமங்களிலேயே வேலை வாய்ப்பு தந்தால்தான், அவர்களும் விருப்பத்தோடு வேலை செய்ய முன்வருவார்கள். அவர்களுடைய கிராமத்தில் இல்லாமல் பக்கத்து கிராமங்களில் அல்லது பக்கத்து மாவட்டத்திலுள்ள பகுதிகளுக்குச் சென்று, அங்கே வேலைசெய்து, நாளொன்றுக்கு 3 ரூபாய் கூலி பெறலாம் என்றால், அவர்கள் இந்த 3 ரூபாயை வைத்துக் கொண்டு எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? அவர்களெல்லாம் தங்கள் குடும்பத்தோடு அங்கே சென்று வேலை செய்ய முடியுமா? அவர்கள் எங்கே சென்று தங்குவார்கள்? குடும்பத்தில் ஒருவர் 3 ரூபாய் சம்பாதித்தால், அதை வைத்துக்கொண்டு ஒரு குடும்பம் காலம் தள்ள முடியுமா? இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல், ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதென்பது எந்த வகையிலும் சரியில்லை. இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிக அழகாக 'காகிதப் பூ திட்டம்' என்று குறிப்பிட்டார்கள். இன்றையதினம் அண்ணா தி.மு.க. அரசின் திட்டங்களைப் பார்த்தால், அவைகளெல்லாம் வெறும் காகிதப்பூ திட்டங்களாகவே அமைந்திருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அரசியல் அனுபவம் மிக்கவர்கள், அதிலும் குறிப்பாக நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் மிகுந்த அனுபவம் பெற்றவர்கள் ஆட்சியில் இருக்கும்போது, அவர்கள் உணர்ந்து போடுகிற திட்டமாக இது எனக்குத் தோன்றவில்லை. இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி, நாட்டு மக்களை மயக்கப் பார்க்கிறீர்களா? அண்ணா தி.மு.க.-வின் திட்டம் என்று சொல்லி வரப்போகிற தேர்தலுக்குப் பயன்படுத்துகிற திட்டமாக, கடைக்கோடி மக்களை ஏமாற்றுகிற மாய்மாலத் திட்டமாகத்தான் இருக்கிறதே தவிர, இந்தத் திட்டத்தால் மக்களுக்கு எப்படி உண்மையாக

உதவி செய்ய முடியும் என்று கருதுகிறீர்கள்? ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்கள் நிதர்சனமான உண்மையை எண்ணிப் பார்க்க முன்வர வேண்டும்.

அடுத்து, "செல்லரித்துப்போன திட்டங்கள்" என்று நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளிலே எதைச் செல்லரித்துப் போன திட்டமென்றும், உளுத்துப்போன திட்டமென்றும் சொல்லுகிறீர்கள்? முன்னாலே சொல்லப் பட்ட திட்டங்கள், போடப்பட்ட திட்டங்கள் எல்லாம் செல்லரித்துப்போன திட்டங்கள் என்று சொல்லுகிறீர்களா அல்லது உளுத்துப்போன திட்டம் என்று சொல்லுகிறீர்களா? தலைவர் காமராஜர் காலத்திலே உருவாக்கப்பட்ட பல் வேறு அணைக்கட்டுத் திட்டங்களை நடத்தித்தான் நாம் இன்றைக்கும் தொடர்ந்து அவற்றின் பலன்களை அனுபவித்து வருகிறோம். அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலும் உருவாக்கப்பட்ட திட்டங்களை நாம் தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். மக்கள் அவைகளின் பயன்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய கூட்டுப்புற குடிநீர்த் திட்டமானாலும் சரி வேறு எந்தத் திட்டமானாலும் சரி, எதை உளுத்துப்போன திட்டம் என்று சொல்லுகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி தேவை என்று செயல்படுத்தியது உளுத்துப்போன திட்டமா? அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று ஒரு வாரியம் அமைத்துச் செயல்பட்டோமே, அது உளுத்துப்போன திட்டமா? இல்லை, சென்னை நகரத்திலும் வேறு பல பெரிய நகரங்களில் இருக்கும் குடிசைவாழ் மக்களின் நலனுக்காக என்று குடிசை மாற்று வாரியம் அமைத்து பல அடுக்கு மாளிகைகளைக் கட்டிக் கொடுத்தோமே அதை உளுத்துப்போன திட்டம் என்று சொல்லுகிறீர்களா? எது உளுத்துப்போன திட்டம்? வெறும் வார்த்தைகளாலே விளையாடிவிட்டு நிதிநிலை அறிக்கையைத் தந்துவிடுவதால் எந்தப் பயனுமில்லை. 1963-ல் தமிழ்நாட்டின் வரவு-செலவுத் திட்டம் 125 கோடி ரூபாய்களை உள்ளடக்கி இருந்தது. இன்றையதினம் ரூ. 850 கோடிக்கு நிதிநிலை அறிக்கை தயாரித்திருக்கிறீர்கள். சுமார் 9 மடங்கு கடந்த 10, 11 ஆண்டுக்காலத்தில் உயர்ந்திருக்கிறது. எனவே உயர்ந்திருக்கிற வருமானத்திற்குத் தகுந்தாற்போல் மக்களுக்கு அரசாங்கம் வசதிகளைச் செய்ய வேண்டும். அதைச் செய்திருக்கிறோமா என்று பார்த்தால், அதுவும் வேதனையாகத்தான் இருக்கிறது.



சுருளியாறு மின்திட்டமானாலும் சரி, சென்ற வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த காடம்பாறை திட்டமானாலும் சரி, தூத்துக்குடி அனல் மின் திட்டமானாலும் சரி, இவைகளெல்லாம் ஏற்கெனவே இருக்கிற திட்டங்கள். அவைகளைத்தான் இந்த அரசாங்கம் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் என்பது இருக்கிற திட்டங்களை நிறைவேற்றுவது என்பதையும் விஸ்தரிப்பது என்பதையும் மட்டுமே தன் லட்சியமாகக் கொண்டிருக்க முடியாது. அதைமட்டும் செய்து கொண்டிருக்கும் ஒரு அரசு இதுபோன்ற திட்டங்களைச் சொல்லி அதன்மூலம் "இந்தாப்பு" தேடிக்கொள்ள முடியும்? இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மத்திய அரசோடு வாதாடி பல கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள ஒரு கனரகத் தொழிற்சாலைத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது அல்லது இந்த மாநில அரசே மிகப் பெரிய தொழிற்சாலைத் திட்டத்தை உருவாக்கிச் செயல் படுத்துகிறது என்றால், பாவாயில்லை; அல்லது மிகப் பெரிய அணைக்கட்டுத் திட்டத்தை நாங்கள் உருவாக்கி செயல்படுத்துகிறோம் என்றால் பாவாயில்லை. அப்படியில்லாமல் ஏற்கெனவே முடிக்கப்பட்ட பி. டி. ராஜன் கால்வாய்த் திட்டமானாலும் சரி, கிருதுமால் திட்டமானாலும் சரி, அவைகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. கிருதுமால் திட்டத்தைப்பற்றிப் பேசும் போது, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு வேடிக்கையான திட்டத்தைக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிருதுமால் அணைத் திட்டத்தின் மூலம் 100 ஆழ்குழாய் கிணறுகள் போட்டு விவசாயிகளுக்குத் தண்ணீர் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு 1¾ கோடி ரூபாய் திட்டம் போட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதைவிட மிகப் பயங்கரமான, அரசாங்கப் பணத்தை விரயம் செய்யக்கூடிய திட்டம் வேறு எதுவும் இருக்க முடியாது. அருப்புக்கோட்டைத் தாலுக்காவில் எப்படியாவது மக்களைத் திசை திருப்ப வேண்டும் என்ற அடிப்படையில் அதிகாரிகள் இந்தத் தவறான திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். குடிநீர் வடிகால் வாரியத்தினர் அந்தப் பகுதியில் ஆய்வு நடத்தி 300 அடிக்குக் கீழ் நீர் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட ஒரு திட்டம் போடுவது என்பது எப்படிச் சரியாகும் என்று எனக்குப் புரியவில்லை. அந்தப் பகுதி மக்கள் கேட்பதெல்லாம் வைகை அணைக்கட்டிலிருந்து கிருதுமால் அணை வழியாக, முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அருப்புக்கோட்டைத் தொகுதியில் 100 கண்மாய்களுக்குத் தண்ணீர் கிடைக்கும்படி ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதாகும். அதாவது வைகை ஆயக்கட்டில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டவை தவிர, ஆயக்கட்டில் சேராத பகுதிகளுக்குப் புதிதாக அவர்கள் தண்ணீர் கேட்கிறார்கள். ஏற்கெனவே வைகை ஆயக்கட்டில்

சோழ திருப்பத்தூர் பகுதிக்கும், சிவகெங்கைப் பகுதிக்கும் தற்போது திருமங்கலம் பகுதிக்கும் நீர் செல்கிறது. வாயாடி கையாடி உள்ளவர்களுக்கு வேறு பகுதிகளுக்கும் செல்கிறது. உசிலம்பட்டிப் பகுதிக்கும் செல்கிறது. அதனடிப்படையில் வைகையிலிருந்து வரும் இருதுமால் அணைக் கால்வாய் தற்போது அடைக்கப்பட்டிருந்தாலும், மழைக் காலத்தில் அதிகமான தண்ணீர் வரும்போது, இருதுமால் அணைக்குத் தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் அருப்புக்கோட்டைக்கு வரும்போது, இந்தத் திட்டத்தைத் துவக்கி வைப்பதாகக்கூட இருந்தது. இப்போது மூன்னுக்குப்பின் முரணாக 100 ஆழ்குழாய்க் கிணறுகளைப் போட்டு, தண்ணீரைப் பம்பு செய்து விவசாயிகளுக்குத் தர இருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது என்றால், இதைவிட வேடிக்கையான நடைமுறைக்கு ஒவ்வாத திட்டம் ஒன்றும் இருக்க முடியாது. அந்தப் பகுதி மக்கள் கேட்பது முடிந்தால் வைகையிலிருந்து இருதுமால் அணைக்குத் தண்ணீர் கொடுங்கள், அந்தத் தண்ணீரைத் தேக்கிவைத்து நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம் என்பது. அதைச் செய்யாமல் 100 ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதன் மூலம் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடாது. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தின்போது, ஆழ்குழாய்க் கிணறுகளை உண்டாக்கினோம். அதன் மூலம் 20 ஏக்கர் அளவுக்குக்கூட தண்ணீர் கொடுக்க முடியவில்லை. அது ஒரு பெரிய பிரச்சினையாக வந்துவிட்டது. தண்ணீர் இல்லாமல் எப்படி எல்லோருக்கும் கொடுக்க முடியும் என்று புரியவில்லை. அதற்குத் தீர்வை கொடுப்பது யார், ரெக்கார்டு வைத்துக்கொள்வது யார், அங்கே இருக்கிற பம்புசெட்டை யார் பராமரிப்பது என்ற பல்வேறு பிரச்சினைகள் எழுந்து அவைகளைத் தீர்க்க முடியாமல் கஷ்டப்பட்டோம். அந்த வகையில் 100 ஆழ்குழாய் கிணறுகளைப் போட்டு, விவசாயிகளுக்குத் தண்ணீர் தருவது என்றால், இது நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. இதற்கு 1-3/4 கோடியில் திட்டம் போட்டு, இந்த ஆழ்குழாய் கிணறுகளுக்கு 20 லட்சம் மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே டாக்டர் கலைஞர் காலத்தில் இந்த இருதுமால் அணைக்கட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் எமெர்ஜென்சி வந்தது. அதையொட்டி அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகிறபோது, அந்தத் திட்டத்தைத் துவக்கி வைப்பதாக இருந்தார்கள். ஆனால் பாராளுமன்ற கன்சல்டேடிவ் கமிட்டி அந்தப் பகுதிக்கு வந்திருந்தபோது, இந்தத் திட்டத்தைப்பற்றி அறிந்து, "ஏற்கனவே மாநில அரசு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நிறைவேற்றி வருகிற திட்டத்தினை மீண்டும் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைப்பது அழகல்ல" என்று எடுத்துச் சொன்னதால்,





அன்றைய பிரதமர் அவர்கள் அதைத் திறந்து வைக்கவில்லை. இப்போது
அதற்கு நேர்மாறாக இருதுமால் அணைத் திட்டத்தை நடைமுறைப்படுத்து
வதற்கு பதிலாக குழாய்க் கிணறுகள் மூலமாக விவசாயிகளுக்குத் தண்ணீர்
வழங்குவோம் என்பது எந்த வகையிலும் முறையல்ல என்று சொல்லிக்
கொள்வதுடன், இது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக
புதிய நன்மைகளைச் செய்கிறோம் என்ற பெயரில் அந்தப் பகுதி மக்களுக்குத்
தீங்கை இழைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையிலே அரசு அலுவலாளர்கள் குறித்து ஒரு
அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அமைக்கப்பட்ட 3-வது
ஊதியக் குழுவினால் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டுமென்று
கேட்கும்போது, அதைப்பற்றிக் குறிப்பிடாமல் அரசு அலுவலர்களுக்குச் சில
சலுகைகள் என்ற பெயரில் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.
சைக்கிள் வாங்க, ஸ்கூட்டர் வாங்க முன்பணம் கடனாகத் தரப்படும் என்று
சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே திருமணத்திற்காக ஊழியர்களுக்குக்
கடன் தரப்படுகிறது. இவைகளையெல்லாம் அரசாங்கத்தின் மிகப் பெரிய
அறிவிப்புகளாகக் கருத முடியாது. 400 ரூபாய் முன்பணம் தந்து
கொண்டிருந்ததை மாற்றி 500 ரூபாயாகக் கொடுப்பதோ 250 ரூபாய் சம்பளம்
வாங்கியவர்கள் சம்பளம் அதிகம் பெறுவதால் ஸ்கூட்டர் வாங்க வசதி
ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லுவதோ ஒரு அரசாங்கத்தின் பெரிய
அறிவிப்புகளாக இருக்க முடியாது. இந்த அறிவிப்புகளெல்லாம் சாதாரண
அரசு ஊழியர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவனவாக இருக்க முடியுமா
என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். அரசு ஊழியர்கள்,

(பிற்பகல் 5-20)

ஆசிரியர்கள் மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள
முரண்பாடுகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும் என்று வேண்டிக்கொண்ட
போது, அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் இன்றையதினம் சில
அறிவிப்புக்களை மட்டும் தான் செய்திருக்கிறார்கள். சைக்கிள் கடன்
வழங்குவது, ஸ்கூட்டர் கடன் வழங்குவது என்று அறிவிப்பு செய்திருக்
கிறார்களே தவிர இந்த நிதிநிலை அறிக்கை சாதாரண அரசு ஊழியர்
களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதாக இல்லை. அவர்கள் வாழ்க்கைப்
புள்ளி உயர்வுக்கு ஒப்ப டி.ஏ. கேட்கிறார்கள். அதை உங்களால் கொடுக்க
முடியுமா என்று ஆராயுங்கள். இல்லையென்றால், என்.ஜி.ஓ. வீட்டுப் பிள்ளை
களுக்கு எல்லாம் கல்லூரியிலே இலவசப் படிப்பு என்று அறிவியுங்கள். அது
ஒரு நியாயமான காரியம். இன்றையதினம் பெரும்பாலானவர்கள் இலவசக்

கிறார்கள். தந்த மாளிகையில் இருந்து தாழ்வாரத்திற்கு—இது பொதுவுடமை நாட்டிலே, கம்யூனிஸ்ட் நாட்டிலே கூட இல்லாத ஒன்று—வரவேண்டும் என்று சொல்கிறார்கள். இன்றையதினம் யார் தந்த மாளிகையிலே இருக்கிறார்கள்? கண்ணாடி முன்னாலே நின்று பேசக்கூடிய அந்தப் பிரச்சினைகளை இன்றையதினம் சட்டமன்றத்திலே பேசுகிறார்கள். தந்த மாளிகையிலிருந்து தாழ்வாரத்திற்கு வரவேண்டும் என்பதில் எனக்கு இரண்டுவித கருத்து? அதுவல்ல பிரச்சினை? தந்த மாளிகையில் யார் இருக்கிறார்கள்? தந்த மாளிகையில் இருப்பவர்கள் அரசியல் வாதிகளா? அமைச்சர்களா? யார் இருக்கிறார்கள்? அப்படி இருந்தால், அரசாங்கத்தினுடைய கண்ணுக்குத் தப்பி யாரும் இருந்துவிட முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றபோது, தமிழகத்தினுடைய பெரிய தொழிலதிபர்கள் அங்கே சென்றிருந்தார்கள். அந்த மிகப் பெரிய தொழில் அதிபர்கள் அந்த தந்த மாளிகையிலே இருக்கிறார்கள், அவர்கள் எப்படித் தாழ்வாரத்திற்கு வர முடியும்? நாம் போட்டிருக்கிற புதிய வரிகள் அவர்களைப் பாதிக்கவில்லையே! நாம் அவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கிறோமே! எந்தப் புதிய வரிகளைப் போட்டு இந்த அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்கியிருக்கிறோம்? புதிய வரிகள் மூலமாக அல்லது ஒரு புதிய கண்காணிப்பின் மூலமாக நாம் போட இருக்கின்ற புதிய திட்டங்கள், அமைக்க இருக்கின்ற புதிய தொழிற்சாலைகள் தனியாருக்கு இல்லை என்று சொன்னால், பல புதிய தந்த மாளிகைகள் உருவாகாமல் இருக்கும். ஏற்கெனவே தந்த மாளிகையில் இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும் என்று சொன்னால், அப்படி வர யாரும் தயாராக இல்லை. அவர்கள் பாது காக்கப்பட வேண்டும் என்பதற்கு இன்றைக்கு சட்டங்களை உருவாக்கியிருக் கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக மிகப் பெரிய அதிகாரிகள், யோசனைகள், ஆலோசனைகள் கூறுகிறார்கள். இன்றையதினம் சென்னையிலே நாம் யாரை 'ஷெரிப்'-ஆகப் போடுகிறோம்? எந்த அரசாங்கமானாலும் சரி, சாதாரண குடிமகனையா, 'ஷெரிப்'-ஆகப் போடுகிறார்கள்? 'அவன் இன்கம்டாக்ஸ் கட்டுகிறானா? அவனுக்கு எத்தனை மாளிகைகள் இருக்கின்றன? வீட்டில் ஏர்-கண்டிஷனர் இருக்கின்றதா?' என்று பார்த்துத்தான் போடுகிறோம். சென்னையில் உள்ள ஜனத்தொகையிலே பாதிப் பேர் மேயராக வரவேண்டும் என்ற விருப்பத்தை அண்ணா அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள். ஆகவே, ஷெரிபைச் சாதாரணமானவர்களாகப் பார்த்துப் போடுங்கள். அனுபவமிக்கவர்களைப் போடுங்கள். எனக்கு அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் நாம் போடும்போது, தந்த மாளிகையில் இருப்பவர்களை ஷெரீப்-ஆகப் போட்டுவிட்டு அவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும், நீங்கள் வாருங்கள் என்று சொன்னால், தாழ்வாரத்திற்கு வர யார் தயாராக இருக்கிறார்கள்



என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சுலோகங்களைச் சொல்வதும், வார்த்தைகளைப் பேசுவதும், அது தான் அரசாங்கத்தின் வரவு செலவு அறிக்கையாக இருக்கிறது. புண்ணுக்குப் புனுகு போடுவது போல, சில வாசகங்கள் மட்டுமே இருக்கின்றன. இப்படியே போனால் நிலைமைகள் மோசமாகிவிடும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இன்னொன்று, தலைவர் அவர்களே, தங்களது அனுமதியோடு படிக்கிறேன், இந்த பத்திரிகையிலே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இருந்தாலும், தலைவரின் அனுமதியை முன்னரே பெற்றிருக்க வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மத்தியிலே இருக்கிற நிதி அமைச்சர், துணைப் பிரதமர், திரு. சரண் சிங் அவர்கள் வார்த்தையை வாசிக்கிறேன். இந்த அரசாங்கம் மிகப் பெரிய அளவிலே மார் தட்டுகிறது. நாங்கள் பற்றாக் குறை பட்ஜெட்டே போடவில்லை, துண்டு விழுகின்ற 4 கோடி ரூபாயையும், சோப்பிலே கை வைத்து, தேங்காயிலே கை வைத்து சமாளித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கடைக்கோடியிலே இருக்கும் மக்களுக்கு வாழ்வு கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, நீங்கள் அப்படிச் சொல்லி உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம் என்று அவரே சொல்லியிருக்கிறார்.

Mr. Charan Singh, explained the features of this year's Budget and emphasised that it would not result in any inflationary pressure.

The Centre had liquidated the deficits of all States so that they might start with a clean slate, he said.

மாநில அரசுக்கு இருக்கிற பற்றாக்குறை எல்லாம், ஏழாவது நிதிக் கமிஷன் பரிந்துரைகள் மூலமாக நீக்கப்பட்டிருக்கின்றது. ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட, இந்த ஆண்டு கேட்ட அளவில் ஒரு பங்கு கொடுத்து நமக்கு மிகுந்த அளவில் கைகொடுத்திருக்கிறார்கள். மாநில அரசின் குறைகள் நீக்கப் பட்டிருக்கின்றன. நம்முடைய மாநில அரசுக்கும் ஓரளவு நிதியுதவி கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் வரவு செலவுத் திட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே புதிய திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்படியில்லாமல், வழக்கம்போல் நம்முடைய சுகாதாரத் துறையிலே ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கும் மருத்துவமனைகளில் புதிய படுக்கை வசதிகள், ஆசிரியர்கள் பதவி, என்ற அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர எதிர்பார்க்கும் அளவுக்கு காரியங்கள் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன்.

கல்வி பெறும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அதிலே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டும், அதாவது ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு, அரசு அலுவலர்களின் பிள்ளைகளுக்கு மட்டும் ஏன் வாய்ப்பில்லாமல் போகிறது? காரணம் இந்த மூன்றாவது சம்பள ஆணைக்குழுவின்படி, சாதாரண ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கூட, இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கூட 4 ஆயிரம் ரூபாய் வருட வருமானம் வருகிறது. ஆனால், வருட வருமானம் 3 ஆயிரத்துக்கு மேல் போனால், இந்த அரசாங்கத்தினுடைய சலுகைகள் கிடைக்காமல் போகிறது. கல்லூரியில் பயில இந்தச் சலுகைகள் எல்லாம் கிடைப்பதில்லை. ஆகவே, எந்த அரசு அலுவலர்களுடைய பிள்ளைகள் ஆனாலும் சரி, அவன் போலீஸ்காரன் மகன் ஆனாலும் சரி, அரசு அலுவலர்கள் பிள்ளைகள் ஆனாலும் சரி, அவர்களுக்குக் கல்லூரி வரை இலவசப் படிப்பு என்று அறிவிக்க வேண்டும். கேரளாவிலே கூட எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிற மாணவர்களுக்கு 11 ஆம் வகுப்புக்குப் பரிட்சை கட்டணம் இல்லை. நாமும் அப்படி ஒரு அறிவிப்பைச் செய்ய வேண்டும். ஏற்கெனவே நமக்குள்ள கஷ்டத்தில் 80 சதவிகிதத்தை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. எண்பது சதவிகிதம் பேர் இன்றைக்குக் கட்டணம் கட்டுவதில்லை. இருபது சதவிகிதம் பேர்கள்தான் கட்டணம் கட்டுகிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக எஸ்.எஸ்.எல்.சி. வரை பரிட்சை எழுதுவதற்கு யாரும் கட்டணம் கட்ட வேண்டாம் என்று வைக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், இந்த அரசு நல்லதைச் செய்கிறது, அரசு அலுவலர்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது என்று சொல்லலாம். ஆனால் ஏதோ பண கொடுக்கிறார்கள், 50 ரூபாய் பார்த்துக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அதை வைத்து ஒரு சைக்கிளின் 'ஸ்பேர் பார்ட்ஸ்' கூட வாங்க முடியாது. ஆகவே, செய்கிற காரியம் அவர்கள் திருப்தியடைகிற அளவுக்கு, அவர்களுடைய வேண்டுகோள் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு இருக்க வேண்டுமே தவிர, ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு அறிவிப்பைச் செய்துவிட்டு நாங்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் திருப்தி அளிக்கும் வகையில் எல்லாம் செய்துவிட்டோம் என்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ள முடியுமா? இன்னொன்று, ஆயிரம் ஆசிரியர்களுக்குப் புதிதாக வேலைவாய்ப்பு என்று இருக்கிறது. நான் கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டிலே பாத்தப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள், பி.டி. பட்டம் பெற்றவர்கள், மற்றும் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மட்டும் 30,000-க்கு மேல் இருக்கிறார்கள். இந்த ஆயிரம் ஆசிரியர்களையும் ஆரம்பப் பள்ளியிலே நியமிக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆயிரம் என்று சொன்னால்—350 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன—363-க்கு மேற்பட்ட யூனியன்கள் இருக்கின்றன, இவைகள் தவிர நகராட்சிகள், கார்ப்பரேஷன்கள் என்று இருக்கின்றன, தனியார் பள்ளிகள் இருக்கின்றன,





இதைப் பிரித்துக்கொடுத்தால் ஒரு ஒன்றியத்திற்கு ஒருவர் கூட வராது. அதுவும் எப்படிச் செய்கிறார்கள் இந்த அதிகாரிகள்? ஏதாவது ஒரு பள்ளியிலே அதிகப்படியாக ஆசிரியர்கள் இருப்பார்கள். சில பள்ளிகளிலே புதிதாகத் தேவை ஏற்படும். அப்போது 'சர்ப்ளஸ்' ஆக இருக்கும் இடத்திலிருந்து மாற்றுதல் செய்யப்பட்டு நியமிக்கிறார்கள். ஆகவே, புதிதாக வேலை வாய்ப்புக் கொடுக்கிற வாய்ப்பில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வேலைவாய்ப்பு அளிக்கிறோம் என்று இங்கே சொல்லுகிறோமே தவிர, நடைமுறையிலே ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டதா என்று பார்க்க வேண்டும். "சென்ற ஆண்டு வேலைதேடித்தரும் அலுவலகங்களிலே பதிவு செய்தவர்களில் ஆயிரம் பேருக்கு நாங்கள் வேலைவாய்ப்பு கொடுத்தோம்" என்று ஒரு பட்டியல் வையுங்கள். அப்படிப் பட்டியல் வைத்தால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏதோ மக்களிடத்திலே புள்ளிவிவரங்களைச் சொல்லி அவர்களைத் திசை திருப்புவதாகவே இந்தத் திட்டங்கள் இருக்கின்றன. இது உண்மையிலேயே மக்களுக்குப் பயனளிக்கின்ற திட்டமாக இல்லை.

இன்னொரு முக்கியமான காரியம். இன்றையதினம் அரசாங்கத்தினுடைய பெரிய அதிகாரிகள் மத்தியிலே ஒரு மனப்பான்மை உருவாகியிருக்கிறது. குறை சொல்வதற்காக அல்ல. நம்முடைய நன்மைக்காக, ஜனநாயக மரபுகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக, ஜனநாயகத்திலே இருக்கிற அங்கங்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். இன்றையதினம் மேல் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் அரசாங்கத்திற்குத் தாளம் போடுகின்ற காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். எமர்ஜென்சி காலத்திலே தான் அந்தக் காரியங்களைச் செய்தார்கள். அவர்கள் சொல்வது தான் வேதம், அவர்கள் வைத்ததுதான் சட்டம், இன்றையதினம் அரசாங்கத்திலே இருக்கிற மேலதிகாரிகள் குறிப்பாக தலைமைச் செயலகத்திலும், சென்னையிலே இருக்கிற 'டைரக்ட்ரேட்களில்' இருக்கிற பெரிய அதிகாரிகள் எல்லாம் தாங்கள் வைத்தது தான் சட்டம், தாங்கள் சொல்வதைத் தான் அமைச்சர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள், தாங்கள் உருவாக்கித் தருவதுதான் அரசாங்கத்தின் கொள்கை என்ற மனப்போக்கிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் எழுப்புகின்ற பிரச்சினைகளை, சட்டமன்றத்திலே மேலவையிலே பேசுகின்ற பேச்சின் அடிப்படையிலே உருவாக்கப்படுகின்ற புதிய கொள்கைகளை இந்த அரசாங்கம் அறிவிப்பதற்குப் பதிலாக, ஏற்கெனவே செல்லரித்துப்போன சித்தாந்தத்தை உருவாக்கவேண்டும் என்பதற்கேற்ப அந்த அதிகாரிகளுடைய எண்ணங்களையும், நோக்கங்களையும் தான் இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மிக அற்புதமான விளக்கம் ஒன்றைச் சொல்லியிருக்

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-35)

## இணைப்பு.

[35 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தனியார் கல்லூரிகளில் 31—3—1977 அன்று பணியிலிருந்த ஆசிரியர்கள், கல்லூரிகளிலிருந்து புதுமுக வகுப்பை எடுப்பதினாலோ, குறைவான மாணவர் எண்ணிக்கையின் காரணமாகவோ வேலை நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்று அரசு பணிப் பாதுகாப்பு அளித்தது. இதனை அமுல்படுத்துமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் 31 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. இதில் 10 பேர் தங்களுடைய சொந்த விருப்பத்தின்பேரில் கல்லூரியிலிருந்து விலகியுள்ளார்கள். 9 நபர்கள் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மீதமுள்ள 12 நபர்களில், 11 நபர்கள் தற்காலிகமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, குறிப்பாக 9 மாதத்திற்கு என நியமனம் செய்யப்பட்டவர்கள். மீதமுள்ள ஒரு நபர் திருமதி ஜோன் டி. வாஸ். என்பவர்.

திருச்சி, ஹோலி கிராஸ் கல்லூரியில் ஜூலை 1976 முதல், மார்ச் 1977 வரை பணி புரிந்த திருமதி ஜோன் டி. வாஸ் வேலை நீக்கம் செய்யப்பட்டார். அவரை மறுபடியும் பணியிலமர்த்துமாறு நிர்வாகத்தைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டார். மேற்சொன்ன ஆசிரியரின் வேலை நிரந்தரமாக இல்லாததாலும், நிர்வாகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார், ஆகையால் அவரை மறுபடியும் பணியிலமர்த்துமாறு நிர்ப்பந்திக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டது. இருப்பினும், கல்லூரிக் கல்வி இயக்குநர் சொன்னவாறு அவரை மறுபடியும் பணியில் சேர்த்துக் கொண்டாலொழிய, அரசு மானியம் வழங்குவதற்கு இல்லை என்று நிர்வாகத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதை மறு பரிசீலனை செய்யுமாறு நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. அரசு உத்திரவுக்கு இணங்காத சில கல்லூரிகளுக்கு உரிய மானியத்தொகையை நிறுத்திவைப்பது குறித்து அரசு சட்டத்துறையுடன் கலந்து பரிசீலித்து வருகிறது.

ஆசிரியர்களின் கோரிக்கைகளை அரசு அனுதாபத்தோடு ஆராய்ந்து வருகிறது. கூடிய விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1979 மார்ச் 7.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Incentive Increments*

* 121 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the incentive increments for Post-Graduates sanctioned in G.O. Ms. No. 42, Education, dated 10th January 1969 have been withdrawn; and

(*b*) if so, the reasons therefor?

### ஊக்க ஊதிய உயர்வுகள்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்டமேற்படிப்புத் தகுதி பெற்றவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிப்பதற்கு கல்வித்துறையின் 10—1—1969 ஆம் நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டு பின்னர் அது ரத்து செய்யப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

அடுத்து, என்னுடைய வேண்டுகோள். இந்த அரசாங்கம் சினிமாப் படக் கொட்டகைகளுக்கு வரிவிதிப்பில் ஒரு புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறது. அந்த வரிவிதிப்பு நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், ஊராட்சி மன்றங்களிலும் பின்பற்றப்படுகின்ற கம்பவுண்டிங் முறை. அந்த முறையை ஓரளவுக்கு வரவேற்க வேண்டியதுதான். அதிலே நிர்வாக ஊழல்கள், முறைகேடுகள், லஞ்சங்கள் நடமாடுவதைத் தடுப்பதற்கு வழியாக இது நல்முறையில் இருக்கிறது. அதே சமயத்தில் ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும். முதல்நிலை நகராட்சிகள், இரண்டாம் தர நகராட்சிகள் போன்றவைகளில் எந்த முறையைக் கையாள்கிறார்களோ அதே முறையைத் தான் பேரூராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் பின்பற்று கிறார்கள். உதாரணமாக, ஒரு சிறு ஊராட்சி மன்றத்திலே இருக்கும் 'டூரிங் சினிமா' நிரந்தரமான கொட்டகையைக் கட்ட வேண்டும் என்று சொன்னால் —அந்த உரிமையாளர்கள் விரும்புகின்ற அளவுக்கு 'அக்காமடேஷன்'-ஐ ஏற்றுக்கொள்ளாமல் அரசாங்கமே 'இந்த அளவுக்குத்தான் இருக்க வேண்டும்' என்று கட்டாயப்படுத்தி அதற்கு ஒரு வரிவிதிப்பு செய்கிறார்கள். அப்படி விதிக்கிறபோது, அவர்களால் அந்த கிராமத்திலே இருந்துகொண்டு அவ்வளவு பெரிய வரியைத் தாங்கிக்கொள்ள முடியாது. உதாரணத்திற்குச் சொன்னால், ஏற்கனவே இருந்த 'செமி-பெர்மனெண்ட்' அல்லது டூரிங் தியேட்டர்களுக்கு 350 ரூபாய் ஒரு மாதத்திற்கு வரி என்று சொன்னால், அது இன்றைய தினம் ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த கிராமங்களிலே இருக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங் களுக்கும் இருக்கும் வருமானமே இதுதான். ஆகவே, தங்க முட்டை போடும் வாத்தைப் போல, ஒரேயடியாக அடிக்க வேண்டும் என்று நினைக்காமல், எந்த அளவுக்கு நியாயமாகச் செய்து, வருமானத்தைப் பெருக்க முடியுமோ, அந்த அளவுக்குச் செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையிலே 1962 ஆம் ஆண்டில் எதிர்க் கட்சியிலே இருந்தபோது, கலைத் துறையைப் பற்றிப் பேசி, குறிப்பாக சினிமா கொட்டகைகளுக்காக வாதாடியிருக்கிறார். அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் கடுமையாக நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லி, அந்தக் கொடுமைகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்று பேசியிருக் கிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு அவருடைய அன்றைய பேச்சைத் திரும்பப் படித்துப் பார்த்து சினிமாத் தொழிலில் இருப்பவர்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



முகவை மாவட்டத்தில், பின்தங்கிய பகுதிகளாக உள்ள, முதுகுளத்தூர், பரமக்குடி, அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகள் வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பதால், அங்குள்ள மக்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்குகிறபோது, ஏற்கெனவே அங்கே ஒரு ஆலை இருக்கிறதென்றாலும், மீண்டும் ஒரு ஆலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீண்ட காலமாக எங்கள் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்தி வருகிறார்கள். அருப்புக்கோட்டைத் தாலுக்காவை ஆர்.டி.ஓ. டிவிஷனாக மாற்றி, அந்த மாவட்டத்தை இரண்டு பகுதிகளாக மேற்கு, கிழக்கு என்று பிரிப்பதற்குத் தயாராக இருப்பதாக சென்ற முறையே சொல்லப்பட்டது. பிரிக்கப்படக் கூடிய ஒரு பகுதிக்கு முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று பெயர் வைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை சுற்றுப்பயணத்தின்போது கூறியிருக்கிறார்கள். அதை விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து ஈரோட்டைப் பிரித்து தந்தை பெரியார் மாவட்டம் என்று வைப்பதைப் போல, இராமேஸ்வரத்திலிருந்து இராஜபாளையம் வரையில் நீண்டுள்ள அந்த மாவட்டத்தை நிர்வாகத்தை முன்னிட்டாவது பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கே தலைநகரை எந்தப் பகுதியில் வைப்பது என்ற சங்கடமான நிலை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மேற்கு இராமநாதபுரத்தைப் பொறுத்த வரையில், தலைநகரை எங்கே வைப்பது என்ற பிரச்சினை இல்லை. கிழக்கு இராமநாதபுரத்தில் எங்கே தலைநகரை வைப்பது என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையில் முடிவு எடுக்கிற வரை, தலைநகர் மதுரையிலே இருக்கட்டும். பிரச்சினையே இல்லாத மேற்கு இராமநாதபுரத்தையாவது பிரித்துக் கொடுங்கள். அருப்புக்கோட்டைப் பகுதி நெசவாளர்கள், விவசாயிகள் ஆகியவர்கள் இருக்கக் கூடிய பகுதியாக இருப்பதால், அதையே ஒரு கோட்டமாக ஆக்கி, அதன் மூலமாக அந்த மாவட்டத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்தால், அங்கே புதிய அலுவலகங்கள் தோன்றி வேலைவாய்ப்பு உருவாகக் கூடிய நிலை இருக்கும் என்று கூறி அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

[1979 மார்ச் 7

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** புலவர் பட்டம் பெற்றவர்கள் பி.எட்., பட்டம் பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. இடைநிலையாசிரியர்கள் பி.ஏ., படித்தாலும், எம்.ஏ. படித்தாலும், ஊக்க ஊதிய உயர்வு இல்லை. அவர்களையும் ஊக்கப்படுத்துகின்ற வகையிலே அவர்கள் அடுத்த நிலைக்குப் போன உடனே தருவதற்கு அமைச்சர் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு அதைக் குறித்துப் பரிசீலிக்கும்.

**திரு. செ. முத்துசாமி:** செகண்டரி கிரேடுக்குப் பிறகு பி.ஏ., படித்து கல்வித் தகுதி பெறுகின்றபோது ஆசிரியர்கள், பி.எட்., பி.டி., படித்த பிறகு, அவர்களுக்கும் இந்த இன்செண்டிவ் கொடுக்க வேண்டும். இதை அரசு பரிசீலிக்க வேண்டும். பி.ஏ., பட்டம் பெற்றபின், தகுதி பெற்றபின் அதைப்பற்றிப் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முன்னர் சொல்லப்பட்ட கேள்விக்கு சொன்ன பதிலே இந்தக் கேள்விக்கும் பொருந்தும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

## *Music Teachers Training Certificate*

* 122 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that blind scholars who were fully qualified, were allowed to appear for the Teachers Training Certificate Examinations, for obtaining Music Teachers Training Certificate some years back;

(*b*) whether this concession has now been withdrawn; and

(*c*) whether there is any proposal to revive this concession?

## இசைப்பயிற்சி ஆசிரியர் சான்றிதழ்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சில ஆண்டுகளுக்கு முன் எல்லா வகையிலும் தகுதியுள்ள கண் பார்வையற்ற பயிற்சியாளர்கள் இசைப்பயிற்சி ஆசிரியர் சான்றிதழ்களை பெறுவதற்காக, ஆசிரியர்கள் பயிற்சி சான்றிதழ் தேர்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர் என்பது உண்மையா?



1979 மார்ச் 7]

(இ) இச்சலுகை தற்போது நீக்கப்பட்டுள்ளதா?

(உ) இச்சலுகையினை மீண்டும் அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கண் தெரியாதவர்கள் கல்வித் தகுதியிருந்தால், ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்கள் பெறுவதற்கு உரிமை இருந்தது. இப்போது அந்த உரிமை மறுக்கப்படுகின்றது என்ற கருத்தினை கண் தெரியாதவர்கள் பள்ளி ஆசிரியர் ஒருவர் சொன்னார். அமைச்சர் பதிலில் இல்லை என்றுதான் இருக்கிறது. கண் தெரியாதவர் இசையாசிரியராக இருந்து சம்பளத்தைப் பெற முடியவில்லை. ஆசிரியர் சான்றிதழ் இல்லை என்கிறார்கள். அவர்களுக்குத் தனிச் சலுகை கொடுத்து இசைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு, கண் தெரியாதவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும். எனவே அரசு அதைப் பரிசீலனை செய்து அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும் என்றால், அவைகளை நீக்க அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தொழில் நுட்பச் சான்றிதழ் பெறுவதற்கு 1974 முதல் 1978 வரை கண்பார்வை அற்ற மாணவர்கள் யாரும் சேரவில்லை. சென்னையில் மியூசிக் அகாடெமி நடத்தும் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 1970-71-ல் 1, 1971-72-ல் 2, 1972-73-ல் 3, 1974-75-ல் 2 ஆகமொத்தம் 8 பேர்கள். இந்திய இசை ஆசிரியர் சான்றிதழ் தேர்வு எழுதினார்கள். மேற்கொண்டு தகுதிபெற்று யாரும் சேரவில்லை.

(பிற்பகல் 4-10)

**திரு. ம. சங்கரலிங்கம்:** 1974 ஆம் ஆண்டு வரை ஒன்று, இரண்டு, மூன்று என்று சேர்ந்திருக்கிறார்கள். 1974-க்குப் பிறகு சேராமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் சேர்க்கப்படாமல் மறுக்கப்பட்டதுதான் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அதை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

## Higher Secondary Schools

*123 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Wil the Hon. the Minister for Education be pleased to state the number of newly started Higher Secondary Schools in which Vocational Courses have been provided ?

### மேல்நிலைப் பள்ளிகள்

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

புதிதாகத் துவக்கப்பட்ட உயர் இடை நிலைப் பள்ளிகளில், எத்தனை பள்ளிகளில் தொழிற் கல்வி வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 709 மேல் நிலைப் பள்ளிகளில்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 709 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி படிப்பதற்கான வாய்ப்பு கொடுத்ததற்காக அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்த 709 மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி போதிப்பதற்கான சாதனங்கள், கருவிகள் தகுந்த முறையில் இல்லை என்ற புகார் இருக்கிறது. அதை நிவர்த்திக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளோ, விவசாயப்பண்ணைகளோ இருக்குமானால், அந்த வசதிகளையும் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகளை நாம் உருவாக்கியிருக்கிறோம். ஆகவே இருக்கிற வசதிகளை நாம் பயன்படுத்திக்கொள்ளும் அதே நேரத்தில் தேவையான வசதிகளைச் செய்யவும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்துவது என்பது நல்ல கருத்துதான். ஆனால் சில தொழிற்கல்விக்கு பள்ளிக்கூடங்களிலேயே வசதிகள் இருந்தால்தான் அந்தப் பாடத்தை நடத்த முடியும். அவ்வாறு அந்தப் பள்ளிக்கூடங்களில் சாதனங்களையும், கருவிகளையும் ஏற்படுத்த முடியாததால், மாணவர்களும் பெற்றோர்களும் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்படும். இன்று சரிவர தொழிற் கல்விப் பாடங்கள் நடத்தப்படவில்லை. எனவே அவசியமான சாதனங்களை வருகின்ற ஜூன் மாதத்திலிருந்து வழங்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் 912 மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்திருந்தாலும், 709 பள்ளிகளில்தான் தொழிற் கல்வியைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதிலிருந்து எல்லாப் பள்ளிகளிலும் தொழிற்கல்வியை ஆரம்பிக்க வேண்டுமென்று அவசியமில்லை. இருக்கிற வசதிகளைக் கருத்தில் கொண்டுதான் இந்தக் காரியங்களைச் செய்கிறோம். [illegible] ஜூனுக்கு வசதிகள் உள்ள பள்ளிகளில்தான் இந்தக் கல்வியை ஆரம்பித்திருக்கக்கூடும். வசதியில்லாத பள்ளிகளில் வசதிகள் இல்லையென்றால், மாணவர்கள் பாதிக்கும் நிலை இருந்தால் [illegible] வைத்திருக்கும் [illegible] அதைத் [illegible].

**திரு. கே. ஆர். நாயன் :** [illegible] வசதிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இரு [illegible] இருந்த பள்ளிகள் [illegible], மேல்நிலைப் பள்ளிகளாக [illegible] மாணவர்களும், தொழிற் [illegible] தொடங்காமல் [illegible]. 25 ஆண்டுகளாக இருந்த [illegible] தொழிற் கல்விப் பாடம் [illegible] இப்போது மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்ட பள்ளிகளில் இருக்கின்ற தொழில் வசதிகளும் [illegible] கல்வியைப் புகுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து அரசின் கவனத்தில் [illegible] கொண்டிருந்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. அறிவழகன் :** தமிழ் பாடமொழியாக உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி படிக்கும் மாணவர்கள் [illegible], [illegible] ஆங்கிலத்தில் படிக்க வேண்டியுள்ளதால் அவர்கள் [illegible] வேண்டிய நிலையை [illegible] உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் [illegible]. தமிழ் பாடமொழியா, ஆங்கிலப் பாடமொழியா என்று [illegible], ஆங்கிலம் பாடமொழியாக இருப்பதால், கட்டணம் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் [illegible] தமிழ் பாடமொழியாகப் படிக்கும் அந்த மாணவர்களுக்கும் தொழிற்கல்வி ஆங்கிலத்தில் இருக்கிற காரணத்தால், ஆங்கிலப் பாடமொழியாக எண்ணாமல், தமிழைப் பாடமொழியாகக் கருதி கட்டணம் இல்லாமல் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் பொதுக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு—தமிழ் வழி, ஆங்கில வழி என்று சொல்லுகிறோம். தொழிற் கல்வியைப் பொறுத்தவரையில், அத்தகைய வேறுபாடுகளை நாம் ஏற்படுத்த

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டிலே இவ்வாறு முதுகலைப் பட்டம் பெற்ற, பட்டதாரி-ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கக்கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டு, அப்படி ஏற்கெனவே வழங்கிய தொகைகளை திருப்பிச் செலுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் மீது முறையீடுகள் செய்ததால் நிறுத்தப்பட்டது. அந்த ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதே, அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலே பல்கலைக் கழகங்களில் முதுகலைப் பட்டம் பெற்றால், அது 3-வது வகுப்பில் தேறிய ஆசிரியர்களுக்கு, அரசாணையின்படி, தமிழ் மாநில முதுகலைப் பட்டம் 2ஆம் வகுப்புக்குச் சமமாக இராத காரணத்தால், அளிக்கப்பட்ட ஊக்க ஊதியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஆணையைச் செயல்படுத்துவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது முதுகலை 3 ஆம் வகுப்பில் தேறிய ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு அளிப்பது பற்றி அரசு பரிசிலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : தேர்வு நிலை அடைந்துள்ள பட்டதாரி ஆசிரியர்கள் மேற்பட்ட படிப்புத் தகுதி பெற்றதால், அந்த அளவிலே உள்ள ஆசிரியர்கள் பல பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது தவறான ஆணையாக இருந்தால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதை நீக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றவர்களில் சிலர் வெளி மாநிலங்களில் பெறுகின்ற மதிப்பெண்கள் 40, தமிழ் நாட்டில் 45 மதிப்பெண்கள் என்று இருக்கிறது. மதிப்பெண்கள் எத்தனை வாங்கினாலும், அது பல்கலைக் கழக மான்ய குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமாக இருக்கின்றது. அவைகள் அனைத்தும் U.G.C. யால் அங்கீகரிக்கப்பட்டவை. ஆகவே அவர்களுக்கும் இந்த ஊக்க ஊதிய உயர்வு தர அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பரிசிலனையில் இருக்கின்றது.

திரு. ம. சங்கரலிங்கம் : 1969-ல் ஊக்க ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்று போட்ட ஆணையில் அப்படிச் சொல்லப்படவில்லை. எம்.ஏ. பட்டம் இரண்டாவது வகுப்பு, மூன்றாவது வகுப்பு என்று



குறிப்பிட்டுப் போடவில்லை. மேலும் இந்த ஊதிய உயர்வு எம்.ஏ. மூன்றாவது வகுப்பில் பாஸ் ஆகியவர்களுக்கு இல்லை. பி.ஏ. படித்துவிட்டு பி.எட்., படித்தவர்களுக்குக் கிடைக்கிறது. ஆனால் எம்.ஏ. படித்தவர்களுக்குக் கிடைக்காமலிருக்கிறது. அந்த அளவிலே மூன்றாவது வகுப்பில் பாஸ் செய்திருப்பவர்களுக்கும் அந்த ஊக்க ஊதிய உயர்வைக் கொடுக்க அரசு உத்தரவிடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. அறிவழகன் : மேற்பட்டப் படிப்புத் தகுதி பெற்று செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த அரசாணை சரியாக இல்லாததனால், இப்போது ஊக்க ஊதிய உயர்வை நிறுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ., பட்டம் பெற்றிருந்தால் அவர்களுக்குத் தர மறுக்கிறார்கள். பி.எட்., பட்டம் பெற்றவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இந்த இரண்டு தகுதிகளையும்பற்றி அரசு பரிசிலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் பற்றிய பிரச்சினை அரசின் பரிசிலனையில் இருக்கிறது. மற்றது இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மேற்பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு என்று கேள்வியிலே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஆசிரியர்களுக்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஊதிய உயர்வு ஆசிரியர்களுக்கா அல்லது பட்டதாரிகளுக்கா என்ற விளக்கம் வேண்டும். எந்த அடிப்படையிலே இந்த ஊதியம் கொடுக்கப்படுகிறது ? எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த ஊக்க ஊதிய உயர்வு ஆசிரியர்களுக்குத்தான். ஆசிரியர்கள் அதிகப் படிப்புப் படிக்க வேண்டும் என்பதுதான் கருத்து. அவர்கள் அதிகம் படித்திருந்தால், அவர்களின் பணி சிறக்கும் என்ற அடிப்படையிலேதான் ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது. பி.ஏ., பி.எட்., பட்டம் பெற்றவர்கள், எம்.ஏ., எம்.எஸ்.சி., பட்டம் பெற்று பி.டி., பி.எட்., பட்டம் பெற்றவர்களுக்கு இரண்டு முறைகள் ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. அவர்கள் அதைப் பெற தகுதி உடையவர்கள். பி.ஏ., பி.எட்., பெற்றவர்களுக்கு 2 ஊக்க ஊதிய உயர்வும், எம்.ஏ., பட்டம் பெற்ற பிறகு 2 ஊக்க ஊதிய உயர்வும் அவர்கள் பெற வாய்ப்பு இருக்கிறது.

வாழ்க்கையோடு, தொழிற் கல்வி சம்பந்தப்பட்ட நல்ல தரமான கல்வி கொடுக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். தமிழ் பயிற்சி கொடுக்கும்போது, ஆங்கிலத்தில் உள்ள தரத்தை அப்படியே பாடத்தைப் போட்டு 150 நாட்கள் கொடுக்க வேண்டியது, அவர்கள் தொழிற்சாலைக்கு சென்று சொல்லிக் கொடுப்பதற்கு அல்ல, மாணவர்கள் அங்கே போய் படிக்க வேண்டுமென்பதற்காகத்தான். கல்வி வாழ்க்கையோடு இணைக்கப்பட வேண்டுமென்றுதான் இதைச் செய்திருக்கிறோம். அதற்காகத்தான் 75 நாட்கள் அல்ல, 150 நாட்கள் கொடுக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-20)

திரு. பி. ஆர். ராமன்: பகுதி நேர தொழிற் ஆசிரியர்களைப் போடுகிறார்கள். இந்த ஆண்டில் ஒரு வாரத்திற்கு 20 பாடங்கள் எடுக்க வேண்டியிருக்கிறது. அடுத்த ஆண்டில் இன்னும் அதிகமாக 20 பாடங்கள் அதிகமாக எடுக்க வேண்டியிருக்கிறது. ஆக மொத்தத்தில் அடுத்த ஆண்டில் 40 பாடங்கள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. 40 பாடங்கள் ஓர் ஆசிரியர் எடுக்க முடியுமா? இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கிற பள்ளிக்கூடங்களில் எல்லாம் இரண்டு பகுதி நேர ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துவது பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பகுதி நேர ஆசிரியர்களை மட்டும் தான் நியமிக்க வேண்டும் என்பது அல்ல நம்முடைய நோக்கம். அப்படிப் பட்டவர்கள் மூலம் நல்ல தொழிற் கல்வியை மாணவர்கள் பெற முடியும் என்பதற்காகத் தான் அவர்களை நியமிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல, அடுத்த ஆண்டில் ஆசிரியர்களுக்கு வேலைப் பளு அதிகமானால், 2 பேரைப் போடுவதற்கு அரசு அனுமதித்துத் தரும்.

## Higher Secondary Schools

* 124 Q. THIRU C. R. LAKSHMIKANDHAN and THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state

(a) the number of Higher Secondary Schools opened in Tamil Nadu as on 1st September 1978, managementwise, (Government, Local Bodies, Private Institutions, Department of Harijan Welfare and Backward Classes); and

(b) whether there is any proposal with the Government to increase their number during the next academic year?





## மேல்நிலைப் பள்ளிகள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்:

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—9—1978 நிலவரப்படி, தமிழ்நாட்டில் துவக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், நிர்வாக வாரியாக (அரசுத்துறை, உள்ளாட்சித் துறை, தனியார் துறை, ஆதி திராவிடர் நலத் துறை முதலியன) எத்தனை?

(ஆ) அடுத்த கல்வி ஆண்டில் இந்த எண்ணிக்கையை உயர்த்தும் செயற் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1—9—1978-இல் உள்ள நிலவரப்படி, தமிழ்நாட்டில் 1978-79 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை நிர்வாக வாரியாக, பின்வருமாறு:—

| | |
|---|---|
| அரசுத்துறை | 408 |
| நகராட்சி | 34 |
| மாநகராட்சி | 17 |
| தனியார் துறை | 405 |
| ஆதிதிராவிடர் மற்றும் மலைசாதி நலத்துறை | 4 |
| பிற்பட்டோர் நலத்துறை | 1 |
| மொத்த எண்ணிக்கை | 869 |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் | 23 |
| மெட்ரிகுலேஷன் பள்ளிகள் | 18 |

(ஆ) இல்லை. முதலாவதாக 400 மேல்நிலைப்பள்ளிகளில் மட்டுமே இந்தப் புதிய பாடத்திட்டம் ஆரம்பிக்க கருதப்பட்டது. ஆனால் தற்போதுள்ள தேவையை முன்னிட்டு, 900-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இந்தப் புதிய திட்டம் 1978-79 ஆம் கல்வியாண்டில் ஆரம்பிக்கப்பட்டதால், 1979-80 ஆம் கல்வி ஆண்டில் புதிதாக மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கத் தேவை இருக்காதெனக் கருதப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இப்படி ஏராளமான அளவுக்கு கிராமப் புறங்களில் பள்ளிக்கூடங்களைத் திறந்திருப்பது குறித்து உண்மையிலேயே நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். கிராமப்புறங்களுக்கு இந்தப் புதிய

கல்வி, கல்லூரிக் கல்வி என்று அமைய வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம் என்று அடிக்கடி நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியும் கூட பல கிராமப்புறங்களில் இந்த மேல்நிலைப் பள்ளி வசதிகள் இல்லை. சில இடங்கள் விடுபட்டிருக்கின்றன. கிராமங்களுக்குத் தேவையான மேல்நிலைப் பள்ளிக்கூட வசதிகளைப்பற்றி சரியான தகவலை அதிகாரிகள் சொல்லாததால்தான், இப்படி விடுபடக்கூடிய நிலை ஏற்பட்டது. வருகிற ஆண்டிலாவது, அதாவது ஜூன் மாதத்திலாவது, இப்படிப்பட்ட விடுபட்ட கிராமப்புறங்களில் எல்லாம் அரசு மேல்நிலைப் பள்ளிகளைத் திறப்பதுபற்றி பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது அதுபற்றிக் கருத்துச் சொல்லுவதற்கில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** 900-க்கு அதிகமான மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 900 பள்ளிகளிலும் லைப்ரரி வசதி, விஞ்ஞானக் கூட வசதி போன்ற முழு வசதிகளும் ஏற்பட்டுவிட்டனவா? அப்படி இல்லாத இடங்களில் முழு வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? 900 பள்ளிக்கூடங்களில் எத்தனை பள்ளிக்கூடங்களுக்கு முழுமையாக அடிப்படை வசதிகள் கிடைத்திருக்கின்றன? இன்னும் எத்தனை பள்ளிக்கூடங்களுக்கு இந்த வசதிகள் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மொத்தமுள்ள 408 அரசுத் துறை பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு 1,60,000 ரூபாய் செலவில் வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஆயத்தம் செய்யப்பட்டு, ஜூன் மாதத்திற்கு முன் அத்தியாவசியமான பணிகள் முடிவடைந்துவிடும். தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை, இத்தகைய வசதிகள் இல்லாத பள்ளிக்கூடங்களுக்கு 'மேச்சிங் கிராண்ட்' என்ற வகையில் உதவி செய்ய அரசு கருதியிருக்கிறது. சில பள்ளிக்கூடங்களில், குறிப்பாக பழைய பள்ளிக்கூடங்களில், அத்தகைய வசதிகள் இப்பொழுது கூட இருக்கின்றன. அடிப்படை வசதிகள் இல்லாத பள்ளிக்கூடங்களில் அவற்றை ஏற்படுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை, அவர்களாகவே அத்தகைய வசதிகளை ஏற்படுத்தியும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



**திரு. செ. முத்துசாமி :** மேல்நிலைப் பள்ளிகள் 900-க்கு மேற்பட்ட இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் மிகவும் தேவையான காளப்பன் நாயக்கன் பட்டிக்கு இந்த மேல்நிலைப் பள்ளி வசதி வழங்கப்படவில்லை. அது விடுபட்டிருக்கிறது. பக்கத்திலே பக்கத்திலே எல்லாம் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறபோது, இந்த ஊருக்கு வழங்கப்படவில்லை. இந்த ஆண்டாவது மேல்நிலைப் பள்ளி அமைக்கப்பட வேண்டும். முழுத் தகுதியிருந்தும் அங்கு அமைக்கப்படவில்லை. இப்படி முழுத் தகுதியிருந்தும் விடுபட்டுப் போன இடங்களிலெல்லாம் அவற்றை அடுத்த ஆண்டு உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேலும் அதிகமான பள்ளிகளை அடுத்த ஆண்டு திறப்பதற்கான கருத்து குறித்து இதுவரை அரசு முடிவு எடுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு முன் அதற்கான அட்வான்ஸ் தொகை என்றோ அல்லது டெபாசிட் தொகை என்றோ 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. முதல் ஆண்டு 15 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். அப்புறம் 5 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். அதற்கப்புறம் 5 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். 900 பள்ளிக்கூடங்களுக்கு மேல் இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார்கள். அவற்றில் எத்தனை தகுதியுள்ள பள்ளிகள் அப்படி தொகை கட்டப்படாமல் துவக்கப்பட்டிருக்கின்றன? அப்படி கட்டாதவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கக் கூடிய தண்டனை என்ன? 15 ஆயிரம் ரூபாய் கட்டி விட்டு, பிறகு கட்ட வேண்டிய 10 ஆயிரம் ரூபாயைக் கட்டாத பள்ளிக்கூடங்கள் பல இருக்கின்றன. அவர்கள் மேற்கொண்டு கட்டாமல் போனால், அவர்களுக்குக் கொடுக்கப்பட இருக்கும் தண்டனை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் சொல்லலாம். இருந்தாலும், எனக்குத் தெரிந்தவரை, அப்படி கட்டாதவர்களுக்கு தண்டனை ஏதும் வழங்கப்படுவதில்லை. அதைக் கட்ட வேண்டுமென்று பெற்றோர்—ஆசிரியர் சங்கமானது இப்படிப்பட்ட பணிகளைச் செய்து வருகிறது. இப்படி அந்தப் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் பணி செய்வதன் மூலம் பெற்றோர்களுடைய ஒத்துழைப்பையும் பெற வேண்டுமென்பதற்காகத்தான், இதைக் கட்ட வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோமேயல்லாமல் வேறு ஒன்று

விருப்பமில்லை. இந்தப் பிரச்சினையை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 709 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி புகுத்தப்பட்டிருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல பள்ளிகளிலே மூன்று மாதம், நான்கு மாதம் வரை தொழிற்கல்வி ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. அதற்கான பாட புத்தகங்களும் பின்னால்தான் கிடைத்தன. இந்தக் குறைகளை நீக்கி, வரும் ஆண்டில் நிறைவான தொழிற்கல்வி கிடைக்க அரசு ஏதாவது மதிப்பீடு செய்திருக்கிறதா? இப்போது எப்படி செயல்படுகிறது என்று ஆராய்ந்து, அது குறித்து ஒரு வெள்ளை அறிக்கையை அவையிலே வைத்து அங்கத்தினர்கள் கருத்துக்களைத் தெரிவித்து, குறைகளை நீக்கி நிறைவான தொழிற்கல்வியைக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேல்நிலைக் கல்வி எந்த அளவுக்கு நடந்துவருகின்றது என்பதை அதிகாரிகள் மூலமாகக் கண்காணித்து வருகின்றோம். நன்றாக நடக்கும் பள்ளிகளுக்கு அவர்கள் போகாமல் குறைபாடுகளுடைய, வசதிகளற்ற பள்ளிகளுக்குச் சென்று அங்கே என்ன குறைகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து அதை நிவர்த்திக்க திட்டங்கள் வகுக்க வேண்டுமென்பதற்காக அதிகாரிகளை அனுப்புகிறோம். அந்த அடிப்படையிலே வேண்டிய காரியங்களைச் செய்ய நாம் முயற்சிகள் எடுத்து வருகின்றோம். தொழிற்கல்விக்குத் தேவையான கைடு புக் போடப்பட்டு, அதேமாதிரி எல்லாப் பள்ளிகளுக்கும் போய்ச் சேர்க்கிறது. மற்றபடி இதைப்பற்றிய விவரங்களை கல்வி மான்ய விவாதத்தின்போது தர முடியும்.

**திரு. செ. முத்துசாமி :** 709 பள்ளிகளிலே தொழிற்கல்வி தொடங்கப்பட்டிருந்தாலும், பல பள்ளிகளிலே அந்த ஆசிரியர்கள் பல மாதங்களுக்குப் போடப்படவில்லையென்று எதிர்க் கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். நர்சிங் கோர்ஸ் நாமக்கல்லில் ஒரு பள்ளியில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஆசிரியர்களை நியமிக்க வசதியான தொல்லையுமில்லை. அப்படிப்பட்ட பள்ளிகளில் தொழிற்கல்வியைச் சொல்லிக் கொடுக்க நபர்கள் இருந்தும், நியமிக்கப்படுவது இல்லை என்று தெரிவித்து, எந்தெந்தத் தொழிற் கல்விப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தந்த தொழில்களைச் சொல்லிக் கொடுக்க தகுதியான நபர்களை 'அப்பாயிண்ட்' செய்ய அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தக் குறையை எப்போதோ தீர்த்துக்கொண்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதன்மைக் கல்வி அதிகாரியிடம் முன்பே சொல்லியிருக்கலாம். அல்லது என்னிடம் சொல்லியிருக்கலாம். இங்கே வந்து இப்போதுதான் சொல்ல வேண்டும் என்பது இல்லை. இப்போதுகூட அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும். முதன்மைக் கல்வி அதிகாரி மூலமாக அதைச் செய்ய உடனடியாக வாய்ப்பிருக்கிறது.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** சுற்றுப்புறத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சில தொழிற் பாடப்பிரிவுகள் இப்போதைய கல்வித் திட்டத்தில் இல்லையென்று சொல்லப்படுகிறது. உதாரணமாக Sugar Technology, 'Automobiles' போன்ற தொழிற்கல்வி இல்லையென்று சொல்லப்படுகிறது. எனவே இது போன்ற பாடப்பிரிவுகளையும் வருகின்ற கல்வி ஆண்டிலிருந்து பாடத் திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் இப்போது வரையறை செய்து வெளியிட்டிருக்கிற சிலபஸ்ஸில் குறிப்பிட்ட தொழிற் பிரிவுகள்தான் இருக்க வேண்டுமென்ற நடைமுறை இல்லை. புதிய பாடத் திட்டங்களைக் கொண்டு வந்து, மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும் தேவையான பயிற்சியைத் தர வேண்டுமென்ற உணர்வு இருக்கிறது. அந்த வகையில் பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக 'ஜெம் கட்டிங்' குறித்து சிலபஸ் தயாரித்திருக்கிறோம். இது போன்று பல்வேறு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. சுகர் டெக்னாலஜி, சிமெண்ட் டெக்னாலஜி போன்றவைகள் கூட சேர்க்கப்படலாம்.

**திரு. க. அறிவழகன் :** தொழிற்கல்வி ஆசிரியர்களை நியமிக்கும்போது, பகுதி நேர ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு 75 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பள்ளிகளுக்குக் காலை 10 மணிக்கு வந்தால், மாலை 4 மணிக்குத்தான் போக முடிகிறது. எனவே குறைந்த ஊதியத்தில் வேலை செய்ய முடியாமல் தொழிற்கல்வி ஆசிரியர்கள் திணறுகிறார்கள். இந்தக் குறையை அரசு போக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இங்கே பேசப்பட்ட பல்வேறு பிரச்சினைகளின் அடிப்படையிலே ஒன்றைச் சொல்கிறேன். பகுதி நேர ஆசிரியர்கள் நியமிப்பதற்குக் காரணம் இருக்கிறது. முழு நேர ஆசிரியர்களை நியமிப்பதைவிட பகுதி நேர ஆசிரியர்கள் என்ற முறையில் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களை இதற்காகப் பயன்படுத்துவதன் மூலம்

மேல்நிலைப் பள்ளிகள் வசதியில்லாமல் இருக்கின்றன. பல இடங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. அதேமாதிரி இராமநாதபுரம் மாவட்டத்தில் பார்த்திபனூர் என்ற ஊரில் 10 மைல் தூரத்துக்கு மேல்நிலைப் பள்ளிகள் இல்லை. உயர் கல்வியை கிராமப்புறங்களுக்குக் கொண்டு போவதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்ற வகையில், குறைந்த அளவில் கிராமப்புறங்களுக்கு, மிகவும் தேவைப்படுகிற இடங்களுக்கு, தகுதியிருந்தும் விடுபட்டுப் போன இடங்களுக்கு இந்த மேல்நிலைப் பள்ளி வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆரம்பத்தில் அரசு 100 கல்லூரிகளிலும் 100 உயர்நிலைப் பள்ளிகளிலும் இதைக் கொண்டுவர முடிவு செய்தது. அது போதாது என்று கேட்டதன் அடிப்படையில் எண்ணிக்கையை அதிகப்படுத்தினோம். அப்படி எண்ணிக்கையை அதிகப்படுத்திய சந்தர்ப்பத்தில் நாங்கள் ஆரம்பிக்கவில்லை என்று சில பள்ளிக்கூடங்கள் சொல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. பிறகு அதற்கு மாறாக நிறைய எண்ணிக்கை வேண்டுமென்று கேட்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. அதன் பிறகு மக்களிடத்திலிருந்தும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் ஏராளமான வேண்டுகோள்கள் வந்த காரணத்தால், அந்த வேண்டுகோள்களை அரசு ஏற்று மதித்து, அதன் அடிப்படையில் நிறைய மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கியிருக்கிறோம். அப்படி இருந்தும் கூட, சில பள்ளிக்கூடங்களில் இன்னமும் கூட போதுமான மாணவர்கள் சேரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்களே இங்கே பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தகைய குறைபாடுகளை எல்லாம் அரசு ஆராய்ந்து பார்த்த பிறகு தான், மாண்புமிகு உறுப்பினர்களுடைய யோசனைகளை கவனத்தில் எடுத்துக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(பிற்பகல் 4-30)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** புதிதாகத் துவக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று அரசு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு தொகையை ஒதுக்கிச் செலவு செய்கிறது. அப்படி ஒவ்வொரு பள்ளிக்கும் எவ்வளவு தொகை முதலாண்டிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலையும், கல்வித் துறையிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளுக்காக ஒதுக்கப்படும் மொத்தத் தொகை எவ்வளவு என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் தருவார்களா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விளக்கமான விடையை அளிக்கிற நிலையில் நான் தற்போது இல்லையென்றாலும்கூட, மேல்நிலைப் பள்ளிகளின் கட்டிடங்களுக்காக சுமார் 408 பள்ளிகளுக்கும் சுமார் 1½ லட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் ஏறத்தாழ 5, 6 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்யப்படுகிறது. அதைப்போல தனியார் பள்ளிகளுக்கும் மான்யம் தருகிறோம். கல்வித் துறையில் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்றாலும், இந்த ஆண்டுக்கு சுமார் 208 கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கிறோம் என்றாலும், இதில் பெரும்பகுதி ஆசிரியர்களின் சம்பளமாகப் போகிற காரணத்தால், நிறைய எண்ணிக்கையில் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அவற்றினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்.

THIRU D. V. D'MONTE : Sir, the Hon. Minister stated that there were 23 Anglo-Indian Higher Secondary Schools in the State. Will the Government consider having Junior Technical Schools for Anglo-Indians from the new academic year since the Anglo-Indians have a particular aptitude for mechanical work ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்துவது என்ற திட்டம் கொண்டுவரப்பட்டபோது, மொத்தத்தில் 400 பள்ளிகளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்கிற அளவில் அதற்குத் தேவையான அளவுக்கு மட்டுமே அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் திட்டமே அந்த அளவுக்குத்தான் அப்போது இருந்தது. கல்வித் துறையின் சில அதிகாரிகள் ஒரு சார்பாக சுமார் 300 முதல் 350 வரையான தனியார் பள்ளிகளுக்கு இந்த மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்க அனுமதி அளித்துவிட்டதால், அதனால் ஏற்பட்ட சங்கடத்தைத் தவிர்க்கவே பிறகு 900 பள்ளிகள் வரை அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டது. இதன் காரணமாக தேவையான நிதி வசதியில்லாத நிலையில் பெரும்பாலான கல்வி நிலையங்களில் இந்த மேல்நிலை வகுப்புகள் துவக்கப்பட்டதும் அதன் விளைவாக கல்வியின் தரம் பாதிக்கப்படும் என்ற நிலை உருவாகியிருப்பதும் அரசுக்குத் தெரியுமா ? எனவே அந்தச் சூழ்நிலையைத் தவிர்க்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இந்தச் சங்கடத்தை உருவாக்கிய அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 100 பள்ளிகள், 100 கல்லூரிகள் என்று முடிவு செய்திருந்தபோது, நாங்கள் பொறுப்பேற்று இருக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே எடுக்கப்பட்டது. 200 பள்ளிகள் என்பதை 300 பள்ளிகளாக, மேலும் 400 பள்ளிகளாக உயர்த்தியபோதும், 500 பள்ளிகளாக அதை உயர்த்தியபோதும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிறகே அறிவிக்கப்பட்டதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், எதுவும் ஏற்படவில்லை. என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவராமல் எதுவும் நடைபெறவில்லை.

திரு. ஆ. திராவிடமணி : கோவை மாவட்டத்தில் பவானி வட்டத்திலுள்ள ஒலகடம் உயர்நிலைப் பள்ளியையும், நெல்லை மாவட்டத்தில் உள்ள சிவகிரி சேனைத்தலைவர் உயர்நிலைப் பள்ளியையும் அடுத்த ஆண்டாவது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதிய மேல்நிலைப் பள்ளிகளைத் துவங்குவது என்று முடிவெடுக்கப்பட்ட பிறகு, அவைகள் கவனிக்கப்படும்.

## *House Tax in Madurai Corporation.*

* 125 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representations have been received by the Government from high personages and important persons in Madurai, regarding the increase in house tax in Madurai Corporation ; and

(*b*) if so, the action taken thereon ?

### மதுரை மாநகராட்சியில் வீட்டுவரி.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாநகராட்சியில் வீட்டுவரி உயர்த்தப்பட்டிருப்பது குறித்து மதுரையிலுள்ள முக்கிய பிரமுகர்களிடமிருந்தும், மக்களிடமிருந்தும் அரசுக்கு முறையீடுகள் எவையேனும் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) சீராய்விற்கு முன்னர் செலுத்தப்பட்டு வந்த சொத்துவரியினையே வசூலிக்க வேண்டுமென 18—4—1978 நாளிட்ட குறிப்பாணையில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றத்தின் செயற்குறிப்பின் பேரில் இத்தடை உத்தரவு நீக்கப்பட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள மாநகராட்சி மன்ற அமைப்பே அப்படிப்பட்ட முறையீடுகளைக் கவனித்து வரி உயர்வைக் குறைத்திருக்கிறதா ? தற்போது சென்னையில் உள்ள வரி அப்பீல் கமிட்டிக்கு ஜுடிசியல் 'அப்பலேட் அத்தாரிடி' இருப்பதைப்போல், மதுரையில் உள்ள மாநகராட்சி மன்ற அமைப்பிலும் இந்த முறையே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மதுரையில் வரி அப்பீல் கமிட்டி அமைப்பது குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. 1977 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வரிச் சீரமைப்பின் பேரிலேயே வரி உயர்த்தப்பட்டது. வரி உயர்வை எதிர்த்துத் தரப்பட்ட 9,693 மனுக்களில் 9,342 மனுக்களின் மீது ஆணை வழங்கப்பட்டுவிட்டது. மேலும் 351 மனுக்கள் விரைவில் விசாரிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் நிலையில் உள்ளன.

திரு. க. அறிவழகன் : மாநகராட்சி வீட்டுவரி விதிப்பில் யாருக்காவது அதிக வரி விதிக்கப்பட்டதாகக் கருதப்பட்டால், அவர்கள் அதை எதிர்த்து அப்பீல் போடுகிறார்கள். ஆனால் மிகக் குறைந்த வரியைக் கட்டிக் கொண்டிருக்கிறவர்கள், எப்படியோ மாநகராட்சி அதிகாரிகளின் கண்ணுக்குப் படுவதேயில்லை. அப்படி அவர்கள் கண்களுக்குப்பட்டாலும், அவர்கள் அதைச் சரி செய்து கொள்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி கேட்கும்போது சரி. ஆனால் விவகாரம் வருவது சரியல்ல.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது "சரி செய்து கொள்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பொருள் என்ன என்பதை அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "சரி செய்து கொள்கிறார்கள்" என்பது 'அன்-பார்லிமெண்ட்டரி' அல்ல. அவர் என்ன நினைத்துச் சொல்லுகிறார் என்பதுதான் முக்கியம். (சிரிப்பு).

யில்லை. தனியார் நிர்வாகத்தை விரும்பவில்லை. நாங்களெல்லாம் அல்லது சொல்லவில்லை; இந்த மாபெரும் பணித்தொகை ஆற்றுகின்ற பணியில் ஈடுபடக் கூடாது என்பது தான்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அடுத்த கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்துகிறபோது எந்த இடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக சென்னை போன்ற பெரிய நகரங்களில் பல கல்லூரிகள் இருக்கின்றன. வடசென்னை தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இங்கேயுள்ள இந்த பகுதியான் கூரிய பகுதிகளில் இந்த மேல்நிலைப் பள்ளி ஒன்று கூட இல்லாமல் போயிருக்கிறது. அடுத்த கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்துகிறபோது அந்த இடத்தில் இல்லையென்று சொன்னாலும் கூட, நான் சொன்ன பள்ளிக்கூடத்தில் இடம் இருக்கும் தேவை என்பதால், அந்தப் பள்ளிக்கூடத்தில் அதை ஏற்படுத்த ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பரிசீலிக்க வேண்டுமென்கிற நிலை வரும்போது, அவைகளெல்லாம் பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வற்புறுத்தியிருக்கிறார்கள். அடுத்த கல்வி ஆண்டில் திறக்கப்போகும் இடங்களில் மேல்நிலைப் பள்ளிகளைத் திறப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னதற்காக உள்ளபடியே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அப்படி அடுத்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கும்போது, அவைகளைத் தனியார் துறைக்குக் கொடுக்காமல் அரசுத் துறை, பொதுத் துறை, உள்ளாட்சித் துறை போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவம் தந்து அவற்றை ஏற்படுத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னை நகரைப் பொறுத்த வரை கூட, நாம் நகராட்சிப் பள்ளிக்கூடங்களுக்கும் தனியார் பள்ளிக்கூடங்களுக்கும் மேல்நிலைப் பள்ளி வசதிகளைத் தந்திருக்கிறோம். தனியார் துறை பள்ளிகளில் மாணவர்கள் நிறைய பேர் சேர்ந்து படிக்கிறார்கள். நகராட்சிப் பள்ளிகளிலே அதிகமான மாணவர்கள் சேரவில்லை. அதற்கான பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வது என்பது தெரியவில்லை. அடிப்



படை வசதிகள் என்று பார்க்கும்போது, தனியார் பள்ளிக்கூடங்களில் நிறைய வசதிகள் இருக்கின்றன. அத்தகைய வசதிகளை நாங்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பு தர வேண்டுமென்று மாணவர் சமுதாயம் விரும்புகிறபோது, அதை அவர்களுக்கு நாம் தரத் தான் வேண்டியிருக்கிறது. இப்பொழுது நாம் எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, தனியார் பள்ளிக்கூடங்கள் மீது தோன்றுகின்ற அச்சங்கள் இனிமேல் ஏற்படத் தேவையில்லை. அச்சங்களை நாம் போக்க முடியும். ஆகவே அவர்களுக்கு அத்தகைய வசதிகளை அரசு தர வேண்டாம் என்கின்ற முடிவை எடுக்க வேண்டிய தேவையில்லை.

திரு. க. அறிவழகன் : மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கும்போது, மிக அவசர அவசரமாகப் பல இடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பல பள்ளிக்கூடங்களில் பல்லாயிரக்கணக்கான ரூபாயை நன்கொடை என்ற முறையில் வசூல் செய்திருக்கிறார்கள். அப்படி இருந்தும், அடிப்படை வசதிகளைக் கூட இதுவரை அவர்கள் செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்காத தனியார் பள்ளிகள் அவ்வசதிகளை 2 ஆண்டுகளுக்குள் செய்து கொடுக்காவிட்டால் மூடப்படும் என்று அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்தாலும், அவர்களும் நல்ல நோக்கத்தோடு தான் ஆரம்பிக்கிறார்கள். மூடுவதற்கான சூழ்நிலை நிச்சயமாக இருக்காது. அவர்களைத் திருத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும்.

திரு. செ. முத்துசாமி : மூடாவிட்டாலும் அவை வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாம் எடுத்திருக்கின்ற முயற்சி தோல்வியடைந்த பிறகு பேசப்பட வேண்டிய பேச்சு அது.

திரு. ம. சங்கரலிங்கம் : முதலில் 200 பள்ளிக்கூடங்களில் மேல்நிலைப் பள்ளிக்கூட வசதி வழங்கப்பட்டது. பிறகு மேலும் 200 பள்ளிகளுக்கு அனுமதி கொடுத்தார்கள். அதன் பிறகு இன்றைக்கு 900 என்று எண்ணிக்கை ஆகியிருக்கிறது. புதிதாக இதை அமுல்படுத்தியபோது, அவசரம் அவசரமாக வேகமாக அறிவிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருந்தோம். அதன் காரணமாக பல பகுதிகளில் 10 மைல் தொலைவுக்குக் கூட இத்தகைய

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தலைவர் ஆட்சேபித்த பிறகும் அதே முறையில் குற்றஞ்சாட்டிப் பேசுவதும் நோக்கம் கற்பித்துப் பேசுவதும் சரியல்ல என்பதை மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாநகராட்சி மன்ற அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லை என்பதாலேயே வரி கொடுக்க முடியாது என்று சொல்லப்படுவது சரியல்ல. சொல்லப்போனால், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்ற அமைப்பு மதுரையில் அமைந்த பிறகு, போடப்பட்ட தடை உத்தரவை நீக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறது. மாநகராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில், வரி விதிக்கிற முறை என்பது சீராக இருக்க வேண்டுமென்பதுதான் அரசு கருதுகிறது. எனவேதான் திரு. தளவாய் அவர்கள் தொடர்ந்த வழக்கில் உயர்நீதி மன்றம் தந்த தீர்ப்பின் அடிப்படையில் இன்றையதினம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Municipal Workers*

* 126 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of persons removed from services, Municipality wise, due to austerity measures taken by them?

(*b*) the sections in which they worked?

### நகரமன்ற அலுவலர்கள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சி மன்றங்களில் சிக்கன நடவடிக்கை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் நகர மன்ற வாரியாக எத்தனை பேர்?

(இ) அவர்கள் எந்தெந்தப் பிரிவுகளில் பணிபுரிந்தவர்கள்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) (i) மாதவரம் நகரியம் (நகரமைப்பு).

(இ) (ii) திண்டிவனம்—17 பொதுப்பணி பொறியியல் பொது சுகாதாரம்).





(பிற்பகல் 4-40)

திரு. க. இராமமூர்த்தி: திண்டிவனம் நகர் மன்றம் சிக்கன நடவடிக்கை என்ற பெயரால் (ஸ்கேவஞ்சர்களை) சுத்திகரிப்புத் தொழிலாளர்களைத் தான் வேலை நீக்கம் செய்கிறார்கள். ஆனால் மற்ற துறையில் இருப்பவர்கள் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. மேலும், திண்டிவனம் நகராட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எவ்வளவு ஸ்கேவஞ்சர்கள் வைத்திருந்தார்களோ அவ்வளவு பேர்தான் இப்போதும் இருக்கிறார்கள். தற்போது நகரம் வளர்ந்த நிலையில் மேலும் அதிகமான ஸ்கேவஞ்சர்களை நியமிக்க வேண்டிய நிலை இருக்க வேண்டுமே தவிர, இருக்கின்றவர்களைக் குறைத்து நடவடிக்கை எடுத்தது தனி அதிகாரிகளுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இணங்க நடைபெற்றது என்பது அரசுக்குத் தெரியுமா? இது சம்பந்தமாகப் பல்வேறு புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: திண்டிவனத்தைப் பொறுத்த வரையில், அங்குள்ள நிலைமைகள் என்னவென்று திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் இதைப் புகாராகச் சொல்கிறார்கள். சிக்கன நடவடிக்கை காரணமாகத்தான் இந்த ஆட்குறைப்பு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. எனினும், உறுப்பினர் அவர்கள் சொல்வதில் உண்மை இருக்குமானால், அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. அறிவழகன்: சென்னை மாநகராட்சியில் சிக்கன நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலையில், அதனுடைய பல வேலைகளை குடிநீர் வடிகால் வாரியமும், இதுபோன்ற மற்ற வாரியமும் எடுத்துக்கொண்டிருக்கின்றன. இந்த வாரியங்கள் இந்த வேலைகளை எடுத்துக்கொண்டிருப்பதற்கேற்ப அங்கே அதிகாரிகள் குறைக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், அரசாங்கம் சிக்கன நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மூலக்கேள்வி திண்டிவனத்தைப் பற்றியது. ஆனால், உறுப்பினர் அவர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். சென்னையிலே எந்த அளவுக்கு நிர்வாகச் சீர்திருத்தம் இருக்க வேண்டும் என்பதற்கு இன்றையதினம் சட்டநாதன் குழு அறிக்கை தந்திருக்கிறது.

## *Sanitary Workers of Madras Corporation*

*Q. 127 THIRU P. YELLAMANDA : Will the Hon. Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received any representation that pension and leave benefits enjoyed by peons and other Class IV staff of the Corporation of Madras, have not been extended to Sanitary Workers of the Corporation ;

(*b*) if so, whether there is any proposal to extend such benefits to them ; and

(*c*) the stage at which the matter now stands?

சென்னை மாநகராட்சி சுகாதாரப் பணியாளர்கள்.

திரு. பி. எல்லமந்தா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியின் பணியாட்கள் (Peons) மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் பெறுவதைப் போல் ஓய்வூதியம் மற்றும் விடுப்பு சலுகைகள், மாநகராட்சியின் சுகாதாரப் பணியாளர்களுக்கு நீட்டிக்கப்படவில்லை என அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அச்சலுகைகளை அவர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(உ) அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU P. YELLAMANDA : Sir, originally, the question was admitted and sent to the Local Administration Department. Now, to my surprise, it is being answered by the Hon. the Health Minister. May I have a clarification whether matters relating to the Madras Corporation are being handled by the Hon. the Minister for Local Administration or by the Health Department ?

மாண்புமிகு திரு ஆர். சவுந்தரராசன் : மூலக்கேள்வி ஓய்வூதியம் மற்றும் விடுப்பு சலுகைகள், மாநகராட்சி சுகாதாரப் பணியாளர்களுக்கு என்று இருப்பதால், அது நல்வாழ்வுத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



THIRU P. YELLAMANDA : Sir, the sanitary workers working in the hospitals of the Health Department, the Public Works Department and other Departments have been given pension and other leave facilities. But the sanitary workers who are working in the Corporation and who are doing the same type of work have not been given such facilities. May I know why there is this discrimination in the Government ? Will the Government come forward to give pensionary benefits to this category of sanitary workers also ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : சுகாதாரப் பணியாளர்கள் ஓய்வுபெற்ற பின்னர், பணியாளர்களுக்கான வருங்கால சேமிப்புத் தொகையைப் பெறுகிறார்கள். அவர்கள் இறந்துபோனால் அந்தத் தொகையை அவர்களது வாரிசுகள் பெறுகிறார்கள். இவர்கள் செலுத்தும் தொகைக்குச் சமமான தொகையை சென்னை மாநகராட்சி நிர்வாகம் வருங்கால வைப்பு நிதி அமைப்புக்குச் செலுத்துகிறது. ஆகவே, அவர்களுக்கு இந்தச் சலுகை கிடைப்பதால் அந்தச் சலுகை கொடுப்பதில்லை.

## *Unani and Ayurveda Systems of Medicine*

*128 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any Committee has been constituted by the Government for the development of Siddha System of Medicine ; and

(*b*) if so, whether there is any proposal to constitute similar Committees for the development of Unani and Ayurveda Systems of Medicine ?

யுனானி, ஆயுர்வேதமுறை மருத்துவம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சித்த முறை மருத்துவ மேம்பாட்டுக்காக அரசு, குழு எதனையும் அமைத்துள்ளதா?

(இ) ஆமெனில், யுனானி, ஆயுர்வேத முறை மருத்துவ மேம்பாட்டிற்கும் இதேபோன்ற குழுக்களை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

[1979 மார்ச் 7

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாநகராட்சி அதிகாரிகளின் கண்களுக்குப் படாவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்தால், அதை மாநகராட்சிக்குத் தெரிவிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** சென்னையில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை, சிறிதளவு வீட்டு வரிவிதிப்பை அதிகப்படுத்துகிற முறையை மாற்றி இப்போது வீட்டுவிலை மதிப்பில் 9 சதவிகிதத்தை ஆண்டு வருமானமாகக் கணக்கிட்டு, அதனடிப்படையில் வரி வசூலிக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா? பல வீடுகளை வைத்துக்கொண்டு அவைகளை வாடகைக்கு விடுகிறவர்களைக் காட்டிலும் ஒரே வீட்டை வைத்துக்கொண்டு சொந்தம் குடியிருப்பவர்களுக்கு முன்பு வரிவிதிப்பில் சிறிது சலுகை காட்டப்பட்டது. அந்த முறையையும் மாற்றி ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் வரிவிதிப்பு என்ற அடிப்படையில் இன்றையதினம் ஒரே வீடு வைத்திருப்பவர்களுக்குக்கூட வரி 4 மடங்கு, 5 மடங்கு அதிகரித்திருக்கிறது. எனவே சென்னையில் ஒரே வீட்டை வைத்திருப்பவர்கள் மிகுந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா? அவர்களுக்கு வரிவிதிப்பிலிருந்து சலுகை அளிக்க அல்லது வரிக்குறைப்பாவது செய்ய அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இவைகளைப்பற்றி அரசு அறியாது. (சிரிப்பு) ஆனால் இந்த வரிவிதிப்புக் கொள்கையே நல்ல முறையில் அமைந்திட வேண்டும் என்றும், உள்ளாட்சி அமைப்புகள் எந்த வகையிலே வரிவிதிப்பு செய்ய வேண்டும் என்ற வகையிலும் வழிமுறைகளைப்பற்றி அரசாங்கம் தற்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மதுரை மாநகராட்சி மன்றத்தில் உள்ள வரி அப்பீல் கமிட்டிக்கு நீதிபதியைப் போடுவதுபற்றி இன்னும் அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்ற முறையில் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சென்னையைப் பின்பற்றி மதுரை மாநகராட்சியிலும் நீதிபதியையே வரி அப்பீல் கமிட்டிக்குப் போடுவதில் என்ன தயக்கம் என்று தெரியவில்லை. அதில் அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது என்றும் தெரியவில்லை. எனவே இந்த வகையில் சென்னையைப் பின்பற்றி மதுரையிலும் நடவடிக்கையை மேற்கொள்ள அரசு விரைவில் முடிவெடுக்குமா?



1979 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இதிலே அரசாங்கத்திற்குத் தயக்கமுமில்லை, சங்கடமுமில்லை. இதுகுறித்து முறையான ஆய்வு நடைபெற்று வருகிறது.

**திரு. ஆ. திராவிடமணி :** ஒரு காலத்தில் பாரம்பரியம் மிகுந்த குடும்பமாக விளங்கிய காரணத்தால், அப்போது பெரிய பங்களாவைப்போல் வீட்டைக் கட்டியிருப்பார்கள். ஆனால் இப்போது அந்த வீட்டில் முந்தைய நிலையிலான வளம் இருக்காது. எனவே வீட்டின் தோற்றத்தைப் பார்க்காமல், வீட்டின் சொந்தக்காரர்களின் நிலைமையைப் பார்த்து, மாநகராட்சி மன்றம் வரி விதிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** வீட்டின் தோற்றத்தைப் பார்த்து வரியை விதிப்பார்கள். வீட்டின் சொந்தக்காரர்கள் தங்கள் நிலைமை குறித்து அப்பீல் செய்துகொள்ளலாம்.

**திரு. க. அறிவழகன் :** அரசு அறியாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அறிய வேண்டியதையெல்லாம் அறிய வேண்டுமென்பதையாவது அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதை அரசு அறிந்திருக்கிற காரணத்தால்தான், ஆய்வு நடத்தி வருகிறது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** அரசு அறியாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். அரசு அறியாமலேயே மாநகராட்சி நடக்கிறதா? தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாமலே சில மாநகராட்சி அதிகாரிகள் மூலம் மாநகராட்சி நிருவாகம் நடைபெறுவதால்தான், இந்த வரி மிக அதிகமாக இருக்கும்படி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையாவது அரசு அறியுமா? இதே நிலைமையில் சென்றால், வரி குறைக்கப்படாமல் இருந்தால், வரி கொடா இயக்கத்திற்கு மக்கள் ஆளாவார்கள் என்பதையாவது . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உள்நோக்கம் கற்பிக்கும் வகையிலும், குற்றம் சாட்டுகிற வகையிலும் வினாக்கள் அமையக்கூடாது என்பதை உறுப்பினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** கடுமையாக வரி வசூலிக்கும் நிலை தொடர்ந்தால், மக்கள் வரிகொடா இயக்கத்தில் ஈடுபடுகிற நிலை ஏற்படும் என்பதை அரசு அறியுமா?

THIRU G. VASANTHA PAI : In important places where there are agri-horticultural societies, will the Government consider associating them with experts so that these medicinal plants could be grown in those places ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** சித்த மருத்துவ முறைக்குத் தேவையான மூலிகைகளை வளர்ப்பதற்கு தாங்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வெறும் ஆராய்ச்சியை மட்டும் நாம் பயன்படுத்த முடியாது. அத்தகைய மூலிகைகளை வளர்ப்பதற்கு பல்வேறுவிதமான சீதோஷ்ண நிலைகளும் தேவைப்படுகின்றன. மேலும், மலைப்பாங்கு, மலைப்பாங்கான பிரதேசங்களும் தேவைப்படுகின்றன. எங்கெங்கு இவைகள் வைத்தால் சீராக மருத்துவத்திற்குப் பயன்படும் என்பதை அறிந்து அவைகளை பயிர் செய்வதற்கு இன்றைக்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சித்த மருத்துவ மேம்பாட்டிற்கு அரசு அமைத்த குழுவில் யார் யார் இடம்பெற்றிருக்கிறார்கள், இதுவரை எத்தனை முறை அந்தக் குழு கூடியிருக்கிறது, அந்தக் குழு இதுவரை அரசுக்கு ஏதாவது அறிக்கை அளித்திருக்கிறதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** அந்தக் குழுவிலே டாக்டர் சி. என். தெய்வநாயகம் தலைவராக இருக்கிறார். டாக்டர் கோபாலகிருஷ்ணன், டாக்டர் பி. பி. மணவாளன், டாக்டர் பி. பி. இராமநாதன், டாக்டர் வி. சிவராமசேகர், திரு. மாரியமணி, ஐ.ஏ.எஸ்., இந்திய மருத்துவமுறை இயக்குநர்—அலுவலகப் பணிவழி உறுப்பினர். மேலும்—ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். கனம் கேள்வி கேட்டார். எத்தனை முறை கூடினார்கள், என்ன ஆராய்ச்சியை நடத்தியிருக்கிறார்கள். என்ன அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க இயலும்.

**திரு. சி. இராமலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் மருத்துவாழ்மலை என்று ஒரு இடமே இருக்கிறது. அங்கே கிடைக்கின்ற மூலிகைகள் காப்பாற்றப்படுகின்றனவா, அவைகள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** பல்வேறு பகுதிகளிலே இருக்கின்ற மலைப்பிரதேசங்களிலும் பல்வேறு பகுதிகளிலே இருக்கின்ற காடுகளிலும் கூட மூலிகைகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. அப்படி இருக்கின்ற மூலிகைகள் எந்தெந்த வகையான மருந்துகளுக்குப் பயன்



படுகின்றன என்பதற்கான ஆராய்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தற்போது குறிப்பிட்ட இடங்களைத் தனிப் பகுதி இடங்களில் அவைகள் பாதுகாக்கப்படுகின்ற நடவடிக்கைகள் எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த இடத்திலே அத்தகைய பாதுகாப்பு ஏற்பாடு எதுவும் இல்லை.

**புலவர் புலமைப்பித்தன் :** தலைவர் அவர்களே, நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் கேட்டதைத் தான் கேட்க விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக கோவை மாவட்டத்திலே இருக்கின்ற வெள்ளியங்கிரி மலையிலே ஏராளமான மூலிகைகள் இருப்பதாக எனக்குத் தெரியும். அந்த மலையிலே அங்கு இருக்கின்ற மூலிகைகளையெல்லாம் கண்டறிந்து சித்த மருத்துவ மேம்பாட்டிற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.50)

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** கோவை மாவட்டத்திலே இருக்கிற வெள்ளியங்கிரி மலையில் ஏராளமான மூலிகைகள் இருப்பதாக தனக்குத் தெரியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது நாள் வரை இங்கு இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்குமே யானால், அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். புலவர் அவர்கள் மருத்துவத்தைப்பற்றிக் கவிதை பாடி எங்கெங்கே என்னென்ன மூலிகைகள் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னால், இந்த அரசுக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வஹாப் :** இமயமலையின் அடிவாரங்களில் பல நல்ல மூலிகைகள் கிடைக்கின்றன. அவற்றையும் இங்கே கொண்டு வந்து மருந்துகள் தயாரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** சித்த மருத்துவ முறைக்கான மருந்துகளைத் தயாரிக்க என்னென்ன மூலிகைகள் தேவைப்படுகின்றனவோ, அத்தனை மூலிகைகளும் தமிழகத்திலேயே இருக்கின்றன. சித்த மருத்துவம் துவங்கிய இடமே தமிழகம்தான். தமிழகத்திலுள்ள சித்தர்கள்தான் இந்த மருத்துவ முறையைக் கண்டார்கள். தேவையான எந்தவித மூலிகைக்கும் தமிழகத்திலே பஞ்சம் வரவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** சித்த மருத்துவ மேம்பாட்டிற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பாராட்டத் தகுந்தது. சித்த மருத்துவத்தினுடைய மேம்பாட்டிற்காக நியமிக்கப்பட்டிருக்கிற குழுவிலே சித்த மருத்துவர்கள்

எத்தனை பேர் இடம்பெற்றிருக்கிறார்கள்? அறிக்கையை அளிக்க அவர்களுக்கு ஏதாவது கால நெடு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** இந்த சித்த மருத்துவக் குழுவில் இருக்கின்றவர்கள் பெரும்பாலும் சித்த மருத்துவத் துறையிலே இருக்கிறவர்கள்தான். அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிற காலம் மூவாண்டுக் காலமாகும்.

**திரு. செ. முத்துசாமி:** சித்த மருத்துவ முறையிலே நல்ல மூலிகைகளை எல்லாம் ஆராய்ந்து, 'அலோபதி' மருந்துகளைத் தயாரிக்கக் கூடிய கம்பெனிகள் இருப்பதைப்போல சித்த மருந்துகளைத் தயாரிக்க தமிழ்நாட்டில் கம்பெனி ஏதாவது உருவாக்கப்பட்டிருக்கிறதா? இந்த ஆராய்ச்சிக் குழு என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** சித்த மருத்துவத் துறைக்கு மூலிகைகள் நிறைய தேவைப்படுகின்றன என்ற காரணத்தால்தான், இந்த அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலே, முதலமைச்சர் அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டு, மூலிகைப் பண்ணைகளைத் துவங்க வழிவகை செய்திருக்கிறார்கள். அந்தவகை மூலிகைப் பண்ணைகளை தமிழகத்திலே பல்வேறு இடங்களில் துவங்க திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கிற சந்தனத் தோப்பில் மூலிகைச் செடிகள் விளைந்து வருவதாகத் தெரிந்து, மேற்கொண்டு ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. எந்தெந்த இடங்களிலிருந்து என்னென்ன மூலிகைகளைப் பெற முடியும் என்பதை ஆய்ந்து அவைகளைப் பெற வழிவகைகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முடியுமானால், மூலிகைகள் நிறைய உள்ள பகுதிகள் உருவாக்கப்பட்டு, அவைகளைப் பாதுகாக்க வேண்டிய தன்மை வருகிறபடியால், மூலிகை பராமரிக்கும் வாரியத்தைக் கூட துவங்கலாமா என்று அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மருந்தால் மட்டும் நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று சொல்ல முடியாது. மூலிகைகள் இருக்கும் இடத்திலே உள்ள காற்றுப்பட்டால் நோய் குணம் அடையும் என்று சொல்லுகிறார்கள். கொல்லி மலையிலே நல்ல மூலிகைகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே கொல்லி மலையிலே ஒரு சித்த மருத்துவ மனையை ஏற்படுத்த அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காற்றுப் படுவதால் நோய் தீருகிறது என்று சொல்லுகிறார்கள். சில காற்று படுவதால் வேறுவித நோய்கள் வருவதாகவும் சொல்லுகிறார்கள். ஆகவே அந்தக் காற்றுக்கு தோஷம் வந்துவிடக்கூடாது. மூலிகைகள் நிச்சயமாக நோய்களை குணமாக்குகின்றன என்று சித்த மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** மருத்துவத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதெல்லாம் முக்கியமான கருத்துகள். ஆரம்ப பள்ளியிலேயே குழந்தைகளும் இந்த மருத்துவ முறையைப் பற்றி நல்ல முறையிலே தெரிந்துகொள்ளக் கூடிய வகையில் ஆரம்பப் பள்ளியில் இந்த வைத்திய முறையைப்பற்றிச் சொல்லிக் கொடுக்க . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆசிரியர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று முடித்துவிடுங்கள். (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** ஆரம்பப் பள்ளியிலே இருந்து சித்த மருத்துவ முறையைப்பற்றி சொல்லிக் கொடுப்பது என்பது முடியக் கூடிய காரியம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## *Financial Assistance to Social Service Organisations*

*129 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that some Social Service Organisations have made representations to the Government to enhance the financial assistance for bringing up the infants;

(*b*) if so, the amount of assistance now given; and

(*c*) the action proposed to be taken thereon?

## சமூக நல நிறுவனங்களுக்கு உதவித் தொகை.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) குழந்தைகளை வளர்ப்பதற்கான நிதி உதவியை அதிகரிக்குமாறு சில சமூகநல நிறுவனங்கள், முறையீடுகளை அரசுக்கு அனுப்பியுள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், தற்போது கொடுக்கப்படும் உதவித்தொகை எவ்வளவு?

(உ) அதன்மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, சித்த வைத்திய முறை மேம்பாடுகளைப்பற்றி ஆராயக் கூடிய வகையிலே ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். ஆனால் ஆயுர்வேத, யுனானி போன்ற வைத்திய முறைகளை மேம்பாடு செய்வதற்கு அரசு குழு அமைக்கும் குறிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். இனியாவது அவற்றை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : பரிசீலிக்கும்.

திரு. க. அறிவழகன் : சித்த முறை மருத்துவ மேம்பாட்டிற்காக அரசு குழு ஒன்று அமைத்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்துள்ளார்கள். சித்த முறை மருத்துவத்தை வளர்ப்பதற்கு என்ன யோசனைகளை அந்தக் குழு தந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இந்தக் குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு இந்தத் துறையைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி கீழ்க்காணும் பணிகளை ஆய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது :—

(1) இந்திய மருத்துவத் துறையில் நிர்வாகம் மற்றும் மருத்துவப் பிரிவுகளில் நிறைந்துள்ள மனித ஆற்றல் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை ஆய்தல்.

(2) நிர்வாக செலவினங்களுக்கும், மருத்துவ வசதிகளுக்கும் இடையே தற்போது நிலவிவரும் சமமின்மையைப் போக்க வழிமுறை காணல்.

(3) "சித்த அறிவியல் வளர்ச்சிக் குழு"வின் பணித்திறனை ஆய்தலும், தேவையான அளவு, உபயோகமான நூல்களை அக்குழு அச்சிடுவதற்கு ஆலோசனை கூறுதலும்.

(4) இந்திய மருத்துவத் துறையில் ஆராய்ச்சிகள் செய்வதற்கான வழிமுறைகளைக் கூறுதல், அதற்கான செயலாக்கங்களை வகுத்தல்.

(5) அரசு மூலிகைப் பண்ணைகளின் தற்போதைய வளர்ச்சியினை கண்டறிந்து, இவைகளை முனைப்புள்ள மூலிகை உற்பத்தி மையங்களாக்க திட்டங்களை வகுத்தல்.



(6) தூய்மையான சூழ்நிலையில், அறிவியல் முறைகளினால் மருந்து செய் நிலையங்களில் நவீன முறையில் மருந்து உற்பத்தியினைச் செய்வதற்கான வழிகளைக் கண்டறிதல்.

(7) புற்றுநோய், தொழுநோய், காசநோய் மற்றும் ஏனைய கொடிய நோய்களை நீக்கும் அரிய முறைகளைத் தெரிந்து வைத்திருக்கும் வைத்தியர்களிடமிருந்து ஆதாரங்களைச் சேகரிக்கவும், இதற்காக அவர்களுக்கு பாராட்டுகளும், பரிசுகளும் வழங்க வேண்டியிருப்பின் அதற்கான நிபந்தனைகளை வகுத்துக்கொடுக்கவும்.

(8) சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை மற்றும் பாளையங்கோட்டையில் உள்ள இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் செயலாக்கத்தினை மதிப்பிட்டு, அவற்றின் செயல்திறனை மேம்படுத்த ஆலோசனை வழங்கல்.

(9) மாவட்ட, வட்ட, வட்டம் நிலை அல்லாத இடங்களில் இயங்கி வருகின்ற சித்த மருத்துவப் பிரிவுகளின் செயலாக்கத்தினை மதிப்பிட்டு, அவைகளின் வளர்ச்சிக்கான வழிகளைக் கூறுதல்.

(10) சித்த மருத்துவ முறையினை மாநிலம் முழுமையும் உள்ள மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பிரபலப்படுத்துவதற்கான வழிமுறைகளை தயாரித்து அளித்தல்.

(11) மூலிகைகளைப் பயிரிட்டு சேகரிக்கவும், அவற்றை ஏற்றுமதி, இறக்குமதி செய்யவும், இந்திய முறை மருந்துகளை ஏற்றுமதி செய்யவும், தேவையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு தனி நிலையான அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்தல்.

(12) மூலிகைகளைப் பயிரிடுவதற்கு மாநில அரசு தகுந்த நிதி உதவி அளித்தல் ; இம் மூலிகைப் பயிர்த் தொழிலை இம் மாநில மக்களால் எவ்வாறு திறம்படச் செய்ய இயலும் என ஆய்தல் ; இதன் அவசியத்தை ஆய்ந்து இம்முறைகளில் ஏற்படும் இடர்ப்பாடுகள் ஆகியவை குறித்து ஆலோசனை வழங்குதல்.

(13) இது தவிர, பொதுமக்கள், குறிப்பாக கிராமப்புற மக்கள் யாவரும் அதிக அளவில் இந்திய மருத்துவ முறைக்கு ஆதரவு அளிக்கும் நிலையினை அடைவதற்கான இதர ஆலோசனைகளை வழங்குவதற்கும் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அதைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதை அரசாங்கம் ஒழுங்குபடுத்தி, குழந்தைகளுக்குச் சிறப்பான முறையில் அவற்றை விநியோகிக்க மேல் கண்காணிப்புத் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அதுபற்றித் தனிப்பட்ட புகார் எதுவும் இதுவரை வரவில்லை. மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியவைகள் வழங்கும் உதவி சரியாக உபயோகப்படுத்தப் படுகிறதா என்பதை அறிய தணிக்கை செய்து, கணக்குகளைப் பார்த்து வருகிறோம்.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. Minister be pleased to state whether social service organisations like the Andhra Mahila Sabha who do some useful work in the Easwariprasad Dattatreya Centre as well as paediatrics unit are being encouraged by the Government with grants ?

THE HON. Selvi P. T. SARASWATHI : Andhra Mahila Sabha is being helped by the Central Government. It is receiving grant from the Central Government.

(பிற்பகல் 5-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்விகளுக்குப் பதில் முடிகின்ற வரை கேள்வி நேரம் நீடிக்கப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி :** இங்கே குழந்தைகள் வளர்ப்புப்பற்றிய பதில் அளித்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலும் பால சேவிகா நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன. காலை முதல் மாலை வரை நடத்தப்படுகிறது. பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த வரையில், சமூக நலத் துறை உதவி செய்கிறது. அவைகளிலே ஆசிரியர்களுக்கு ரூ. 75 தான் மாதச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்தும் ஆலோசனை அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அதைப்பற்றி திரு. தங்கப் பாண்டியன் அவர்கள் தனியாக ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு பதில் அளிக்கும்போது இதற்கும் பதில் சேர்த்து வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஆ. திராவிடமணி:** குழந்தைகளைக் காப்பதற்கு காப்பகங்கள் அரசாங்கத்தின் உதவியுடன் நடத்தப்படுவதாலும், அரசாங்கமே குழந்தைகளைக் காக்க பொறுப்பு எடுத்திருப்பதாலும், அந்தக் குழந்தைகளைப் பராமரிக்கின்ற பராமரிப்பாளர்கள் தாய்மை உணர்வுடைய மகளிரைப் பெற்ற மகராசிகளாகவே நியமிக்கப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மக்களைப்பெற்ற மகராசிகளாகவே நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கிராமப்புறத்திலே விவசாய வேலை செய்கின்ற, அல்லது தொழில் செய்கின்ற பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளைக் கண்காணிப்பதற்கு ஆள் இல்லாமல் தவிக்கிறார்கள். அலுவலகங்களுக்குச் செல்கின்றவர்களும் தங்கள் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள ஆள் கிடைக்காமல் தவிக்கிறார்கள். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் காலை முதல் மாலை வரை இருக்கும் குழந்தை காப்பகங்களை அரசாங்கம் அமைக்க வேண்டும். அரசாங்கம், வசதியான பெற்றோர்களிடமிருந்து கட்டணம் கூட வசூலிக்கலாம். அதைச் செய்து கொடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட காப்பகங்கள் இருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தலைமைச் செயலகத்திலேயும் அப்படி ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்கிறது. இங்கே வேலை செய்கின்ற சகோதரிகள் தங்கள் குழந்தைகளை அங்கே விட்டுச் செல்கிறார்கள். இதற்கு மத்திய மாநில அரசு, சமூக நல வாரியங்கள், சமூக நலத் துறை இலாகா மூலமாக உதவி செய்துகொண்டிருக்கின்றன.

THIRU D. V. D'MONTE : Sir, there are several voluntary social service organisations which run children's creches to enable parents to carry on their daily avocations leaving their children in the creches. Will the Government consider granting assistance to these voluntary organisations for running children's creches and if so, to what extent ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மத்திய அரசாங்கம் 75 சதவிகிதமும், மாநில அரசாங்கம் 15 சத விகிதமும், தொண்டு நிறுவனங்கள் 10 சத விகிதமும் என்ற அளவிலே பொறுப்பேற்கப்பட்டு அவைகள் பராமரிக்கப் பட்டு வருகின்றன. குழந்தைகள் காப்பகங்கள் அரசாங்கத்தால் நடத்தப் பட்டு வந்தாலும், தனியார் நிறுவனங்களில் நடத்தப்பட்டு வந்தாலும் அரசாங்கத்தின் உதவியும் கண்காணிப்பும் எப்போதும் உண்டு.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களிலே சேர்க்கப்படக்கூடிய குழந்தைகள் அனாதைக் குழந்தைகள் மட்டும் தானா, அனாதை அல்லாத ஏழைக் குழந்தைகளும் சேர்க்கப்படுகின்றனவா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** இல்லங்களில் சேர்ப்பதற்கு என்று மாநில அரசு சில விதிமுறைகளை வகுத்திருக்கிறது. இரு பெற்றோரையும் இழந்த குழந்தைகள் அல்லது நெருங்கிய உறவினர் இல்லாத குழந்தைகள், கணவரை இழந்து ஒரு பெற்றோர் உள்ள குழந்தைகள் அல்லது நீண்ட சிறை வாசத்தினால் அல்லது கணவர் ஒதுக்கியதனால் தனியாகப் பராமரிக்கின்ற நிலையில் உள்ள குழந்தைகள், குடும்பத்தின் வருவாய் மாதம் ரூ. 250-க்கும் குறைவாக இருந்தால், சேர்க்கப்படுவார்கள்.

**திரு. க. அறிவழகன் :** குழந்தைகள் நல வாரியத்திற்கு இந்த உலகக் குழந்தைகள் ஆண்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த சமூக நலத் துறையைச் சேர்ந்த குழந்தைகளை மட்டும்தான் அவர்கள் கவனிப்பார்களா, அத்துடன் நம்முடைய கல்வி அமைச்சரின் துறையைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான குழந்தைகளையும் கவனிப்பதற்கு திட்டம் இருக்கிறதா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** சமூக நலக் கல்வித் துறையையும் சேர்த்தே வருகிறது என்று கருதுகிறேன். எனவே அனைத்துக் குழந்தைகளையும் அரசு பராமரிக்கும்.

## Arulagam Association, Madurai

* 130 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether the Arulagam Association, Madurai, a Social Service Organisation, has applied for a grant from the State Social Welfare Board ; and

(b) if so, the action taken thereon ?



## மதுரை அருளகம் சங்கம்

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் உள்ள சமூகநல நிறுவனமான அருளகம் சங்கம், மாநில சமூகநல வாரியத்திடமிருந்து மானியம் வேண்டி விண்ணப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(இ) பெண்களுக்கு பாதுகாப்பு இல்லத்தினை நடத்துவதற்கு மானியம் வேண்டி தமிழ்நாடு மாநில சமூக நல வாரியத்திற்கு அருளகம் விண்ணப்பம் செய்துள்ளது. இதற்கான ஒப்புதல் மத்திய சமூக நல வாரியத்திற்கு மாநில சமூகநல வாரியம் அனுப்பியிருந்தது. அந்த ஒப்புதலை அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாக 17—2—1979 அன்று அந்தத் தொகையான ரூ. 5,000 மதுரை அருளகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** இந்த 5,000 ரூபாய் ஒரு ஆண்டுக்கான மானியமா அல்லது தொடர்ந்து வருகின்ற ஆண்டுகளிலும் மானியம் வழங்கப்படுமா ? எத்தனை உறுப்பினர்கள் அந்த நிறுவனத்திலே போஷிக்கப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** இது இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகின்றது. அங்கே இருக்கின்ற சகோதரிகள் விபசாரத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களாகவோ, தண்டிக்கப்பட்டவர்களாகவோ இருக்கிறார்கள். அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் வகையிலே அங்கே பாய் முடைவதற்கும், தையல் தொழில் செய்வதற்கும் அவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். இது இரண்டு ஆண்டுகளுக்கு வேண்டிய செலவுத் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படாதது என்பதைக் குறிக்கும்.

2. உறுப்பினர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சென்னை மத்திய பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் இப்போது பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள். செயலாளர் அவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ள திரு. இரா. சனார்த்தனம் அவர்களை அழைப்பார்கள்.

அங்கத்தினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்களை செயலாளர் அழைத்தார்.

மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் உளமார உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்களுக்கு 24 ஆம் எண்ணுள்ள இருக்கை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை.

(1) அவையில் உறுப்பினர் பேசிய பேச்சுக்காக சம்பந்தப்பட்டவர் அவைக்கு வெளியே அச்சுறுத்தப்படுவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. மாணிக்கம் அவர்கள் விதி 157-ன் கீழ் ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார்கள். அது எப்படி உரிமைப் பிரச்சினையில் வருகின்றது என்பதைப் பற்றி விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் மீது நடந்த பெப்ரவரி 17 ஆம் தேதியன்று நான் பேசிக்கொண்டு இருந்த போது தொழிலாளர்கள் சம்பந்தமாக, இந்த அரசு கையாளக்கூடிய கொள்கை தவறு என்று சொல்லி சில உதாரணங்களைப் பொதுவாகக் குறிப்பிட்டேன். இரவிலே டி.அய். சைக்கிள்ஸ் போராட்டம் நடந்தபோது, இரவிலே காவல் துறையினர் தொழிலாளி வீட்டுக்குள்ளே சென்று கதவைத் தட்டி வீட்டிலே உள்ள தொழிலாளியின் மனைவியை எழுப்பி, "உங்களுடைய கணவர் வேலைக்கு வராவிட்டால், அவர் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப் படுவார்கள். வேலை போய்விடும்" என்று அச்சுறுத்தியிருக்கிறார்கள் என்று பொதுவிலே விளக்கமாகச் சொன்னேன். அப்போது தொழிலாளர் நல



த்துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, இதைப்பற்றித் துல்லியமாக, விவரமாகக் குறிப்பிடவேண்டும் என்றும் என்ன, எங்கே, எப்படி நடந்தது என்று விளக்கவேண்டும் என்றும் கேட்டார்கள். அப்போது நான் "அம்பத்தூரில் திலகர் என்பவர் வீட்டிலே கதவைத் தட்டி அவருடைய மனைவியிடம் அப்படிச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அந்த திலகரையே இந்த அவையில் கொண்டு வந்து நிரூபிக்கிறேன்" என்றுகூட குறிப்பிட்டேன். அது மட்டுமல்ல, இன்னொன்றும் ஆதாரத்தோடு சேர்ந்து குறிப்பிட்டேன். அதைப்பற்றித் துல்லியமாகக் குறிப்பிட்டுச் சொன்னேன். அதற்கு அமைச்சர் பாதுகாப்புக் கொடுத்தால் குறிப்பிடுகிறேன் என்று சொன்னேன். அதனால் அவர்களுடைய குடும்பத்தினருக்கோ, அவருக்கோ ஆபத்து வரக்கூடாது என்றும் பாதுகாப்பு வேண்டும் என்றும் அப்போது தலைமை வகித்துக்கொண்டிருந்த துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டேன். ஆனால் அதற்குப் பிறகு பிப்ரவரி 4-ம் தேதி அன்று இரவு 2-15 மணிக்கு அவருடைய வீட்டிற்குச் சென்று அவரை எழுப்பி அம்பத்தூர் காவல் நிலையத்திற்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அங்கே உட்கார வைத்து அங்கேயே காவல் நிலையத்தில், "இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எத்தனை உறுப்பினர்கள் டி.அய். சைக்கிள்ஸ்-லே வேலை செய்கிறார்கள்?" என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த விவரங்களை எல்லாம் என்னால் கூற இயலாது என்று ஒரு முறைக்குப் பல முறைகள் சொல்லியிருக்கிறார்கள். பிறகு காலை 9 மணிக்கு அவரை அனுப்பியிருக்கிறார்கள். அன்று காலை அவர் வேலைக்குச் சென்றிருக்க வேண்டும். இந்த நிகழ்ச்சியை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அவையிலே விவரத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கேட்கும்போது சில நேரங்களில் விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக சம்பந்தப்பட்டவர்களுக்குச் சங்கடங்கள், சோதனைகள் வந்துவிடக்கூடாது. அமைச்சர் கேட்டதால் பொதுவாகக் குறிப்பிடாது விவரமாக நான் அன்று குறிப்பிட்டேன். அதன் விளைவு அவர் இப்படிப் பட்ட சங்கடத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். இப்படி அவையில் உறுப்பினர்கள் விவரங்களைத் துல்லியமாகவும் துணிவோடும் கூறினால், வெளியிலே உள்ளவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5-10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதே போன்ற ஒரு பிரச்சினை சட்ட மன்றப் பேரவையில் 26—3—1966-ல் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களால் எழுப்பப்பட்டது. அதற்குப் பேரவைத் தலைவர் இவ்விலாந்து

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1979 மார்ச் 7

பாராளுமன்றத்தில் 1951-ல் நடைபெற்ற ஒரு முன் உதாரணத்தை எடுத்துக் காட்டியும், 1955-ல் பேரவையில் எழுப்பப்பட்ட பிரச்சினையை எடுத்துக் காட்டியும் அந்த உரிமைப் பிரச்சினைக்கு அனுமதி மறுத்தார். 1951-ல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு, தலைவர் அவர்கள் தனது தீர்ப்பில் பாராளுமன்ற கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக இல்லாத விஷயங்கள் பாராளுமன்ற உரிமைகளின் வரம்புகளுக்கு உட்படாது என்றும், உறுப்பினர்கள் அதை உரிமைப் பிரச்சினையின்கீழ் எழுப்ப அனுமதிக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

உறுப்பினர் அவையில் பேசியதற்காக அவர்மீது நடவடிக்கை எடுத்தாலோ அல்லது துன்புறுத்தப்பட்டாலோ அது அவை உரிமை மீறிய செயலாகும். மற்றவர்களைப் பொறுத்தவரையில், அவர் இந்த அவையின் முன்னோ அல்லது அவைக் குழுவின் முன்னோ சாட்சியாக வரும்போதோ அல்லது அவர் சாட்சியத்தில் சொல்லிய கூற்றுக்காகத் துன்புறுத்தப்பட்டாலோ அல்லது அவை சம்பந்தமாக அவர் ஆற்றும் நடவடிக்கை குறித்து துன்புறுத்தப்பட்டாலோ அது அவை உரிமை மீறிய செயலாகும். இந்நிகழ்ச்சியில், அவ்விதமான செயல் எதுவுமில்லை. எனவே இதில் உரிமை மீறிய பிரச்சினை எதுவும் எழவில்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(2) சட்ட மன்றப் பேரவையில் மேலவை உறுப்பினர்களுக்கான பார்வையாளர் மாடம் பூட்டப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விதி 157-ன்கீழ் திருவாளர்கள் க. இராமமூர்த்தி, கோ. தங்கப்பாண்டியன், ப. சங்கரலிங்கம், ஆ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது பேரவையையும், பேரவைத் தலைவரையும் பொறுத்த விஷயமாதலால், உறுப்பினர்கள் யாரையும் தாக்காமல், புண்படுத்தாமல் ஒரு வரையறைக்குள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU K. RAMAMOORTHI : Hon. Chairman, Sir, under rule 157 of the Tamil Nadu Legislative Council Rules, I seek your consent to raise a matter of privilege against the Hon. Speaker of the Tamil Nadu Legislative Assembly for having been instrumental to prevent the members of the Legislative Council from discharging their functions and obligations in their capacity as Members of the Legislative Council.



1979 மார்ச் 7] [Thiru K. Ramamoorthi]

Sir, the Members of the Tamil Nadu Legislative Council are provided with a few galleries for observing the proceedings of the Tamil Nadu Legislative Assembly. These boxes are exclusively meant for the members of the Legislative Council and the Members of Parliament to observe the proceedings. The Legislative Assembly has its representatives in the Legislative Council. The members representing the Legislative Assembly Constituency form an important part in this House and some of them have even been elevated as Ministers.

Under the circumstances, it is part of the functions of the members of the Legislative Council to observe the proceedings of the Legislative Assembly.

Today (7th March 1979) when I went to the seats allotted for the members of the Legislative Council at 9.30 a.m. to observe the proceedings of the Assembly, the watch and ward staff there obstructed me and told me that I cannot be permitted to go to the boxes. In addition to it, the boxes were under lock and key. When I protested, I was directed to go to the Lobby of the Legislative Assembly if I so desire, and was told that they have been instructed and ordered to do like that. None of the members of the Legislative Council were previously informed of an action of this kind curtailing the privileges and rights of the members of the Legislative Council. After some time I was informed by some of my friends in the Legislative Assembly that due to their protest, the boxes have been opened for the convenience of the Members of the Legislative Council. The Legislative Assembly Department did not have the courtesy to inform the members about the inconvenience, and try to remove the inconvenience. The action of the Hon. Speaker of the Legislative Assembly and the method of implementation of the orders of the Speaker by the Legislative Assembly Department is highly insulting and objectionable. Hence I request the Hon. Chairman to give consent to raise this matter of privilege.

தலைவரவர்களே, இது குறித்து ஓரிரண்டு கருத்துக்களை மட்டும் கூற விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள்மீது குறை கூறுகின்ற முறையிலே நான் சொல்லவில்லை. ஒன்றை மட்டும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அவையின் அமைப்பு எல்லை என்பது விதி 2 (ஏ)-ன்கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) ஆம்.

(இ) அனாதை இல்லங்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள விகிதத்தில் உணவு மானியம் தற்போது வழங்கப்படுகின்றது :—

முக்கிய நகரங்களில் (சென்னை, தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை, சேலம்) அமைந்த இல்லங்களில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு.—ரூ. 14 வீதமும்.

மலைப்பகுதிகளிலமைந்த இல்லச்சிறுவர்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு.—ரூ. 18 வீதமும்.

மற்ற இடங்களில் நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு.—ரூ. 13 வீதமும்.

(உ) தற்போதைய நிதி நெருக்கடி நிலைமையைக் கருதி, உதவித் தொகையை அதிகரிக்க இயலாது என அரசு முடிவு செய்துள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அனாதைக் குழந்தைகளை எடுத்துப் பராமரிக்கக் கூடிய நிறுவனங்கள் அதிகப்படியான செலவுகளுக்கு உட்படுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, குறைந்தபட்சம் 40 ரூபாய் அளவிலே ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அனாதைக் குழந்தைகளை அரசே பராமரிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, இந்த ஆண்டு சர்வதேச குழந்தைகள் ஆண்டு என்பதையொட்டி, குழந்தைகள் நல வாரியத்தின் தலைவராக இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக, ஆயிரம் குழந்தைகளைப் பராமரிக்க ஒரு இல்லத்தை அரசே ஏற்று நடத்தும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த ஆண்டு சர்வதேச குழந்தைகள் ஆண்டாக இருப்பதால், குழந்தைகளைப் பராமரிக்க, 14 ரூபாய், 18 ரூபாய், 13 ரூபாய் என்று தனியார் நடத்துகிற இல்லங்களுக்குக் கொடுப்பதை, குறைந்தபட்சம் 30 ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா? அரசே ஆயிரம் அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கக் கூடியதாக இருந்தாலும், ஐக்கிய நாட்டுச் சபை, மத்திய அரசு ஆகியவர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்று தனியார் நிறுவனங்களுக்குத் தரும் இந்த உதவியை உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அதுபற்றி தற்போது திட்டம் இல்லையென்றாலும், ஆய்ந்து பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அனாதைகளாக மருத்துவ மனைகளிலே விட்டுச் செல்லப்படுகிற குழந்தைகள் எவ்வித ஆதரவும் அற்ற நிலையிலே பராமரிக்கப்படுகிற நிலை ஏற்படும்போது, சிக்கல்கள் இருக்கின்றன. அந்தக் காரணத்தால்தான் அனாதை இளம் குழந்தைகளைக் காப்பாற்ற குறைந்தபட்சம் 40 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று வேண்டுகிறோம். அரசுத் தரப்பிலே அனாதை விடுதிகளை எடுத்து நடத்துவது என்பது பாராட்டக் கூடியதாக இருந்தாலும், தனியார் நிறுவனங்களுக்கு 40 ரூபாய் அல்லது 30 ரூபாய் என்றாவது வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** ஏற்கெனவே அரசாங்கத்தால் நடத்தப்படுகிற 8 சீர்திருத்தப் பள்ளிகளில், 15 தனியார் சீர்திருத்தப் பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டு வந்த தொகையை 40 ரூபாய் என்று உயர்த்தி அரசாங்கம் வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

**திரு. க. அறிவழகன் :** மத்திய அரசு எத்தனை தொண்டு நிலையங்களுக்கு உதவி அளிக்கிறது? எவ்வளவு மானியம் தருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மத்திய அரசைப் பொறுத்த வரையில் தமிழகத்திலுள்ள 43 தனியார் தொண்டு நிலையங்களுக்கு 90 சதவீதம் மானியம் அளிக்கிறார்கள். மத்திய அரசினுடைய திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் நிலையங்களில் 5 வயது முதல் 8 வயது வரை உள்ள குழந்தைகள் சேர்க்கப்படுகிறார்கள். மத்திய அரசு, கட்டுமானப் பணி, குழந்தைகளைப் பராமரித்தல் ஆகியவைகளுக்காக 90 சதவீதம் மானியத்தை வழங்குகிறது. தொடர் இனச் செலவில் 10 சதவீதத்தை அந்தத் தொண்டு நிலையங்களே ஏற்க வேண்டியிருக்கும். இதைத் தவிர அனாதைக் குழந்தைகளைக் குடும்பத்தில் பராமரிக்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இத்திட்டத்தின்படி 50 குடும்பங்களில் குழந்தைகளைப் பராமரிக்கக் கருதி, குழந்தை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் வீதம் 40, குழந்தைகளுக்கான செலவை மத்திய அரசு ஏற்று பராமரித்து வருகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தனியார் நிறுவனங்கள், சமூகத் தொண்டாக குழந்தைகளைப் பராமரிப்பதை முன்னிட்டு வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பொருள்களையும், நன்கொடைகளையும் பெற்றுக்கொண்டு

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 மார்ச் 7

பொறுத்தமட்டில், அரசாங்கத்தை சங்கடத்திற்கு உள்ளாக்க வேண்டுமென்றோ, எந்த அரசியல் உணர்வோடோ இந்தப் பிரச்சினையை கொண்டுவரவில்லை என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தாங்கள் இந்தப் பிரச்சினையில் உணர்ச்சி பூர்வமாக எங்களோடு கலந்துகொண்டு இதைப்பற்றிப் பேசுகின்ற வாய்ப்பை எங்களுக்குத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சட்டமன்றப் பேரவைப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படக் கூடாது என்ற அடிப்படையில் இன்று காலையில் நடைபெற்ற சம்பவங்கள் இருக்கலாம் என்று கருதினாலும் கூட, நேற்றைய தினம் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கே அந்தமாதிரிச் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அதை பெருந்தன்மையோடு பொருட்படுத்த வேண்டாம் என்று விட்டுவிட்டார்கள். அவர் அப்படி நேற்றையதினம் விட்டுவிட்டதால், இன்றைக்கும் அந்தமாதிரிச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல், மேலவை உறுப்பினர்களுக்குரிய பணிகள் வரன்முறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் சட்டமன்ற நடவடிக்கைகளைக் கவனிப்பதும் அத்தகைய பணிகளில் ஒன்று. ஏதோ பெரிய பயங்கரமான சம்பவங்கள் நடைபெற்றதைப் போல, சாதாரண பார்வையாளர்களைக் கவனிப்பதைப் போல, இந்த அரசு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைக் கருதிவிட்டது. சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்குரிய உரிமை அடிபட்டு விட்டது. இந்த அவையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்பு உறுப்பினராக இருந்திருக்கிறார். அதுபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். ஆற்றல் மிக்க அறிவாளர்கள் பலர் இந்த அவையிலே அமர்ந்திருக்கிறார்கள். பொறுப்புணர்வுடைய சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் தனி அறைகளில் போய் உட்கார்ந்து, சட்டமன்ற நடவடிக்கைகளை கவனிப்பதை எப்படி குந்தகம் விளைவிப்பதாகக் கருத முடியும்! மேலவை உறுப்பினர்களை ஏதோ குண்டர்களைப் போலக் கருதி விட்டதால், எங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்பதை நான் அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நான் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ராஜ்யசபை கடந்த ஒரு மாத காலமாக நடைபெறவில்லை. சபை நடைபெற விடாமல் அங்கேயுள்ள உறுப்பினர்கள் தடை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். புரசீடிங்ஸ் நடைபெறவில்லை. ஒரு குறிப்பிட்ட



1979 மார்ச் 7] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

பிரச்சினையின் பின்னணியாக சபை நடவடிக்கைகள் நடைபெறவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும் ராஜ்ய சபைக்கு வரக்கூடாது என்று எந்த உத்தரவும் போடப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நாட்டிலுள்ள ஒவ்வொரு சட்டமன்றத்திலும் இம்மாதிரி ஏதாவது நிகழ்ச்சிகள் உருவாவது உண்டு. அதற்காக ஒரு அவையிலுள்ள உறுப்பினர்கள் மற்ற அவைக்கு வரக்கூடாது என்று சொன்னால், அது சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கக்கூடிய, பறி போகக் கூடிய விஷயம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவைக்கு வந்து தங்களுக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் உட்கார்ந்து பேரவை நடவடிக்கைகளைக் கவனிப்பதையே மிகப் பெரிய பாவமாகக் கருதுகின்ற ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு சபாநாயகரையோ இந்த அரசையோ நான் குற்றம் சாட்டவில்லை. அதிகாரிகளுக்கு அப்படிப்பட்ட ஒரு மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி வலிய முன்வந்து செய்தால், அவர்களுக்கு ஒரு கித்தாப்பு ஏற்பட்டு விடும் என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால், மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, எங்கள் உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தனிப்பட்ட முறையில் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கோ, திரு. தங்கப்பாண்டியனுக்கோ ஏற்பட்ட நிகழ்ச்சி அல்ல. நம்முடைய அவையில் கூட நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதிகாரிகள் வருகிறார்கள், பார்வையாளர்கள் வருகிறார்கள். யாருமே வரக்கூடாது என்றால், அமைச்சர்களும் உறுப்பினர்களும் மட்டும் உட்கார்ந்து பிரச்சினைகளைக் கவனிக்கின்ற நிலைமை தான் ஏற்படும். சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பதால், பாதிக்கப்பட்டிருப்பதால், இந்தப் பிரச்சினையை அவையினுடைய உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: தலைவரவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையை நான் எழுப்புவது ஏதோ பேரவைத் தலைவரவர்களுக்கு மாசு ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் அல்ல. எங்கள் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைச் சொல்வது எங்களுடைய கடமை. இன்று காலை 9.45 மணியளவில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைக் கவனிக்க நான் மேலவை உறுப்பினர்களுக்கான தனி மாடத்திற்குச் சென்றபோது, மாடம் பூட்டப்பட்டிருந்தது. அங்கு நின்ற காவலர் உத்தரவிருப்பதால் பூட்டப்

"சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகக் கட்டிடங்கள் அனைத்தையும், மேலவை மண்டபம், அதன் புறக் கூடங்கள், அவையைச் சேர்ந்த அலுவலகங்கள், அரசியலமைப்பின் 175 அல்லது 176-ம் பிரிவின்படி மேலவையின் உறுப்பினர்கள் கூடும் இடம், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர், அமைச்சர்கள், எதிர்க் கட்சித் தலைவர், கொறடாக்கள் ஆகியோரின் அறைகள், நூலகம், சிற்றுண்டி விடுதி, ஓய்வு அறைகள், சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலுள்ள குழுக் கூட்டம் நடைபெறும் அறை, அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள நூலகம் ஆகியவையும், தலைவரால் அவ்வப்போது குறிக்கப்படும் பிற இடங்கள் அல்லது கட்டிடங்கள், கட்டிடங்களைச் சேர்ந்த புறக்கூடங்கள், அதனைச் சேர்ந்த படிக்கட்டுகள், மேலவை மண்டபத்திலிருந்து மேலே குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்லுவதற்கான நடைபாதைகள் ஆகியவையும் அடங்கும்" என்று விதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவையின் எல்லைகள் என்று வரும்போது, சில பகுதிகள் மேலவைக்கும், பேரவைக்கும் பொதுவான பகுதிகளாக இருக்கின்றன. மேலவை மண்டபத்திற்கும், பேரவை மண்டபத்திற்கும் இடையிலே இருக்கும் நடைபாதை இரண்டு அவைகளுக்கும் பொதுவானதாக இருக்கிறது. அது மட்டுமல்ல. சில கடமைகளை நிறைவேற்றுவதற்காக, சில விதிமுறைகள் வழக்கமாக இருக்கின்றன. அதிகாரிகள் அவைக்கு வரும்போது டியூட்டி பாஸ்—உடன் வருகிறார்கள். ஆனால் எல்லோருமே அப்படி டியூட்டி பாஸ் கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்துவதில்லை. காரணம் மாண்புமிகு அமைச்சர்களின் பெர்சனல் அட்டெண்டன்ட்ஸ், தனி அலுவலர்கள் வருகிறார்கள். மற்ற அலுவலர்கள் வருகிறார்கள், பல்வேறு காரணங்களுக்காக. அது நியாயம் என்பது மட்டுமல்லாமல், அவர்களை அனுமதிக்கும் நிலை வழக்கமாக இருக்கிறது. அதைப் போலவே நம்முடைய மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை நிறைவேற்ற அவைக்கு வரும்போது பல பகுதிகள் மேலவைக்கும், பேரவைக்கும் பொதுவாக இருக்கின்றன. நூலகத்தில் இரு சாராரும் வருகிறார்கள். அது பொதுவானதாக இருக்கிறது. பேரவையில் மேலவை உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்காக கேலரி இருக்கிறது. அங்கு சென்று அமர மேலவை உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை. யார் அங்கே போகிறார்கள் என்பது தெரிந்த ஒன்று. அங்கே நமக்கென்று சில வசதிகள் இருக்கின்றன. அந்த இடத்திற்குப் போகாமலிருக்க வேண்டுமென்று தடுக்கப்படுகிறோம், சில அவசியமான காரணங்களாலே. அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய காரணத்தாலே. ஆனால் அப்படிப்பட்ட அவசியம் வரும்போது





சிலரை மட்டும் அனுமதிக்கிறார்கள். பார்வையாளர் பகுதியில் அரசு அலுவலர்கள் இன்றைக்குக் கூட 10, 15 பேர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அதைக் குறையாகச் சொல்லவில்லை. அது அவசியமென்று கருதுகிறேன். ஆனால் டியூட்டி பாஸ் உள்ளவர்கள்தான் வந்தார்கள் என்பதல்ல. அரசு அலுவலர்கள் என்பதால் விட்டு விடுகிறார்கள். பேரவைப் பகுதியிலே மேலவை உறுப்பினர்கள் இருந்து பார்க்கும் இடத்தில் நேற்றைய தினம் ஒரு சம்பவம் நடந்த பிறகும், இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமையை கொண்டு வந்திருக்கிறார்கள். நமது மேலவையின் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அதைப்பற்றிச் சொல்லுவார்கள். அவர்களுக்கும் இது போன்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அது பேரவைத் தலைவரின் கவனத்திற்கும், அந்த இலாக்காவின் கவனத்திற்கும் சென்றிருக்குமென்று கருதுகிறேன். அதற்குப் பிறகும் இந்த நடவடிக்கை எடுத்திருப்பது நன்மை, நம்முடைய கடமையை ஆற்றுவதிலிருந்து தடுப்பதாக அமையும், அப்படி அமைந்து விட்டதென்று கருதுகிறேன்.

(பிற்பகல் 5-30)

நான் இதைக் குற்றமாகச் சொல்லவில்லை. பல நேரங்களில் தலைமையிலிருந்து உத்தரவு வரும்போது, அதன் நிலை உணர்ந்து அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பும் கடமையும் அதிகாரிகளைப் பொறுத்தது. உத்தரவுகளை அப்படியே முழுக்க முழுக்க நிறைவேற்றுவதை விட, நிலைமைகளை உணர்ந்து புரிந்து ஆர்வம் காட்டி நிறைவேற்ற முயல வேண்டும். அப்படி இல்லாமல் நிலைமைகளைப் புரிந்துகொள்ளாமலோ அல்லது புரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டாமலோ அல்லது வேண்டுமென்றோ நிறைவேற்ற முனைவது மிகுந்த சங்கடங்களை விளைவிக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்களுடைய பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் பணியாற்றுகின்ற நிலையில், தங்களுடைய கடமைகளைச் செய்கின்ற நேரத்தில், அவர்களுடைய உரிமை பறிபோகின்ற முறையில் அதிகாரிகள் உத்தரவுகளைப் போட்டு நிலைமைகளை ஆராய்ந்து பார்க்காமல் நிறைவேற்றுவது நல்லதல்ல. இன்றைக்கும் நேற்றைக்கும் நடைபெற்ற சம்பவங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையைச் செய்வதிலிருந்தும் தடுக்கின்ற, பறிக்கின்ற ஒன்றாக அமைந்திருக்கிறது என்கின்ற வகையில் இந்தப் பிரச்சினையை அவையினுடைய உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கோரி அமைகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, இன்றைக்கு காலை 10 மணியளவில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுடன் நானும் சென்றிருந்தேன். என்னைப்

யட்டிருக்கிற மாடத்தைத் திறப்பதற்கில்லை என்று சொன்னார். ஒரு வாயில் போய் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களிடம் பேசி, அவர் போய்ச் சொன்னதற்குப் பிறகு அதைத் திறந்திருக்கிறார்கள். சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. எல்லா அறைகளும் பூட்டப்பட்டிருந்தன. இன்று எங்களுக்கு ஏற்பட்ட நிலைமை நாளைக்கு மாண்புமிகு தலைவரவர்களுக்கும் வந்துவிடக் கூடாது. இந்த விஷயம் எங்கள் உரிமையை பாதிக்கின்ற ஒன்றாக இருப்பதால், இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரு. சங்கரலிங்கம் அவர்கள் தீர்மானம் தரவில்லையென்றாலும், நேற்று அவரும் பாதிக்கப்பட்டதாக உறுப்பினர்கள் கூறுவதால் அவரும் அவருடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கின்றேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, நான் தினமும் காலையில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைச் கவனிக்க வருவது வழக்கம். வினா நேரத்தின்போதே வந்து விடுவது வழக்கம். கடந்த 15 வருடங்களாக சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்ற முறையில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளில் பங்கு பெறுகின்ற பெரும் பேறைப் பெற்றவன் என்ற முறையில், அதைப் பெருமையாக நினைத்துக்கொண்டிருக்கிறேன். நேற்றும் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குப் போயிருந்தேன். மாடத்தில் உட்கார்ந்திருந்தேன். சுமார் 11-50 மணிக்கு சட்டமன்றம் ஒத்தி வைக்கப்பட்டவுடன் என் அறைக்கு வந்து விட்டேன். திரும்ப சுமார் 12.05 மணிக்கு நான் அங்கே போனபோது அங்கு நின்றுகொண்டிருந்த காவலர் "போகக்கூடாது, சார்" என்று சொன்னார். என்னை போகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்களா என்று நான் கேட்டேன். முதல் தடவை போனபோது, முற்பகல் 11-50 மணி வரை சட்டமன்ற நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தேன். பிறகு 12-05 மணிக்குப் போனபோது தான் அந்தக் காவலர் அவ்வாறு சொன்னார். திரும்பவும் நான் எம்.எல்.சி.களைப் போகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்களா என்று கேட்டேன். "யாருமே போகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள், சார். நீங்கள் வேண்டுமானால் போங்கள், சார்" என்று அந்தக் காவலர் சொன்னார். அவராகவே அனுப்பினார். அவர் தயவில் நான் மாடத்திற்குள் போவது மாதிரி நிலை ஏற்பட்டது. சட்டசபை மறுபடியும் ஒத்திவைக்கப்பட்டதற்குப் பிறகு அவரிடம் மறுபடியும் "எம்.எல்.சி. க்களைப் போகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்களா? அப்படி யார் சொல்லியிருப்பது?" என்று கேட்டேன். சப்-இன்ஸ்பெக்டர் சொன்னார் என்று அந்தக் காவலர் சொன்னார்.



ஆக அந்த பாண்டுரங்கன் என்ற காவலருடைய தயவில் நான் போயிருக்கிறேன். "அந்த சப்-இன்ஸ்பெக்டரை 4 மணிக்குள் வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் நான் உரிமைப் பிரச்சினை கொடுக்கப் போகிறேன்" என்று அவரிடம் நான் சொன்னேன். உரிமைப் பிரச்சினை கொடுப்பதற்கு நான் 3 மணிக்கே என்னுடைய அறையில் வைத்து டைப் பண்ணி தயாராக வைத்திருந்தேன். 3-30 மணிக்கு அந்த சப்-இன்ஸ்பெக்டர் வந்து என்னைப் பார்த்தார். அவரைக் கேட்டேன். "ஒருவரையும் விடக் கூடாது என்று சொல்லவில்லை" என்று அந்த சப்-இன்ஸ்பெக்டர் சொன்னார். ஆக அதிகாரிகள் லெவலில் இவர் சொன்னதை அவர் புரிந்துகொள்ளாமல் அவர் சொன்னதை இவர் புரிந்துகொள்ளாமல் நடந்துவிட்ட சம்பவமாக இதை நான் கருதி, பிரச்சினையை அத்தோடு விட்டுவிட்டேன். 15 வருடங்களாகப் போய்க்கொண்டிருந்த என்னைத் தடுத்துவிட்டார்களே, கேவலப்படுத்திவிட்டார்களே என்கிற நினைப்போடு இன்றைக்கு நான் சட்டசபை நடவடிக்கைகளைப் பார்க்கப் போகவில்லை. மாண்புமிகு தலைவரவர்களிடம் நேற்றைக்கு நடைபெற்ற சம்பவங்களை நான் சொல்லவுமில்லை. இன்று காலையில் நான் அலுவலகத்திற்கு 12 மணிக்கு வரும்போது, மேலவை உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்கியிருக்கிற அறைகளைப் பூட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். நேற்றைக்கே நான் உரிமைப் பிரச்சினை கொண்டு வராமலிருந்தால், இன்றைக்கு நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன். சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கு முன்பெல்லாம் மண்டபத்திலேயே கடைசி ரோவில் உட்கார்ந்து நடவடிக்கைகளை கவனிக்க இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். நாங்கள் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருப்போம். அதையும் இப்போது எடுத்துவிட்டார்கள். மேலவை உறுப்பினர்கள் மேலேயிருந்து பார்க்க இரண்டு மாடங்கள் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சட்டசபை நடந்துகொண்டிருக்கும்போது தலைமைச் செயலகத்தில் எங்கு போவதற்குத் தடுக்கப்பட்டாலும் [illegible] அல்லது வேறு எங்கு போகும்போதும் எந்த விதத்தில் தடுக்கப்பட்டாலும் [illegible] எங்களுடைய சட்டமன்றப் பணிகளைச் செய்யப்படுவதினின்றும் நாங்கள் தடைசெய்யப்படுகிறோம் என்பது தான் அதற்குப் பொருள். ஆகவே அவர் சொன்னாரா இவர் சொன்னாரா என்பதல்ல பிரச்சினை. உறுப்பினர்கள்

(பிற்பகல் 5-30)

அங்கே போனார்களா, இங்கே போனார்களா என்பதல்ல பிரச்சினை. உறுப்பினர்களாகிய நாங்கள் சட்டமன்றத்தில் உரிமையாக, எங்களுடைய கருத்துப்படி பிரச்சினைகளைத் தெரிந்து பேசுவதற்கு, இந்த மன்றத்தின் வாயிலாக

இந்தப் பிரச்சினையில் நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இரண்டு. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போது, சட்டமன்ற வரலாற்றிலேயே இப்படிப்பட்டதொரு சம்பவம் நடைபெற்றதில்லை என்று கூறினார்கள். இந்தச் சம்பவம் ஏற்பட்டதற்கான காரணமாக, சட்டமன்ற வரலாற்றிலேயே இதுவரை நடைபெறாத சில சம்பவங்கள் நேற்றையதினம் பேரவையில் தொடர்ந்ததன் விளைவாகத்தான் இந்த நிகழ்ச்சி அதோடு இணைந்து வந்திருக்கிறது. சட்டப் பேரவையின் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தினுடைய ஜனநாயக மரபுகளையும் நியதிகளையும் பாரம்பரியத்தையும் காக்க வேண்டுமென்ற உணர்வோடு எந்தவிதமான நியதிகளுக்கும் பொருந்தாத சம்பவங்கள் அவையில் நடந்துவிடக்கூடாது என்ற பொதுவானதொரு நல்ல நோக்கத்தின் அடிப்படையில் பார்வையாளர்கள் இடத்தில் யாரும் அனுமதிக்கப்படக்கூடாது என்ற ஒரு நிலையை மேற்கொண்டிருக்கலாம். இங்கே அதைப்பற்றி உரிமைப் பிரச்சினை என்று சொல்கிறபோது, சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்த முடிவின்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறோமா அல்லது தனிப்பட்ட முறையில் யாராவது இதைத் தவறாகப் பயன்படுத்தி உறுப்பினர்களை, பேரவை நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாத வகையில் தடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களில் யாரையாவது அடையாளம் காட்டி அவர்கள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறோமா என்றால் இல்லை.

ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி, சம்பவம் நடைபெற்றுவிட்டது என்று எடுத்துச் சொல்கிறோம். அதுபோன்ற நிகழ்ச்சி நடக்க வேண்டும் என்று யாரும் விரும்பவில்லை. மேலவை உறுப்பினர்கள் பேரவை மாடத்திற்கு வரக்கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. காரணம், ஜனநாயகத்தின் செழுமையான பாரம்பரியத்தைப் பார்க்கிறபோது, இரண்டு அவைகளின் நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் பங்கேற்று பேரவையில் சொல்லப்படுகிற கருத்துக்களை மேலவை உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவும், அவர்களுடைய விவாதத்தில் அதைப் பயன்படுத்திக்கொள்ளவும், அதைப்போலவே மேலவையில் சொல்லப்படும் கருத்துக்களைப் பேரவை உறுப்பினர்கள் கேட்டு அங்கே விவாதிக்கும்போது அக்கருத்துக்களைத் தங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்வதும்தான் செழுமையான ஜனநாயகத்திற்கும் நல்லது, அதைப் போலவே திறமையான நிர்வாகத்தை நடத்தவும் அது உதவும் என்று இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அந்த வகையில் இந்தச் சம்பவத்தைப் பார்த்தால், பேரவை நடக்கும்போது, அங்கே மேலவை உறுப்பினர்கள் சென்றால், அவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் 'எதற்கு வந்தீர்கள்?' அல்லது 'ஏன் நீங்கள் வர வேண்டும்?' என்று யாரும் கேட்க முடியாது.





அதைப் போலவே சட்டமன்ற மேலவை நடக்கும்போது, பேரவையின் உறுப்பினர்கள் அனைத்து உரிமையோடு இங்கே வந்து அமர்ந்து, உள்ளே அல்ல, வெளியே அவர்களுக்கு என்று இருக்கிற இடங்களில் உட்கார்ந்து, மேலவை நடவடிக்கைகளைக் கவனிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விரும்புகிறார்கள். அதற்காக எந்த விதமான அடையாளம் வைத்துக்கொள்வது என்பதைக்கூட பரிசீலிக்க இருக்கிறார்கள். காரணம் இரண்டு அவைகளிலும் நடக்கிற விவாதங்கள் அந்த அளவுக்கு மிக முக்கியமானவை என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே தான் இந்தச் சம்பவத்தின் உள்ளே சென்று ஆழமாக அதைப் பார்க்க வேண்டாமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, Precincts of the House என்ற முறையில் அவையின் எல்லைக்குட்பட்ட இடங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். எல்லைக் கோடுகளைப் பற்றி நான் அதிகமாக மறுதளிக்க விரும்பவில்லை. அல்லது அதை விவாதத்திற்குரிய ஒன்றாக ஆக்க விரும்பவில்லை. உரிமைக் குழுவில் விவாதிக்கும்போதே, பல்வேறு விஷயங்களை நாம் விவாதிக்கிறோம். மேலவை உறுப்பினர்கள் அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்காக வருகிறார்கள் என்றால், எந்த நேரத்திலிருந்து அந்தப் பணியாற்ற வருகிறார்கள் என்பது குறித்து ஒரு வரையறையைக்கூட உருவாக்கலாம் என்றுகூட விவாதித்திருக்கிறோம்.

பேரவை நடப்பது காலை நேரங்களில், அப்படிக் காலை நேரத்தில் பேரவை நடந்துகொண்டிருக்கும்போது இந்த அவையின் உறுப்பினர்கள் அங்குள்ள மேலவை மாடத்தில் சென்று நிகழ்ச்சிகளைக் கவனிக்க முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலைமையேகூட ஏற்பட்டிருக்கக்கூடாது. அரசு அதை ஒப்புக்கொள்கிறது. ஆனாலும் ஒரு கருத்துப் பரிமாற்றத்திற்காகச் சொல்லுகிறேன். அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் வகையில் உறுப்பினர்களுடைய முயற்சிகள் தடுக்கப்பட்டதாக இதில் கருத வேண்டியதில்லை.

திரு. க. இராமமூர்த்தி: மேலவையைப் பொறுத்தவரையில், இங்குள்ள உறுப்பினர்களில் சிலர் பேரவையின் பிரதிநிதிகளாக அங்கம் வகிக்கிறார்கள். எப்படி ஆசிரியர்களின் பிரதிநிதிகளாகச் சில உறுப்பினர்கள் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்களோ அதே முறையில் சட்டமன்றப் பேரவையிலிருந்து—அந்தத் தொகுதியிலிருந்து—சில உறுப்பினர்கள் தேர்ந்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 7

தெடுக்கப்பட்டு இங்கே வந்திருக்கிறார்கள். எனவே சட்டமன்றப் பேரவையே அவர்களுடைய தொகுதியாக இருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் சட்டப் பேரவையை எங்கள் தொகுதியாகக் கொண்டிருப்பதால், யாருடைய அனுமதியும் இல்லாமல் அங்கேயுள்ள 'காலரி' க்குச் சென்று அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காண்கிற வாய்ப்பு இருக்க வேண்டும். எனவே அப்படி அங்கே சென்று நிகழ்ச்சிகளைக் கவனிப்பது என்பது எங்களுடைய உரிமை மட்டும் என்பதுகூட அல்ல, அது எங்களுடைய கடமையும் ஆகும் என்பதையும் இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நான் ஏற்கெனவே அதைத்தான் சொன்னேன். இங்கு நாம் சுவையாக விவாதிக்கிறோமே தவிர, உறுப்பினர்களுடைய உணர்வுகளையும் வெளிப்பாடுகளையும் இந்த அரசு மிகுந்த மரியாதையோடு உணர்ந்துகொள்கிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆனாலும் இந்தக் கருத்தைச் சொல்வதற்குக் காரணம் நம்முடைய விதிகளிலே கூட அவையின் எல்லை என்பதற்கு விளக்கம் சொல்லும்போது "மேலவை மண்டபம், அதன் புறக்கூடங்கள், அவையைச் சேர்ந்த அலுவலகங்கள்" என்று சொல்லியிருக்கிறோம். அந்த வகையில் மேலவையின் மண்டபமும் மண்டபத்தின் புறக்கூடங்களும் அதில் அடங்கும் என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதைச் சொல்லும்போது, ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பார்வையாளர்களுடைய மாடம் குறிப்பாக மேலவை உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள மாடம் திறந்து வைக்கப்பட்டு, சில உறுப்பினர்கள் மட்டும் அதில் அனுமதிக்கப்பட்டு, சில உறுப்பினர்கள் மட்டும் அனுமதி மறுக்கப்பட்டார்களா என்றால், இல்லை. ஏற்கெனவே பேரவைத் தலைவர் உத்தரவுப்படி அது பூட்டி வைக்கப்பட்டிருந்தது. ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும்கூட அங்கே உள்ளே போக முடியவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டு மற்ற உறுப்பினர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதல்ல குற்றச்சாட்டு. எல்லா உறுப்பினர்களும் அங்கே சென்று பேரவையில் நடவடிக்கைகளைப் பார்க்க உரிமை உண்டு. இரண்டு அவையின் உறுப்பினர்களும் மற்ற அவைக்குச் செல்லும்போது, அவர்கள் தடுத்து நிறுத்தப்படாத நிலை ஏற்பட வேண்டுமென்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறது. அந்த வகையில் அனைத்து உறுப்பினர்களின் உணர்வும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் வந்து அங்கே கலந்துகொள்கின்ற சூழ்நிலையை நாங்கள் என்றைக்கும் பாதுகாப்பாக வைத்திருப்போம் என்ற உணர்வை அரசின் சார்பாக வெளிப்படுத்துகிறேன். எனவே, இது உரிமைக்



1979 மார்ச் 7] [திரு. கா. இராசா முகமது]

(பிற்பகல் 5-40)

குழுவுக்குச் சென்று, பேரவைத் தலைவர் அவர்கள் எந்த நோக்கத்தோடு இந்த உத்தரவை நிறைவேற்றினார்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. பொதுவாக அவர்கள் ஒரு பாதுகாப்பைக் கருதி, சட்டமன்றப் பேரவையில் விரும்பாத சில சம்பவங்கள், நடவடிக்கைகள் வந்து விடக்கூடாதே என்ற நல்லெண்ணத்திலேகூட செய்திருக்கலாம். எனவே, இந்த சம்பவத்தைப் பொருட்படுத்தாமல், இந்தச் சூழ்நிலையை மனதில் கொண்டு, எந்தச் சந்தர்ப்பத்திலும், மேலவை உறுப்பினராக இருந்தாலும், பேரவை உறுப்பினராக இருந்தாலும் அவர்களுக்கு அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே அரசு தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த நிலையைப் பார்வையாளர்களும் மேலே இருந்து பார்க்கிறார்கள். சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களுக்கு ஒரு மாடம் அமைத்திருப்பதும் மேலே இருக்கிறது. அதனாலேதான் இந்தத் தொல்லையே வருகிறது. அதை மாற்றி, முன்னாலே இருந்ததுபோல, இரண்டு பக்கமும்—அந்தத் தூணுக்கு அப்புறம்—இரண்டு லாங் பெஞ்சஸ் போட்டிருந்தால்—அதிலே குஷன் கூட இல்லாமல் போட்டால் போதும்—போகின்றவர்கள் கீழே இருக்கும் இந்த எல்லைக்குள்ளே தான் போவார்கள், அப்படிப் போகும்போது "இங்கே வரக்கூடாது" என்று ஆட்களைத் தடுக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படாது. ஏனென்றால், இந்த எல்லைக்கு உள்ளே சட்டமன்ற உறுப்பினர்களைத் தான் விடுகிறார்கள். அங்கே மேலே போகிறபோது சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்பதும் தெரியாது, அல்லது பார்வையாளர்களா என்பதும் தெரியாது. ஆதலால், அத்தகைய தொல்லை ஏற்படுவதால் முன்னாலே இருந்த முறையைத் திரும்பவும் அரசு கொண்டு வந்து இத்தகைய நிலைமை மீண்டும் வராமல் பாதுகாக்குமா?

அடுத்து, முன்னவர் அவர்கள் அழகான முறையில் விளக்கம் சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய தொனியிலே அவர்கள் சட்டசபைக்கு வருகிறபோது, அவர்கள் சட்டசபை நடவடிக்கையிலே கலந்துகொள்ள வருகிறார்களா என்பது குறித்து கருத்து ரீதியாக, கருத்து மாற்றமாக, ஐயம் திரிபற பல விளக்கங்கள் பல சட்டமன்ற நடவடிக்கைகளிலும், காமன்வெல்த் பார்லிமெண்ட் பலவற்றிலும் மிகத்தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. சட்ட

தொண்டு புரிய சந்தர்ப்பமில்லாத வகையில் எங்களைத் தடுத்திருக்கிறார்கள் என்பதுதான் இதன் பொருள். நேற்று மேலவை உறுப்பினர்கள் பேரவை மண்டபத்தைச் சார்ந்த மாடத்தில் போய் உட்கார முடியவில்லை என்றால், உறுப்பினர்களாகிய நாங்கள் தடுக்கப்பட்டிருக்கிறோம் என்பதுதான் அதற்குப் பொருள். லைப்ரரிக்குப் போவதைப்போல, நாங்கள் பேரவையில் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்குப் போகிறோம். நேற்று அந்த உரிமை எங்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக எங்களுடைய உரிமை மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதில் யாருக்கும் இரண்டு கருத்து இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய எண்ணம். நேற்றைய தினம் இந்தச் சம்பவம் நடைபெற்ற பிறகு இன்று அந்த மாடம் பூட்டப்பட்டிருக்குமானால், இது அதிகாரிகள் பேரில் உள்ள தவறு அல்ல. இதுதான் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான பிரச்சினை. சாதாரணமாக ஒரு தவறு நடந்தால், அதை மற்றவர்கள்பேரில் சொல்லி விடுவது வழக்கம். காரின் சொந்தக்காரர் காரை ஓட்டிக்கொண்டு செல்லும்போது, அது யார் மேலாவது ஏறிவிட்டால், உடனே டிரைவரைக் கூப்பிட்டு அவரை அவருடைய ஆசனத்தில் அமர்த்திவிடுவார்கள். டிரைவர்தான் காரை ஓட்டினார் என்று சொல்லி, டிரைவருக்கு அபராதம் போட்டால் கார் சொந்தக்காரரே அதைக் கட்டிவிடுவார். இதுதான் வழக்கமாக இருக்கின்ற முறை.

நேற்றைய தினம் இந்தச் சம்பவம் நடைபெற்ற பிறகு, ஒரு சப்-இன்ஸ்பெக்டர் என்னை வந்து பார்த்துவிட்டுப்போன பிறகு, இன்றைக்கு அந்தப் பகுதி பூட்டப்பட்டிருக்கிறது என்றால், அந்த அதிகாரியின் மட்டத்திற்கு மேலே இருப்பவர்கள் அதைச் செய்திருக்கிறார்கள் என்பதுதான் பொருள். அது யார் என்பதை உரிமைக் குழு கண்டுபிடிக்க வேண்டும். அது யார் என்பது எங்களுக்குத் தெரியாது. தலைவர் அவர்களுக்கேகூட தெரியாது. எனவே அவரே கூட யாரையும் கூப்பிட்டு எச்சரிக்கவும் முடியாது. பூட்டப்பட்டது, யாரால், பூட்டச் சொன்னவர் யார் என்பதையெல்லாம் விசாரணைக்குட்படுத்தி இதைத் தெளிவாகக் கண்டுபிடிக்க வேண்டும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்பதை உரிமைக் குழு கண்டுபிடிக்க வேண்டும். மேலவையான இந்தச் சபையையே கலைப்பது என்றால்கூட, எங்களுக்கு ஆட்சேபணையில்லை. மேலவையே தேவையில்லை என்று சொன்னால், இங்கே இருந்து 6 அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். எம்.எல்.சி.க்களை உள்ளே விடக்கூடாது என்று சொல்லியிருந்தால், அந்த அமைச்சர்களையும் கேட்டிலேயே நிறுத்தியிருக்க வேண்டும். ஒருவேளை அந்தச் சட்டத்தைச் சரியாக அமுல்செய்யவில்லையோ என்னவோ.





**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : பிரச்சினைக்குள்ளே மிகவும் விரிவாகப் போக வேண்டாம். அதிலும் குறிப்பாக இது பேரவை சம்பந்தப்பட்ட பிரச்சினை.

**திரு. ம. சங்கரலிங்கம்** : அதனால்தான் நான் வேகமாகவும் காரமாகவும் பேசவில்லை. யார்மீதும் நோக்கம் கற்பிக்கக்கூட இதைச் சொல்லவில்லை. இதனால்தான் நான் இந்தப் பிரச்சினையைப்பற்றி நேற்றேகூட பிரஸ்தாபிக்கவில்லை. அவையிலே இந்தப் பிரச்சினையைப்பற்றிச் சொல்வது தேவையில்லை என்றே கருதினேன். ஆனால் பிரச்சினை இந்த அளவுக்கு வளர்ந்துகொண்டே போவதால், இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்தச் சம்பவம் மீண்டும் நடைபெறாத வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால்தான், இதனை உரிமைக் குழுவிற்கு விட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு மேலவை உறுப்பினர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரு கோரிக்கையோடு, நேற்றையதினமும் இன்றைக்கும் சட்டப் பேரவை நடந்துகொண்டிருந்தபோது உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பார்வையாளர்கள் மாடத்தில் உறுப்பினர்கள் அனுமதிக்கப்படவில்லை என்ற நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வின் ஆழத்தையும், சம்பவங்களின் பாதிப்பால் இங்கே அவையின் முன்னால் படம்பிடித்துக்காட்டப்பட்ட வெளியீடுகளையும் இந்த அரசு மிகுந்த மரியாதையோடு புரிந்துகொள்கிறது என்பதை நான் முதலிலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினையின் உள்ளே சென்று மிக அதிகமாக இதனை விவாதிக்க வேண்டாம் என்பதே பொதுவாக இந்த அரசின் கருத்தாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் மற்றவர்களும் பேசும்போது, இந்த அரசுக்கு எந்தவிதமான தவறான நோக்கமும் இல்லை என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே இது நிகழ்ச்சிகளின் போக்கில் ஏற்பட்ட ஒரு சாதாரண விளைவு என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## 10 சட்டமன்றப் பேரவையில் மேலவை உறுப்பினர்களுக்கான பார்வையாளர் மாடம் பூட்டப்பட்டது குறித்து

[1979 மார்

(திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் குறுக்கிட எழுந்தார் . . . .)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** விளக்கம் சொல்லக் கூடாதா

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு திரு. வீராசாமி அவர் களுக்கு, இது உரிமைப் பிரச்சினையாக வந்திருக்கிறது. அதனால்தான் திரு. சங்கரலிங்கம் அவர்களை அனுமதிக்கிறபோதே, இதில் பாதிக்கப்பட்ட வர்களைத் தான் அனுமதிப்போம் என்று சொன்னேன். உறுப்பினர் திரு வீராசாமி அவர்களுக்கே தெரியும் மரபு. உரிமைப் பிரச்சினை வந்தால் வேறு யாரும் இதிலே தலையிடுவதில்லை. தயவு செய்து அமருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இது ஒரு பிரச்சினையாக இருப்பதால் தான். (மீண்டும் எழுந்திருக்கிறார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உரிமைப் பிரச்சினையை விவாதத் திற்கு எடுக்கவில்லை. அதுவல்ல பிரச்சினை. எல்லோருக்கும் தெரியும் மரபு. அவர்களை அனுமதிப்பதற்கே நிபந்தனை போட்டுத்தான் அனுமதித்தேன். நேற்று பாதிக்கப்பட்டவர். விவாதம் கிடையாது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி உட்கார வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, விவாதம் கிடையாது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதுவாக இருந்தாலும், அமைச்சர் அ பேசும்போது, நீங்கள் கேள்வி கேட்டால் அது விவாதம் ஆகிறது. வேண்டும்! தெரிந்த மரபு. அதைப் போய் ஏன் இப்படி பகிரங்கமாக மீற எதிர்க் கட்சித் தலைவர்தான் இதில் எனக்கு உதவி பண்ண வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** குறுக்கிடக் கூடாது தான்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாமன்ற உறுப்பினர்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிய வகையில் சட்டமன்றப் பேரவைத் தலைவரோடு நான் கலந்து இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் எந்தெந்த வகையில் நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் இருக்கிறதோ அதைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வேன் என்பதை இங்கே நான் கூறுகிறேன். இதன்மூலம் நாம் உரிமைப் பிரச்சினை என்று சொல்லும் போது யாராவது இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப் பினர்களுடைய உரிமையைத் தடுத்தது யார் என்ற கேள்வி எழும்போது, அ



1979 மார்ச் 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சட்டப்பேரவைத் தலைவர் என்றால், இது மிகப் பெரிய பிரச்சினையாக அமைந்துவிடும் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, அந்த உத்தரவை நிறைவேற்றியவர்கள் தங்கள் கடமையை நிறை வேற்றியிருக்கிறார்கள் என்பதை நீங்களும் ஒத்துக் கொள்கிற, நாமும் ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு நிலைமை அங்கே நடந்திருப்பதால், இதை உரிமைப் குழுவுக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை என்றும், இங்கே பேசிய கருத்துக்களே எதிர்காலத்திலே ஒரு நல்ல மரபைக் கடைப்பிடிக்க உதவும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, ஒரு கருத்தை வெளியிட்டார் கள். ஏதாவது அடையாளச் சீட்டைக் கொடுக்கலாமா என்று யோசிக்கலாம் என்று சொன்னார்கள். இது இன்னும் சட்ட மன்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிப்பதாக அமையும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தீர்மானம் அதுவல்ல, இதிலே உள்ள பிரச்சினை அடையாளத்தைப் பற்றியதல்ல. எதிர்க் கட்சித் தலைவர் யார் என்று அங்கே இருந்தவருக்குத் தெரியாது. அறையே பூட்டப்பட்டிருந்தது.

இந்தப் பிரச்சினையைக் குறித்து தீர்மானம் கொடுத்த மாண்புமிகு உறுப் பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எந்த உணர்ச்சியை அடைகி றார்களோ அதே உணர்ச்சி ஒரு துளி அளவு கூடக் குறையாமல் இந்தத் தலை வருக்கும் உண்டு என்பதை நான் எடுத்துச் சொல்கிறேன். இதை நீங்களும் ஏற்றுக்கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன். எனக்கே ஒரு முறை சட்ட மன்றப் பேரவையில் இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டது. அங்கே நான் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளைப் பார்க்கப் போனபோது, பேரவைத் தலைவரின் அனுமதியோடு உயர் அலுவலர்கள் வரிசையிலே உட்கார்ந்திருந் தேன். ஒரு உறுப்பினர் எழுந்து, மேலவைத் துணைத் தலைவர் அங்கே அமர்ந்திருக்கிறார், அதிகாரி அல்லாத ஒருவர் அங்கே அமரலாமா என்ற பிரச்சினையை எழுப்பினார். அந்தக் காலத்தில், துணைத் தலைவர் அவர் களும், மந்திரிகளும் அரசாங்க அதிகாரிகள்தான் என்று யாருக்கும் தெரியாத காலம். நல்ல வேளையாக உடனே அப்போதிருந்த முதல்வர் அவர்கள், மிக்க வருத்தத்தோடு, இப்போதுள்ள முதல்வர் எந்த அளவுக்கு வருத்தத்தோடு சொன்னார்களோ, அந்த அளவுக்கு அப்படி பிரச்சினையை எழுப்புவது முறை யல்ல என்று சொன்னார். பேரவைத் தலைவர் அவர்களும் அதை ஏற்று சமாதானம் சொன்னார். என்ன இருந்தாலும், நான் அன்றைக்குப் பிரஸ்

[திரு. ப. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 7

மன்றம் நடக்கிற நாளிலிருந்து, முடிகிற நாள் வரை எந்தக் காலகட்டத்திலும், செக்ரேட்டரியட்டுக்கு உள்ளே வருகிறபோது, இந்தச் சபை இருக்கிற இடத்திற்கு வருகிறபோது அவர்களைத் தடுக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. அதற்கான விளக்கங்களும் காட்டப்பட்டிருக்கின்றன என்பதைக் கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிக உன்னிப்பாகவும், ஆழமாகவும் கவனிக்க வேண்டிய பிரச்சினையாகும். சட்டமன்றப் பேரவையில் ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி, தமிழகத்தில் இதுவரை நடைபெறாத நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அந்த நேரத்தில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அங்கே இருக்கின்ற உறுப்பினர்களுடைய பாதுகாப்பையோ அல்லது வேறு வகையான நிகழ்ச்சிகள், வன்முறை நிகழ்ச்சிகள், வெளியார் உள்ளே நுழைந்து விடுவதால் அவர்களுக்கு ஏற்படுகின்ற உணர்வின் காரணமாக அசம்பாவிதம் எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்றோ எண்ணி, சில உத்தரவுகளைப் போட்டிருக்கலாம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் படித்துக்காட்டியதை நானும் ஒரு முறை படிக்கவேண்டியவனாக இருக்கிறேன். தலைமைச் செயலகக் கட்டிடங்கள் அனைத்தும் பேரவை மண்டபம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேரவை மண்டபம் என்று இதிலே குறிப்பிடப்படவில்லை, அதன் புறக்கூடங்கள், இந்த அவையின் புறக்கூடங்கள் என்பது எதையெல்லாம் குறிப்பிடுகிறது என்பதைப் பற்றி நமது வசதிக்கேற்ப, இதுவரையில் அமைந்து நடத்தப்பட்டிருக்கின்ற முறைக்கேற்ப நாம் விளக்கம் சொல்லிக்கொள்ளலாம். இதற்கெல்லாம் மேலான இன்னொரு நிகழ்ச்சியை நான் இங்கே சொல்ல வேண்டியது என் அனுபவத்தையொட்டி அவசியம் என்று கருதுகிறேன். நாடகத்தடைச் சட்டம் வந்தபோது, தென்னிந்திய நாடக சங்கத்தின் சார்பாக மறைந்த கலைஞர் டி.கே.எஸ். அவர்களுடைய தலைமையில் நாங்கள் குழுவாக வந்து அப்போது முதலமைச்சராக இருந்த அமரர் காமராசர் அவர்களைப் பார்ப்பதற்காக எங்களுடைய மனுவைக் கொடுக்க விரும்பியபோது, எங்களுக்கு—இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இங்கே இருக்கின்ற திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதுபோல—அந்த இருக்கையிலே அமர வாய்ப்புத் தந்தார்கள். ஆனால், பின்னர் மேலவை உறுப்பினர்களிலே பொறுப்புள்ளவர்கள் அங்கே அமருகிறபோது பிரச்சினை எழவில்லை என்பதையும், ஒரு சில வேறு வழிகளிலே சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்ட பிறகு தான் அது அகற்றப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டி



1979 மார்ச் 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

யிருக்கிறது. இருப்பினும், மேலவை உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவையிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சியை கவனிக்கக்கூடாது, அதைத் தெரிந்துகொள்ளக் கூடாது என்கின்ற நோக்கம் அறவே சட்ட மன்றப் பேரவைத் தலைவருக்கு இருக்காது என்ற என்னுடைய நம்பிக்கையையும், அரசுக்கு அந்த எண்ணம் இல்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். எதிர்காலத்திலே இப்படிப்பட்ட சிக்கல்கள் நேராது என்று எதிர்பார்த்துத் தான் நாம் இங்கே நடவடிக்கைகளை நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், மேலவை உறுப்பினர்களுக்கு என்று ஏதாவது ஒரு அடையாளம், அவைக்கு வரும்போதோ அல்லது இப்படிப்பட்ட இடங்களுக்குச் சொல்லும்போதோ, அவர்களிடம் கிடைக்கும்படி செய்தால், அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதைப் பெற்று காண்பிப்பது அல்லது அதை அணிந்துகொள்வது என்று இருந்தால், அதைப் பார்த்த பிறகு, அவர்களுக்கு விதி விலக்கு உண்டு என்று உத்தரவு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொடுக்கப்படும் என்ற நிலைமை ஏற்பட்டால், அதை இங்கே இருக்கின்ற மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்களா? அல்லது இதைவிட வேறு யோசனை கூறப்படுமானால், அதைப் பயன்படுத்திக்கொள்ளவும் இந்த அரசு தயாராக இருக்கிறது.

மேலும், சட்ட மன்றப் பேரவைக்கு வருகின்றவர்கள், நான் யாரையும் குறைகூறுவதாக தயவு செய்து மேலவை உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது, இங்கு இருப்பவர்களை நான் குறிப்பிடவில்லை—மேலவை உறுப்பினர்கள் என்கின்ற வகையில், மேலவை உறுப்பினர்கள்தான் வருகிறார்கள் என்று அவ்வப்போது மாற்றப்படுகின்ற அதிகாரிகள் அல்லது பணியாற்றுகின்ற அதிகாரிகள் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நாம் சில சமயம் எதிர்பார்ப்பதற்கு முடியாமல் போகிறது. அதிகாரிகளைப் பொறுத்தவரையில், மேலிட உத்தரவுகளுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டியிருக்கிறதே தவிர, வேறு எந்தக் கோணத்திலிருந்தும் மாமன்ற உறுப்பினர்களைப் பிரித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கு அறையை, வாசற்படியைப் பூட்டியிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியே உத்தரவாதமாக அமைகிறது என்று நான் கருதுகிறேன். இதை மாமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாவண்ணம் நாம் நமது பொறுப்பை நிறைவேற்றிக்கொள்ள பயன்படுத்த வேண்டிய நல்ல நிலைமைகளை இழந்துவிடாமல் அதை எந்தெந்த வகையில் நாம் நமக்கு இந்த நாட்டின் வரலாற்றுக்கு, அல்லது இந்த நாட்டினுடைய அரசமைப்புக்கு அல்லது இந்த நாட்டினுடைய . . . .

யில்லை. ஆகவே அந்த மாதிரியான வார்த்தைகளைத் தவிர்த்துக் கொள் வது நலம் பயக்கும் என்று மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட நிகழ்ச்சி குறிப்பிலும் இடம் பெற வேண்டாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான காரணங்களைச் சொன்னால், அதற்கு அரசுத் தரப்பிலே இருந்து பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்தப் பெயரை நீக்கிவிட உத்தரவிடு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, ஒருவர் இப் இப்படியெல்லாம் பேசினார் என்று அவர் கூறிய வார்த்தைகள் கூட பெறுவது மரபுக்கு உகந்ததல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்தப் பகுதி முழுவதும் நீக்கப்படு கிறது. பத்திரிகைகளும் பிரசுரிக்க வேண்டாம். அந்தப் பிரச்சினை ரொம் நாளாக இருக்கிற சிக்கலான பிரச்சினை. அவசர முக்கியத்துவம் இப்போ என்ன என்பதைப்பற்றித்தான் உறுப்பினர் பேச வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன்: அந்தப் பிரச்சினையில் சிக்கல் இருப்பதால், அந் சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். அவருடைய பெயர் ரிக்கார்டிலே போக வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ரொம்பவும் வாம்பு மீறிப் போகிறார்கள். இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் என்னவென் மட்டும் சொல்ல வேண்டும். இந்த அவையை ஒத்தி வைக்கவில்லையென்றா என்ன விளைவு ஏற்படும் என்பதைப் பற்றி மட்டும் சொன்னால் போதும்.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தப் பிரச்சினை முக்கியமானது என் சொல்லும்போது, அரசாங்கம் எடுக்கிற முயற்சியைப்பற்றி அந்த மூ என்ன தப்பெண்ணத்தில் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதைத்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, திரும் நான் குறுக்கிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது என்று நினைக்கிறேன். ஒ வைப்புத் தீர்மானத்தை உறுப்பினர் வலியுறுத்திய பிறகு, அரசுத்தரப் இருந்து விளக்கம் அளித்த பிறகு, அதை அனுமதித்தால் பேச வேண் விஷயங்களை இப்போதே விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது மரபு அ என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் பிரச்சினையில் நல்லமு முடிவு ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கக் கூடிய நிலையில் மாண்பு





உறுப்பினர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவத்தைப் பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லி ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் ளுகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: நல்ல சூழ்நிலையைப் புரிந்துகொண்டுதான் சொல்லுகிறேன். முதலாளிகளுடைய வார்த்தைகளை அரசு நம்பக்கூடாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் சொல்வதெல்லாம், மேற்கொண்டு 10 நாள் ஆகிவிட்டது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள்; ஆகவே அரசு சீக்கிரமாக முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது ஒரு கட்சிப் பிரச்சி னையல்ல; ஒரு தொழிற்சங்கத்தினுடைய பிரச்சினையல்ல. அந்த வட்டாரத் திலுள்ள ஆளும் கட்சி எம்.எல்.ஏ. கூட இந்த அரசாங்கம் தொழிலாளர்கள் பிரச்சினையில் கையாளுகிற முறை சரியில்லை என்று கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை மேலும் நீட்டிக்காமல் சீக்கிரம் முடிக்க அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும். ஆகவே இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

(பிற்பகல் 6.00)

திரு. ஆ. திராவிடமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, * *

திரு. க. இராமமூர்த்தி : * *

மாண்புமிகு திரு. கா. இராசாமுகமது : மாண்புமிகு உறுப்பினர் திராவிட மணி தொடக்கத்திலிருந்தே விஷயங்களைத் தெளிவாகவே பேசியிருக்கிறார்கள். அவர் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளை, * * குறிப்பிட்டு பேசியிருக்கின்றவைகளை நீக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரும்பவும் ஆரம்பத்திலிருந்தே தொடங்குவது நல்லது என்று நினைக் கிறேன். இதற்கு முன்னால் பேசியதையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதுவரையில் பேசியதை எடுத்துவிட லாம். உறுப்பினர் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் இது எப்படி வருகிறது என்பதை மட்டும் விளக்கிச் சொல்லட்டும். நமக்கு ரொம்ப நாட்களாக இருக்கும் அவை மரபு தெரிந்திருக்கிறது.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1979 மார்ச் 7]

தாபிக்கப்பட்டு அவமதிக்கப்பட்டுவிட்டேன். ஆனால் அப்போது அந்தப் பிரச்சினையை இந்த அவையிலே எழுப்ப சந்தர்ப்பம் அளிக்கவில்லை. அப்போது திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களேகூட அந்தப் பிரச்சினையை எழுப்ப முன் வந்தபோது, நானே எழுந்து சமாதானம் சொல்லி வேண்டுமென்று சொன்னேன். காரணம் என்னவென்றால், இரண்டு அவைகளும் அந் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நாம் ரொம்ப நாசுக்காக இருக்க வேண்டும். அந் அவையிலுள்ள உறுப்பினர்களே தேர்ந்தெடுத்து அனுப்பிய உறுப்பினர்கள் இங்கே இருப்பதால் ஒன்றுக்குள் ஒன்றாகத்தான் இந்த அவை இருக்கிறது. தவிர, வெவ்வேறான அவைகள் அல்ல. அத்துடன் பேரவைத் தலைவரோ அரசாங்கமோ இதற்குப் பொறுப்பல்ல என்பதை தீர்மானத்தைக் கொடுத்தவர்களே ஐயம் திரிபற விளக்கியிருக்கிறார்கள். அதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். இந்தச் சம்பவம் ஒரு அசாதாரணமான சந்தர்ப்பத்தில் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் புரிகிறது. இங்கே அரசாங்கத்தார் அதற்காக நம்மோடு வருத்தம் தெரிவித்து மீண்டும் இப்படி நிகழாமல் இருக்க என்ன ஏற்பாடு செய்யலாம் என்று முடிவு செய்யலாம் என்று உறுதியளித்திருக்கிறார்கள். ஆகவே இந்த 'அவை மண்டபம்', 'நடைபாதை' போன்ற விவரத்தைப்பற்றி பேசத் தேவையில்லை. அவை [illegible] எம். எல். சி-க்கு மட்டும் தரப்போவதில்லை, எம்.எல்.ஏ. வுக்கும் தரலாம். அவர்களே சொன்னார்கள், அப்படியில்லையென்றாலும் வேறு ஏற்பாடு ஏதாவது செய்யலாம் என்று. அப்படி ஏற்பாடு செய்யும்போது, கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பரவாயில்லை, அவற்றைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். இப்போது உங்கள் உணர்வோடு நாமும் சேர்ந்து, அரசாங்கமும் கலந்துகொள்கிறோம். மேலும் இப்படி நிகழாமல் இருக்க அரசாங்கமும் உறுதியளித்திருக்கிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தவர்கள் இந்த விவாதத்தை இத்தோடு விட்டுவிட அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொகிறேன்.

## 4. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர் பிரச்சினை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. ஆ. நல்லசிவன், திரு. ஆ. திராவிடமணி, திரு. க. இராமமூர்த்தி, திரு. ப. மாணிக்கம் ஆகியோர் சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர் பிரச்சினை குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்காக முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.



1979 மார்ச் 7]

* **திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சி நகரிலே உள்ள சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் 120 நாட்களுக்கும் மேலாக ஆயிரம் தொழிலாளர்கள் பட்டினி கிடந்து வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பல தடவை இந்த அவையிலே கூட பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. கடைசியாக 1979-ம் வருடம் பிப்ரவரி மாதம் 23-ம் தேதி அன்று, எதிர்க்கட்சித் தலைவர்களும், அரசு அமைச்சர்களும் கூட இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவதற்காக ஒரு கூட்டமைப்பு யோசனை கூறி, மூன்று நான்கு தினங்களுக்குள்ளாக ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு ஒரு வழக்கு நடந்தது. இது மாதிரியாக அரசே சம்பந்தப்பட்ட பார்ட்டியைக் கூப்பிட்டுப் பேசக்கூடாது என்று உயர் நீதி மன்றத்திற்கு ஒரு வழக்கு போயிற்று. அதிலே விநோதம் என்னவென்றால், வழக்கை முதலாளிகள் தரப்பிலே போட்டாலும் பரவாயில்லை, தொழிலாளர்கள் தரப்பிலே தொழிற் சங்கம் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறது. அந்தத் தொழிற் சங்கம் வாங்கிக் கொடுத்திருக்கிற உரிமைகளை விட அதிகமான உரிமைகள் வேண்டும் என்பதற்காக இங்கே பிரச்சினைகளைக் கிளப்பியிருக்கிறோம். இதில் வெற்றி பெற்றால், அவர்களுக்கு ஆதரவாக இருக்கும். அரசாங்கம் சம்பந்தப்பட்ட பார்ட்டியைக் கூப்பிட்டுப் பேசக்கூடாது என்று தொழிற் சங்கம் வழக்கு போட்டு 'ஸ்டே' கேட்டது. கோர்ட்டார் ஸ்டே வழங்க மறுத்துவிட்டார்கள். இதற்குப் பிறகு 10 நாட்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னும் பேச்சு வார்த்தை நடந்து முடியவில்லை. பேச்சுவார்த்தை ஏன் நடந்து முடியவில்லை என்பது தெரியவில்லை. இதற்கு முன் நடந்த பேச்சு வார்த்தையில் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், "அரசு மட்டும் முடிவு செய்ய வேண்டிய காரியம் அல்ல இது. முதலாளிகள், தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால், முதலாளியிடமும் பேச வேண்டும்" என்று. அரசுத் தரப்பிலே இருந்து முதலாளிகளோடு பேச்சு வார்த்தை நடத்த முயற்சி நடக்கிறது என்று நான் அறிகிறேன். அந்த முதலாளி அரசு எடுக்கிற முயற்சியைப்பற்றி என்ன நினைக்கிறார் என்று நான் சொல்ல வேண்டும். சமரசம் செய்து கொண்டிருக்கிறோம் என்று அரசுத் தரப்பிலே இருந்து அறிவிக்கிறார்கள். * *

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, * * அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றிச் சொன்னால், அவர் அப்படிச் சொன்னாரா இல்லையா என்பதை இங்கே வந்து சொல்லக் கூடிய வாய்ப்

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**திரு. ஆ. திராவிடமணி:** சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கின்ற வரை கதவடைப்பு என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் தொழிலாளர்களிடையே ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் வேலையை இழந்திருப்பதால், மேலும் பதட்டமான நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக இந்த அவை அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு ஒரு புதிய நிலை, மிகத் தவறான நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதை அரசுக்கு வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இது சம்பந்தமாக நான் முன்பு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம்கூட கொடுத்திருந்தேன். அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது, இந்தப் பிரச்சினை முழுமை அடைய வேண்டும் என்று சொன்னார்கள். மேற்கொண்டு நான் கேள்விகள் கேட்காமல் விட்டுவைத்தேன். ஆனால் இப்போது இந்த அரசின் அணுகுமுறை அந்த விஷயத்தில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றித் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தொழிற்சாலையில் அங்கீகரிக்கப்பட்ட அய்.என்.டி.யு.சி. தொழிற்சங்கம் இருக்கிறது. இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டிலே வழக்கு நடந்துகொண்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** அங்கத்தினர் அவர்களும் இதைப்பற்றி விளக்கிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவரும் அதே மாதிரிதான் பேசுகிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** இங்கு முதலிலே பேசிய அங்கத்தினர் திரு. திராவிடமணி அவர்கள் விஷயத்திற்குள் புகுந்து விரிவாகவே பேசினார்கள். அது ஏனென்று எனக்குப் புரியவில்லை. இந்த சமயத்திலே அரசாங்கத்தினுடைய அணுகுமுறையைப் பொறுத்த வரையிலே, எனக்கு வருத்தம் இருக்கிறது. காரணம் முதலமைச்சர் அவர்கள் இந்த அரசைப் பொறுத்த வரையில், இந்தப் பிரச்சினையை ஹியுமானிட்டேரியன் கன்சிடரேஷன் என்ற முறையிலே அணுகினார்களோ என்று நான் கருதுகிறேன். சட்டப்படி இதில் காரியமாற்ற வேண்டும். அந்த நிலை இருக்கின்றபோது, பல்வேறு சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் காரணமாக இதிலே எப்படியாவது முடிக்



காண வேண்டும் என்ற மனிதாபிமான உணர்வில் (ஹியூமானிட்டேரியன் கன்சிடரேஷனிலேயே) அணுகிச் செய்திருக்கிறார்கள். சட்டபூர்வமாக இல்லாத வகையில் அதைச் செய்ய முனைந்ததால், இந்த விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. தொழிற் சங்க மனப்பான்மையும், சட்டமும் மதிக்கப்படாத நிலைமை இருக்கின்றது. தொழிற் சங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விதிகள் ஒப்பந்தங்கள் நிறைவேற்றியது தொடர்பாக இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அங்கத்தினர் அவர்கள் முன்பு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களே இப்போது விவாதத்திற்குள் போகிறார்கள். என்ன செய்வது?

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்குள்ளேயே போகவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன்:** அங்கத்தினர் அவர்கள் விவாதத்திற்குள்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நானும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அந்த விஷயத்தை விவாதிப்பதற்கான அவசியத்தை மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆக இந்தப் பிரச்சினையில் சட்ட பூர்வமான நடவடிக்கைகளை சட்டப்படி எடுத்துத்தான் ஆகவேண்டும். வேறு பிரச்சினைகள் இருந்தாலும்கூட சட்டத்தை மதித்து நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். உதாரணத்திற்கு முதலமைச்சர் அவர்கள் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைபற்றிச் சென்ற முறை பேசியபோது, ஏற்கெனவே இருந்த சங்கங்கள், எங்கள் தொண்டர்கள் அனுபவித்ததன் மூலம், அந்த நினைவு காரணமாக சில நடவடிக்கைகளை என்னால் கடுமையாக எடுக்க முடியவில்லை என்பதை அறிவித்தார். தனி உணர்வுகள் எதுவாக இருந்தாலும், அவர்கள் ஏற்று இருக்கின்ற ஆட்சிப் பொறுப்பு காரணமாக, அவர்கள் இருக்கின்ற நிலைகள் காரணமாக, தன் சொந்த விருப்பு, வெறுப்புக்களை மறந்து செயல்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்றுகூட சொன்னார்கள். இன்றைக்கு இந்தத் தொழிற் சங்கங்களைப் பொறுத்த வரையிலே, தொழிற் சங்கச் சட்டத்தை முறைப்படி அமுலாக்குவதன் மூலமாகத்தான் தொழிற் சங்கங்கள் முறையாகச் செயல்படுவதற்கு வழிவகைகள் ஏற்படும். இல்லையென்றால், சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி, இருக்கின்ற தொழிற் சங்கங்களை உடைப்பதற்கு அல்லது நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஊறாக,

[திரு. க. இராமமூர்த்தி]

காரணமாக அமைந்து விடுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுவிடும். தொழி அமைதி கெட அதுவே காரணமாக அமைந்து விடும். ஆகவே இதில் மிகு அச்சத்தோடு அணுக வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி விவரமாக விவாதி வேண்டும். எனவே அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத் விவாதிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிக அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கான எனது காரணங்கள்— இது 120 நாட்களுக்கு மேலாக நீடிக்கக்கூடிய பிரச்சினை. 1,400 பேர்களையு அவர்களுடைய குடும்பங்களையும் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினை. மேலு அந்த வட்டாரத்தில் மிகப் பெரிய பதட்ட நிலை நிலவுகிறது. அது மட்டுமல் லாமல் இது தொழிலாளர்களுடைய நல்வாழ்வு சம்பந்தமான, முக்கியமான, அடிப்படையான பிரச்சினைகளைக் கிளப்பியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் காவல் துறையிலே பொறுப்புள்ள அதிகாரிகளைக்கூட இது பாதித்திரு கிறது. பொதுவாழ்வில் வன்முறையாளர்கள் நேரடியாகத் தலையிட்டு தொழிலாளர்கள், தொழிற் சங்க இயக்கத்தை முடக்குகின்ற, கடுமையான ஜன நாயகத்தைப் பாதிக்கின்ற பிரச்சினையாக இது இருக்கிறது. எனவேதான் இதன்மீது விவாதம் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவை தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய உணர்வினை இந்த அரசு மதி கிறது, கவனிக்கிறது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு புறம் மனிதாபிமானத்தோடு நடக்க வேண்டும், வெறும் சட்டத்தை மாத்திர பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது என்ற குற்றச்சாட்டும், இன்னொரு பு மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டதன் விளைவாக சட்டப்படி சரிவ செயல்பட முடியாமல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. இப்ப அரசின் மீது இரு கூட்டினராலும் குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. நா தொடக்கத்திலிருந்தே எப்போதுமே குறிப்பிட்டு வந்திருக்கிறேன். இந்த பிரச்சினையில் மட்டுமல்ல, அரசைப் பொறுத்தவரையில், மக்களுக்காகத்தா சட்டமே தவிர, சட்டத்திற்காக மக்கள் அல்ல என்ற கருத்தை நா எப்போதுமே வலியுறுத்தி வந்திருக்கிறேன். ஆனாலும் சட்டம் அமுலி இருக்கின்ற நேரத்தில், அந்தச் சட்டப்படி நடைபெற வேண்டும் என நியதியை நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம். ஜனநாயக மரபுப்படி நம்முடை செயல்முறைகளை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம். அவற்றை மாற்றியமைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றபோது, இப்படிப்பட்ட சிக்கல்கள் இருந்துதான் தீரும். பதவி





நிலை என்பது அவ்வப்போது ஏற்படுகின்ற விபரீத நிகழ்ச்சிகள் விளைவாகவும் பசிப் பிரச்சினை ஏற்படும்போதும், இருக்கின்ற வேலை கூடப் போய்விட்டது என்கின்ற நிலைமை ஏற்படும்போதும் பொதுவாகவே தவிர்க்க முடியாதது என்பதைத்தான் நாம் அனைவரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். நாங்களும் அதை ஒப்புக்கொள்கிறோம். இன்றைய நிலைமையில் ஒரு நியாயமான வரைமுறைக்குட்பட்டு சரியோ, தவறோ ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, சட்டப்படி அந்த ஒப்பந்தத்தை தொழிலதிபர்கள் மீறி நடக்க முடியாத நிலையில், "எங்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும், அதை நிறைவேற்ற வேண்டியது அவர்களுடைய கடமை" என்று சொல்லும் அளவில், ஒரு தொழிற்சங்கம் முன் வந்திருக்கிறது. அந்த நிலையிலேதான் அரசு அவர்களைத் தனித்தனியாக அழைத்துப் பேசி, புதிதாக உருவாக்கப்பட்ட சங்கத்தின் பிரதிநிதிகளுடன்கூட நேரத்திலே கலந்து பேசி, ஏதாவது ஒரு சுமுகமான நிலைக்கு வரமுடியுமா என்று பார்த்தால், உள்ளபடியே அதிபர்கள் தயாராக இருந்தாலும் கூட, சட்டம் அனுமதிக்காது என்ற நிலை வந்திருக்கிறது என்பதை தயவுசெய்து என்னைவிட தொழிற் சங்கங்களைப் பற்றித் தெரிந்த மாண்புமிகு அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதிலே எனக்கு ஐயமில்லை. ஆனால் இன்று வேதனை தரத்தக்க விதத்தில் இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வது தொழிலாளர்களுடைய உரிமை என்றால், அந்த உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தைச் செய்பவர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டியது அரசினுடைய

(பிற்பகல் 6-10)

கடமை. அதுபோலவே உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்கின்ற தொழிலாளர்களால் அங்கிருக்கும் பொருள்களுக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படாமல் தடுக்க வேண்டியதும், பாதுகாத்துக் கொடுப்பதும் அரசின் கடமையாகும். ஆகவே, இரண்டு கடமைகளையும் அரசு செய்தாக வேண்டியிருக்கிறது. வெளியே இருப்பவர்கள் நாங்கள் தொழிற்சாலைக்குள் நுழைவோம், அது பூட்டப்பட்டிருந்தாலும் சரி, மூடப்பட்டிருந்தாலும் சரி என்ற நிலைமை வரும்போது, அதைத் தடுக்க வேண்டியது அரசின் கடமையாகும். இதன் விளைவாக எங்களுடைய சங்கத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றியாக வேண்டும் என்று கூறுபவர்கள், புதிய நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று கூறுபவர்கள்—இவர்களுக்கிடையே ஏற்படும் மோதலைத் தடுத்து நிறுத்தி உயிர்ச் சேதம், பொருட் சேதம் ஏற்படாமல் தடுப்பதும் அரசின் கடமையாகும். இத்தனை கடமைகளையும் நிறைவேற்றவேண்டிய பொறுப்பில் இருக்கும் அரசு இதை ஒரு விளையாட்டாகவோ அலட்சியமாகவோ கருதி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் ஒதுங்கி வேடிக்கை பார்க்க முடியாது என்ற நிலைமையில் நாங்கள் எச்சரிக்கையோடு

காரியங்களை நடத்திக்கொண்டு வருகிறோம். குண்டர்கள் தாக்கினார்கள் என்பது போன்றெல்லாம் கருத்துகள் வெளியிடப்படுகின்றன. செய்திகள் பார்த்திருப்பீர்கள். பத்திரிகைகளிலெல்லாம் தகவல் வந்திருக்கும். ஒரு காரில் வந்தவர்கள் மீது கல் எறியப்பட்டதென்றும், கல்லெறிந்தவர்கள் மீது சோடா பாட்டில்கள் எறியப்பட்டன என்றும், இருதரப்பைச் சேர்ந்தவர்களும் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதும் நாம் நன்கு தெரிந்து கொண்ட விஷயம். நீங்களும் அறிந்திருப்பீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே, அந்தத் தொழிற் சங்கத்திலே இருக்கின்ற அல்லது அந்தத் தொழில் நிறுவனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இதில் நேரடியாக ஈடுபடுகிறார்களா என்றால், இல்லை. அவர்களைவிட வெளியே இருக்கிறவர்கள் யார் என்பதை இப்போது முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியாது என்பதால், யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. ஒருபுறத்திலே காரிலே வருகிறவர்கள் சோடா பாட்டிலையும் கல்லையும் எறிகிறார்கள் என்ற செய்தி வெளியே வருகின்றதென்பதைக் கவனித்தாக வேண்டும். அவர்கள் தொழிலாளர்கள் அல்ல. அதேபோல அந்தக் காரைத் தாக்கியவர்களும் தொழிலாளர்கள் அல்ல என்று சொல்லும்போது, அங்கே ஏதோ நடைபெறுவதற்கு எந்த அடிப்படையிலேயோ வேண்டாத சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறதென்பதை உணர முடிகிறது. இந்த நிலையிலே சட்டப் பேரவையிலே இன்று காலையிலே மின் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் மூலமாகச் சொன்ன செய்தி, "முதலமைச்சரைக் கலந்து பேச விரும்புகிறோம், இந்தப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு வேண்டும்" என்பதாகும். நான் அதை ஏற்றுக்கொண்டு இன்று மாலை 6 மணிக்கு அதைப் பற்றிப் பேசலாம் என்று சொன்னேன். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "நேரம் போதாது, வெளியிலிருந்து வருகிறவர்களுக்கு அவர்களுடைய பணியை ஆற்ற முடியாது, நாளைய தினம் மாலை வைத்துக்கொள்ளலாம்" என்று சொன்னார்கள். ஆகவே, அதற்கேற்ப இன்றைய தினம் வேண்டாம், நாளைய தினம் என்று முடிவெடுத்து நாளை மாலை பேச்சு நடத்த நேரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பேச்சு முடிந்து பிரச்சினையைத் தீர்க்க, சட்டத்தை மீறாத, சட்டத்திற்குட்பட்ட, ஆனால் மக்களுக்கு, தொழில் செய்பவர்களுக்குத் தேவையான வசதிகள் கிடைக்க என்னென்ன செய்யலாம் என்பதுபற்றிப் பேசி முடிவெடுக்க இருக்கிறோம். அதுவரையில் இந்தப் பிரச்சினையை அதிகப்படுத்தாமல், விரிவுபடுத்தி வருத்தங்களை வெளியிட்டு பத்திரிகையில் அது வந்து, நாளைய தினம் நடைபெற இருக்கும் கூட்டத்தின் முயற்சி தோல்வியடையாமல், வெற்றியடையக்கூடிய முறையில் பல்வேறு கருத்துக்களைச் சொல்லாமல், ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் திரும்பப் பெற



வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதுபற்றிப் பேசுவதற்கு அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பிரச்சினை குறித்து அவையை ஒத்திவைத்துப் பேசவேண்டியதில்லை என்று கருதுவதால், அனுமதி மறுக்கிறேன்.

## (2) கோவை, சேலம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் விவசாயிகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆ. பாலசுப்ரமணியம், க. மீனாட்சிசுந்தரம், கோ. தங்கப்பாண்டியன், ப. மாணிக்கம் ஆகியோர் கோவை, சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களில் விவசாயிகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பது குறித்து ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதியின் கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கோருகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு சேலம், கோவை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலே இருக்கிற விவசாயிகளுடைய மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு மிக உயர்ந்துகொண்டிருக்கும் நிலையிலே உற்பத்தி செய்கின்ற பொருள்களின் விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது. இந்த நிலையில் வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகளோடு போய் மின் இணைப்பைத் துண்டிப்பதாகச் சொல்லப்படுகிறது. நேற்றைய தினம் கூட சென்னையில் நடந்த உயர்மட்டக் குழுவிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வாக்குறுதியை அரசு புறக்கணித்திருக்கிறது என்று சொல்லி, உறுப்பினர்கள் அந்தக் குழுவிலிருந்து வெளியேறியுள்ள செய்தி இன்றைக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு இங்கே இருக்கும்போதே, இது பற்றிப் பேசுவதால் சுமுகமான தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். விவசாயிகளிடத்திலே இன்றைக்கு கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் கடன் பளுவைத் தாங்க முடியாமல் இருக்கும் நேரத்தில், அரசின் மெத்தனத்தின் காரணமாக 5,000 ரூபாய், 10,000 ரூபாய் என்று மின் கட்டணத்தை வசூல் செய்யாமல் விட்டுவிட்டார்கள். இன்றைக்கு அவ்வளவு பெரிய தொகையை வசூல் செய்யும்போது,

## கோவை, சேலம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் விவசாயிகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பது குறித்து

[திரு. ஆ. பாலசுப்ரமணியம்] [1979 மார்ச் 7

பலாத்காரம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஒருசில தினங்களில் தமிழகம் பூராவும் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால், அரசுக்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கே அது பேரிழப்பாகும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது ஒரு சமுதாயப் பிரச்சினை. தமிழகத்தை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் 90 சதவிகிதம் இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த அரசின்மேல் வெறுப்புணர்ச்சி ஏற்படும் நிலையாக இப்போதைய சூழ்நிலை அமைந்திருக்கிறதென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தவணை முறையில் கட்டணத்தைக் கட்டிவிடலாம் என்று அரசு சொன்னாலுங்கூட, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும். சொற்பொழிவாக இல்லாமல் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இது மிகவும் முக்கியமான பிரச்சினை. விவசாயிகள் பிரச்சினை. முதல்வர் அவர்கள் அவையில் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு மணி நேரம் போகிறது. என்றைக்கும் இப்படியில்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** . . . ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். (சிரிப்பு.)

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு அமைச்சர் பெருமக்கள் சென்னையிலே இருக்கிறார்கள். அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும், காவல் துறை அதிகாரிகளிடமிருந்தும் தகவல் கேட்கலாம். சேலத்தில் எப்படி இருக்கிறது, இராமநாதபுரத்தில் எப்படி இருக்கிறது, கோவையில் எப்படி இருக்கிறது என்று கேட்கலாம். அவர்கள் 'operation was peaceful' என்று சொல்லுவார்கள். சேலம் மாவட்டத்தில் பூட்டத்துப்பட்டி, சுக்காம்பட்டி என்ற ஊர்களில் மின் இணைப்பைத் துண்டித்திருக்கிறார்கள். மாவட்டக் கலெக்டரிடம் கேட்டால், "Operation was very peaceful"



கோவை, சேலம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் விவசாயிகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பது குறித்து

1979 மார்ச் 7] [திரு. ஆ. பாலசுப்ரமணியம்]

என்று சொல்லுவார். முப்பது போலீஸ்காரர்கள், அய்ந்து ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் போனால், ஒரு விவசாயி என்ன செய்வான்? அதெல்லாம் வேண்டாம். அவன் பயந்து கொண்டிருக்கிறான். எனவே, இந்தப் பிரச்சினை குறித்துப் பேச அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவையில் இருப்பதால், அதைப்பற்றிப் பேசித் தீர்த்துவிடலாம். எனவே, இதைப்பற்றிப் பேச, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், விவசாயிகளை அழைத்துப் பேசுவோம் என்று. சுமுகமான உறவு ஏற்படும் வரை, மின் இணைப்பு துண்டிக்கப்படாது என்ற உத்தரவாதத்தைத் தர வேண்டுமென்று அவர்களைக் கேட்டு, இது குறித்துப் பேச அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-20)

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, மின் இணைப்பு துண்டிப்பது தொடர்பாக இன்று கோவையிலே இந்தப் பிரச்சினை எழுந்த போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் மின் கட்டண பாக்கிப் பிரச்சினைக்கும் உயர் மட்டக் குழுவின் பரிசீலனையிலுள்ள பிரச்சினைக்கும் தொடர்பு இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள். மின் கட்டணம் என்பது விவசாயி உற்பத்தி செய்கின்ற உற்பத்திப் பொருள்களின் உற்பத்திச் செலவுக்குள் அடங்கக்கூடிய ஒரு கட்டணம் ஆகும். ஆகவே, இந்தப் பிரச்சினையும் அதற்குள்ளே அடக்கமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி அரசிடம் பேச்சுவார்த்தை நடந்த 10—5—1978 ஆம் தேதியிலிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. ஆனால், ஒப்புக்கொள்ளப்பட்டபடி, குழு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து அரசு சொன்னதை நிறைவேற்றவில்லை. அதுபற்றிப் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை அறிவிக்கும்வரை, மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டாம் என்று டிசம்பர் 14, 15 தேதிகளில் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை. அதுபற்றி மீண்டும் விவாதிக்க அரசாங்கத்தை அணுகியும் அரசு அதற்கு அனுமதிக்கவில்லை என்று குறைபடுகிறார்கள். இந்த நிலையிலே இந்தப் பிரச்சினை விவசாயிகளைப் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[1979 மார்

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அமைதியை ஏற்படுத் [illegible] தான் காவல் துறை இருக்கிறது. வன்முறையில் ஈடுபடுவதற்குத் [illegible] விடுபவர்கள் "விளைவுக்கு அந்த ஏதோ சில காரணங்களை வைத்து [illegible] என்று சொல்கிறார்கள். "அப்படிச் செய்தால் உங்களிடம் யாரும் [illegible] முடியாது" என்று வன்முறையைத் தூண்டி விடுபவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிச் சொன்னதன் காரணமாகத்தான், "தொட்டால் கை துண்டு படும்" என்று சொல்லிக் கொடுத்ததன் விளைவாக, தவறான பாதை [illegible] விவசாயிகள் போய்விட்ட காரணத்தால், [illegible] அதிகாரி [illegible] சென்று வசூலிக்காமல் காவல் துறையினரோடு [illegible] சென்று வசூ [illegible] வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. [illegible] கொண்டு வந்த கா [illegible] அல்ல இது. [illegible] ஏழைபெ [illegible] விவசாயிகளிடத்தில் ஏற்படுத்தி விட்ட விளைவுகள் தான் இப்பொழுது [illegible] பெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகள். இவைகளுக்கெல்லாம் காரண [illegible] ர்களை யாராவது கண்டிக்கிறார்களா? [illegible] தான் கண்டிக்கிறார் [illegible] நிலைமை எங்கே போகிறது, [illegible] என்றும் சொல்கிறார் [illegible] இப்படி இப்படி [illegible] என்று சொல்கிறார்கள். [illegible] நேரத்தில் [illegible] 1½ ஆண் [illegible] சொல்லுகிறார்கள். [illegible] 1½ [illegible] ஆகிறது. அதற்குமுன்பே 1½ ஆண்டுகளாக வசூலிக்கப்படவில் [illegible] என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible] இங்கே [illegible] வேண்டும் [illegible] யிருக்கிறார்கள். இன்றைக்காவது [illegible] காரணத்தால்தான், பிப்ரவரி 15 ஆம் தேதி வரை [illegible] அவகா [illegible] கொடுத்தோம். அதை அங்கே இருந்தவர்கள், [illegible] வந்திருந்தவர் [illegible] ஏற்றுக்கொண்டார்கள். கூட்டுறவுக் கடன், அரசுக் கடன்களுக்கு மட்டும் [illegible] இது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. மின்சா [illegible] கட்டணத்துக்கு அல்ல. மின் கட்டணம் என்ற வகையில் 12 காசு, 14 [illegible] என்ற வரையறையைச் சொன்னபோது, அதை ஏற்றுக்கொண்டு கட்டுவார் [illegible] என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். அப்போது [illegible] திரு. நாரா [illegible] சாமி நாயுடு அவர்கள் தான் இந்த அறிவிப்பை அறிவித்ததற்காக தன்னி [illegible] மாலை இல்லையே, இருந்திருந்தால், முதல் அமைச்சருக்கு [illegible] போட்டிருப்போமே என்று சொல்லிவிட்டுப் போனார்கள். இப்பொழுது [illegible] கட்டணத்தைச் [illegible] வந்தால், கத்தி வைத்துக் கொள்ளுங்கள் [illegible] கட்டாதீர்கள்" என்றெல்லாம் சொன்னால் இது எந்த நோக்கத் [illegible] சொல்லப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)



1979 மார்ச் 7]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் மட்டும்தான் ஏதாவது கேட்கலாம். உறுப்பினர் ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுக்கவில்லை. ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்தவர்கள் பேசுவதற்கு மட்டும்தான் அனுமதிக்க முடியும். உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** கத்தியை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அது 'அன்பார்லிமென்டரி' வார்த்தை அல்லவா? அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் பார்த்துக்கொள்வார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** உறுப்பினர் வேறுவிதத்தில் நான் சொன்ன வார்த்தையைப் புரிந்துகொண்டதற்காக வருத்தப்படுகிறேன். மாலை போட்டிருப்பேன் என்று சொல்லிவிட்டுப் போனவர்கள் இப்பொழுது, "தொட்டால் வெட்டுங்கள்—கையில் கத்தி வைத்துக்கொள்ளுங்கள்—தொட்டால் கை துண்டிக்கப்படும்" என்றெல்லாம் பேசுவது நல்லதுதானா? முதலமைச்சருக்கு மாலை போடுவோம் என்று சொன்னவர்கள் இப்பொழுது கத்தி வைத்துக்கொள்வோம் என்பது போல் பேசுவதையும் அரசுக்கு வர வேண்டிய வரியைக் கட்டாதீர்கள் என்று கூறுவதையும் எந்த நாகரீக ஜனநாயக நாடும் ஏற்றுக்கொள்ளாது. பிப்ரவரி 15 ஆம் தேதி போய்விட்டது. ஒரு மாதத் தவணை கேட்டார்கள். தவணை கேட்டது கூட்டுறவுக் கடன்கள், அரசுக் கடன்கள் இவற்றைப் பொறுத்தவரை மட்டும்தான். மின்சாரக் கட்டணம் பிரச்சினையே அல்ல. அது முடிந்து விட்டது. இதை நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். 12 காசு, 14 காசு என்று வரையறுக்கப்பட்டுச் சொல்லப்பட்டதை ஏற்றுக்கொண்டு சென்றவர்கள் இப்பொழுது இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள். இருந்தாலும் இந்த அரசு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களுடைய எண்ணத்திலும் மதிப்பு வைத்து, அவர்கள் எப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் கொண்டவர்களாக இருந்தாலும், ஒட்டுமொத்தமாக அனைவருடைய ஆதரவையும் பெற்று, நாட்டினுடைய அமைதி காப்பாற்றப்பட விரும்புகிறது. அந்த நல்ல எண்ணத்தோடும் ஏழையெளிய விவசாயிகள் கஷ்டப்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்தோடும் அவர்களுடைய

திரு. கே. [illegible]: தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களையே வலியுறுத்துகிறேன். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம், மேலக்கோட்டை பகுதி [illegible] மின் இணைப்பு துண்டிப்பு காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் சொல்கிற கருத்துக்களையெல்லாம் நாளைய தினம் முதலமைச்சர் அவர்கள் பேச்சுக்களைத் தரும்போது, சமூகமாக சொல்ல இருக்கிறார்கள். பேச்சுவார்த்தையின் மூலமாக நல்ல முடிவு ஏற்படும் வரையில் ஒரு மாத காலத்திற்கு மின் இணைப்பு துண்டிக்கப்படக் கூடாது என்பதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். நடைபெறுகின்ற முயற்சியில் எப்போதும் காவல் துறையினர் புகுந்து தொல்லை கொடுக்கக் கூடாது. அப்படிப்பட்ட நிலை இருந்தால், பேச்சுவார்த்தை நடக்கவிருப்பதால் ஒரு சமூகமற்ற நிலை ஏற்பட்டுவிடும். ஏன் இந்த ஆணைகளைக் கட்டாயமாகப் பிறப்பிக்க வேண்டும். [illegible] பட்டங்களை இரண்டு மூன்று நாட்களில் ஒரே தவணையாகக் கட்ட வேண்டும் என்று சொன்னால் அவர்களால் எப்படிக் கட்ட முடியும்? சமூகமான நல்ல முடிவு ஏற்படும் வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின் இணைப்பு துண்டிக்கப்படாது என்று தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம்: இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு சில கிராமங்கள் பாதிக்கப்பட்ட நிலை இருக்கிறது. தொடர்ந்து இப்பொழுது வேறு சில கிராமங்களுக்கும் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்கின்ற அச்சத்தின் காரணமாக பதட்ட நிலை பரவிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு கொந்தளிப்பு நிலை நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால், இந்தப் பிரச்சினை மிக மிக முக்கியமான பிரச்சினையாகும். அதுமட்டுமல்ல, விவசாயம் சம்பந்தமாக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவிலே மின் இணைப்பு துண்டிக்கப்படக் கூடாது என்று கருத்து சொல்லப்பட்டதாக அவர்களுக்குத் தகவல் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும்போது, அதையும் மீறி இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதால், அவர்களுக்கு ஒரு அச்சம், ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக அறுவடை மாதம் மாசி மாதம். கொஞ்சம் முன்பாகவும் பின்பாகவும் கூட அறுவடை நடைபெறும். இப்படிப்பட்ட நேரத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால், அந்த ஏழை எளிய விவசாயிகளுடைய வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படும். மின் இணைப்புத் துண்டிப்புப் பிரச்சினை



மட்டுமல்ல, விவசாயிகளுடைய அன்றாட வாழ்க்கையே நேரடியாகப் பல்வேறு வகைகளில் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாலும், அவர்களிடையே கொந்தளிப்பு நிலை அதிகமாக ஏற்பட்டிருக்கிற காரணத்தாலும், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் நல்ல எண்ணத்தோடும் அவர்களுக்கே உரித்தான சாமர்த்தியத்தோடும் ஒருவேளை ஒத்தி வைப்பதற்கு இடம் கிடைக்காதோ என்ற எண்ணத்தில் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மேலவைத் தலைவரவர்களே, தாங்கள் அதை கவனித்து எதை எதை வெளியிடலாம், எதை எதை விவாதத்திற்குரிய பொருளாக ஆக்கலாம் என்பதையெல்லாம் கவனத்தில் கொண்டு உத்தரவு வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். அரசைப் பொறுத்தவரை ஒன்றை நான் இங்கே குறிப்பிடாக வேண்டும். இதே மேலவையிலே அன்றையதினம் காவல் துறையிலுள்ளவர்களுடைய பரிதாப நிலையைப்பற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வீற்றிருப்பதைப் பார்க்கும்போது ஓரளவு நான் மன நிறைவு அடைகின்றேன். வசூல் செய்ய கிராமங்களுக்குச் சென்றால் அடி, உதை வாங்கிக்கொண்டு ஓடினார்கள் என்ற நிலைமை நாட்டிலே இருக்கிறது என்றால், சட்டம் ஒழுங்கு அரசினுடைய கையிலிருந்து நழுவிவிட்டதோ என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன வாசகம் எனக்கு இன்னமும் நினைவில் இருக்கிறது. நான் அந்த வார்த்தையை முழுக்க அப்படியே சொல்லாவிட்டாலும் நான் சொன்ன கருத்து அவர்கள் சொன்ன அந்தக் கருத்திற்கு உடன்பாடாக இருக்கும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன். "முப்பது அல்லது நாற்பது போலீஸ்காரர்கள் மற்றும் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் கிராமங்களுக்குப் போனால், அவர்கள் என்ன செய்ய முடியும், தடுக்க முடியுமா ?" என்று இப்பொழுது கேட்கிறார்கள். கிராமத்துக்கு வசூலுக்கு உதவியாகப் போன போலீசார், அடிக்கப்படுகிறார்கள், உதைக்கப்படுகிறார்கள், துரத்தப்படுகிறார்கள் என்று சொன்ன அதே வார்த்தையை மாற்றி, இப்பொழுது வசூலுக்காக போலீஸ் துணையோடு வருகிறார்கள் என்று குறை சொன்னால், இதில் எதைப் பின்பற்றுவது ?

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: "Operation was very peaceful" என்று மாவட்டக் கலெக்டர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]   [1979 மார்ச் 7

கருத்துக்களை வெளியிட முன்வருகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காகவும் நாங்கள் இந்தப் பிரச்சினையை கவனிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். நாளையதினம் காலை 10 மணிக்கு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள விரும்புகிறவர்களுடன், சம்பந்தப்பட்டவர்களுடன் பேசுவதற்கு நாங்கள்

(பிற்பகல் 6-30)

ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, நாளையதினம் காலை 10 மணிக்கு அவர்களோடு பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையின் இறுதியில் என்ன முடிவுகள் ஏற்படும் என்பதைப்பற்றி இப்போதே சொல்ல முடியாது. ஆனாலும் இந்த அரசு நாணயமாகவும் சீராகவும், ஒழுங்காகவும் இந்த நாட்டில் சட்டத்தையும் பாதுகாத்து மக்களையும் பாதுகாத்து, இந்த அரசு போடுகிற திட்டங்களை நிறைவேற்றத் தேவையான வலிமையும் பக்குவமும் பெற்றிருந்து செயலாற்றத்தக்க வேண்டிய நிலையில் அதையும் சீராகவும் சிறப்பாகவும் ஒழுங்காகவும் செய்து நிறைவேற்றும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு காவல் துறையினரையும் காப்பாற்றி பணியாற்றும் அதிகாரிகளையும் பாதுகாக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பத்தை யார் ஏற்றுக்கொள்ள முடியும் என்று பார்க்காமல் கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய வசதியில் உள்ளவர்கள் அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் நாங்கள் நடவடிக்கை மேற்கொள்ளும்போது, அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மிகவும் நியாயமானவை என்று நாங்கள் நம்பும்போது, அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை. இந்த நிலையில்தான் நாளையதினம் காலை 10 மணிக்கு பேச்சுவார்த்தையை நடத்துவது என்று நேரம் குறித்திருக்கிறோம். ஆகவே இந்த நிலையில் பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை மேலவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க இவ்வவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம்: * *

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1979 மார்ச் 7]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது நான் பதில் சொல்லி, அதற்குப் பிறகு மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புக்குப் பிறகு மீண்டும் நான் பதில் சொல்வது என்பது மரபில்லை என்றாலும், தலைவர் அவர்கள் அனுமதி அளித்தால், ஒரு கருத்தை மட்டும் வெளியிட விரும்புகிறேன். * * அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவ்வாறே இரண்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

## 5. கவன ஈர்ப்பு.

(1) நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் தனியார் மற்றும் பொது நிலங்களில் ஆக்கிரமிப்பு மற்றும் வெளியேற்று நடவடிக்கைகளின் விளைவுகள் குறித்து.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் வட்டத்தில் தனியார் மற்றும் பொது நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு மற்றும் வெளியேற்று நடவடிக்கைகள் ஆகியவற்றினால் இப்பகுதியில் ஏற்பட்ட விளைவுகள் குறித்து" மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அறிக்கையொன்று @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி: காலம் அதிகமாகிவிட்ட காரணத்தால், இந்தப் பொருள் குறித்து தொடர்ந்து வேறு எதுவும் பேசவேண்டிய அவசியமில்லை என்று இதோடு முடித்துக்கொள்ளுகிறேன்.

---

@ 151 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

(2) 1979 ஜனவரி மாத இறுதியில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து கோவை—பொள்ளாச்சி சாலையில் தாமரைக்குளம் என்ற இடத்தில் மற்றொரு பஸ்ஸுடன் மோதியது குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1979, ஜனவரி மாத இறுதியில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து, கோவையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் வழியில் கோவை—பொள்ளாச்சி சாலையில் தாமரைக்குளம் என்ற இடத்தில் மற்றொரு பஸ்ஸுடன் மோதி 7 பேர்கள் அதே இடத்திலும் இருவர் மருத்துவமனையிலும் இறந்ததும், ஏராளமான நபர்கள் படுகாயமுற்றதும் குறித்து"

மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1979 ஜனவரி 29 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து எண். எம். எக்ஸ். 699 (டி.எம்.என். 864) தடம் எண். 549-ல் கோயமுத்தூரிலிருந்து இராமநாதபுரம் செல்லும்போது காலை, சுமார் 10.15 மணியளவில் தாமரைக் குளத்தை நெருங்கும் சமயம், 65 வயதான சின்னப்பையன் என்பவர் சாலையின் இடது புறமிருந்து வலது புறமாகப் பேருந்தின் முன் திடீரென்று கடந்தார். அவர்மீது மோதாமல் இருக்க, வண்டியை ஓட்டுநர் சாலையின் வலதுபுறமாகத் திருப்பி நிறுத்த முயன்றபோது, அங்கே நின்றிருந்த தனியார் பேருந்தின் (டி.என்.பி. 4633) மீது மோதியது. இதன் விளைவாகப் பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து பக்கத்தில் உள்ள சிறிய சாலையில் ([illegible]) இறங்கியது. தனியார் பேருந்து அருகிலிருந்த தேநீர்க்கடையின் முன்கூரையைத் தாக்கி நின்றது. இந்நிலையில் தனியார் பேருந்து, சாலை ஓரத்து மண்பகுதியில் பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்த பயணிகளின்மீது மோதியது. இதன் விளைவாக ஆறு பயணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் ஒருவர் உயிரிழந்தார்.

மேலும் 46 நபர்கள் காயமுற்றனர். காயமுற்றவர்களில் 27 நபர்கள் பொள்ளாச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்கள் மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள். காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுள் இருவர் பின்னர் உயிரிழந்தனர்.





வேகம் காட்டும் கருவிப்படி ஓட்டுநர் வண்டியை 45 கிலோ மீட்டர் வேகத்தில் ஓட்டிச் சென்றிருக்கிறார். விபத்து ஏற்பட்ட இடத்தில் சாலை ஏற்றமாக இருந்தபடியால் அதிக வேகம் செல்ல வாய்ப்பில்லை. வண்டியை ஓட்டுநர் வண்டியின் மீதிருந்த கட்டுப்பாட்டை இழந்தார். ஆகவேதான் இந்த மாறாக இடது புறம் ஓரத்திருந்தால், அங்கு குழுமியிருந்த சுமார் 50 நபர்கள் மாண்டிருக்கக்கூடும். வலதுபுறம் ஓரத்துத் திருப்பியபோது ஓட்டுநர் வண்டியின் மீதிருந்த கட்டுப்பாட்டை இழந்தார். ஆகவேதான் இந்த விபத்து நேரிட்டது.

உயிரிழந்த 9 நபர்களின் நெருங்கிய உறவினர்களிடத்தில் தலா 1,000 ரூபாய் வீதம் உதவித் தொகை மாவட்ட ஆட்சித் தலைவரால் கொடுக்கப் பட்டது. இவ்விபத்து சம்பந்தமாக காவல்துறையினரால் பல்லவன் போக்குவரத்துக் கழக ஓட்டுநரின்மீது வழக்கு ஒன்றும் பதிவு செய்யப் பட்டுள்ளது.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்த விபத்திற்குக் காரணமான ஓட்டுநருக்கு மொத்தம் 11½ வருஷ சர்வீஸ்தான் ஆகியிருக்கிறது என்பது உண்மையா? குறைந்தது 5 வருஷத்திற்கு 'மொபசல்' பஸ்களை ஓட்டியவர்களுக்குத்தான் விரைவுப் பேருந்துகளில் ஓட்டுநர் நியமனம் அளிக்கப்பட வேண்டுமென்று விதி இருப்பது உண்மையா? அந்த விதி குறிப்பிட்ட இந்த ஓட்டுநர் விஷயத்தில் தளர்த்தப்பட்டிருக்கிறது என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படியொரு விதி இல்லை. ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில், 'ஹெவி வெகிகிள்ஸ் லைசென்ஸ்' என்று சொல்லப்படும் லைசென்ஸ் பெற்றிருக்க வேண்டும். இந்த விபத்தைப் பொறுத்த வரையில், ஓட்டுநர் விபத்திற்குக் காரணமில்லை என்பதை ஏற்கெனவே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்த ஓட்டுநரைப் பொறுத்தமட்டில், 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்தில் சென்னையில் நடைபெற்ற பல்லவன் போக்குவரத்துக் கழக ஸ்டிரைக்கின்போது அந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக ரெக்ரூட் செய்யப்பட்ட டிரைவர்களில் ஒருவர் என்பது உண்மையா? அவர் சென்னையிலிருந்து அங்கே டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார் என்பதும் உண்மையா? இரண்டாவதாக, அமைச்சர் அவர்கள் கூறுவதைப்

123 1979 ஜனவரி மாத இறுதியில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து கோவை—பொள்ளாச்சி சாலையில் தாமரைக்குளம் என்ற இடத்தில் மற்றொரு பஸ்ஸுடன் மோதியது குறித்து

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 7

போல், இந்த விபத்தில் ஓட்டுநர்மீது எந்தத் தவறும் இல்லை என்பது உண்மையானால், அந்த ஓட்டுநரின்மீது எதற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சாலை விபத்தில் உயிரிழப்பு ஏற்பட்டாலே, வழக்குப் பதிவு செய்யப்படுவது வழக்கம்.

6. உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மேல்சபை உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்களை மேலவை அமைப்பு எல்லைக்குள் கைது செய்ததாக எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்த @ அறிக்கையும் நடவடிக்கைக் குறிப்புகளும்" பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை நான் அவைக்கு அளிக்கிறேன்.

7. 1979 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைக் காணும்போது நம்முடைய மாநிலத்திற்கு இன்றையதினம் ஏறக்குறைய 1,160 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வருகிற நிலையைப் பார்க்கிறோம். அதாவது நம் மாநில அரசின் வருவாய், மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் வருவாய் ஆகிய அனைத்தையும் கணக்குப் பார்த்தால் இன்றையதினம் ரூ. 1,160 கோடிக்கு நமது மாநிலத்தின் வருவாய் உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க முடிகிறது. நமது நாடு சுதந்திரம் அடைந்தபோது இந்தியா முழுவதற்குமாக மத்திய அரசு போட்ட பட்ஜெட் அளவுக்கு இந்தத் தொகை சமமாகும்.

இதில் குறிப்பாக இந்த ஆண்டு பற்றாக்குறை ரூ. 4.25 கோடி என்றும், சென்ற ஆண்டு பற்றாக்குறை ரூ. 5.73 கோடி என்றும், மொத்தத்தில் ரூ. 9.98 கோடி பற்றாக்குறை என்றும் இருக்கிறது. புதிதாக ரூ. 2 கோடி

@ 152-156 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





அளவுக்கு வரிகள் போட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சேல்ஸ் டாக்ஸ் சர்சார்ஜ் என்ற நிலையில் 5 சதவீதம் போட்டிருக்கிறார்கள். அது

(பிற்பகல் 6-40)

போடப்படக் கூடிய இடம் முன்பு நகர எல்லையாக இருந்தது. சர்சார்ஜ் என்ற நிலையில் 5 சதவீதம் போட்டிருக்கிறார்கள். சென்னை நகரம், திருச்சி, சேலம், கோவை போன்ற நகரங்களில் அது போடப்பட்டிருந்தது. இப்போது அதனுடைய எல்லையை விரிவுபடுத்திக் கொண்டது மட்டுமல்லாமல், நகராட்சிகளுக்கும், நகராட்சியிலே வருகிற பகுதிகளுக்கும் நீட்டியிருப்பதால், ஏறக்குறைய இந்த மாநிலம் பூராவும் சேல்ஸ்டாக்ஸ் சர்சார்ஜ் பரவும் நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏதோ சென்னையிலும், சேலத்திலும், கோவையிலும் மட்டும், சேல்ஸ்டாக்ஸ் சர்சார்ஜ் இல்லை, இந்த மாநிலம் பூராவும் அது பரவக்கூடிய நிலை இருப்பதால், பொருள் வாங்குகிறவர்களுக்கு சேல்ஸ்-டாக்ஸ் சர்சார்ஜின் காரணமாக விலைவாசியிலே ஒரு ஏற்றம் காணக்கூடிய நிலை ஏற்படுகின்றது. இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீப்பெட்டிக்கு 2 சதவீத வரி போட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்திலே இப்போது தீப்பெட்டிக்கு உண்டான வரியை சற்று குறைத்து விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அந்தக் குறைவுக்கு ஏற்றாற்போல் அல்லாமல், ஒரு மடங்குக்கு மேல் நம்முடைய அரசு வரி போட்டதால், மத்திய அரசு கொடுத்த சலுகையை அடைய முடியாமல் இருக்கிறது. கையால் செய்யப்படுகிற தீப்பெட்டித் தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் நஷ்டப்படுகிறார்கள். இதிலே 25,000 ரூபாய்க்குக் குறைவான அளவுக்கு உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு விதிவிலக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். சாதாரண சிறிய கூட்டுறவுச் சங்கங்களிலே கூட ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 60,000 ரூபாய்க்கு, 70,000 ரூபாய்க்குக் குறைவாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் சாலையே இல்லை. ஆகவே, இந்த விதிவிலக்கு, சிறு கைத்தொழிலாக இருக்கக்கூடிய இப்பேர்ப்பட்ட தொழிலுக்கு உகந்ததாக இல்லை.

அடுத்ததாக, தேங்காய்க்கு 2 சதவீத வரி போட்டிருக்கிறார்கள். தேங்காய்க்கு வரி போட வேண்டிய அவசியத்தைப் பற்றி அவர்கள் சொல்லும்போது, கொப்பரைக்கான வரியைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள், ஆகவே, கொப்பரை தேங்காய் உருவாக இருப்பதால், தேங்காய்க்கு என்று வரி போட்டால், அந்த வரியைக் கட்டி விடுவார்கள் என்று சொல்கிறார்கள்.

தேங்காய்க்குப் போட்ட வரியை முன்பு இருந்த அரசாங்கம் ரத்து செய்தது. இப்போது இருக்கிற அரசாங்கம் மீண்டும் அந்த வரியைப் போடுகிறது. இது உணவுப் பொருட்களிலே மிகவும் அத்தியாவசியமான பொருள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த 2 சதவீதம் வரி என்பது ஒரு பெரிய வருமானம் தருவதாக அமையவில்லை. இதற்கு மாறாக, நம்முடைய மாநிலத்திலேயிருந்து ஏகப்பட்ட தேங்காய்கள் இப்போது பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதி செய்யக்கூடிய தேங்காய்களுக்கு வரி போட்டால், இப்போது மதிப்பிடப்பட்டுள்ள அதிகமான வருவாயை விட அதிகம் வருவதற்கு வசதி இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய மாநிலத்திலேயே உபயோகப்படுத்தப்படுகின்ற தேங்காய்க்கு வரி போடாமல், நம்முடைய மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் செல்லக் கூடிய தேங்காய்க்கு வரி போடக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கால்நடை வளர்ப்புப்பற்றிச் சற்று கூறி விரைவாக என்னுடைய சொற்பொழிவை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் 7 மணி வரை பேசலாம்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: 7 மணி வரை பேசுவதற்கு அனுமதித்தாலும், நான் ரயிலுக்குப் போக வேண்டிய நிலை இருக்கிறது. நான் எதிர்பாராத அளவிலே இன்றைய தினம் சபையினுடைய நேரம் 6-45 மணி வரையில் கேள்விகளிலும், ஒத்தி வைப்புத் தீர்மானங்களிலும் சென்றுவிட்ட காரணத்தினாலே என்னால் விளக்கிப் பேச முடியாமல், இதிலே பேசக்கூட மனமில்லாத நிலையில் ஆகிவிட்டேன் என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொண்டு, நான் குறிப்பாக சிலவற்றைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். கால்நடை வளர்ப்புத் திட்டத்திலே புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டுகளிலே நம்முடைய கால்நடை வளர்ச்சியை நாம் பார்த்தால், 1970 ஆம் ஆண்டு, 1975 ஆம் ஆண்டு, இன்றைய தினம் 1979 ஆம் ஆண்டு, இந்த ஆண்டுகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1970-1975 ஆம் ஆண்டுகளிலே இல்லாத அளவுக்கு சென்ற 3 ஆண்டுகளுக்குள்ளாக எங்கு பார்த்தாலும் சிறு விவசாயிகளும், எளிய மக்களும் கடன் வசதி அளிக்கப்பட்டு, நல்ல கறவை மாடுகள் வாங்கி வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக கிராமப்புறங்களிலே எங்கு பார்த்தாலும் அதிகமான அளவிலே கால்நடை அபிவிருத்தி ஏற்பட்டிருப்



பதைக் காணலாம். அதே நேரத்தில் அந்தக் கால்நடைகளுக்குப் போதுமான மருந்தகங்கள் இல்லாததால், வசதியற்ற நிலையில் ஆங்காங்கு சீக்கு கொண்டு பல கால்நடைகள் சாகக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். பாமரிப்பிலே கவனக் குறைவு ஏற்படுகின்றதாலும், சீக்கு ஏற்படுவதாலும், பல பணம் கொடுத்துப் பெற்ற கால்நடைகள் சாகக்கூடிய நிலையினைப் பார்க்கிறோம். போதுமான கால்நடை மருந்தகங்கள் இல்லாததன் காரணமாக நல்ல கறவை மாடுகளுக்குப் போதிய வைத்திய வசதிகள் கிடைப்பதில்லை என்பதை நாம் பார்க்கிறோம். 1975-லே, 1976-லே ஆண்டொன்றுக்கு 25 கால்நடை மருந்தகங்கள் நம்முடைய மாநிலத்திலே புதிதாக அமைப்பது என்ற ஒரு நிலைமையை அன்றைய தினம் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த நாட்டிலே ஏற்படுத்தி இருந்தது. கடந்த ஆண்டு புதியதாகத் திறக்கப்பட்ட இந்த அரசாங்கத்தினுடைய மருந்தகங்களின் எண்ணிக்கை 5. இந்த ஆண்டு பட்ஜெட்டிலே 10 மருந்தகங்கள் புதிதாகத் திறப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு அபிவிருத்தித் திட்டத்திற்கு உகந்ததாக இருக்கிறதா என்று பார்த்தால், என்னால் ஒப்புக் கொள்ள முடியாத அளவிலே இந்த பட்ஜெட் இருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், புதிதாகக் கடன்கள் கொடுத்து கால்நடைகள் வாங்குவதற்கு முயற்சிக்கிறதே தவிர, அவர்களுக்கு ஆசைகாட்டி கால்நடைகள் வாங்கப் பணம் கொடுக்கிறதே தவிர, அப்படி வாங்கப்பட்ட கால்நடைகளைப் பராமரிப்பதற்கான வழிவகைகளைச் செய்வதிலே தவறியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆண்டுக்கு 25 புதிய கால்நடை மருந்தகங்கள் என்று 1975 ஆம் வருடத்திலே ஏற்படுத்தப்பட்டது. இன்றைக்கு 1979-ம் ஆண்டிலே 30 ஆக, 40 ஆக, 50 ஆக உயர்ந்திருக்குமேயானால், நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்றவாறு, கால்நடைகளைப் பெருக்குவதற்கு நாம் மருந்தகங்களை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய நிலை இருந்திருக்கும். அதற்கு மாறாக 1975 ஆம் ஆண்டிலே ஆண்டு ஒன்றுக்கு 25 கால்நடை மருந்தகங்களை அன்றைய அரசு ஏற்படுத்திய நிலையில், 1978-லே 5 மருந்தகங்களும், 1979-லே 10 மருந்தகங்களும் ஏற்படுத்தப்படுகின்றன என்று சொன்னால், இது கால்நடை வளர்ச்சிக்கும், வளர்ப்புக்கும் ஏற்றதாக இல்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, பல கால்நடை மருந்தகங்களிலே மருந்தே கிடையாது. போதிய அளவு கட்டிட வசதிகள் கிடையாது. கால்நடை மருந்தகங்கள் இந்த நாடு பூராவும் சீர்குலைந்த நிலையிலே இருக்கின்றன. நான் குறிப்பாகக் கூறுகிறேன். பட்டுக்கோட்டையிலே கூட்டு மன்றத்திலே திட்டங்களைப் போடு

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1979 மார்ச் 7

வதற்கு ஏன்டான ஒரு நிலையை மாற்ற முடியாமல் இருக்கிறார்கள். ஏனென்றால், கால்நடை மருத்துவமனைகள் கட்டுவதிலே நடைமுறைகள் இருக்கின்றன. பஞ்சாயத்துக் கட்டு மன்றத்திற்கு ரூபாய் 25,000 அரசு மானியம் கொடுத்தால், அதற்குமேல் செலவாகின்றதை அந்தக் கட்டு மன்றங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகள் எல்லாம் இருந்தன. அதெல்லாம் எங்கே போனது என்றே தெரியவில்லை. 1974-லே பட்டுக்கோட்டையிலே ஒரு கால்நடை மருத்துவர் கட்டிடத்திற்கு ரூபாய் 25,000 சர்க்கார் மானியம் கொடுக்க வேண்டுமென்றும், அதற்குமேல் செலவாகும் தொகையைக் கட்டு மன்றம் ஏற்க வேண்டும் என்றும் தீர்மானம் போடப்பட்டது. ஆனால் இன்றைய தினம் 1979-ம் ஆண்டுவரை எத்தனை வருடம் ஆகிறது—அரசாங்கத்திலே மானியம் கொடுக்கப்படவில்லை. கட்டு மன்றத்திலே தனியாக அந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்த முடியவில்லை. ஆகவே, அந்தக் கட்டிடம் கட்ட முடியவில்லை. 1974-ம் ஆண்டிலே இருந்து, 1979-ம் ஆண்டு ஆகியிருக்கிறது. ஐந்து ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ஒரு கால்நடை மருத்துவர் கூடம் ஐந்தாண்டிலே கட்ட முடிந்ததாக இல்லை என்று சொன்னால், அரசு எப்படித்தான் போகின்ற கால்நடை மருத்துவமனைகளைக் கட்டிக் கொடுக்கப் போகிறது? அதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் என்ற நிலையினைப் பார்த்தால், பட்ஜெட்டிலே அதற்கான விரிவான ஒரு நிலையைக் காண முடியவில்லை. இதிலே அதிகமான அளவிலே கால்நடைகள் வாங்க வேண்டும் என்று மக்களுக்குக் கடன் வழங்கப்படுகிறதே தவிர, அவற்றைப் பராமரிப்பதற்கான செலவுகளிலே மிகவும் குறைவான நிதிநிலைதான் பட்ஜெட்டிலே காணப்படுகிறது. அது மட்டுமல்ல, நம்முடைய பஞ்சாயத்துக் கட்டு மன்றங்களிலே சு.ஓ. என்று ஒரு அலுவலர் இருக்கிறார். அவர் அந்த பஞ்சாயத்துக் கட்டு மன்றத்திலே உள்ள ஸ்டாக்-சென்டர்களை எல்லாம் பார்ப்பதற்கு, சேவை செய்வதற்காக ஒரு அதிகாரியாக இருக்கிறார். முன்பெல்லாம் கால்நடை மருத்துவத்திலே பட்டதாரிகள் இல்லாத காரணத்தினால் அல்லது போதுமான அளவுக்கு இல்லாத நிலைமையினால், அந்தப் பதவிகள் பட்டதாரியாக இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய நிலைமை என்ன? கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் 150 பேர்கள் போன ஆண்டு வேலையில்லாமல் இருந்தார்கள். இந்த ஆண்டு 50 பேர்கள் நாளையதினம் வெளிவருகிறார்கள். ஆக மொத்தம் 200-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கையில் இருக்கும்போது, ஒரு பஞ்சாயத்துக் கட்டு மன்றத்திலே கால்நடை மருத்துவங்களை ஆய்வு செய்வதற்கு ஒரு பட்டதாரி அல்லாதவரை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த நிலையை மாற்றுவதற்கு இந்த அரசு



1979 மார்ச் 7] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

முன்வரவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டும். அப்போது தான் கால்நடை அபிவிருத்தி ஏற்படும்.

அடுத்தபடியாக, நம்முடைய அமைச்சர் அவர்கள் கப்பலூரிலே 2.25 கோடி ரூபாய் செலவிலே ஆட்டு இறைச்சிப் பதப்படுத்தும் பண்ணை ஒன்று ஏற்படுத்துவதாகக் கூறுகின்றார்கள். இது கவலையான நிலையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு ஆட்டுக்கறி கிலோ 10 ரூபாய் விற்றது. இந்த ஆண்டு கிலோ 15 ரூபாய் விற்கிறது. மேலும், பொங்கல், தீபாவளி நேரங்களில் கிலோ 20 ரூபாய் கூட விற்கிறது. ஆகவே, இப்போது நாம் 2.25 கோடி ரூபாய் செலவிலே பண்ணை அமைக்கும் திட்டத்தின் நோக்கம் என்ன என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இங்கு இருக்கக்கூடிய ஆடுகளின் இறைச்சியைப் பதப்படுத்தி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு முற்படுமானால், இங்கு ஆட்டுக்கறி 1 கிலோ 30-ரூபாய்க்கு மேலே விற்கக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த நிலைக்கு

(பிற்பகல் 6-50)

ஊக்கம் அளிப்பது போல் ஆட்டுக் கறி பதனிடும் நிலையத்தை ஏற்படுத்துவது என்பது ஒத்துக்கொள்ளக்கூடியதாக இல்லை. வேண்டுமானால் ஏட்டளவில் எழுதி, சுவற்றிலே எழுதிப் பார்க்க முடியுமே தவிர, உண்மையிலேயே மக்கள் உண்டு பார்க்க முடியாத நிலைதான் ஏற்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்பதைவிட, ஆடுகளை வளர்க்கும் திட்டம் போட்டுச் செய்தால், அதனால் 20 ரூபாய் என்று விற்கக் கூடிய ஆட்டுக் கறி 10 ரூபாய்க்கு விற்கக் கூடிய நிலை வரும் என்றால், ஒப்புக் கொள்ளக் கூடியதாக இருக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன்.

கேரளாவிற்கு நம்முடைய கால்நடைகளை அதிகமாக ஓட்டிக்கொண்டு செல்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு, பத்துப் பதினைந்து ஆண்டு களுக்கு முன்பு, இங்கே ஒன்றுக்கும் உதவாத, இளைத்த மாடுகளை ஓட்டிச் சென்றார்கள். அப்போது அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. நம்மால் விற்க முடியாத நிலையில் அதை அவர்களுக்கு விற்றுக்கொண்டிருந்தோம். அவர்கள் அதை வாங்கிச் சென்று, மாட்டுக் கறியை உண்பதில் தீங்கில்லை என்று கருதி, விற்றார்கள். இன்றைய தினம் அப்படியல்ல. நல்ல பசுமை

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரயிலுக்குப் போக வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது மணி 7 ஆகப் போகிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர்: இன்னும் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். கிராமங்களில் சிறு கால்நடைப் பண்ணைகளைத் தனியாக நடத்துவதற்கான வசதி வாய்ப்புகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவையிலே கூட அதுபற்றி சர்ச்சைக்குரியதாகப் பேசினார்கள். இது மத்திய அரசின் திட்டம். இந்த அரசுடைய திட்டம் அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு பணம் வழங்கினாலும் சரி, மாநில அரசு அதைச் செய்தாலும் சரி, அதிலுள்ள அடிப்படையான நிலையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். மத்திய அரசினுடைய திட்டம் பற்றிப் போடப்பட்டுள்ள 'பேம்ப்லெட்' என் கையிலே இருக்கிறது. இது மத்திய அரசு போட்ட திட்டம்தான். அவர்களிடம் ஏகப்பட்ட கோதுமை ஸ்டாக் இருக்கிறது. 2 கோடி டன் அளவுக்கு கோதுமை ஸ்டாக் அவர்களிடம் இருக்கிறது. அதை எப்படியாவது ஏழையெளியவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று வந்ததுதான் இந்த 'உழைக்கிறவர்களுக்கு உணவு' அளிக்கும் திட்டம் என்று புரிகிறது. மற்றபடி இந்தத் திட்டம் எந்தவிதமான வாய்ப்பு வசதிகளையும் பெருக்கக் கூடியதாகக் காண முடியவில்லை. இதற்கு மாநில அரசு கொடுக்கக் கூடிய விளக்கம் பொருத்தமாக அமையவில்லை. கிராமப்புறங்களில் இருப்பவர்கள் எல்லாம் ஏதோ வேலை இல்லாதவர்கள் என்றும் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்து வாழ்வைத் தந்ததைப் போலவும் இந்த அறிக்கையிலே போட்டிருப்பது தவறான நிலையாக இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கிராமங்களில் உள்ள ஏழ்மையைப் போக்குவதாக இத்திட்டம் அமையாது. இது "புதிய மொந்தையிலே உள்ள பழைய கள்" என்று சொல்லுவதைப் போல ஏற்கெனவே உள்ள 'கிராஷ் புரோகிராம்' புதிதாக உருவெடுத்து அலங்கார வார்த்தைகளோடு பட்ஜெட்டிலே வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதனால் வெளியிலே யாரும் 5 ரூபாய் கொடுக்க மாட்டார்கள், 3 ரூபாய்தான் கொடுப்பார்கள். அந்த வேலைக்குக் கால அளவு இருக்காது. இந்த நிலைமையைப் பார்க்கும்போது, "பெரிய புரட்சிகரமான திட்டம்" என்பதைப் பேசுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து பட்ஜெட்டிலே இதை எழுதியிருக்க வேண்டியதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பேசும் வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர்: இப்போதே அரசுக்குக் கெட்ட பெயர் வந்துகொண்டிருக்கிறது. மேலும் அரசுப் பணிகளை இந்த ஆட்களைக் கொண்டு செய்தால், எப்படி இருக்கும் என்று பார்க்க வேண்டும். இப்போது பாலங்கள் கட்டினால், அவைகள் இடிந்து விழுகின்றன என்ற பல குற்றங்கள் சொல்லப்பட்டு வருகிறது. இந்த மாதிரி வேலையில்லாமல் வேறு வேலைகளுக்கு இவர்களை விட வேண்டுமென்று சொல்லுகிறேன். பாலம் கட்டுகிற வேலைக்கு இவர்களை எடுத்துக்கொண்டால், அபாயகரமான நிலைக்குக் கொண்டு போய்விடும். மத்திய அரசினுடைய திட்டத்திலே அப்படித்தான்

(பிற்பகல் 7-00)

சொல்லப் பட்டிருக்கிறது. சுற்றுப்புற கிராமங்களில் உள்ள வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியனைப் பயன்படுத்தி, மத்திய அரசுத் திட்டத்திலே விரிவாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கேற்றார்போல் மாவட்ட அளவில் வேலை இல்லாதவர்களைப் பற்றிய லிஸ்ட் தயார் செய்து, அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். அங்கே இருப்பவர்களை உபயோகித்துக்கொண்டு, அவர்களிடம் வேலை வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு வேண்டிய சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். இதற்கு பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தத் திட்டம் முன்னாலேயே உள்ள திட்டம் தான். அந்தத் திட்டத்தை செயல்படுத்த கொஞ்சம் அதிகப் பணம் கொடுங்கள். வாய்க்காலை வெட்டுங்கள், ரோட்டைப் போடுங்கள், குளத்தை வெட்டுங்கள். இவைகள் எல்லாம் சீரழிந்து கிடக்கின்றன. பஞ்சாயத்து கூட்டுமன்றத்தை இதற்குப் பயன்படுத்திக் கொண்டு, அதனாலே வருகின்ற பலனை ஏழைகளுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ பெரிய மாறுதலைச் செய்வதுபோல, நீங்கள் புரட்சிகரமான ஒரு திட்டத்தைச் செய்வதுபோல சொல்கிறீர்கள். ரூபாய் 3 அல்லது ரூபாய் $3\frac{1}{2}$ கூலி கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இருக்கின்ற 2 கோடி டன் கோதுமை இதற்காக அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே அரிசி ஏன் சேர்க்கப்படவில்லை? அரிசியையும் நாம் விற்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இங்கே யாராவது கோதுமையைச் சாப்பிடுகிறார்களா? நம் திட்டத்திலே அரிசி என்று கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசிடம் அரிசி வேண்டும் என்று நீங்கள் கேட்க வேண்டும். மத்திய அரசுத் திட்டத்திலே கோதுமை என்று

யான மாடுகள், 3, 4 முறை கன்றுகள் போடக்கூடிய மாடுகள், இடேறிகள், பசு மாடுகள் ஆகியவைகளையெல்லாம் நம் நாட்டிலுள்ள விலையை விட அதிகமான விலைக்கு வாங்கிச் செல்லுகிறார்கள். இங்கே 500 ரூபாய் என்றால் 600 ரூபாய் கொடுத்தும், ஆயிரம் ரூபாய் என்றால் ஆயிரத்து இருநூறு ரூபாய் கொடுத்தும் அவர்கள் வாங்கிச் செல்லுகிறார்கள். அப்படி வாங்குவதற்கு அவர்களால் எப்படி முடிகிறது என்று பார்த்தால், கேரளாவிலிருந்து குவைத், துபாய் போன்ற அரபு நாடுகளுக்கு அது ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று தெரிய வருகிறது. அதை நாம் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்? ஆட்டிறைச்சித் தொழிற்சாலையை ஏற்படுத்துவதை விட மாட்டிறைச்சி பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்து, இங்கே ஒன்றுக்கும் உதவாத மாடுகளையெல்லாம் வாங்கி அதன் இறைச்சியை பதனிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் நம்முடைய அரசாங்கம் வருமானைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொரு யோசனையையும் சொல்ல விரும்புகிறேன், இப்போது தீப்பெட்டிக்கும், தேங்காய்க்கும் வரியைப் போட்டு 2 கோடி ரூபாய் அளவில் வருமானம் எதிர்பார்க்கிறார்கள். மக்களுடைய அன்றாட உபயோகத்திலுள்ள தீப்பெட்டிக்கும், தேங்காய்க்கும் வரி போடுவதை விட்டுவிட்டு, நம்முடைய மாநிலத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும் மாடுகளுக்கு ஒரு கிலோவுக்கு இத்தனை ரூபாய் என்று வரி வசூலித்தால் எத்தனையோ கோடி ரூபாய் வருமானத்தைப் பெறக் கூடிய நிலை இந்த அரசாங்கத்திற்கு வரும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கேரளாவிலே உள்ளவர்கள் இங்கிருந்து மாடுகளை வாங்கிக் கொண்டு போய் ஏற்றுமதி செய்து அதிகமான ரூபாய்களைப் பெறுகிறார்கள். அதன் மேல் வரியைப் போட ஏன் முயற்சி செய்யவில்லை? ஒன்று அதன் மீது வரியையாவது போடுங்கள், அல்லது மாட்டிறைச்சியைப் பதனிடும் தொழிற்சாலையை ஏற்படுத்தி, அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுங்கள். இதனால் இங்கு ஏற்படுகிற கஷ்டம் என்னவென்றால், கேரளாவிலிருந்து வருகிறவர்கள் இங்குள்ள மாடுகளை வாங்குவதால், இங்குள்ள உழவர்களுக்குக் குறைவான விலையில் மாடுகள் கிடைப்பதில்லை. நல்ல முறையில் பால் கறக்கக் கூடிய மாடு, 2 ஆயிரம் ரூபாய்க்குக் கிடைத்தது, இப்போது ரூபாய் 2,500-க்கு விற்கப்படுகிறது. ஒரு லிட்டர் பால் கறக்கக் கூடிய மாடு முன்பு 500 ரூபாயாக இருந்தது இன்றைய தினம் ரூபாய் 750-க்கும், 800-க்கும் கூட கிடைக்காத நிலை இருக்கிறது. இந்த நிலையைத் தடுக்க ஒரு இறைச்சி பதனிடும் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அதனால் வருவாயையும் பெருக்க வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக, ஏகப்பட்ட கடன்களை வழங்கி மாடுகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஏழையெளிய மக்களுக்காக, அவர்களுடைய வாழ்வு வளம் பெறுவதற்காக, கிராமங்களில் பால் பெருக்கம் ஏற்படுவதற்காக இந்த அரசாங்கம் அதிகமான தொகையைக் கடனாகக் கொடுத்து அங்குள்ளவர்களுக்கு மாடுகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இது பாராட்டுக்குரிய விஷயம். அது நல்லவிதமாகச் செயல்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இது வரவேற்கக் கூடிய திட்டமாக இருக்கிறது, ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் கிராமப்புறங்களிலே பால் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. சென்னையிலே வந்தால்தான், பால் குடிக்க முடிகிறது. மதுரைக்குப் போனால்தான் பால் குடிக்க முடிகிறது. திருச்சிக்குப் போனால்தான், பால் குடிக்க முடிகிறது. ஆனால் கிராமத்திலே பால் கிடைக்கிறதா என்றால் இல்லை. இந்த நிலையிலே கிராமப் பொருளாதார வளர்ச்சி, பால் வளத் திட்டம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். கிராமப் புறங்களிலே பால் வளம் இல்லாத நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. அதைப் போக்க இந்தத் திட்டம் பயன்படலாம் என்று வைத்துக்கொள்ளலாம். கடன் உதவி கொடுத்து அதிகப்படியான மாடுகளை வாங்குவதன் மூலமாக, கிராமப்புறங்களில் பால் வளப் பெருக்கம் ஏற்படுவதன் காரணமாக, சென்னை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் உள்ள அவல நிலையைப் போக்க இது உதவக் கூடும். சென்னையிலே வாழக்கூடிய மக்களுக்காக அரசாங்கமே பொறுப்பு ஏற்றுக்கொண்டு பெரிய பால் பண்ணைத் திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். திருச்சியிலும், மதுரையிலும் அப்படிப்பட்ட திட்டத்தை அமுல்படுத்துகிறார்கள். கால்நடை இனப் பெருக்கம் செய்வதற்காக 9 ஆயிரம் மாடுகள் என்ற அளவுக்கு வெளிநாடுகளிலிருந்து வருவதாக இந்த அறிக்கையிலே காண்கிறேன். அவற்றையெல்லாம் சென்னையிலே வைத்துக்கொண்டு, ஆஸ்திரேலியா பசுவின் பாலை, அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் மட்டும் அருந்தினால் போதாது. ஏழையெளிய மக்களுக்காக, அவர்கள் வாழக்கூடிய கிராமப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் செயல்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வருவார்களேயானால், அதன் மூலமாக இரண்டுவிதச் சலுகைகள் கிடைக்கும். ஒன்று அதிகமான பால் உற்பத்தி செய்யப்படும், இரண்டு, மாடுகளின் இனப்பெருக்கமும் ஏற்படும். இனப் பெருக்கம் செய்வது மிக முக்கியமான காரியம். நாம் மிக விலையுயர்ந்த மாடுகளை வாங்குகிறோம், ஆனால் இனப் பெருக்கம் செய்வதில்லை. ஒரு முறை கன்று போட்டால், அடுத்த முறை அந்த மாடுகள் கன்று போடுவதில்லை.

கொடுத்திருக்கிறார்கள். அதில் அரிசி என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். கையிருப்பிலே இருப்பது கோதுமைதான் என்று சொல்லலாம். அதைப்போல ஒரு கோடியே 80 லட்சம் டன் அரிசி கையிருப்பிலே இருக்கிறது. அதனால்தான் விலையும் ஏறாமல் இருக்கிறது. அதற்காகப் போராட்டமே நடக்கிறது.

பாசன வசதியைப் பொறுத்த வரையிலே ஏரி, குளங்கள், இவைகள் எல்லாம் தூர் எடுக்கவேண்டும். 2.75 கோடி ரூபாய் இதற்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறது. இது வரவேற்கக்கூடிய திட்டம் தான். அதை அதிகமாக எங்கள் பகுதியிலே அமுல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சைப் பகுதியிலேயும் அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. காவிரி ஆற்று நீரை கருநாடகம் கொடுக்க முடியாது என்று தகராறு செய்துகொண் டிருக்கிறது. பல ஆறுகள் தூர் எடுக்கப்படாமல் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் கிடக்கின்றன. ஒப்பந்தம் இருப்பதால், தண்ணீர் வரும் வரும் என்று இருந்ததால், ஆறு, குளம் எல்லாம் இன்றைக்கு பாழ்பட்டுக் கிடக்கின்றன. அந்த நிலைமைகளைப் போக்க எந்த முறையிலே மேம்பாடு செய்ய வேண்டுமோ அந்த முறையிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வடிகால் திட்டத்தை நல்ல முறையிலே அமுல் செய்ய திட்டம் ஒன்றுமில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே திட்டங்கள் சரியான முறையிலே நிறை வேற்றப்படாமல் இருந்தது. இடைக்காலத்தில் கவர்னர் ஆளுகையின்போது சரியான முறையில் நடக்காததால், எதையும் சுட்டிக்காட்டும் நிலை இல்லை. இன்று இருக்கக்கூடிய அரசாங்கமும் சரியான முறையிலே நடப்பதாக இல்லை. பாசன வசதிகள் சரியாக இல்லை. கடல்நீர் ஊருக்குள்ளே புகுந்து விட்டது. கிராமங்கள், நிலங்கள் எல்லாம் பாழாகிவிட்டன. 1960 லே சர்வே கூட செய்யப்பட்டது. கீழக்கரை பகுதியிலே கடல் நீர் கடல் மட்டத்திற்கு மேலே வந்ததால், பல கிராமங்கள், நிலங்கள் எல்லாம் பாழாக்கப்பட்டிருக் கின்றன. 1960 லேயே சர்வே செய்யப்பட்டது. இன்று 1979 கூட விட்டது. விரைவிலே வரும் வரும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் எங்கே இருக்கிறது என்பது தெரியவில்லை. வடிகாலைச் சீர்படுத்தாததனால் பல கிராமங்கள் பாழ்பட்டிருக்கின்றன. பல ஆண்டுகளாக அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே எல்லாம் அப்படி இருக்கின்றன. அவைகளைப்பற்றி இங்கே உள்ளவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் உடனடியாக எடுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





சமுதாய மேம்பாட்டுத் திட்டம் குறித்து ஒரு சில யோசனைகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சில்லரை விஷயங்களுக்காக பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கின்ற அரசாங்கம் சமுதாய மேம்பாட்டுக்கு என்றும், சமுதாயத்தினுடைய ஆக்கத்திற்காகவும், சமுதாயத் தினுடைய உணர்ச்சிகளை மதிக்கக்கூடிய அளவுக்கும் அரசாங்கம் இருக்கு மானால், நன்றாக இருக்கும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு நல்ல காரியம் செய்தார்கள். அது என்ன நல்ல காரியம்? கல்யான மண்டபங் கள் எங்கு பார்த்தாலும் கட்டினார்கள். முனிசிபாலிட்டி கட்டுவதாக இருந் தால் 50 சதவிகிதம், அரசாங்கம் 50 சதவிகிதம் என்று போட்டு கல்யாண மண்டபம் கட்டினார்கள். கோயிலிலே கட்டினால் அவர்கள் 50 சதவிகிதம், அரசாங்கம் 50 சதவிகிதம் என்று போட்டு கட்டினார்கள். கூட்டுமன்றங்கள் கட்டுமானால், அவைகள் 50 சதவிகிதம், அரசாங்கம் 50 சதவிகிதம் என்று போட்டு கட்டினார்கள். ஏழை எளியவர்கள் கல்யாணம் செய்யவே முடிய வில்லை. கல்யாண மண்டபம் எங்கே கிடைக்கிறது? மனுப் போடுகிறார்கள். கல்யாண மண்டபம் தேடி விட்டு, அந்த நாளைத் தான் கல்யாணத்திற்கு நிர்ண யிக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஏழை எளியவர்களுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ஒரு கல்யாண கீற்றுக் கொட்டகை கட்டுவதானாலும் அதிகச் செலவாகிறது. ஒரு கல்யாணத்திற்கு ஆகின்ற செலவு ஆகிறது. இந்த நிலைமைகளை மாற்ற கல்யாண மண்டபங்கள் கட்ட வேண்டும். ஒரு வட் டாரத்திற்கு ஒன்றாவது கட்ட வேண்டும். 374 வட்டாரங்கள் இருக்கின்றன. ஒரு கோடி ரூபாய் செலவாகலாம். இது ஒரு சிறு தொகையாக இருப்பதால், இதைச் செய்யலாம். நல்ல பலன் உள்ள ஒரு திட்டமாகும். முக்கியமான விஷயம் என்பதை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத் திட்டம்பற்றி நான் படித்துப் பார்க்கும்போது, சென்னை மிருகக் காட்சி சாலையை மாற்றுகின்ற திட்டம் இருக்கிறது. சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷனை அங்கு கொண்டு வருவதாகத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திலே அங்கு சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷன் வருவதாக இருக்கிறது. இந்தத் திட்டத்தைப்பற்றி ஒரு ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். சென்னை என்ற பெயரிலே ஒரு ரெயில்வே நிலையம் கிடையாது. இன்று சென்ட்ரலில் இருக்கிறது. இன்னொன்று எழும்பூரில் இருக்கிறது. எக்மோரில் இறங்கி சென்ட்ரல் போகவேண்டுமென்றால், 2, 3 மைல்கள் போகவேண்டி யிருக்கிறது. டாக்சி கிடைப்பதில்லை. பலவிதமான கஷ்டங்கள் ஏற்படு கின்றன. சென்ட்ரலிலிருந்து எழும்பூர் வரவேண்டுமானால், பலவிதமான

கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் கழித்துப் போனால் ரயில் கிடைக்காமல், ஓரிரு நாள் கழித்து வருக்குப் போக வேண்டியிருக்கிறது. இங்கே காத்திருக்க வேண்டிய சூழ்நிலைகூட ஏற்படுகிறது. பொருட்காட்சி சாலை இருக்கும் இடத்தைக் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நல்ல திட்டம் தான் என்று நான் வரவேற்கிறேன். சென்ட்ரலையும் எழும்பூரையும் ஒன்றாகச் சேர்த்து இணைக்கும் வகையில் இடையில் ஒரு ரெயில்வே ஸ்டேஷனை ஏற்படுத்த வேண்டும். சென்னை ரெயில்வே ஸ்டேஷன் வர வேண்டும். மீட்டர் கேஜ் ரெயில்வேயையும் இர... பொருட்காட்சி சாலையையும் ஒன்றாக ஆக்க வேண்டும். ரெயில்வே ஸ்டேஷன்களை ஒன்றாக இணைக்க யோசிக்கக்கூடாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷனை விரிவுபடுத்துகின்ற திட்டம் தான் இது என்று இதில் போட்டிருக்கிறார்கள். கொஞ்சம் நிலத்தைக் கொ...கின்றபோதே, இதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் கேட்டுக்கொள்ளுங்கள். ... திட்டத்தைப்பற்றி நீங்கள் அனுமதி கேட்கிறபோது, தமிழ் நாட்டினுடைய ... மேம்பாட்டிற்கு என்று மத்திய அரசுக்கு மாநில அரசிலிருந்து ... கேளுங்கள். உங்கள் அரசினுடைய நோக்கத்தைச் சொல்லுங்கள். ... காட்சி சாலை இருக்கும் இடத்தைத் தருவதுபற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. அதை எடுத்துக்கொள்ளட்டும். சென்னை என்ற பெயரில் ... ரெயில்வே ஸ்டேஷன் இல்லை என்பதால், தமிழக மக்கள் வருந்துகிறார்கள் என்று சொல்லுங்கள்.

இறுதியாக தஞ்சை மாவட்டத்தினைப் பின் தங்கிய தொழில் மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது நீண்ட காலமாக இருக்கின்ற ஒரு பிரச்சினை. தஞ்சாவூர், தஞ்சாவூர் என்று சொல்கிறார்கள். அங்கே வெள்ளம் வந்துவிடுகிறது, புயல் வீசுகிறது, காற்று அடிக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் தொழிலே பரவாமல் இருக்கிறது. அங்கு தொழில் பரவாமல் போய்விட்டதால், அந்தப் பகுதியில் இருக்கும் ஓரிரு பணம் படைத்தவர்கள் கூட அங்கே தொழில் அமைக்காமல் போய்விடுகிறார்கள். ... புத்தூருக்கோ, இராமநாதபுரத்திற்கோ போய்விடலாம் என்று ...றார்கள். தொழில் வளம் இருக்கிறதா என்று பார்ப்போமானால், தொழில் வளமே இல்லாமல்தான் இருக்கிறது. ஒரு சிலர், தஞ்சையில் பணம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் புதுக்கோட்டைப் பகுதிக்கும் போய் தொழில் ஆரம்பிக்கிறார்கள். அங்கே 50 சதம் சப்சிடி கொடுப்பதுடன் மற்ற வசதிகளையும் செய்து கொடுக்கின்றார்கள். எல்லா வசதிகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுகிறது. தஞ்சைப் பகுதியையும் தொழில் துறையில்





தங்கிய பகுதி என்று நிர்ணயித்து, அங்கும் 15 சதவிகிதம் சப்சிடி கொடுக்க வேண்டும். அது மாதிரி தஞ்சை மாவட்டத்திற்கும் வசதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகள் எல்லாம் ரொம்ப மோசமாக இருக்கின்றன. சாலைகள் பராமரிப்பிலே இந்த அரசாங்கம் மிகவும் கடமை தவறிவிட்டது என்பதை ஒரு பெரிய குற்றச்சாட்டாகத் தான் நான் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். கொஞ்சகாலத்தில் சாலைகளே இல்லாமல் போய்விடும் நிலைமைகள் வந்துவிடும். சென்னையில் கூட நல்ல சாலை இல்லை. அவைகள் சரிவர கவனிக்கப்படுவதில்லை. பஸ்கள் உருண்டோடிவிடுகின்றன என்று சொல்கிறார்கள். பஸ் பாய்ந்து கடைக்குள்ளேயே போகின்றது என்று சொல்கிறார்கள். பஸ்கள் குழிகளிலே, பள்ளத்திலே ஓடினால், அவை ஏன் கடைக்குள் பாயாது ? அது அப்படி ஓடாமல் என்ன பண்ணும் ? 1971-72-ல் 19 கோடியே 80 லட்சம் ரூபாய் போக்குவரத்துக்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு 19 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது அபிவிருத்தி பட்ஜெட்டா ? இந்தத் தொகை நம் நாட்டினுடைய போக்குவரத்துத் திட்டத்திற்குப் போதுமானதா ? ஒரு அடிப்படையான, முக்கியமான திட்டம், போக்குவரத்தை அபிவிருத்தி செய்கின்ற திட்டம். ஏதேதோ காரியங்களுக்காகச் செலவழிக்கிறார்கள். விவசாயத்திற்கு உருப்படியாக ஏதாவது செய்திருக்கின்றார்களா ? தொழில் வளர்ச்சி உருப்படியாக இருக்கிறதா ? போக்குவரத்து வசதி உருப்படியாக இருக்கிறதா ? எதையாவது உருப்படியாகச் செய்திருக்கிறார்களா ? 19 கோடி ரூபாயிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்திவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு என்ன சாலை அபிவிருத்தி செய்ய முடியும் ? என்ன பண்ணுவார்கள் ? 4 ஜல்லி அங்கேயும் 4 ஜல்லி இங்கேயும், தார் பீப்பாய்கள் அங்கங்கே போட்டு விட்டு போய்விடுவார்கள். அந்தத் தார் பீப்பாய்களை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அப்படிப் போட்டு வைத்துவிட்டு பத்து வருடங்கள் கழித்து அந்தப் பக்கம் வேலை செய்ய வருவார்கள். அங்கே வரும்போது, அங்கே போட்டுவிட்டுப் போன ஜல்லியும் காணாது போய்விடும். ஜல்லியைக் கான்கிரீட் போடுவதற்காக எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அங்கு வேலை செய்ய வருபவர்கள் என்ன செய்வார்கள் ? அங்கே இருக்கின்ற மணலிலேயே தாரைப் போட்டு மூடிவிட்டுப் போய்விடுவான். நாளாவட்டத்தில், சிறு பள்ளங்களாக இருந்த இடங்கள் பெரிய பெரிய பள்ளங்கள் உள்ள இடங்களாக மாறிவிடும். இதுதான் இன்றைய நிலை. போக்குவரத்துச் சாலை வசதியிலே நாம் மிகவும் பின்

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1979 மார்ச் 7

விவசாயிகளின் கிளர்ச்சி மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபட்ட நிலையில் இருக்கிறது. தஞ்சையிலுள்ள விவசாயிகளின் கிளர்ச்சிக்கும், மற்ற மாவட்டங்களில் உள்ள கிளர்ச்சிக்கும் சம்பந்தமில்லை. கோவையில் மின் இணைப்பு துண்டிக்கப்படக்கூடாதென்று கிளர்ச்சி, தஞ்சையிலே மூன்று வருஷங்களாக விளையவில்லை, அதனால் கடன்களைக் கட்ட முடியவில்லை என்று கிளர்ச்சி. இதையெல்லாம் பரிசீலனை செய்யுங்கள். ஏதாவது நிவாரணம் அளிப்பதாக இருந்தால் அளியுங்கள். அளிக்கவில்லை என்றால், இன்னின்ன காரணங்களுக்காக அளிக்கவில்லை என்று விரைவாகச் சொல்லிவிட்டால், கிளர்ச்சிகள் அடங்க வாய்ப்பாக இருக்கும். இது குறித்து யோசனை செய்வதோ, மேலும் காலம் தாழ்த்துவதோ நல்லதல்ல. அதனால் ஏற்படும் விளைவுகள் அரசாங்கம் சமாளிக்க முடியாத அளவிற்கு இருக்கும். இதை வித்திட்டுச் செல்ல பல பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே இதில் கவனம் செலுத்துவது அரசாங்கத்தின் கடமையாக இருக்கிறது, தீர்வு காண வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதில் தாமதப்படுத்தக்கூடாது. பல தீய சக்திகள் இதிலே புகுந்திருக்கின்றன. எனவே, விவசாயிகளின் கிளர்ச்சியை சாதாரணமாக எண்ணாதீர்கள். அது பயங்கரமான இயக்கமாக இருக்கிறது. வரி கொடா இயக்கம் ஆரம்பித்தால், அது எங்கே கொண்டுபோய் விடுமோ? பல தலைவர்கள் அதற்கு இப்பொழுதே கொடிபிடிக்கப் போகிறோமென்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், போலீஸ்காரர்களை அரசு அனுப்பும், அவர்கள் சண்டை போடுவார்கள், இவர்கள் சுடுவார்கள், கடைசியிலே அரசாங்கம் கவிழும். எனவே விவசாயிகளின் கிளர்ச்சியை லேசாக எண்ணாதீர்கள். இதில் தனிக் கவனம் செலுத்தி, உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும். இதை மேலும் ஒத்திப் போட அவசியமில்லை.

அமைச்சரவர்கள் கூறும்போது, 12 பைசா, 14 பைசா என்று குறைத்து மாலை போட்டுக்கொண்டு முதலமைச்சரவர்கள் சென்றார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாலை போடுவதாகச் சொல்லிச் சென்றார்கள் என்று சொன்னார்கள்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : இன்றைய தினம் என்ன ஏற்பட்டிருக்கிறது? 3 ஆண்டுகள் வெள்ளத்தாலும், புயலாலும் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் தஞ்சை விவசாயிகள் கிளர்ச்சி. 2 பைசா மின் கட்டணத்திற்காக கோவை விவசாயிகள் கிளர்ச்சி. இன்னும் ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்று பார்க்கும் சேலம் விவசாயிகள். இப்படி எல்லோரும் சேர்ந்து, அரசாங்கம் இது குறித்து சிந்திக்கும் நிலைமை



1979 மார்ச் 7]

உருவாக்கியிருக்கிறார்கள். எனவே இதில் தயவு செய்து காலதாமதம் பண்ணாமல், எந்தெந்த மாவட்டங்களில் என்னென்ன கோரிக்கைகள் சொல்கிறார்களோ, அவற்றுக்கு ஏதாவது பண்ண வேண்டும். ஆகையால் அரசாங்கம் இதில் சால்சாப்பு செய்தால், அதனால் ஏற்படும் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவருமென்று மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-17)

தங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமை நீடித்தால், இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் தமிழ் நாட்டில் போக்குவரத்து வசதியோ சாலைகளோ இருக்காது. ஆகையால், போக்குவரத்து சாலை வசதிகளைச் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரை மேம்பாட்டுத் திட்டம், மேம்பாட்டுத் திட்டம் என்பதைப் பற்றிப் பத்திரிகையிலேதான் பார்க்கிறோம். அதைத் தவிர, வேறு ஒரு மேம்பாடும் இல்லை. சாலைகளை நாம் பார்க்கிறோம். முன்னாலே இருந்ததை விட பெரிய பள்ளம் தான் இப்போது இருக்கிறது. சாலையில் இறங்கினால், அப்போது முழங்கால் பள்ளமாக இருந்தது. இப்போது அது இடுப்பளவு பள்ளமாக இருக்கிறது. பாலங்கள் கட்டுவதற்கு 4 லட்சம், 10 லட்சம், 50 லட்சம் ரூபாய் என்று செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தச் சாலை வசதிக்காகச் செலவு செய்யவில்லை. கிழக்குக் கடற்கரை ரஸ்தா என்று சொல்வார்கள். அது எவ்வளவு கேவலமான முறையிலே மோசமான ரஸ்தா போல இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் பராமரிப்பு செய்வது போல இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** ஈஸ்ட் கோஸ்ட் ரோடு பற்றித்தான் அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 7-10)

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு பாண்டிச்சேரி, கடலூர் வழியாகச் செல்லக்கூடிய சாலை மிகவும் பழுதடைந்து விட்டதென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே போக்குவரத்து அமைச்சரவர்கள் இருப்பார்களென்று நினைத்தேன். எல்லா அமைச்சர்களும் போய்விட்டார்கள். அது குறித்து வேதனையடைகிறேன். போக்குவரத்து அமைச்சர் இன்று இல்லை. இன்றைக்கு * இப்போது ஒரு அமைச்சர்கூட இல்லை. இது மிகுந்த வேதனைக்குரியது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * என்று உறுப்பினரவர்கள் கூறியதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அமைச்சர் அவையில் இருந்தால், வசதியாக இருக்கும். புதுப் புது பஸ்களை, விநோதமான பஸ்கள், ஏர்க்கண்டிஷன் பஸ்கள், கூலிங் கிளாஸ் போட்ட பஸ்கள் எல்லாவற்றையும் சென்னையில்

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



பார்க்கலாம். வேறு சில மாவட்டங்களிலும் பார்க்கலாம். ஆனால் பரிதாபத்திற்குரிய சோழன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பஸ்களைப் பார்த்தால், அவை மிகவும் மோசமானவைகளாக இருக்கின்றன. தினசரி பிரேக்-டவுன் ஆகிறது. 10 மைலுக்கு அப்பாலுள்ள பத்தமடைக்குப் போக வேண்டுமென்றால் 5 மைலில் நிற்க வேண்டும். பஸ் பிரேக்-டவுன். இன்னொரு பஸ் பிடித்துப் போக வேண்டும்.

இங்கே பார்த்தால் பல்லவன் பஸ்கள் ஜிலு ஜிலுவென்று போகின்றன. பெரியார் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பஸ்கள் வயது குறைந்தவையாகப் போகின்றன. சோழ மன்னன் சோறு படைத்தவனாக இருந்தான். ஆனால் அவன் பெயரில் ஓடும் பஸ்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. வேறு பெயரையாவது வையுங்கள். அவ்வளவு மோசமான நிலையில் இருக்கின்றன. 15 கோடி ரூபாய்க்கு 950 பஸ்கள் வாங்குவதற்கான திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அப்படி பஸ்கள் வாங்கும்போது, தஞ்சையில் இருக்கிறவர்களும் நல்ல பஸ்களில் போக வேண்டுமென்று எண்ணி, புதிய பஸ்களை அந்தப் பகுதியில் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, விவசாயிகளைப் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன். சமுதாயத்திலே இன்றைக்கு பெரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திடமும் தவறு இருக்கிறது, அரசியல் கட்சிகளிடமும் தவறு இருக்கிறது, எல்லாத் துறைகளிலும் தவறு இருக்கிறது. ஆனால் விவசாயப் பெருங்குடி மக்களிடம் தவறில்லை. அவனுக்குப் பல நிலைகளிலே தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. எனவே அவன் கஷ்டப்படுகிறான். அதன் காரணமாக அவனைத் தூண்டிவிடுகிறார்கள். எனவே இனியும் இது குறித்து அரசாங்கம் சரியான கவனம் செலுத்தாமலிருந்தால், இந்த நாட்டில் புரட்சி ஏற்படுவதற்கான நிலை இருக்கிறது என்பதை உணராமலிருந்தால், அது நல்லதல்ல. விவசாயத்திலே நஷ்டம் வருகிறது. நஷ்டம் வருகிறது என்று பல வருஷங்களாகப் பேசப்படுகிறது. நெல்லுக்கு விலை கட்டுப்படியாகவில்லை என்று அரசாங்கமே சொல்கிறது. மூன்று வருடங்களாக விளையவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது, புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அரசின் வெள்ளை அறிக்கையே கூறுகிறது. அவன் நிவாரணம் கேட்கிறான். நிவாரணம் கொடுப்பதா, இல்லையா என்பதைக் கூற இன்னும் காலம் தள்ளிக்கொண்டிருந்தால், அதனால் ஏற்படும் விளைவுகளை அரசாங்கத்தால் சமாளிக்க முடியாதென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## 8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

107. Notification issued with G.O. Ms. No. 344, Labour and Employment, dated the 29th April 1977 in regard to an amendment to the Tamil Nadu Weights and Measures (Enforcement) Rules, 1967. [Laid on the table of the House under section 43(4) of the Tamil Nadu Weights and Measures (Enforcement) Act, 1958 (Tamil Nadu Act XX of 1958).]

### B. Reports, Notifications and Other Papers.

49. Report and Proceedings of the Committee of Privileges of the Tamil Nadu Legislative Council relating to the alleged arrest of Thiru Ilamparithi, M.L.C., within the precincts of the House.



## இணைப்பு. I

[129 ம் ஆம் பக்கத்தில் இனம் 5(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கூடலூர் ஜென்மம் நிலத்தில் உள்ள பெருவாரியான ஆக்கிரமிப்புக்களை நிலத்தில் 1978-ம் ஆண்டு டிசம்பர் முடிய ஆக்கிரமிப்புக்கள் இருந்தன. அவை முறைப்படுத்தப்பட்டு ஒப்படை செய்யப்பட்டுள்ளன.

கூடலூர் வட்டத்தில் பண்டலூர் பிர்க்காவில் 5027.49 ஏக்கர் பரப்பளவுள்ள முறைப்படுத்தி ஒப்படை செய்வதற்கான முன்மொழிவுகளை அரசுக்கு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தார். ஆக்கிரமிப்புக்களை முறைப்படுத்தி, வரிசைப்படுத்தி ஒப்படை செய்வது பற்றி நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிடம் அறிவுரைகள் கோரியுள்ளார்.

4,125 ஏக்கர், தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புக்களை முறை செய்து ஒப்படை செய்யவும், ஒவ்வொரு நிலமற்ற ஏழைக் குடும்பத்திற்கும் ஆக்கிரமிப்பு செய்த நிலத்தில் 3 ஏக்கர் வீதமும், அதிக பட்சம் 3½ ஏக்கருக்கு மிகாமலும் ஒப்படை செய்யவும், ஆக்கிரமிப்புதாரர்கள் தங்களுடைய ஆக்ரமனத்தை ஆதாரமாகக் கொண்டு தங்கள் உரிமையைக் கோருவார்கள் என்ற காரணத்தினால் காடுகள் என்று நிர்ணயிக்கப்பட்ட 359.55 ஏக்கர் நிலத்தில், 233.11 ஏக்கர் நிலத்தை, 30—6—1977-க்குப் பிறகு ஒப்படை செய்ய வேண்டியதில்லை என்று ஆணையிடப்பட்டது. மீதமுள்ள 126.44 ஏக்கர் நிலத்தை ஒப்படை செய்யும் முறையில் தலா ஒரு ஏக்கர் வீதமும், அதிகபட்சம் 1.25 ஏக்கருக்கு மிகாமலும் ஒப்படை செய்ய ஆணையிடப்பட்டது.

இலங்கையிலிருந்து நீலகிரி மாவட்டத்தில் குடியேறும் புதிய அகதிகளுக்கு அகதிகள் மறுவாழ்வு இயக்குநரால் முறைப்படி ஒப்படை செய்வதற்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புக்களையும் முறைப்படி ஒப்படை செய்வதற்கான வழிமுறைகள் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தனியார் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற நடைமுறையில் உள்ள 1905-ம் ஆண்டின் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தில் விதிகள் இல்லை.

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் பொது நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துதல், முறைப்படி ஒப்படை செய்தல் ஆகியவற்றின் விளைவுகள் இம்மாநிலத்திலுள்ள மற்ற மாவட்டங்களைப் பாதிக்கவில்லை

## இணைப்பு II

(77 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### மேலவை உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்களை மேலவை அமைப்பு எல்லைக்குள் கைது செய்ததாக எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து. உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு,

சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்களை 4-1-1978 அன்று மேலவை அமைப்பு எல்லைக்குள் கைது செய்ததாக திரு. ம. சங்கரலிங்கம், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை குழுவின் தலைவர் என்ற முறையில் அவைக்கு அளிக்கின்றேன்.

#### பிரச்சினையின் சுருக்கம்.

4-1-1978 அன்று மேலவை நடந்துகொண்டிருந்தபோது உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்களை ஒருவர் அழைத்துச் சென்று வெளியே அவரைக் கைது செய்ததாகவும் இது அவை உரிமை மீறல் செயல் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பினார். அப்போது தலைவர் பொறுப்பினை கவனித்து வந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இப்பிரச்சினை குறித்து விபரம் அறிந்து பின் எடுத்துக் கொள்வாக கூறினார். அன்றிரவே காவல் துறை ஆணையரிடமிருந்து கைது சம்பந்தமான ஒரு கடிதமும் கிடைக்கப் பெற்றது. 5—1—78 அன்று அதைத் தலைவர் அவைக்கு அறிவித்தார். மேலவையின் முன்னவர் கருத்தையும் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்களின் கருத்தையும் இது குறித்து கேட்டறிந்து 10—1—1978 அன்று தலைவர் தன் தீர்ப்பினை வழங்கினார். தலைவர் தன்தீர்ப்பில், உறுப்பினர் திரு. இளம்பரிதியை அவையிலிருந்து அழைத்துச் சென்று கைது செய்யவில்லை என உறுதி செய்து, "காவல் துறை ஆய்வாளர் எடுத்த நடவடிக்கையானது உறுப்பினர் திரு. இளம்பரிதி கைது செய்யப்படுவதற்காக எடுத்த முதல் நடவடிக்கையா, அல்லவா என்பதைப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளதால் அப்படிப் பரிசீலித்து மேல் நடவடிக்கைக்குப் பரிந்துரை செய்வதற்காக இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்" எனத் தீர்ப்பளித்தார். (நடவடிக்கைக் குறிப்பினை இணைப்பில் காண்க).



#### குழுவின் தீர்ப்பு.

குழுவின் முதல் கூட்டம் 13—2—1978 அன்று நடைபெற்றது. பி-3 காவல் துறை ஆய்வாளரையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் பாதுகாப்பு அதிகாரியையும் அழைத்து விசாரிப்பதென அன்று முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க 1—3—1978 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பி-3 காவல் நிலைய ஆய்வாளர் திரு. கே. சுந்தரமூர்த்தி அவர்களையும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் பாதுகாப்பு அதிகாரி திரு. டி. விவேகானந்த ராஜ் அவர்களையும் குழு விசாரித்தது.

இதற்கிடையில் முந்தைய குழுவின் பதவிக் காலம் முடிவடைந்து புதிய குழு அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்டது. புதிய குழுவின் முதற் கூட்டம் 25—11—1978 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்களை நேரில் அழைத்து அவரது கருத்தினை அறிய குழு முடிவெடுத்தது. அம்முடிவினை ஒட்டி உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் 19—12—1978 அன்று நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் கலந்துக் கொண்டு தான் கைது செய்யப்பட்டது பற்றிய விவரங்களைத் தெரிவித்தார்.

காவல் துறை ஆணையரிடமிருந்து வந்த கடிதத்தில் திரு. இளம்பரிதி அவர்களை 4—1—1978 ஆம் நாளன்று மாலை 5-15 மணிக்குப் பொது மருத்துவ மனையில் கைது செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். கோட்டைக் காவல் நிலைய ஆய்வாளர் திரு. கே. சுந்தரமூர்த்தி குழு முன் சாட்சியம் அளிக்கும்போது உறுப்பினர் முதல் அமைச்சர் இருந்த அறை முன் மயங்கி விழுந்துவிட்டதாகவும், அவ்வமயம் தான் பந்தோபஸ்து அலுவலாக அங்கு இருந்ததாகவும், உறுப்பினர் மயங்கி விழுந்ததால், அவருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அவரைப் பொது மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கு டாக்டர் பரிசோதித்து திரு. இளம்பரிதி அவர்கள் 'மது அருந்திய நிலையில் இருக்கிறார்' என்று மருத்துவர் சான்றிதழ் கொடுத்த பின் அவரைக் கைது செய்ததாகக் கூறினார். மற்றும் இச்சம்பவம் நடந்த இடம் அவையின் அமைப்பு எல்லைக்குள் வருகிறதென்று தமக்குத் தெரியாதென்றும், அப்படித் தெரிந்திருந்தால் அவைத் தலைவரின் அனுமதி பெறாமல் உறுப்பினரை எடுத்துச் சென்றிருக்க மாட்டேன் என்றும் கூறினார்.

காவல் துறை ஆய்வாளர் உறுப்பினரை அவை நடந்து கொண்டிருந்த போது அவை எல்லைக்குள்ளிருந்து பொது மருத்துவ மனைக்கு இட்டுச் சென்றுள்ளார். உறுப்பினரை மயங்கிய நிலையில்தான் எடுத்துச் சென்றார் என்பது ஐயமின்றி தெளிவுறவில்லை. எப்படியிருப்பினும் உறுப்பினரை

அவையின் அமைப்பு எல்லைக்குள்ளிருந்து இட்டுச் சென்றதை ஆய்வா ஒப்புக்கொண்டுள்ளார். பின் அவரை மருத்துவ மனையில் கை செய்துள்ளார். உறுப்பினரை அவை அமைப்பு எல்லைக்குள்ளிரு எடுத்துச் சென்று, பின் அவரைக் கைது செய்துள்ளார். இவை தொடர் நடவடிக்கைகளாகும். அவை அமைப்பு எல்லைக்குள்ளிரு அவரை எடுத்துச் சென்றதானது, பின் அவரைக் கைது செய்வ முன்னோடியாக அமைந்துள்ளது. எனவே, அவரை மருத்துவ மனை கைது செய்தது அவையின் எல்லைக்குள் கைது செய்ததற்கு ஒப்பாகும்.

மேலவை விதி 210-ன்படி தலைவரின் முன் அனுமதியின்றி மேல உறுப்பினர் எவரையும் அவையின் அமைப்பு எல்லைக்குள் கைது செய் கூடாது. மேலவை விதி 2 (ரு)-ன் கீழ் அவையின் அமைப்பு எல் என்பதில் (i):-

"சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தமிழ்நாடு அரசு தலைமைச் செயல கட்டிடங்கள் அனைத்தையும், மேலவை மண்டபம், அதன் புறக்கூடங்கள், அவையைச் சேர்ந்த அலுவலகங்கள், அரசியலமைப்பின் 175 அல்லது 176-வது பிரிவின்படி மேலவையின் உறுப்பினர்கள் கூடும் இடம், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், ஒப் கொறடாக்கள் ஆகியோரின் அறைகள், நூலகம், சிற்றுண்டி விடுதி, ஓய் அறைகள், சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலுள்ள குழுக் கூட்டம் நடைபெ அறை, அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள நூலகம் ஆகியவையும், தலைவரால் அவ்வப்போது குறிக்கப்படும் பிற இடங்கள் அல்லது கட்டிடங்கள், கட்டிடங்களைச் சேர்ந்த புறக்கூடங்கள், அதனைச் சேர்ந்த படிக்கட்டுகள், மேலவை மண்டபத்திலிருந்து மேலே குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்லுவதற்கான நடைபாதைகள் ஆகியவையையும் அடங்கும்".

காவல் துறை ஆய்வாளர் உறுப்பினரை அவையின் அமைப்பு எல்லைக்குள்ளிருந்து அவர் சுய நினைவுடன் இருக்கும்போது அழைத்துச் சென்றாலும் அல்லது மயங்கிய நிலையில் எடுத்துச் சென்றாலும் அவைத் தலைவரின் அனுமதி பெற வேண்டும். இந்த நிகழ்வில், காவல் துறை ஆய்வாளர் நல்லெண்ணத்துடன் உறுப்பினருக்கு உதவி செய்யும் நோக்குடன் அவரை அவையின் அமைப்பு எல்லைக்குள்ளிருந்து மயங்கிய நிலையில் எடுத்துச் சென்றதாகக் கூறுவதை உண்மையென ஒப்புக்கொண்டாலும் பின் அவரைப் பொது மருத்துவ மனையில் கைது செய்வதற்கு முன்பு அவைத் தலைவரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அப்படி பெறாமல் கைது செய்தது அவை உரிமை மீறிய செயலாகும் எனக் குழு கருதுகிறது.





திரு. இளம்பரிதி அவர்கள் குழு முன் சாட்சியம் அளிக்கும்போது தான் மயங்கி விழவில்லை என்றும், அவையில் இருந்து தன்னை வெளியில் அழைத்துப் பின் காவல் துறையினர் கைது செய்து கொண்டு சென்றார்கள் என்றும், மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லுமுன் கோட்டைக் காவல் நிலையத்துக்குக் கொண்டு சென்று நீண்ட நேரம் காக்க வைத்தார்கள் என்றும், குற்றச்சாட்டுகளைக் கூறினார். குழுவின் முன்னுள்ள பிரச்சனையெல்லாம் உறுப்பினர் அவர்கள் அவையின் அமைப்பு எல்லைக்குள் கைது செய்யப்பட்டாரா அல்லவா என்பதுதான். குழு ஏற்கெனவே உறுப்பினரை அவையின் அமைப்பு எல்லைக்குள் இருந்து எடுத்துச் சென்ற பின் மருத்துவ மனையில் கைது செய்தது அவையின் 'அமைப்பு எல்லைக்குள்' கைது செய்ததற்கு ஒப்பாகும் என்று கருதுகிறபடியால், உறுப்பினர் எழுப்பிய மற்ற பிரச்சினைகளுக்கு முடிவு எடுக்க வேண்டிய தேவை இல்லை எனக் குழு கருதுகிறது.

11—1—1979 அன்று நடந்த குழுக் கூட்டத்தில், பி-3 காவல் நிலைய ஆய்வாளராக இருந்த திரு. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு மேற்படி குழுவின் தீர்ப்பு சொல்லப்பட்டு அதற்கு அவர் என்ன விளக்கம் தர விரும்புகிறார் என்று கேட்டபோது, திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் கீழ்க்கண்ட விளக்கத்தை அளித்தார்;

"4—1—1978 அன்று தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் திடீரென்று மயக்கம் போட்டு விழுந்தார்கள். அவசரமாக அவருக்கு உடனடி சிகிச்சை செய்ய வேண்டுமென்று நான் அவரை எடுத்துக் கொண்டு சென்றேன். அவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியின்றி எடுத்துச் சென்றது தவறு என்றும் அது அவையின் உரிமையை மீறிய செயல் என்றும் உரிமைக் குழு கருதுவதால் நான் செய்தது தவறு என்று வருந்தி அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்".

9—2—1978 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வரைவு அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு, குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## குழுவின் பரிந்துரைகள்.

சட்டசபை உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாவார்கள். அவர்களுக்கு அரசு அதிகாரிகளும், மற்றவர்களும் உரிய மதிப்பும் கௌரவமும் கொடுக்க வேண்டியது முழு முதற் கடமையாகும்.

4—1—1978 அன்றைய சம்பவங்களை மனத்தில் கொண்டு ... பாதகங்களை எண்ணிப் பார்க்கும்போது காவல் நிலைய ஆய்வாளர் ... நடவடிக்கையானது உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்களைத் ... செய்வதற்காக எடுத்த முதல் நடவடிக்கையாகும். அவைத் தலை... ஒப்புதலின்றி எடுத்த இந்த நடவடிக்கை கண்டிக்கத் தக்கது. கோட்... காவல் துறை ஆய்வாளருக்கு ஆளுநரின் உரையும் அதன் சுற்றுப்புற... அவையின் 'அமைப்பு எல்லைக்குள்' வருகிறது என்று தெரி... இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இருப்பினும் அவர் குழு முன் ... தவறை ஏற்றுக்கொண்டு தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டபடியா... அவையினுடைய கண்ணியத்தையும் பாரம்பரியத்தையும், மனதில்கொண்... மேற்கூறிய அதிகாரியின் செயலை மன்னித்துவிடலாம், என ... பரிந்துரைக்கிறது.

'அவையின் அமைப்பு எல்லை' என்ன என்பது பற்றி சென்னை ... துறை அதிகாரிகளுக்கும், குறிப்பாக சட்டமன்ற அவைகள் ... 'குழுக்கள்' கூடும் இடங்களில் பணியாற்றும் காவல் துறை அதிகாரிகளு... நன்கு விளக்கி அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று குழு பரிந்... செய்கிறது. இம்மாதிரியான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாவண்ணம் ... தக்க உத்திரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிற...

ஜி. சுவாமிநா...
தலைவர்,
உரிமைக் குழு...

சென்னை,
9—2—1979.



## பின்னிணைப்பு

### தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நடவடிக்கைக் குறிப்புகள். 1978 ஜனவரி 10 ஆம் நாள்

### மாண்புமிகு மேலவை துணைத் தலைவர் அவர்களின் தீர்ப்பு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 4—1—1978-ம் நாளன்று எதிர்க் கட்சி தலைவர் திரு. எம். சங்கரலிங்கம் அவர்கள் கீழ்கண்ட உரிமை பிரச்சனையை எழுப்பினார்.

". . . . மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள், இந்த அவையில் வினா நேரம் நடந்து கொண்டிருக்கும்போது தன்னுடைய இடத்தில் வந்து உட்கார்ந்திருந்தார். அவர் தன்னுடைய இருக்கையில் உட்கார்ந்த பிறகு யாரோ ஒருவர் உங்களை ஒருவர் கூப்பிடுகிறார் என்று சொல்லி, அவரை வெளியே அழைத்து இருக்கிறார். அவர் வெளியே வந்ததும் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிய வருகிறது. . .".

". . . .இன்றைக்கு அவர் அவையில் வந்து உட்கார்ந்த பிறகு அவரை வெளியே அழைத்து கைது செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதற்கான தீர்ப்பைத் தாங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலை எப்போதும் எந்த உறுப்பினருக்கும் ஏற்படலாம். ஆகவே ஒரு தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னர், நான் அவை முன்னவரின் கருத்தை அறிய முயற்சித்த போது, அவர் உடனடியாக விசாரித்து, அவர் இந்த அவைக்குத் தந்த தகவல் வருமாறு :

". . . .இப்போது சில விஷயங்களை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அவற்றைச் சொல்வதற்கு முன்பு ஒரு பணிவான வேண்டுகோள். இந்த மேலவையின் கௌரவத்தையும் பாரம்பரியத்தையும் நினைக்கும்போது சில விஷயங்களைச் சொல்வது எனக்கே சங்கடமாக இருக்கிறது. அவர் இங்கே அலுவல்களில் கலந்துகொள்ளக் கூடாதென்ற எந்த எண்ணமும் இந்த அரசுக்கில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வரின் அறையிலே பலவந்தமாக காவல் துறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டையும் மீறி அவர்களைத் தள்ளி விட்டு உள்ளே நுழைய முயன்றிருக்கிறார். அதற்குப் பிறகு அவருடைய நிலை சரியாக இல்லை. அவர் போதையில் இருந்ததாகச் சந்தேகம்

உரிமை மீறிய பிரச்சினையாகும், இதைப்போன்று எதிர்க்கட்சிகளுக்கு உரிய பாதுகாப்பளிக்க வேண்டுமென்று இந்தியக் குடியரசுத் தலை பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர், ஆளுநர் ஆகியோருக்கு மேலவை எதிர்க்கட்சித் தலைவர் சங்கரலிங்கம் நேற்று தந்தி அனுப்பியிருக்கிறார், 'மெயில்'

இதுபோன்ற தந்தி கொடுக்கப்பட்ட தகவல் 5 ஆம் தேதியிட்ட பத்திரிகையிலும் வந்துள்ளது.

ஜனவரித் திங்கள் 4 ஆம் தேதி நான் திரு. இளம்பரிதி அவர்கள் கைது செய்யப்பட்டதாக ஒரு உரிமைப் பிரச்சினையை திரு. சங்கரலிங்கம் அவர் எழுப்பினார். தாங்கள் அது பற்றி விபரம் கேட்டு முடிவு சொல்வதாய் சொன்னீர்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை தற்போது உங்கள் ஆய்வில் உள்ளது. அப்படியிருக்க இது சம்பந்தமாக அவைக்கு வெளியில் உள்ள களுக்குத் தந்திகள் கொடுப்பது, தலைவர் அவர்களை அவமதிப்பதாக தங்கள் இருப்பதுடன், இந்த அவையை அவமதிப்பதாகவும், அச்சுறுத்துவதாகவும் உள்ளது.

எனவே, இந்த உரிமை பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு விடும் கேட்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து 1978 ஜனவரி 7 ஆம் தேதியன் மாண்புமிகு கட்சித் தலைவர்களும், மற்றும் உறுப்பினர்களும், அவை முன்னவரும் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

முதலில் எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்த உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. இளம்பரிதி, தமது கடிதத்தில், "அவையிலிருந்தபோது வெள்ளையுடை அணிந்த ஏவலாளர் ஒருவர் வந்து என்னை அழைத்தார். முதலமைச்சர்தான் அழைக்கிறார் என்று எண்ணி வெளியே சென்றேன். அப்போது அங்கு நின்ற ஒரு அதிகாரி என்னை வெளியே வருமாறு அழைத்தார். சட்ட மேலவை நடக்கும் இப்போது வர இயலாது, பிறகு நான் வருகிறேன் என்று சொன்னேன். 'இல்லை, அவரை செல்லுங்கள்' என்று சொல்லி எனது கையைப் பிடித்து பலவந்தமாக இழுத்துச் சென்றார். அதைப் பலர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தலைமைச் செயலகத்தில் 10 ஆம் நம்பர் வாசலுக்கு வெளியே வந்ததும் என்னை பலவந்தப்படுத்தி ஒருவேனில் ஏற்றி கைது செய்யப்பட்டதாகக் கூறினார்" என்றும் கூறுகிறார்.





## பின்னிணைப்பு

### தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நடவடிக்கைக் குறிப்புகள். 1978 ஜனவரி 10 ஆம் நாள்

### மாண்புமிகு மேலவை துணைத் தலைவர் அவர்களின் தீர்ப்பு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 4—1—1978-ம் நாளன்று எதிர்க் கட்சி தலைவர் திரு. எம். சங்கரலிங்கம் அவர்கள் கீழ்கண்ட உரிமை பிரச்சனையை எழுப்பினார்.

". . . . மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள், இந்த அவையில் வினா நேரம் நடந்து கொண்டிருக்கும்போது தன்னுடைய இடத்தில் வந்து உட்கார்ந்திருந்தார். அவர் தன்னுடைய இருக்கையில் உட்கார்ந்த பிறகு யாரோ ஒருவர் உங்களை ஒருவர் கூப்பிடுகிறார் என்று சொல்லி, அவரை வெளியே அழைத்து இருக்கிறார். அவர் வெளியே வந்ததும் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிய வருகிறது. . .".

". . . .இன்றைக்கு அவர் அவையில் வந்து உட்கார்ந்த பிறகு அவரை வெளியே அழைத்து கைது செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதற்கான தீர்ப்பைத் தாங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலை எப்போதும் எந்த உறுப்பினருக்கும் ஏற்படலாம். ஆகவே ஒரு தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னர், நான் அவை முன்னவரின் கருத்தை அறிய முயற்சித்த போது, அவர் உடனடியாக விசாரித்து, அவர் இந்த அவைக்குத் தந்த தகவல் வருமாறு :

". . . .இப்போது சில விஷயங்களை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அவற்றைச் சொல்வதற்கு முன்பு ஒரு பணிவான வேண்டுகோள். இந்த மேலவையின் கௌரவத்தையும் பாரம்பரியத்தையும் நினைக்கும்போது சில விஷயங்களைச் சொல்வது எனக்கே சங்கடமாக இருக்கிறது. அவர் இங்கே அலுவல்களில் கலந்துகொள்ளக் கூடாதென்ற எந்த எண்ணமும் இந்த அரசுக்கில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வரின் அறையிலே பலவந்தமாக காவல் துறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டையும் மீறி அவர்களைத் தள்ளி விட்டு உள்ளே நுழைய முயன்றிருக்கிறார். அதற்குப் பிறகு அவருடைய நிலை சரியாக இல்லை. அவர் போதையில் இருந்ததாகச் சந்தேகம்

உரிமை மீறிய பிரச்சினையாகும். இதையொட்டி எதிர்க்கட்சிகளுக்கு உரிய பாதுகாப்பளிக்க வேண்டுமென்று இந்தியக் குடியரசுத் தலைவர், பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர், ஆளுநர் ஆகியோருக்கு மேலவை எதிர்க்கட்சித் தலைவர் சங்கரலிங்கம் நேற்று தந்தி அனுப்பியிருக்கிறார்.' இதுபோன்ற தந்தி கொடுக்கப்பட்ட தகவல் 5 ஆம் தேதியிட்ட 'மெயில்' பத்திரிகையிலும் வந்துள்ளது.

ஜனவரித் திங்கள் 4 ஆம் தேதி தான் திரு. இளம்பரிதி அவர்கள் கைது செய்யப்பட்டதாக ஒரு உரிமைப் பிரச்சினையை திரு. சங்கரலிங்கம் அவர்கள் எழுப்பினார். தாங்கள் அது பற்றி விசாரணை செய்து முடிவு சொல்வதாகச் சொன்னீர்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை தற்போது உங்கள் ஆய்வில் உள்ளது. அப்படியிருக்க இது சம்பந்தமாக அவைக்கு வெளியில் உள்ளவர்களுக்குத் தந்திகள் கொடுப்பது, தலைவர் அவர்களை அவமதிப்பதாக இருப்பதுடன், இந்த அவையை அவமதிப்பதாகவும், தங்களை அச்சுறுத்துவதாகவும் உள்ளது.

எனவே, இந்த உரிமை பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு விடும்படி கேட்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து 1978 ஜனவரி 7 ஆம் தேதியன்று அவை மாண்புமிகு கட்சித் தலைவர்களும், மற்றும் உறுப்பினர்களும், முன்னவரும் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

முதலில் எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. இளம்பரிதி, தமது கடிதத்தில், "அவையிலிருந்தபோது வெள்ளையுடை அணிந்த ஏவலாளர் ஒருவர் வந்து என்னை அழைத்தார். முதலமைச்சர்தான் அழைக்கிறார் என்று எண்ணி வெளியே சென்றேன். அப்போது அங்கு நின்ற ஒரு அதிகாரி என்னை வெளியே வருமாறு அழைத்தார். சட்ட மேலவை நடக்கும் இப்போது வர இயலாது, பிறகு நான் வருகிறேன் என்று சொன்னேன். 'இல்லை, அதுவரை வந்து செல்லுங்கள்' என்று சொல்லி எனது கையைப் பிடித்து பலவந்தமாக இழுத்துச் சென்றார். அதைப் பலர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தலைமைச் செயலகத்தில் 10 ஆம் நம்பர் வாசலுக்கு வெளியே வந்ததும் என்னை பலவந்தப்படுத்தி ஒருவேனில் ஏற்றி கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்" என்றும் கூறுகிறார்.



அதுபற்றி மேலவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அங்கு பணி புரிந்து வந்த ஊழியர்களிடம் சார்ஜண்ட் மூலம் விசாரணை நடத்தியதில் இது உண்மையல்ல என்று புலனாகிறது. மேலவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்த நேரமாதலால் நுழைவாயிலிலும் மற்ற இடங்களிலும் சிப்பந்திகள் பணியில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் இது நடந்திருக்க முடியாது. மேலவை மண்டபத்திற்கு வெளியேயுள்ள லாபியில் உறுப்பினர் உறுப்பினர் கைது செய்ததாக அவர்கள் உறுதிப்படுத்தவில்லை. திரு. இளம்பரிதிக்கும் இம்மேலவை சிப்பந்திகளை அநேகமாகத் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும், தன்னை அழைத்துச் சென்ற வெள்ளையுடையணிந்த சிப்பந்தியை அடையாளம் காட்டவில்லை. திரு. இளம்பரிதி தமது கடிதத்தில், "கேள்வி நேரம் முடிந்தபின் அவையை விட்டுச் சென்ற முதல்வரை தாம் பின்பற்றிச் சென்றதாகவும், அவரைச் சந்திக்கத் தான் முயன்றதாகவும், அங்கிருந்த காவலர் தம்மைத் தடுத்தார்கள் என்றும், அப்படித் தன்னைத் தடுப்பது உரிமை மீறல் குற்றம் என்றும், அதைத்தான் தாம் அவையில் எழுப்பப் போவதாகக் கூறியுள்ளதாகவும் கூறியுள்ளார்". இதிலிருந்து முதல்வர் இருந்த ஆளுநர் அறை நுழைவாயிலில் உறுப்பினர் திரு. இளம்பரிதி அசாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறார் என்பது உறுதிப்படுகிறது. முதல்வரிடம் பேட்டிக்கான நேரம் முன்கூட்டியே நிச்சயித்துக் கொள்ளாமலேயே அவரைக் காணச் சென்றிருக்கிறார். முதல்வர், தன்னைப் பார்க்க முடியாத நிலையில் இருப்பதை பாதுகாப்பு அதிகாரி அறிவித்தும், பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருக்கிறார். இதனால், அங்கு ஏதோ சச்சரவு ஏற்பட்டிருப்பது உறுதியாகிறது. இதனை முதல்வருடைய கடிதமும், திரு. இளம்பரிதியின் கடிதமும் உறுதிப்படுத்துகின்றன. இதன்பின் ஆளுநர் அறைக்கு வெளியே பி-3 காவல் துறை ஆய்வாளர் திரு. இளம்பரிதியை அணுகி அவரை அங்கிருந்து அழைத்துச் சென்றிருப்பதும், காவல் துறை ஆணையர் கடிதத்தாலும் உறுதிப்படுத்துகிறது. அந்த நிலையில் அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கு அவர் குடித்திருப்பதாக மருத்துவர் அறிவித்து சான்றிதழ் அளித்த பின்னரே பெரிய மருத்துவ மனையில் அவரைக் கைது செய்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. இதனால் மேலவை மண்டபத்திலிருந்து வெளிவந்ததும் ஒரு அதிகாரி தம்மை கைது செய்ததாக திரு. இளம்பரிதி சொல்வதை நம்புவதற்கில்லையாதலால், அதனை நிராகரிக்கிறேன்.

ஆளுநர் அறைக்கு வெளியேயிருந்து பி-3 காவல் துறை ஆய்வாளரால் திரு. இளம்பரிதி அழைத்துச் செல்லப்பட்டோ, மயங்கிய நிலையில் எடுத்துச் செல்லப்பட்டோ இருக்கலாம் என்று நான் நம்புகிறேன். இந்த அளவில்

நடத்தை சட்ட மன்றத்தின் கண்ணியத்தையும், உறுப்பினர்களின் கௌரவத்தையும் உயர்த்துவதாக இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின் நடத்தையால் இந்த அவையின் பெருமையும், கண்ணியமும் ... விளைவிப்பதாக உறுப்பினர்களுடைய நடத்தை இருக்கக் கூடாது.

இந்த அவையின் கண்ணியத்தையும், உறுப்பினர்களுடைய உரிமைகளையும் கட்டிக் காப்பதில் எனக்குப் பெரும் பங்கு உண்டு. அதே சமயம் உறுப்பினர்களிடமிருந்து இந்த அவை எதிர்பார்க்கும் தகுதிகளுக்கு ... பாதிக்கப்படுவதானால், அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் தவற மாட்டேன் என்று இந்த அவைக்கு நினைவூட்டி இதை முடிக்கிறேன்.

---

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1979 மார்ச் 8.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Village Co-operative Multi-purpose Credit Societies*

* 131. Q.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of Village Co-operative Multi-Purpose Credit Societies which are managed by the elected representatives?

கிராமக் கூட்டுறவு பலநோக்கு நாணயச் சங்கங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கிராமக் கூட்டுறவு பலநோக்கு நாணயச் சங்கங்களில் எத்தனை சங்கங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக நிர்வகிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 4,404 கூட்டுறவு விவசாய நாணய சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக நிர்வகிக்கப்படுகின்றன.

திரு. க. இராமமூர்த்தி : தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக அல்லாமல், நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக நடைபெறுகிற கிராமக் கூட்டுறவு பலநோக்கு நாணயச் சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ் நாட்டில் மொத்தம் 4,742 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் 4,404 சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. நிர்வாகக் குழு இல்லாத சங்கங்கள் 338.

திரு. க. இராமமூர்த்தி: ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பி மூலமாக இந்தக் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கங்கள் படுகின்றன. இந்த நிலைமை அதிகாரம் பிரதிநிதிகள் மத்திய வங்கிகளில் இல்லை. கூட்டுறவு விவசாய நாணயச் சங்கங்களின் பி இல்லாத மத்திய கூட்டுறவு வங்கிகள் எந்தவித இயங்கிக்கொண்டிரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை, கிராமக் கூட்டுறவு விவசாய சங்கங்களின் சார்பாக, மத்திய கூட்டுறவு வங்கிக்கு டைரக்டர்களாக தெடுத்து, இந்த அரசு அனுப்புமா என்று தெரிந்துகொள்ள விரும்புகி

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: உறுப்பினருடைய விளக் பற்றுமையாமோ எனக்குப் புரியவில்லை. தயவுசெய்து கேட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கூட்டுறவு பல்நோக்கு நாணயச் சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுத்து கூட்டுறவு வங்கிகளுக்கு டைரக்டர்களாக அனுப்பி நிர்வாகம் நடத்தப்ப நிலை இன்றைய தினம் இல்லாமல் இருப்பதால், தேர்ந்தெடுக்கப்பட்ட நிதிகளுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத நிலை இருக்கிறது. அதைப் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அ ர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாவட்ட கூட்டுறவு வங்கி தேர்தல் நடைபெறும் நேரத்தில்தான், கிராமக் கூட்டுறவு பல்நோக்கு நா சங்கங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பிரதிநிதித் கிடைக்கும்.

திரு. க. இராமமூர்த்தி: கிராமக் கூட்டுறவு பல்நோக்கு நாணயச் ச கள் என்று சொல்லக்கூடிய அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநி மூலமாக கிராம அளவில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் நிய முறையில் தான் மாவட்ட மத்திய வங்கிகளை நடத்திக்கொண்டிருக்கிறோ இதன் காரணமாக உடனடியாக பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கவும் கு களைக் களையவும் முடியவில்லை. இந்த நியமன முறையை உட ாக விட்டு விட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக இவை நிர்வ ப்படுவதற்கான ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமை வர்[illegible]ய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: விரைவில் கூட்டுறவுச் சட்டம் திருத்தியமைக்கப்படவிருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் திருத்தியமைக்கப்பட்ட பிறகு, தேர்தல்கள் நடைபெறும். அப்பொழுது இவர் களுடைய பிரதிநிதிகள் அங்கே இடம் பெறுவார்கள்.

திரு. பி. ஆர். நாயகம்: கிராமக் கூட்டுறவு பல்நோக்கு நாணயச் சங்கங் களிலிருந்து கடன்கள் பெறுகின்ற வாய்ப்பு எந்தனை பேர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டிருக்கிறது? அந்தக் கடனைப் பெற என்ன தகுதியிருக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தனிக் கேள்வி போடவும்.

திரு. க. இராமமூர்த்தி: சட்டம் திருத்தியமைக்கப்பட்ட பிறகு, தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்வரை ஒரு இடைக்கால ஏற்பாடாக கூட்டுறவுச் சங்கங்களிலே அங்கம் வகிக்கின்ற, நிர்வாகம் நடத்துகின்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற எம்.எல்.ஏ., எம்.எல்.சி. போன்றவர்களைத் தற்காலிக மாக மத்திய கூட்டுறவு வங்கியிலே டைரக்டர்களாக உடனடியாக நியமிக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: விரைவிலே தேர்தல் நடைபெறு வதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.

## *Secretaries of Rural Credit Co-operative Societies*

* 132 *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(*a*) whether it is a fact that, even after the order of Registrar of Co-operatives stating that the employees of the Kanyakumari District Central Co-operative Bank, who are working as Secretaries in the Rural Credit Co-operative Societies be treated as employees of the respective Societies has been set aside by the High Court, the said order of the Registrar is continued to be implemented;

(*b*) whether any representation has been received from the Employees of the Central Co-operative Bank in this regard; and

(*c*) if so, the action taken thereon?

நடத்தை சட்ட மன்றத்தின் கண்ணியத்தையும், உறுப்பினர்... கௌரவத்தையும் உயர்த்துவதாக இருக்க வேண்டும். சட்டம... உறுப்பினர்களின் நடத்தையால் இந்த அவையின் பெருமையும், கண்ணியமு... விளைவிப்பதாக உறுப்பினர்களுடைய நடத்தை இருக்கக் கூடாது.

இந்த அவையின் கண்ணியத்தையும், உறுப்பினர்களுடைய உரிமையையு... கட்டிக் காப்பதில் எனக்குப் பெரும் பங்கு உண்டு. அதே சமய... உறுப்பினர்களிடமிருந்து இந்த அவை எதிர்பார்க்கும் தகுதிகளுக்கு ... பாதிக்கப்படுவதானால், அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் நா... தவற மாட்டேன் என்று இந்த அவைக்கு நினைவூட்டி, இதை முடிக்கிறேன்.

---



அதுபற்றி மேலவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அங்கு பணி புரிந்து வந்த ஊழியர்களிடம் சார்ஜெண்ட் மூலம் விசாரணை நடத்தியதில் இது உண்மையல்ல என்று புலனாகிறது. மேலவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்த நேரமாதலால் நுழைவாயிலிலும் மற்ற இடங்களிலும் சிப்பந்திகள் பணியில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் இது நடந்திருக்க முடியாது. மேலவை மண்டபத்திற்கு வெளியேயுள்ள லாபியில் உறுப்பினர் கைது செய்ததாக அவர்கள் உறுதிப்படுத்தவில்லை. உறுப்பினர் திரு. இளம்பரிதிக்கும் இம் மேலவை சிப்பந்திகளை அநேகமாகத் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும், தன்னை அழைத்துச் சென்ற வெள்ளையுடையணிந்த சிப்பந்தியை அடையாளம் காட்டவில்லை. திரு. இளம்பரிதி தமது கடிதத்தில், "கேள்வி நேரம் முடிந்தபின் அவையை விட்டுச் சென்ற முதல்வரை தாம் பின்பற்றிச் சென்றதாகவும், அவரைச் சந்திக்கத் தான் முயன்றதாகவும், அங்கிருந்த காவலர் தம்மைத் தடுத்தார்கள் என்றும், அப்படித் தன்னைத் தடுப்பது உரிமை மீறல் குற்றம் என்றும், அதைத்தான் தாம் அவையில் எழுப்பப் போவதாகக் கூறியுள்ளதாகவும் கூறியுள்ளார்". இதிலிருந்து முதல்வர் இருந்த ஆளுநர் அறை நுழைவாயிலில் உறுப்பினர் திரு. இளம்பரிதி அசாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறார் என்பது உறுதிப்படுகிறது. முதல்வரிடம் பேட்டிக்கான நேரம் முன்கூட்டியே நிச்சயித்துக் கொள்ளாமலேயே அவரைக் காணச் சென்றிருக்கிறார். முதல்வர், தன்னைப் பார்க்க முடியாத நிலையில் இருப்பதை பாதுகாப்பு அதிகாரி அறிவித்தும், பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருக்கிறார். இதனால், அங்கு ஏதோ சச்சரவு ஏற்பட்டிருப்பது உறுதியாகிறது. இதனை முதல்வருடைய கடிதமும், திரு. இளம்பரிதியின் கடிதமும் உறுதிப்படுத்துகின்றன. இதன்பின் ஆளுநர் அறைக்கு வெளியே பி-3 காவல் துறை ஆய்வாளர் திரு. இளம்பரிதியை அணுகி அவரை அங்கிருந்து அழைத்துச் சென்றிருப்பதும், காவல் துறை ஆணையர் கடிதத்தாலும் உறுதிப்படுத்துகிறது. அந்த நிலையில் அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கு அவர் குடித்திருப்பதாக மருத்துவர் அறிவித்து சான்றிதழ் அளித்த பின்னரே பெரிய மருத்துவ மனையில் அவரைக் கைது செய்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. இதனால் மேலவை மண்டபத்திலிருந்து வெளிவந்ததும் ஒரு அதிகாரி தம்மை கைது செய்ததாக திரு. இளம்பரிதி சொல்வதை நம்புவதற்கில்லையாதலால், அதனை நிராகரிக்கிறேன்.

ஆளுநர் அறைக்கு வெளியேயிருந்து பி-3 காவல் துறை ஆய்வாளரால் திரு. இளம்பரிதி அழைத்துச் செல்லப்பட்டோ, மயங்கிய நிலையில் எடுத்துச் செல்லப்பட்டோ இருக்கலாம் என்று நான் நம்புகிறேன். இந்த அளவில்

[1979 மார்ச் 8

## கிராமக் கூட்டுறவு கடன் சங்கங்களின் காரியதரிசிகள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்களில் கிராமக் கூட்டுறவு கடன் சங்கங்களில் காரியதரிசிகளாகப் பணியாற்றி வருபவர்களை அந்தந்த சங்க ஊழியர்களாகக் கருதவேண்டுமென்று, மாநில கூட்டுறவு பதிவாளர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை உயர்நீதி மன்றம் செல்லுபடியாகாது என்று அறிவித்த பின்னரும், மேற்குறிப்பிட்ட பதிவாளரின் நடவடிக்கை தொடர்ந்து அமுல்படுத்தப்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) இதுபற்றி கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்களிடமிருந்து முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அம்முறையீட்டின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை உயர்நீதி மன்றம் செல்லுபடியாகாது என்று அறிவித்துள்ளது என்பது சரியல்ல.

(ஆ) ஆம்.

(இ) பத்து விவசாயக் கடன் சங்கங்கள் தங்களுடைய சங்கங்களின் அதிக இழப்பைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு மத்திய வங்கியால் அனுப்பப்பட்ட செயலாளர்களை திருப்பி அனுப்பிவிட்டது. மத்திய வங்கியில் இவர்களை எடுத்துக் கொள்வதற்கான காலி இடங்கள் இல்லாததால் இவர்களை முதுநிலைப் பட்டியலின்படி விடுவிக்க வேண்டியதாயிற்று.

**திரு. ஆ. நல்லசிவன்:** கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் மொத்தம் 215 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களில் 114 பேர்களுடைய சர்வீசை கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 'லெண்ட்' பண்ணியிருப்பது உண்மையா? அப்படி கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியால் கிராம விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு லெண்ட் பண்ணி அனுப்பப்பட்ட ஊழியர்களில் paid செக்ரட்டரிகளுக்கு மாதந்தோறும் 250 ரூபாய்க்கு மேலும், கிளார்க்குகளுக்கு மாதந்தோறும் 200 ரூபாய்க்கு மேலும் கொடுக்கக்கூடாது என்று மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் உத்தரவிட்டிருப்பதால், 93 பேர் வேலையிலிருந்து 'ரிட்ரென்ச்' பண்ணப்பட்டிருப்பது உண்மையா?



1979 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள வினாவுக்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி கேட்டால், முழு விவரங்களையும் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்களில் பலர், கூட்டுறவு விவசாய வங்கிகளில் எழுத்தர்களாகவும் காரியதரிசிகளாகவும் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு, செயலர்களுக்கும் கிளார்க்குகளுக்கும் முறையே 250 ரூபாய், 200 ரூபாய், இதற்குமேல் கொடுக்கக்கூடாது என்று பதிவாளர் உத்தரவிட்டிருக்கிறார். ஆனால் அவர்கள் ஏற்கெனவே முறையே 434 ரூபாய், 342 ரூபாய், இதற்கு மேலும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் 114 பேர்களை ரிட்ரென்ச் பண்ணக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுப் பதிவாளரின் உத்தரவிலிருந்து விதிவிலக்கு அளித்து அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் போட்ட உத்தரவிற்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கிணங்க, சிலரை மீண்டும் கூட்டுறவுச் சங்கங்களிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையில், சில ஊழியர்களைத் திருப்பியனுப்பியிருக்கிறார்கள். காலியிடம் இல்லையாதலால், இவர்களை வேலையிலிருந்து விடுவிக்க வேண்டியதாயிற்று என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு வேறு வங்கிகளில் வேலை கொடுக்க அரசு முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினருடைய மேலான ஆலோசனையை கவனத்தில் கொண்டு முடிந்தால் ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்).

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** துணைக் கேள்விகள் என்ற அடிப்படையில் உறுப்பினர் ஏற்கெனவே இரண்டு கேள்விகளைக் கேட்டாகிவிட்டது.

அந்த இரண்டிற்கும் பதில் சொல்லப்படாததால் [illegible] அந்தக் கேள்வி கேட்கப்பட்டது. இந்த நிலையில் இன்னும் [illegible] கேள்வி என்றால் எப்படி [illegible]? [illegible]

திரு. ஆ. நல்லசிவன்: நான் குறிப்பிட்ட 23 பெயர்களின் விவசாய கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நீக்கப்பட்டதற்கும், மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் பிறப்பித்துள்ள ஆணைக்கும் சம்பந்தமில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 12—1—1979 அன்று மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கு அனுப்பியிருக்கிற சர்க்குலர் அறிக்கையின்படிதான் இந்த 23 பேர்களுடைய வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த சர்க்குலரின் நகலே என்னிடம் இருக்கிறது. இந்த நிலையில் அமைச்சர் அவர்களுடைய பதில் வேறு மாதிரியாக இருக்கிறதே அதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாநிலக் கூட்டுறவுத் துறை பதிவாளர் அவர்கள் 12—11—1977 அன்று அனுப்பிய சுற்றறிக்கை அட்-ஹாக் கமிட்டி, மேனேஜ்மெண்ட் ஆகிய இரண்டு முறைகளின் வாயிலாக இளநிலை மேற்பார்வையாளர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறவர்களுக்குத்தான் பொருந்தும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல், அந்தச் சிப்பந்திகளுக்கு அது பொருந்தாது.

## Judgements in Tamil.

* 133 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. Minister for Law be pleased to state:

(*a*) the number of judgments delivered in Tamil up to May 1978 yearwise; and

(*b*) the Courts in which the said judgments were delivered?

## தமிழில் தீர்ப்புகள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 15—5—1978 ஆம் நாள் வரை தமிழில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளின் ஆண்டுவாரி எண்ணிக்கை யாது?

(ஆ) எந்தெந்த நீதி மன்றங்களில் அந்தத் தீர்ப்புகள் அளிக்கப்பட்டன?



THE HON. THIRU K. NARAYANASWAMY: (*a*) & (*b*): A statement @ is placed on the table of the House.

திரு. க. இராமமூர்த்தி: நான் இந்தக் கேள்வியைக் கேட்ட தேதி வரை விஞ்ஞானமான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். 1978ஆம் ஆண்டு முடிய எத்தனை தீர்ப்புகள் தமிழில் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, a separate question may be put.

புலவர் புலமைப்பித்தன்: தமிழில் எழுதிய தீர்ப்பைக் குப்பைக் கூடையில் போடு என்று சொல்லியவர்களைப் பார்த்து 'நா காக்க' என்று அரசு அறிவுரை வழங்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: This Government have not got that information. If the hon. Member is pleased to give the information and the name of the person who spoke in that vein, this Government will consider all aspects of the matter and give their decision.

டாக்டர் இரா. சனார்த்தனம்: உரிமை இயல் நீதிமன்றங்களில், அதாவது சிவில் கோர்ட்டுகளில், தமிழ் மொழியில் தீர்ப்பு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: So far as the High Court is concerned, there is an article in the Constitution which has prescribed English as the language. So far as Subordinate Courts down from the District Courts are concerned, there is a Government Order which has prescribed Tamil as the language for judgment, of course, with certain exceptions. This is applicable only to the Criminal Courts and the judgments to be delivered by the Criminal Courts. So far as Civil Courts are concerned, there is still no Government Order that has been issued by the Government for the very simple reason that the relevant Acts that fall for consideration by the Civil Courts have not yet been translated into Tamil.

திரு. க. இராமமூர்த்தி: உயர்நீதி மன்றத் தீர்ப்பு ஒன்றின் காரணமாகத் தமிழ் மொழியில் தீர்ப்புகளை வழங்க இயலாத நிலை சில நீதிமன்றங்களில் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குறையைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

@ 249-258 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 மார்ச்

THE HON. THIRU K. NARAYANASWAMY: The Governm very sympathetically and very earnestly consider taking steps introducing the desirable reform in a phased manner in due cou of time soon after the relevant Acts that fall for considerati before the Civil Courts are translated.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** வட மாநிலங்களில் இருக்கும் உயர் மன்றங்களில் சில இடங்களிலே தீர்ப்புகள் இந்தி மொழியில் வழங்கப்படும்போ நம்முடைய மாநிலத்தில் இருக்கிற உயர்நீதி மன்றத்திலிருக்கக்கூடிய நீதிபதி அதுவும் நல்ல இலக்கிய வளம் படைத்த ஒருவர் இன்றைய போன்ற நீதி கள் இருக்கும்போது, இந்த அரசாங்கம் உத்தரவு போட்டுத்தான் தீர்ப்புகள் தமிழில் வழங்க வேண்டுமென்று இல்லாமல் அரசாங்கம், நீதிபதிகள் முடிந் தமிழ் மொழியில் தீர்ப்பை வழங்கலாம் என்று கூறுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I am not able answer how in the other States, judgments are delivered in Hin language. But I would invite the attention of the hon. Memb to article 348 of the Constitution which reads thus:—

"Notwithstanding anything in the foregoing provisions of t part" viz., Part XVII— "until Parliament by law otherw provides—

(*a*) all proceedings in the Supreme Court and in eve High Court."

.................. we are not concerned with oth provisions ............
"shall be in the English language."

According to this article, only the Parliament has the power amend and no legislature of any state has any power to ame the provision.

**திரு. செ. முத்துசாமி :** சட்ட அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பு வருவதற்கு முன்பு உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தவர்கள். அமை அவர்கள் முதலில் அவையில் தமிழில் பதில் சொல்வதற்குத் தயாராவார்க என்று கேட்க விரும்புகிறேன். அவர் தமிழில் பதில் சொல்ல முன்வருவ அ மூலம் மற்ற நீதிபதிகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பார்களா என்று விரும்புகிறேன்.



1979 மார்ச் 8]

THE HON. THIRU K. NARAYANASWAMY: I will try to take lessons in Tamil from Thiru S. Muthuswami, provided he gives me one hour everyday when he is in Madras.

**திரு. க. அறிவழகன் :** தமிழில் தீர்ப்பு வழங்குகிற முறை தமிழ் நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமானதாகும். எனவே இப்படி தமிழ் மொழியில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் அனைத்தையும் ஒரு புத்தக வடிவில் வெளியிட அரசு முன்வருமா? அதன் மூலமாக நீதிமன்றத்தின் மற்ற துறைகளில் இருப்பவர்களும் தமிழில் தீர்ப்பு வழங்க ஒரு ஊக்கம் பிறக்கக் காரணமாக இருக்கும். எனவே தமிழில் வழங்கப்பட்ட தீர்ப்புகளைப் புத்தக வடிவில் வெளியிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தீர்ப்புகள் எழுதப்பட்ட பிறகுதானே அவைகளைப் புத்தகமாகப் போட முடியும்?

THE HON. TIHRU K. NARAYANASWAMY: This suggestion may be considered by the Government in due course of time when there are enough judgments for compilation as a Legal Journal.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் வட மாநிலங்களில் இந்தி மொழியில் தீர்ப்புகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அதற்குரிய சட்டத்தைப் படித்துக் காட்டி, அது இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இருவர் சொன்னதில் யாருடைய கருத்து சரி என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்ட அமைச்சர் தம் பதிலில் 'அப்படியொன்றும் சொல்வதற்கில்லை' என்றுதான் குறிப்பிட்டார்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I have no information about that.

THIRU G. VASANTHA PAI: Are the Government aware that the translation of legal terminology from English to Tamil has not been very satisfactory, for the reason that the author of that book and the person who was in charge of the Committee have tried to translate even the acceptable terms like 'Bench' and 'Res Judicata' and words like that, which cannot be correctly expressed in Tamil language, instead of adopting those English words themselves and enriching Tamil language? Will the Government kindly consider re-doing the translation by entrusting the work to somebody else so that the translation of acceptable words like Bench, Judge, Sessions Judge is not made difficult for those who are

accustomed to them to follow the translation. Now the word 'Bench' is used 'Bench' is translated as 'Ayam'. If the word 'Bench' is used as such, it would be easier for the people to follow them and these words could be adopted in Tamil language.

THE HON. THIRU K. NARAYANASWAMY: This suggestion will be transmitted to the concerned authority, namely, the State Language (Legislative) Commission for implementing desirable things.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தி பேசுகிற மாநிலங்களில் உள்ள உயர் நீதி மன்றங்களில் தற்போது இந்தியில் தீர்ப்புகள் வழங்குகிற நிலை வந்திருக்கிற தகவல் உண்மையா என்று கண்டறிந்து, அவ்வாறு மாநிலங்களுக்கு இடையில் வேறுபாடு இருந்தால், அதை மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல முன்வருமா? அதைப் போலவே உயர்நீதி மன்றத்தில் தமிழில் தீர்ப்புகளை வழங்கும் வகையில் நடைமுறையாகச் சட்டம் கொண்டு வருவதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு நமது உணர்வுகளை எடுத்துச் சொல்ல முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: This Government are not very anxious to seek any help from the Centre in implementing its language policy.

(பிற்பகல் 4-20)

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** எனக்கு முன்னரே பேசிய மரியாதைக்குரிய அங்கத்தினர்கள் அவர்கள் சுப்ரீம் கோர்ட், மற்ற ஹைக் கோர்ட்டிலே நடப்பதையெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், கிராமத்திலே இருக்கிற கோர்ட்டுகளிலே நடவடிக்கைகள் தமிழிலே நடப்பதாக அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்களா ? அங்கே, டிஸ்டிரிக்ட் கோர்ட் இருக்கிறது. மற்ற தாலுகா கோர்ட்டுகள் இருக்கின்றன. காகிதத்திலே நான் தமிழிலே வருகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கே நடைபெறுவதெல்லாம் ஆங்கிலத்திலேதான் நடைபெறுகிறது. அங்கெல்லாம் தமிழிலே சீக்கிரத்திலே நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி :** HON. Chairman.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** ஐயா அவர்கள் தமிழில் சொன்னால், புரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.



**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி :** மன்னிக்க வேண்டும். ஐயா, கொச்சைத் தமிழில் சொல்லட்டுமா, பிழை இருந்தால் மன்னிக்க வேண்டும். இந்தச் சட்டத்திலே தனி செக்ஷன் ஒன்று இருக்கிறது. அதிலே அரசாங்கத்துக்கு நோட்டிஃபை பண்ண உரிமை இருக்கிறது. அந்த உரிமைப்படி இப்போது Civil Courts, Criminal Courts, Tribunals, Rent Courts, Revenue Courts, இதிலே அந்தந்த கோர்ட்டுக்குத் தகுதியான சட்டங்கள் இருக்கின்றன. இப்போது Criminal Court க்குப் போனால், Penal Code, Criminal Procedure Code, Evidence Act, இந்த Minor Acts என்ற சின்ன சின்ன Acts அதாவது Town Nuisance Act போன்ற Various Acts இருக்கின்றன. Prevention of Corruption Act, Suppression of Immoral Traffic Act, இருக்கின்றன. ஆகவே, அந்த Act -ஐ எல்லாம் தமிழிலே மொழி பெயர்த்து ஆங்காங்கு இருக்கக்கூடிய கோர்ட்டுகளுக்குக் கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு, அவர்கள் தீர்ப்பு கூறுகிறார்கள். இதிலே 3 Major Acts தான் translate பண்ணி அவர்களுக்குத் தமிழிலே தீர்ப்புச் சொல்லுவதற்கு சாதகமாகக் கொடுத்திருக்கிறார்கள். மற்றதை எல்லாம் இன்னும் translate பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். Civil Court சம்பந்தமான ஏராளமான Acts இருக்கின்றன. இவற்றை இன்னும் translate பண்ண முடியவில்லை. இவற்றை நாம் translate பண்ணி, Central Government -க்குப் போய், அவர்கள் approve பண்ணி, அபிப்பிராய பேதங்கள், மாறுபட்ட கருத்துக்கள், தாரதம்மியம் difference of opinion ஏதாவது இருந்தால், நாங்கள் இரண்டு பேரும் திரும்பவும் correspond பண்ணி, accepted translation பண்ணி அதற்கப்பால்தான் அனுப்ப முடியும். அதனால் தான் இந்த சர்க்காரைப் பொறுத்தவரையில், தமிழிலே எவ்வளவு சீக்கிரமாக தீர்ப்புகள் சொல்ல வேண்டுமோ, நடவடிக்கைகள் நடத்த முடியுமோ, அந்த அளவுக்கு தமிழிலே இப்போது செய்துகொண்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தேர்தலிலே வெற்றியடைந்துவிட்டீர்களே !

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** தமிழில் மிக நன்றாகப் பேசிவிட்டார். மகிழ்ச்சி. பாராட்டக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியதற்கு நான் ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி :** ஐயாவுக்கு, நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## Directorate of Prosecutions.

*134 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU I SANTOSHAM): Will the Hon. the Minister for Law be please to state:

(a) whether there is any proposal to set up a Directorate of Prosecutions with a highly qualified Officer as the Chief Director and

(b) if so, the stage at which the matter now stands?

சட்ட நடவடிக்கை இயக்குநர் அலுவலகம்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்பு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில வேண்டுகிறேன் :

(அ) உயர் தகுதி படைத்த அதிகாரி ஒருவரைத் தலைமை இய நராகக் கொண்ட சட்ட நடவடிக்கை இயக்குநர் அலுவலகம் (Directorate of Prosecutions.) ஒன்று அமைக்கும் செயற்குறிப் எதுவும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a) Yes, Sir.

(b) Other State Governments have been addressed information regarding the set-up of such Directorate of Prosecutions if it exists in those States. Reply is awaited from Government of Punjab.

திரு. பி. ஆர். தாமஸ் : அரசு எவ்வளவு விரைவில் தக்க நடவடி எடுத்து அந்த அதிகாரியை அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யும் என் அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The views of the various Governments have been invited. We are expecting their replies, particularly the reply from the Government of Punjab. They have been reminded and the matter may be considered in the light of the 41st report of the Law Commission and other factors.



திரு. க. அறிவழகன் : சட்ட நடவடிக்கை இயக்குநர் அவர்களை நியமிக்கும் செயற்குறிப்பு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இயக்குநருக்கு இப்போது 'பப்ளிக் ப்ராசிக்யூட்டர்'க்கு இருக்கின்ற அதிகாரம் எல்லாம் அமைந்திருக்குமா ? அவருடைய வேலை, அதாவது 'பவ்வர்' எப்படி அமைந்திருக்கும் ?

THE HON THIRU K. NARAYANASWAMY: He will have the power to start, launch prosecution in appropriate cases without any regard to any party affiliations or any such thing.

THIRU A. R. DAMODARAN: When reference is made to Director of Public Prosecutions, is it somewhat akin to the Ombudsman that was envisaged, or is this something totally different? What will be the Acts under which this Director of Public Prosecutions will be asked to prosecute; what are the special laws which he will administer?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman. Sir, I must explain this only in English, because it is capable of such precision only in English. So far as my concept, my views are concerned, Ombudsman is an institution in one of the European countries functioning satisfactorily. In effect, it is a kind of an institution, a Commissioner for complaints where the public can go and complain and steps are taken for further remedial measures for redressal of grievances. That is a totally different institution and it has nothing to do with setting in motion the criminal law of the country at all. So, the Director of Public Prosecutions is an institution commended by the Law Commission in its 41st Report. The Law Commission has recommended, even what I call, vesting of greater powers with the Director of Public Prosecutions and even with the Public Prosecutor of the District. It is only thereafter, I think on the suggestion of the Law Commission, that sections 24 and 25 of the Cr.P.C. also have been amended. The Government are now considering the establishment of a separate Director of Prosecutions, only after getting the relevant information from other States. So far as my reading of this institution is concerned, in England, it is totally independent of any kind of political favouritism. He functions in a very independent manner. No doubt he may be subordinate to the Attorney-General of England but by and large he is generally independent and when in the interest of public justice the Attorney-General decides to withdraw

prosecution of launch prosection, the Director of Public Prosecutions has got to carry out the fiat or order of the Attorney-General of England.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of what has been stated by the Hon. Minister, will the Director of Public Prosecutions have the power to enter *nulli prosequi* ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I think it all depends on the legislation pertaining to the powers of the Director of Public Prosecutions.

THIRU G. VASANTHA PAI : Will the Government consider the advisability of seeing to it that he should not function here also exercising some of the powers of the Advocate-General, including the power to enter *nulli prosequi ?*

THE HON. THIRU K. NARAYANASWAMY : I do not think it would be quite necessary to arm the Director of Public Prosecutions with the power to enter *nulli prosequi*, by reason of the fact that there is already one authority which is vested with this power.

**திரு. க. அறிவழகன் :** டைரக்டர் ஆஃப் ப்ராசிக்யூஷன்ஸ் அவர்களுடைய அதிகாரப் பணிகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். 'ஆம்புட்ஸ்மென்' மாதிரி தனித் தன்மை வாய்ந்ததாகும், தனித் தன்மை வாய்ந்ததாக இருக்கக் கூடும் என்று சொன்னதாகவும் அறிகிறேன். . . அப்படி இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனாலும் இந்த 'பப்ளிக் ப்ராசிக்யூட்டர்' இருக்கிறாரே அவருடைய செயல்களிலே இவற்றை எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Certainly he is bound to assume most of the powers of the Public Prosecutor, so far as counselling, advising and other aspects of the matter are concerned.

### *Teaching and Non-teaching Staff of Aided Schools.*

* 135. Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware of the lacuna in the entertainment of appeals relating to disciplinary matters under the **Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973**



(Tamil Nadu Act 29 of 1974) and the verdict of the Madras High Court, striking down certain provisions pertaining to disciplinary matters in the said Act, as a result of which much hardship is being caused to the Teaching and Non-teaching Staff of the aided schools ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

### மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள்

**திரு. பி. ஆர். தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 29/1974) ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்த விஷயங்கள் தொடர்பான மேல் முறையீடுகளை அனுமதிப்பது குறித்து கூறப்படாமல் விட்ட விஷயம் பற்றியும் மேற்படி சட்டத்தில் ஒழுங்கு நடவடிக்கை விஷயங்கள் குறித்த சில விதித்துறைகளை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது எப்படி என்பது குறித்தும் அதன் விளைவாக மானிய உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும் பெருத்த இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்தும் அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) தனது தீர்ப்பினை எதிர்த்து, மேல் முறையீடு செய்ய, சென்னை உயர்நீதி மன்றம் அனுமதி வழங்க மறுத்ததை அடுத்து இவ்வரசு உச்சநீதி மன்ற தனி மனுக்களை அனுமதி கோரி போட்டிருக்கின்றது. அந்த அனுமதி பெற்ற பின்னர், உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து, உச்ச நீதி மன்றத்தில், மேல் முறையீடு செய்ய உள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற கல்வி அமைச்சர் அவர்களுடைய உண்மையான உணர்வை நாங்கள் மதிக்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால் இதே வேளையிலே

[திரு. க. மீனாட்சிசுந்தரம்]

என்று சொல்லி கோடை விடுமுறைக்கு முன்னால் ஆசிரியர்களுக்கு நோட்டீஸ் கொடுப்பதும், பின்னால் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு இருக்கிறோம் என்று ஆசிரியர்களிடமிருந்து எழுதி வாங்கிக் இரு மீண்டும் பள்ளியை நடத்துவதுமாக சில பகுதிகளில் நிலைமைகள் அவர்கள் இன்றன. தனியார் பள்ளிகளை மூட வேண்டுமென்றால், அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு 3 மாத நோட்டீஸ் கொடுத்தாலே போதுமா? அப்படிப்பட்ட நோட்டீஸ் தருகிற நிறுவனங்கள் மீது அமைச்சர் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையை எடுத்து ஆசிரியர்களைக் காப்பாற்ற இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து முழு விவரம் இல்லையென்றாலும், அவர்கள் மூடுவதற்கான நோட்டீஸ் கொடுப்பார்களே யானால், அந்த ஆசிரியர்களுக்குப் பணி தருவதில் எந்தச் சிரமமும் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 1973-ஆம் ஆண்டு தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டத்திற்கு முன்பு சில விதிமுறைகள் இருந்தன. அந்தப் பாதுகாப்பு விதி முறைகள் இந்தச் சட்டத்திலே இல்லையென்றால், மைனாரிட்டி நிறுவனங்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்ற புகார் இருக்கிறது. 1973 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த விதிமுறைகளை ஆசிரியர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற பிரிவு புதிய சட்டத்தில் இருக்கிறது. அரசாங்கம் அந்த விதி முறைகளைப் பயன் படுத்தி இந்த மைனாரிட்டி நிறுவனங்களை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கினால், அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் விதிகளை பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலே அவர்களுக்கு இருக்கிற உரிமைகளில் தலையிட முடியாது என்று இருக்குமானால், நிச்சயமாக அரசு தலையிட முடியாது. வேறு அடிப்படையிலே நாம் அவர்களுக்குப் பணம் தருகிறோம், அவர்கள் அதைப் பெறுகிறார்கள் என்ற ஒரு ஒப்பந்தம் போட்டு இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை மீறுகிற வகையிலே யார் நடந்தாலும் என்ன நடவடிக்கை எடுக்கப்படுமோ அந்த நடவடிக்கையை அந்த நிறுவனங்களின் மீது எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





## Representation in Educational Boards.

* 136. *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM & THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the basis on which persons are appointed to the Educational Boards constituted by the Government;

(*b*) the names of the representatives of Teachers Associations who have been appointed in the Board of Secondary Education constituted recently;

(*c*) whether any Member of the Legislative Council elected from the Teachers Constituency has been appointed in the said Board;

(*d*) if not, whether there is any proposal with the Government to give representation to them in future;

(*e*) if so, the number of such persons who will be appointed; and

(*f*) whether the Government will make provision for the inclusion of M.L.Cs. elected from the Teachers Constituencies in all the Educational Boards to be constituted by the Government in future?

## கல்விக் குழுக்களின் பிரதிநிதித்துவம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் & திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசால் நியமிக்கப்படும் கல்விக் குழுக்களின் உறுப்பினர்கள் நியமனம் எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது?

(இ) அண்மையில் அமைக்கப்பட்ட செகண்டரி கல்விக் குழுவில், (Board of Secondary Education) இடம் பெற்றுள்ள ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் யாவர்?

(உ) மேற்படி குழுவில் ஆசிரியர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் யாருக்கேனும் இடமளிக்கப் பட்டுள்ளதா?

(எ) இல்லையெனில், இனியேனும் அவர்களுக்கு அக் குழு இடமளிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஐ) ஆமெனில், எத்தனை பேருக்கு இடமளிக்கப்படும்?

(ஒ) அரசால் இனிமேல் நியமிக்கப்படும் அனைத்து குழுக்களிலும் ஆசிரியர் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கு இடமளிக்க வகை செய்யப்படும

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) கல்விக்குழு நோக்கங்களுக்கேற்பவும், தகுதியின் அடிப்படையிலும் உறுப்பினர் நியம செய்யப்படுகின்றனர்.

(இ) அண்மையில் அமைக்கப்பட்ட செகண்டரி கல்விக்குழு தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் தலைவரும் மற்றும் தமிழ் துவக்கப்பள்ளி ஆசிரியர் கழகத்தின் செயலாளரும், ஆசிரியர் பிரதிநிதி (Representatives of Teachers) இடம் பெற்றுள்ளனர்.

(உ) இல்லை.

(எ) தற்போது அதுபோன்ற யோசனை அரசின் பரிசீலனை இல்லை.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஒ) ஒவ்வொரு கல்விக்குழுவும் அமைக்கும்பொழுதோ திருத்தி அமைக்கும் பொழுதோ இந்த யோசனை கவனத்தில் படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்கும்போது, தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் தலை தமிழ்நாடு துவக்கப் பள்ளி ஆசிரியர் கழகத்தின் செயலாளரும் அ குழுவில் இடம் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். துவக்கப் ஆசிரியர் கழகம் என்ற ஒரு அமைப்பு இல்லையென்று கருது ஆகவே வேறு ஒரு அமைப்புக்கு வாய்ப்புத் தந்திருக்கிறார்கள் கருதுகிறேன். வாய்ப்புத் தரப்பட்ட அந்த அமைப்பு, அரசி செல்லப் பிள்ளைகள் என்று கருதிக்கொண்டு, இன்றைய தினம் நடத்துவதாக நோட்டீஸ் வெளியிட்டு, மாண்புமிகு கல்வியமைச்சர் அவ வரவேற்புக் குழுவின் தலைவராகவும், மாண்புமிகு கல்வியமைச்சரை வேற்புக் குழுவின் துணைத் தலைவராகவும் போட்டு, விளம்பர



யிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு அமைப்புக்குக் காட்டுகிற சலுகையை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிற நிலை அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** கல்விக் குழுக்களின் நோக்கங்களுக்கேற்ப, இன்னின்ன ஆசிரியர் பிரதிநிதிகளை நியமனம் செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்களிலே இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒரு பிரிவினுடைய தலைவரை அக்குழுவில் நியமித்திருக்கிறார்கள். தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர்களின் கூட்டணியைப் பொறுத்த வரையில், வழக்கு ஒன்று வழக்கு மன்றத்திலே இருக்கிறது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியில் இன்றைய தினம் நான் பொதுச் செயலாளராக இருக்கும் இயக்கம், இன்னொரு சங்கம் ஆகியவைகளில் யாருக்கு என்று தீர்ப்பு வழங்காத நிலையில், வழக்கில் இருக்கக் கூடிய இரண்டு பேர்களில் ஒருவரை அந்தக் குழுவில் நியமிப்பதன் மூலம், தங்களுக்குத்தான் அங்கீகாரம் அளித்திருப்பதாகச் சொல்லி அதையே தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள உதவாதா என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட குழுக்களில் ஆசிரியர் பிரதிநிதிகளை நியமிக்கும்போது, எல்லா சங்கங்களின் பிரதிநிதிகளையும் போட ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எல்லா சங்கங்களின் தலைவர்களையும் போடுகின்ற கருத்து இல்லை. அந்தக் குழுக்களின் நோக்கத்திற்கேற்பவும், தகுதியின் அடிப்படையிலும்தான் நியமனங்கள் செய்யப்படுகின்றன. அதைக் கட்டுப்படுத்துகிற வகையிலே, இதை இவ்வளவு பெரிதாக எடுத்துக் கொண்டு பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் முதியோர் கல்விக் குழுவில் நாங்கள் போட்டிருக்கிறோம் என்பதையும் எடுத்துச் சொல்லி இந்த அரசு நியாயமாக நடக்கிறது என்று ஆசிரியப் பெருமக்களிடத்திலே சொன்னால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, would not the appointment of Members of this House elected from the Teachers' Constituencies to such Educational Boards formed by Government be welcomed for the reason that it would relieve some of the pressure on the Government in this House? Therefore, should it not be welcomed whole-heartedly by the Government?

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பயன்படுத்துகின்ற முறை பயன்படுத்தி வருகிறோம். ஆலோசனைக் குழுவில் அத்தனை பேரும் அ தினர்களாக இருக்கின்றார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் போது அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லை என்று சொன்னார்கள். அர கத்தினுடைய அபிப்பிராயத்தில் உறுப்பினர்கள் தலையிட முடியாது எ சொன்னார்கள். நாங்கள் அப்படித் தலையிட விரும்பவில்லை. என் முதியோர் கல்விக் குழுவில் உறுப்பினராகப் போட்டிருப்பதற்கு நன்றி தெ துக்கொள்கிறேன். தமிழ்நாடு ஆசிரியர்கள் சங்கப் பொதுச் செயலாளர் போடுவதற்குப் பதிலாக, திரு. எஸ். முத்துசாமி, மேலவை உறுப்பினர் என் தான் போடப்பட்டிருக்கிறது. எல்லா சங்கங்களும் ஒரே விதமாக பட படக்கூடிய முறையில் இருப்பதாக ஆசிரியர்கள் உணரக்கூடிய அளவுக்கு இ வேண்டும். அப்படி இருந்தால்தான், கல்வித் துறை நன்கு நடப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்கால அப்படிப் போடுவதற்கு இந்தக் கல்வித் துறை முன்வருமா என்று கே கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் அவையின் உறுப்பினர் ஆகையால் திரு. செ. முத் எம்.எல்.சி. என்று போட்டிருக்கிறார்கள். செகண்டரி கல்விக் குழு இவ்வளவு பெரிய பிரச்சினையாக இது ஆகிக்கொண்டிருக்கிறது. மாண்பு அங்கத்தினர் அவர்களை முதியோர் கல்விக் குழுவில் உறுப்பினராகப் போ டிருப்பதற்கு மற்ற ஆசிரியர்கள் ஏதும் சொல்லவில்லை என்பதை கவன எடுத்துக்கொள்ள வேண்டும். இது எல்லாம் அரசுக்கு வசதியாக இரு காகச் செய்து கொள்வது. அவ்வப்போது பல குழுக்களை அரசு அ கிறது. அதில் தாங்கள் விரும்புகின்றவர்களைத்தான் போட வேண்டும் சொல்ல முடியாது. மற்றவர்கள் வற்புறுத்துகின்றதன் காரணமாக எ நடக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கல்வி ஆலோசனைக் குழுவில் 9 உறுப் களை இப்போது நியமித்திருக்கிறார்கள். அதிலே நானும் ஒருவனா இ கிறேன். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்ற இதிலே அவர் சொல்கின்றபோது, சங்கங்கள் என்ற அடிப்படையிலே, அடிப்படையிலே என்று சொன்னார்கள். அந்தத் தகுதி சங்கத்தின் த



அல்லது தனி நபர் தகுதியா என்று தெரியவில்லை. எந்த அடிப்படையிலே செய்திருந்தாலும், இருக்கக்கூடியவைகளில் வேறுபாடு காட்டுகிற நிலை உருவாகாமலிருக்க அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** போடப்பட்டிருக்கின்ற 2 பேர்களும் பணி செய்துகொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் சில சங்கங்களில் அவர்கள் பொறுப்புகளை வகித்துக்கொண்டிருக்கலாம். ஆசிரியர்களுடைய சார்பில் இரண்டு பேர்கள் இருக்கவேண்டும் என்ற அந்த எண்ணத்தில்தான் நாம் போட்டிருக்கிறோம். ஆகவே அந்த அடிப்படையிலேதான் பிரச்சினைகளை அணுக வேண்டுமே தவிர, அரசாங்கம் போடுகின்ற குழுக்களிலேயெல்லாம், கல்வி சம்பந்தமான குழுக்களிலே எல்லாம், "எங்களைப் போன்று இருப்பவர்கள் வேண்டும்" என்று சொல்வார்களேயானால், அப்போது அது வேறுவிதமான பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன்:** கல்வி பற்றிய ஆலோசனைக் குழுவில், சட்டமன்ற ஆலோசனைக் குழுவில் நானும் உறுப்பினனாக இடம் பெற்றிருக்கிறேன். செகண்டரி கல்வி குழுவிலே இதற்கு முன்பு நான் உறுப்பினனாக இருந்தேன். ஆனால், அது ஒரு சாதாரண அதிகாரியின் தலைமையில் இருக்கின்ற குழுவாக இருந்தது. அந்த அதிகாரியின் தலைமையில் இருக்கின்ற சங்கடம் கருதி, நான் அந்தக் குழுவில் கலந்துகொள்ளவில்லை. பேரவை மேலவை உறுப்பினர்கள் இப்படிப்பட்ட சாதாரண அதிகாரிகள் தலைவராக இருக்கின்ற குழுக்களில் இருக்க விரும்பமாட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அங்கத்தினர் அவர்கள் அவையில் அதிகாரிகளைப் பற்றிச் சொல்லும்போது, இன்னும் கொஞ்சம் நன்றாகச் சொல்லவேண்டும்.

**திரு. க. அறிவழகன்:** பொதுவாக நம்முடைய ஆசிரியர்கள் குழுக்களில், செகண்டரி கல்விக் குழு, இவைகளில் உறுப்பினர்கள் பலரும் கூடுவதில்லை. அப்படிக் கூடினாலும் அங்கே யோசிப்பதற்கு பொருள் இருப்பதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் குழுக்களுக்கு மேலவை உறுப்பினர்கள் அல்லது பேரவை உறுப்பினர்கள் தலைவர்களாக போடப்படுவார்களா என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லை.

[திரு. பி. ஆர். தாமஸ்]

இடைக்காலங்களிலே, சிறுபான்மை பள்ளியைச் சேர்ந்த, அங்கு பணியாற்ற கூடிய ஆசிரியர்கள் ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் வெளியேற்ற படுகிறார்கள். அவர்களுக்கு மேல் முறையீடுக்கும் வாய்ப்பில்லை. இ நிலையிலே மாவட்ட வாரியாக இவ்வாறு வெளியேற்றப்பட்ட ஆசிரி பெருமக்களை, அவர்களுக்கு என்று வருமாண்டிலே பணியிடங்க ஒதுக்கும்போது—பணியிடங்கள் ஒதுக்கி, அந்த ஆசிரியர்களுக்கு முதலாவ இடம் கொடுத்து, அவர்களுக்கு மாற்றுப் பணிகளைக் கொடுத்து வே பள்ளிகளில் அமர்த்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய முழு விவ என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால், சொல்ல முடியும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** உச்ச நீதி மன்றத்திற்கு இந்த வழக்கு சென்றிருக்கிறது. தீர்ப்புக் கிடைப்பதற்கு நெடுங்காலம் ஆகலாம். இடை பட்ட காலத்தில், சிறுபான்மையோரால் நடத்தப்படும் பள்ளிகளை அரசினுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தற்போது அப்படி பாதிக்கப் பட்ட ஆசிரியர்களுக்கு உதவி செய்கிற வகையில் அவர்களுக்கு வேலை அளிக்கும் முயற்சியை எடுத்து வருகிறோம்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஏற்கெனவே பெரும்பான்மையோரால் நடத்தப் படும் பள்ளிகளில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வேலை அளிக்க வேண்டு மென்று ஆணை வெளியிடப்பட்டு, அப்படி பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வேறு பள்ளிகளுக்கு மாற்ற ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் சிறு பான்மையோர் பள்ளிகளைப் பொறுத்த வரையில், இப்படி திட்டவட்டமான ஆணையைக் கல்வித் துறை அளிக்காததால், பாதிக்கப்பட்ட சிறுபான்மை பள்ளி ஆசிரியர்களுடைய மனுவை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே சிறுபான்மைப் பள்ளிகளுக்கும் பொருந்தும் வகையிலே ஆணையை வெளியிட்டு, தனியார் சிறுபான்மைப் பள்ளிகளில் வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் மாற்றுப் பணி அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து பரிசீலிக்கப்படும்.



1979 மார்ச் 8]

**திரு. செ. முத்துசாமி :** தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (முறைப் படுத்தல்) சட்டத்தின் 19 வது பிரிவின் கீழ் மைனாரிட்டி பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்கும் சட்ட விதிகள் இன்னும் கோர்ட்டில் அடிபடவில்லை. ஆகவே இந்த 19-வது பிரிவின் அடிப்படையிலே அந்த ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வழங்கக் கூடிய விதிகளை உடனடியாக இயற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சிறுபான்மையோரால் நடத்தப் படுகிற கல்வி நிறுவனங்களில், அதை அமைப்பதற்கும், நிருவகிப்பதற்கும் அடிப்படை உரிமை அவர்களுக்கு இருக்கிறது. அதிலே அரசுக்கு எந்தவித மான உரிமையும் கிடையாது என்று தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் மானியம் தருவதால், நமக்குள்ள உரிமையின் அடிப் படையிலே சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்த முறையிலே ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. க. அறிவழகன் :** தனியார் பள்ளிகள் (ஒழுங்குப்படுத்துதல்) சட்டத்தினுடைய எல்லாப் பகுதிகளும் அடிபடாமல், சில பகுதிகள்தான் உயர்நீதி மன்றத்தால் அடிக்கப்பட்டிருக்கின்றன என்று நாங்கள் அறிகிறோம். இந்த நிலையில் தனியார் பள்ளிகளில் பல ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு துன்பத்திற்கு ஆளாகியிருப்பதால், அவர்களுக்கென்று தனியாகக் கவனிக்கக் கூடிய ஒரு இயக்குநரையோ, அல்லது துணை இயக்குநரையோ நியமித்து அவர்களுடைய பிரச்சினையை சுமுகமான முறையிலே தீர்ப்பதற் கான முயற்சியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 1973-ஆம் ஆண்டு ஏற்பளிக்கப் பட்ட தனியார் (முறைப்படுத்தல்) சட்டத்தின் பெரும்பாலான முக்கியமான விதிகள், மதம், மற்றும் மொழி அடிப்படையில் நடத்தப்படும் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஆகவே ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பணி நீக்கத்தில் அரசு தலையிட முடியாத நிலை இருக்கிறது என்றாலும் அவர்களுக்கு நாம் முழு மானியம் தருகிறோம் என்ற காரணத்தால், அதன் அடிப்படையிலே நமக்கிருக்கிற உரிமைகளைப் பயன்படுத்தி இப்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இதற்கு இப்போது இருக்கின்றவைகளை வைத்துக்கொண்டே செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தனியார் பள்ளிகளில் சிலர் ஆசிரியர்களை அச்சுறுத்தி என்றைக்கும் அடிமைகளாக வைத்திருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, ஆண்டுக்கு ஒரு முறை, பள்ளிகளை மூடப்போகிறோம்

[திரு. செ. முத்துசாமி]

முதியோர் கல்விக் குழுவிலே போடப்பட்டிருப்பதைப்பற்றி மீண்டும் அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். முத்துசாமி, மேலவை உறுப்பினர், எம்.எல்.சி. என்றுதான் போடப்பட்டிருக்கிறது. அப்படி சங்கத்தினுடைய பெயரைப் போட்டிருந்தால், ஆட்சேபணையில் வந்திருக்கலாமே என்னவோ தெரியாது. சங்கத்தினுடைய பொதுச் செயலாளர் என்ற முறையில் தான் போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், அதை மாற்றியமைக்கும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 'மேலவை உறுப்பினர் பதவி பெரிய பதவியாக இருப்பதால்' என்று நான் சொன்னேன். குறிப்பிடுவதற்குப் போதும் நான் மேலவை உறுப்பினர் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 137, 138—இந்த இரண்டு கேள்விகளும் ஒரே பொருள் பற்றியதாக இருப்பதால், இரண்டு கேள்விகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

### College Teachers.

* 137. Q.—THIRU ARCOT N. VEERASAMI: (on behalf of THIRU M. SANKARALINGAM and THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of College Teachers affected due to termination from service in contravention of Government Orders, till 20th July 1978 during this academic year; and

(*b*) among them, the number of Teachers who had been working in (i) Private Colleges and (ii) Government Colleges?

**வேலை நீக்கம் செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்கள்.**

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இக்கல்வியாண்டில் 20—7—1978 ஆம் நாள் வரை அரசு உத்தரவை மீறி, வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டதால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்?



(இ) இவர்களில் (i) தனியார் கல்லூரிகளில், (ii) அரசுக் கல்லூரிகளில் பணி புரிந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 25 ஆசிரியர்கள்.

(இ) அரசு உத்தரவை மீறி அரசுக் கல்லூரிகளிலிருந்து யாரும் வேலையிலிருந்து வெளியேற்றப்படவில்லை. தனியார் கல்லூரிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் 25 ஆசிரியர்கள்.

* 138. Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Private College Teachers terminated during the academic year 1977-78; and

(*b*) the action taken by the Government to reinstate them?

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-78 ஆம் கல்வி ஆண்டில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தனியார் கல்லூரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 73 ஆசிரியர்கள்.

(இ) அரசு ஆணை எண் 73, கல்வி, நாள் 11—1—1978 மற்றும் ஆணை எண் 871, கல்வி, நாள் 12—5—1978-ல் பிறப்பித்துள்ள ஆணைகளின்படி, 31—3—1977-ல் பணியிலிருந்த ஆசிரியர்கள், ஜுன் 1978 முதல் மேல்நிலைக் கல்வி முறை அமுல்படுத்துவதனாலோ அல்லது ஜுன் 1979 முதல் கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்புகள் திரும்பப் பெறுவதினாலோ, வேலைக் குறைவு ஏற்பட்டு, பதவியிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள் என்று உறுதி கூறப்பட்டுள்ளது. இந்த உத்திரவை நிறைவேற்றாத சில கல்லூரி நிர்வாகத்தினருக்கு அரசு ஆணை 871-ன்படி வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்தும்படி உத்தரவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி: இந்த அரசு உத்தரவுக்குக் கீழ்படியாமல் இருக்கக்கூடிய ஹோலி கிராஸ் கல்லூரி மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கல்லூரி ஆசிரியர்களுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தியபோது, இந்தப் பிரச்சினை வந்தது. இந்த ஆசிரியருடைய பதவி இடத்தை வேறு ஒரு கல்லூரிக்கு மாற்றி, அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு தரலாம் என்று யோசனை சொல்லப்பட்டது. அதை அரசு செய்யும்.

**திரு. செ. முத்துசாமி:** அப்படி ஏதாவது ஒரு இடத்திலே வெளியேற்றப்பட்டிருக்கின்ற ஆசிரியர்களை வேறு கல்லூரிகளுக்கு மாற்ற ஏற்பாடு செய்யப்படுகிறதா அல்லது இனிமேல் தான் செய்ய வேண்டுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது பற்றிய விவரம் இல்லை. அம்மாதிரிச் செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய முறையை உயர் நிலைப் பள்ளிகளிலும், ஆரம்பப் பள்ளிகளிலும் செப்டம்பர் 5 ஆம் தேதி முதல் பின்பற்றி வருகிறோம். அது வெற்றிகரமாக இருக்கிறது. கல்லூரிகளுக்கும் அதை விஸ்தரிக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியது போல, உயர்நிலைப் பள்ளியிலோ, தொடக்கப் பள்ளியிலோ அந்த உத்தரவை அமல்படுத்துவதில் சிரமம் அதிகமாக இருந்ததில்லை. கல்லூரிகளைப் பொறுத்த அளவிலே, கல்லூரிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் அவர்கள் எந்தப் பாடத்தில் தகுதியுடையவர்களாக இருக்கிறார்களோ அதே பாடத்தில் பணியிடம் மற்ற கல்லூரிகளிலே கிடைப்பது அரிதாக இருக்கிறது. அந்தக் காலத்தில் அந்தக் கல்லூரியிலே ஆசிரியரை எடுத்துக்கொள்ளவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த இடைப்பட்ட காலத்திலே ஆசிரியருடைய நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** வேலை செய்யாத நாட்களுக்கு நாம் நிச்சயமாக சம்பளம் தரமுடியாது. அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு தர வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நாம் இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம். கூடுமானவரையில், எந்தக் கல்லூரியில் வேலை செய்தார்களோ, அந்தக் கல்லூரியிலேயே அவர்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற முயற்சிகளிலே ஈடுபடுவதனாலேதான் இடைவெளி ஏற்படுகிறது. இல்லையென்றால் ஆரம்பத்திலேயே அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு தந்து, அதிகமான அளவிற்குப் பணிப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.



**திரு. பி. ஆர். தாமஸ்:** கல்வித் துறை ஆணையிட்ட பிறகும், வேலை கொடுக்காதிருந்தால், அந்தப் பணத்தைப் பெற அந்த ஆசிரியர்களுக்கு உரிமை இருக்கிறது. இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது? இடையிலே இடைவெளி ஏற்பட்டு, அவர்கள் வேலைக்குச் செல்லாமல் இருந்தால், அந்தக் காலத்திற்கு வாழ்க்கைப்படி என்ற அளவில் ஏதாவது தொகை தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தவறு செய்தது நிர்வாகம். ஆனால் அரசு அதற்காகத் தண்டிக்கப்படக் கூடாது.

## *Contract Carriages and Omni Buses.*

* 139. *Q.*—THIRU C. RAMALINGAM (on behalf of THIRU E. S. VENKATESAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalise or take over the contract carriages and omni buses in the State; and

(*b*) if so, the stage at which the matter now stands?

## ஒப்பந்த ஊர்திகள், ஆம்னி பஸ்கள்.

**திரு. சி. ராமலிங்கம் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன் சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில், ஒப்பந்த ஊர்திகளையும், ஆம்னி பஸ்களையும் தேசியமயமாக்கும் அல்லது அரசே எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) ஆம்.

(இ) பரிசீலனையில் உள்ளது.

**திரு. க. இராமமூர்த்தி:** இன்றைய தேதியில் நம்முடைய மாநிலத்தில் எத்தனை ஆம்னி பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன? அவற்றிலே வேறு மாநிலங்களிலே பதிவு செய்யப்பட்டு, நமது மாநிலத்திலே ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தமிழகத்திலே உரிமம் பெற்று, 65 ஆம்னி பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. வேறு மாநிலங்களில் உரிமம் பெற்று, நம் மாநிலத்தில் எத்தனை பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பது அவ்வப்போது மாறிக்கொண்டிருக்கிறது. காரணம் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், கான்ட்ராக்ட் கேரேஜஸ் என்று சொல்லப்படும் ஆம்னி பஸ்களுக்கு 100 ரூபாய் என்றிருந்த வரியை நாம் இப்போது 280 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளுக்கு அவை இடைஞ்சலாக இருக்கின்றன. அவற்றின் வருவாயைக் குறைக்கின்றன என்பதற்காக ஆம்னி பஸ்களின் வரியை உயர்த்தினோம். புதிதாக எந்த ஆம்னி பஸ்களுக்கும் உரிமம் கொடுக்கக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டு வந்த திட்டம் இன்றுவரை நடைமுறையில் இருக்கிறது. ஆனால் ஆந்திர மாநிலத்தில் ஆம்னி பஸ்களுக்கு உரிமம் 50 ரூபாய்தான். கேரள மாநிலத்தில் உரிமம் 100 ரூபாய். இந்தச் சூழ்நிலை காரணமாக அங்கே உரிமம் பெற்றுக்கொண்டு, டூரிஸ்ட் பஸ்கள், கான்ட்ராக்ட் பஸ்கள் என்று இங்கே ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அதற்கு ஒரே வழி அவற்றை நாட்டுடைமை ஆக்குவதுதான். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. 1973 ஆம் ஆண்டிலே Act 12 of 1973 சட்டம் கொண்டு வந்து, அது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, இப்போது உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. இப்போது 'டிராப்ட் ஸ்கீம்'— வரைவுத் திட்டமிட்டு, அதன் மூலம் இந்தப் பேருந்துகளை நாட்டுடைமையாக்கலாமென்பது பற்றியும் ஆய்வு செய்கிறோம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** சில ஆண்டுகளுக்கு முன்னால் ஆம்னி பஸ்கள் ஓடக்கூடாது என்று தடை உத்தரவு போட்டு, சில மாதங்கள் அவை ஓடாமல் இருந்தன. ஆனால் உயர்நீதி மன்றத்திலே 'ஸ்டே' வாங்கி, மறுபடியும் ஓட்டினார்கள் என்ற தகவல் கிடைத்தது. இன்றைக்கு என்ன நிலை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தமிழகத்திலே உரிமம் பெற்ற 65 ஆம்னி பஸ்களுக்கு 'ரென்யுவல்' தராமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது சரியான நடவடிக்கையல்ல என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்ததால், உயர்நீதி மன்றத்தின் உத்தரவு பெற்று அவைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. க. இராமமூர்த்தி:** தமிழகத்தில் உரிமம் பெற்ற ஆம்னி பஸ்கள், அவற்றின் உரிம ஷரத்துக்களுக்கு மாறாக கான்ட்ராக்ட் கேரேஜ்களாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அப்படி ஓட்டுபவர்கள் மிக வேகமாகவும், மிக அதிகமான வெளிச்சமுள்ள (lights) விளக்கு போட்டுக்கொண்டும் ஓட்டுவதால் பெரிய அளவில் சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவைகள் அந்த விபத்





துக்களில் சிக்கவில்லை என்றாலும், அவைகள் வேகமாகப் போவதாலும், விளக்கு வெளிச்சத்தின் காரணமாகவும் மற்ற பேருந்துகள், கார்கள் போன்ற வாகனங்கள் விபத்திற்கு உள்ளாகின்றன. எனவே இப்படி ஓட்டுவதை உடனடியாகத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு உணர்கிறது. இந்தக் குறைபாட்டை தமிழகத்திலே ஓடுகின்ற அனைத்து கான்ட்ராக்ட் கேரேஜஸ் என்று சொல்லப்படும் ஆம்னி பஸ்கள் செய்து வருகின்றன. அதிகாரிகள் பல உந்துகளைப் பிடித்து, நடவடிக்கை எடுத்தார்கள். 'சீஸ்' செய்தார்கள். அப்படிச் செய்வது தவறு என்று உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். சென்னையிலிருந்து சேலத்திற்கு தனிப்பட்ட ஒருவர் அந்தப் பேருந்தில் சென்றால்கூட, அது சட்டத்திற்கு உட்பட்டு வருகிறதென்று சொல்லியதால், சட்ட ரீதியாக ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. டிப்-டிம் செய்யாமல் வாகனத்தை ஓட்டிச் செல்வதால், சாலை விபத்துக்கள் நிகழ்கின்றன. எனவே கண்டிப்பாக தமிழகத்திலே ஓடும் வாகனங்கள் அனைத்தும் லைட்டிலே பிளாக் பெயிண்ட் அடித்தாக வேண்டுமென்ற சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்த கடுமையான உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஒப்பந்த ஊர்திகளைத் தேசிய மயமாக்குவது குறித்து ஒரு திட்டவட்டமான முடிவை அரசு எடுக்கும்வரை அந்த ஊர்திகள் எந்தெந்த முக்கியமான இடங்களிலிருந்து புறப்படுகின்றனவோ அந்த இடங்களிலிருந்து அரசுப் பேருந்துகளைத் துவக்கி நடத்தினால், அவர்களுக்குப் போட்டியாக அவை செயல்பட்டு, அரசுக்கும் லாபகரமாக அமையும். அதை அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிறது. ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட விரைவுப் பேருந்துகளைப் பல இடங்களிலிருந்து விட நடவடிக்கை எடுத்து, அப்படி விடப்பட்டிருக்கின்றன. வரும் ஆண்டிலே விரைவுப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகளாக, குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து விடவும், இதன் மூலம் ஆம்னி பஸ்களைக் கட்டுப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

**திரு. பி. மாணிக்கம்:** இரவு நேரங்களில் ஆம்னி பஸ்கள் மட்டுமல்லாமல், லாரிகளும் மிக வேகமாக ஓடுகின்றன. எனவே அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள் முதியோர் கல்வித் திட்டக் குழுவிலே அங்கத்தினராகப் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்களை அதில் போட்டதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டு பட்டதாரி ஆசிரியர் கழகத் தலைவர் திரு. மயில்சாமி அவர்களை இடைநிலை வாரிய உறுப்பினராகப் போட்டிருப்பதற்கு தங்களைப் பாராட்டுகிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் நூறு எங்கே இருக்கிறது என்று ஆராய என்ன முயற்சியிலே இருக்கிறார்கள்? அதைப்பற்றி ஆராய்வார்களா? அதைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பிரச்சினையாக உருவெடுத்து வரும்போது, அதை நாம் சந்திப்போம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: இந்தக் குழுக்களிலே உறுப்பினராகப் போடப்பட்டவர்கள் எல்லாம் ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிரியர்கள் பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கிறார்கள். கல்வி எல்லோருக்கும் பொதுவானதுதான். ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து வந்தவர்களைத் தேர்ந்தெடுப்பது போல மற்ற தொகுதிகளிலே இருந்து வந்த உறுப்பினர்களை இதில் தேர்ந்தெடுக்கின்றார்களா? மேலவை உறுப்பினர்கள் அல்லது பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனரா? அப்படி அவர்களில் யாரையாவது போட்டிருக்கின்றார்களா? அப்படி இல்லை என்றால், இனிமேல் போடுவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பேரவை மேலவை எதிர்க் கட்சித் தலைவர்களைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கட்சித் தலைவர் என்ற அளவில் அதிலே இடம் பெற்றிருப்பார்கள்.

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் துணைக் கேள்விக்காக எழுந்து நின்றார்கள்).

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் உட்கார வேண்டும். துணைக் கேள்வி போடுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. கேள்வி போட்டவர்கள் மேற்கொண்டு இரண்டு துணைக் கேள்விகள் கேட்க விதி அனுமதிக்கிறது. நான் சொல்வதை சற்று கேட்டுக்கொள்ளுங்கள். இரண்டாவது, கேள்வி போடாதவர்களையும் நான் துணைக் கேள்வி போட நேரங்களில் அனுமதிக்கிறேன். ஆசிரியப் பிரதிநிதிகள் எல்லாரும் துணைக் கேள்வி போட வேண்டும் என்று நினைக்கிறார்கள். கேள்வியின் முக்கியத்துவத்தைக் கருதி அவர்களையும் அனுமதிக்கிறேன். அதையே பயன்படுத்திக் கொண்டு ஆசிரியப் பிரதிநிதிகள் எல்லோருமே ஒருவர் பின் ஒருவராக துணைக் கேள்வி கேட்கின்றீர்கள். பிறகு துணைக் கேள்விக்கு 2, 3 துணைக் கேள்விகள் கேட்க வேண்டும் என்று இருக்கிறீர்கள். அப்படியே அனுமதித்துக் கொண்டிருந்தால், எப்படி முடியும்? இன்னும் 10, 15 நிமிடங்கள்தான் இருக்கின்றன. இன்னும் 5 கேள்விகள் பாக்கி இருக்கின்றன. தயவுசெய்து இனிமேல் இந்த மாதிரி கேட்காதீர்கள். 2, 3 நாட்களாகப் பொது விவாதமே நடக்கவில்லை. இந்த 6 நாட்கள் பொது விவாதத்திற்காக ஒதுக்கியதில், 2, 3 நாட்கள் கழிந்து விட்டன. மூலக் கேள்வி கேட்பவர்களுக்கு, மேலும் 2 துணை வினாக்கள் கேட்க கட்டாயம் அனுமதிக்கவேண்டும். கேள்வியினுடைய முக்கியத்துவம் கருதி, அவர்களுக்கு மேலும் ஒன்று இரண்டு கேள்விகள் கேட்க அனுமதிக்கிறேன். துணைக் கேள்வி கேட்பவர்களும், ஒவ்வொன்றிலும் துணைக் கேள்விகள் கேட்க வேண்டுமென்றால், அது எப்படி முடியும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தேவையில்லாத துணை வினாக்களை நான் போடுவது வழக்கம் கிடையாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் கேள்வியே கேட்க ஆரம்பித்து விட்டீர்கள். கேட்க வேண்டியதைக் கேளுங்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியுடன் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு சங்கங்களாக ஆசிரியர்கள் பிளவுபட்டு இருக்கின்றனர். கல்வி வளர்ச்சிக்காகவும், ஆசிரியர்கள் ஒற்றுமைக்காகவும், அனைத்து ஆசிரியர்கள் சங்கத்தை உருவாக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கடந்த 15 மாதங்களாக அதற்காக முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களின் அனுமதியோடு சொல்லுகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். அது இந்த அவைக்குத் தவறான விளக்கமாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சரக்குப் பெருந்துகளான லாரிகளை நெடுஞ்சாலைகளில் அதிக வேகமாக ஓட்டுவதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே லாரிகளில் 'டேக்கோ கிராப்' பொருத்த வேண்டுமென்ற சட்டத்தை அரசு விரைவில் அமுல் நடத்த இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு சரக்குப் பெருந்துகளில் இரண்டு ஓட்டுநர்கள் இருக்க வேண்டுமென்ற உத்தரவைப் போட்டோம். நடைமுறையில் சிக்கல்கள் இருந்ததால், அந்த சரக்குப் பெருந்துகளை ஓட்டும் ஓட்டுநர்கள் குறிப்பிட்ட காவல் நிலையத்தில் கையொப்பமிட வேண்டுமென்ற உத்தரவைப் போட்டிருக்கிறோம்.

THIRU J. M. MIAKHAN: Sir, these contract carriages are being used for regular service, for example, from Madras to places like Coimbatore, Salem, Tirunelveli, etc., and they are a competition to regular buses. These contract buses are intended mainly for pilgrim traffic and for tourist traffic. But they are being used regularly for taking passengers from point to point. Are the Government aware of this?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா-விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

THE HON. THIRU C. PONNAIYAN: Sir, the Government are fully aware of the malpractices pursued by the contract carriages and omni-buses. The only solution to mitigate and solve this problem is the nationalisation of contract carriages. Therefore, the Government are taking steps in this regard.

புலவர் புலமைப்பித்தன்: ஆம்னி பஸ்களில் உரிய இடங்களுக்கும் அதிகமாக ஆட்களை ஏற்றிக்கொண்டு வருகிறார்கள் என்றும், அதிலும் குறிப்பாக பெங்களூரிலிருந்து வரும் ஆம்னி பஸ்களில் மிக அதிகமாக ஆட்களை அடைத்துக்கொண்டு வருகிறார்கள் என்றும் புகார் செய்யப்படுகிறது. அப்படி அதிகப்படியாக ஏற்றிச் செல்லக் கூடாதென்று கட்டுப்பாட்டை அரசு விதிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கட்டுப்பாடு ஏற்கெனவே இருக்கிறது. கட்டுப்பாட்டை மீறும் இடங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாகனங்களோடு ஒத்துழைக்கின்ற அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களெல்லாம் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். கடுமையான நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது.



## *State Transport Corporations*

* 140. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state the names of the State Transport Corporations which are (i) running on profit and (ii) running in loss?

### அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்.

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் (i) இலாபத்தில் நடப்பவை, (ii) நஷ்டத்தில் நடப்பவை எவை, எவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (i) 1977-78ம் ஆண்டின் கணக்குப்படி பல்லவன் (பெருநகர்), பல்லவன் (விரைவு), பாண்டியன், சேரன், சோழன், அண்ணா, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் இயங்கின.

(ii) பல்லவன் (புறநகர் பிரிவு), தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்கின.

(பிற்பகல் 5-00)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: பல்லவன் (புறநகர் பிரிவு) மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகங்கள் இரண்டும் நஷ்டத்தில், இழப்பில் இயங்குகின்றன என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இழப்பு ஏற்படுவதற்கான காரணங்களை அரசு ஆராய்ந்து பார்த்துள்ளதா? அப்படி ஆராய்ந்து பார்த்திருந்தால் இந்த நஷ்டங்களை நிவர்த்திக்க என்ன முறைகளை அல்லது திட்டங்களை அரசு தீட்டியுள்ளது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நஷ்டம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று அரசு ஆராய்ந்து பார்த்தது. அப்படி ஆய்வினை நடத்தியதன் விளைவாக நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த பல போக்குவரத்துக் கழகங்கள்—பல்லவன் (புறநகர் பிரிவு), தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகங்கள் நீங்கலாக—இலாபத்தில் இயங்கத் துவங்கியுள்ளன. குறிப்பாக மெட்டீரியல் மேனேஜ்மெண்ட் மற்றும் பெர்சனல் மேனேஜ்மெண்ட் போன்றவைகளை விஞ்ஞான ரீதியில் நடைமுறைப்படுத்தி அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். மேலும் தொழில் வல்லுநர்களும், பொறியியல்

[திரு. சி. பொன்னையன்] [1979 மார்ச் 8

வல்லுநர்களும் மட்டும்தான் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகப் பொறுப்பிலே இருக்க வேண்டுமென்கின்ற ஒரு கொள்கையை நடைமுறைப்படுத்தி செயலுக்குக் கொண்டு வந்திருக்கின்றோம். டயரை ரிட்ரீட் என்ற முறையைப் பயன்படுத்தி சிக்கனமாக உபயோகப்படுத்த முடியும் என்பதைக் கண்டுபிடித்திருக்கிறோம். ஸ்பேர் பார்ட்ஸைப் பொறுத்த வரையில், அவைகளைப் புதுப்பித்து சிக்கன முறையில் உபயோகப்படுத்துகிறோம். டீசலைப் பொறுத்த வரை, பியூவல் எக்கனாமி என்ற முறையில் எப்படி எப்படி சிக்கனப்படுத்தலாம் என்கிற முறைகளையெல்லாம் ஆய்வு செய்து கண்டுபிடித்திருக்கிறோம். அப்படிக் கண்டுபிடித்து, சென்ற ஓராண்டுக் காலமாக அந்த முறைகளை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களை இலாபத்தில் இயங்கச் செய்திருக்கின்றோம். பல போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற நிலையை மாற்றி இன்றைக்கு ஏழு போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்திலும் இரண்டு போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்திலும் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்ற ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** 1977-78 ஆம் ஆண்டில் பல போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்திலும் சில போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்திலும் இயங்கின என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். 1977-78ஆம் ஆண்டில் இலாபத்தில் இயங்கிய ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் எவ்வளவு இலாபத்தைச் சம்பாதித்தது என்ற விவரங்களையும் நஷ்டத்தில் இயங்கிய ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் எவ்வளவு நஷ்டமடைந்தது என்ற விவரங்களையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** உறுப்பினர் கேட்ட விவரங்களைத் தருகிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு) 30,21,000 ரூபாய் இலாபத்திலும், பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு) 2,000 ரூபாய் இலாபத்திலும், பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர் பிரிவு) 17,62,000 ரூபாய் நஷ்டத்திலும், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 1,60,26,000 ரூபாய் இலாபத்திலும், சேரன் போக்குவரத்துக் கழகம் 95,73,000 ரூபாய் இலாபத்திலும், சோழன் போக்குவரத்துக் கழகம் 45,24,000 ரூபாய் இலாபத்திலும், அண்ணா போக்குவரத்துக் கழகம் 28,42,000 ரூபாய் இலாபத்திலும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் 74,79,000 ரூபாய் இலாபத்திலும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் 41,000 நஷ்டத்திலும் இயங்கின.



1979 மார்ச் 8]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பல்லவன் (புறநகர் பிரிவு) மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் இரண்டையும் ஒன்றாக இணைப்பது குறித்து பரிசீலித்துக் கொண்டிருப்பதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சென்ற கூட்டத் தொடரிலேயே அறிவித்தார்கள். அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** புறநகர் பிரிவு மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதன் காரணமாகவும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாகவும் பெருநகர் பகுதி விரிவடைந்துகொண்டு வருகின்ற காரணமாகவும் மெட்ரோ சர்வீசை அர்பன் ஏரியாக்களுக்கும் நீட்டிக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அப்படி நீட்டிக்க வேண்டிய நிலைக்கு நாம் வரும்போது, டிஸ்ட்ரிக்ட் ரூட் குறுகிய நிலைக்கு வந்து பி.டி.சி.யின் மாவட்டப் பிரிவின் எல்லை குறுகி, நஷ்டம் வந்து விடும். பிளீட் ஸ்டிரெங்த் போதுமான அளவு இருந்தால்தான், (economy in operation) என்ற அடிப்படையில் அதை நிர்வகிக்க முடியும். அதனால்தான் செங்கற்பட்டுக்கு வெளியேயுள்ள பகுதியையும், தென்னாற்காடு, வட ஆற்காடு ஆகிய பகுதிகளையும் ஒன்றாக இணைத்து அதை ஒரு பகுதியாக்கி அந்தப் பகுதியில் இந்த இரண்டு போக்குவரத்துக் கழகங்களையும் இணைக்கலாமா என்ற கருத்து அரசின் பரிசிலனையில் இருக்கிறது. அதுபற்றி விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரை இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றவைகளில் சாலை விபத்து காரணமாக, பேருந்துகள் விபத்திற்குள்ளானதன் விளைவாக எந்த அளவுக்கு அவற்றின் இலாபம் குறைந்திருக்கிறது? அதைப் போலவே நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற இரண்டு போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, விபத்துக்களின் காரணமாக அவற்றின் இலாபம் எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது? சாலை விபத்தின் காரணமாகவும் பேருந்துகள் விபத்துக்கு உள்ளானதன் காரணமாகவும் அவைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அதுபற்றிய குறிப்பு ஏதுவும் இல்லை. சாலை விபத்துக்கும் போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் அல்லது நஷ்டத்தில் இயங்குவதற்கும் தொடர்பு இல்லை. விபத்து ஏற்படும் வகையில் நஷ்ட ஈடு அல்லது காம்பன்சேஷன் என்ற முறையில் கொடுக்கக் கூடிய தொகை பெரிய தொகை அல்ல. விபத்தில் உயிரிழப்பவரின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய்தான் அதிகபட்சம் வழங்கப்படுகிறது. நீதிமன்றத்திற்குப் போனால், சில நேரங்களில் மேலும் சற்று அதிகமாகக் கொடுக்கப்படு

கிறது. ரோடுகள் சரியாக இல்லாவிட்டால், டயர் தேய்மானம் ஏற்படுவதுடன் டீசல் உபயோகம் அதிகம் ஏற்படும். இப்படிப்பட்ட காரணங்களால் நஷ்டம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதனால் அந்த நிலையைக் கூட ஆய்ந்து, முதன் முதலாக போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்ற பெருந்துகள் ஓடு கின்ற வழித் தடங்களிலுள்ள ஒழுங்கற்ற நிலையிலுள்ள சாலைகளை போக்கு வரத்துக் கழகங்களிலிருந்து வரக்கூடிய இலாபத்திலிருந்தே செப்பனிட வேண்டிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அனைத்துப் போக்குவரத்துக் கழகங் களின் நிர்வாக இயக்குநர் பதவிகளுக்கும் தானியங்கி பொறியியல் தகுதி பெற்றவர்களாக இருப்பதோடு (டிராபிக்) போக்குவரத்து பொறியியல் தகுதி என்ற உயர் கல்வியையும் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை தந்து அவர் களைப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஏற்கெனவே நான் கூறியேன். போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, மோட்டார் வாகனத் தொழில் நுட்பப் பொறியியல் பட்டம் வாங்கியிருப்பவர்களுக்குத்தான் முன்னுரிமை தரப்படும் என்ற அடிப்படையில் நிர்வாக இயக்குநர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது. இப்பொழுது உள்ள போக்குவரத்துக் கழகங் களில் ஓரிரு கழகங்களைத் தவிர மற்ற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களி லும் உள்ள நிர்வாகக் குழு இயக்குநர்களை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. டிராபிக் எஞ்சினியரிங் தகுதியும் தானியங்கி பொறி யியல் தகுதியும் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்றால், அப்படிப்பட்டவர் கள் கிடைப்பது சற்று சிரமமாக இருக்கும். மெக்கானிக்கல் எஞ்சினியரிங், ஆட்டோமொபைல் எஞ்சினியரிங் மற்றும் டிராபிக் எஞ்சினியரிங் இவை போன்ற எல்லாவற்றிலும் தகுதி பெற்றவர்களைத்தான் நிர்வாக இயக்குநர் களாகப் போடுவதென்றால், அப்படிப்பட்ட தகுதி பெற்றவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் இருப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** போக்குவரத்துக் கழகங்களிலேயே பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மட்டும் தான் 1 கோடி ரூபாய்க்கு மேல் இலாபம் ஈட்டியிருக்கிறது. தொடர்ந்தும் இலாபத்தில் இருந்து வருகிறது. நஷ்டத் திற்கே போகவில்லை. டி.வி.எஸ். பாண்டியன் போக்குவரத்துக் கழகத் துடன் இணைக்கப்பட்டதன் காரணமாக, அதில் கையாளப்பட்ட நிர்வாக அமைப்பு முறைகளும், சிக்கன முறைகளும் இதில் கையாளப்படுவதால்தான் இவ்விதம் இலாபம் வருகிறது என்று நான் கருதுகிறேன். ஓரளவு அடிப்



படையும் அதுவாகத்தான் இருக்கும். அதிலுள்ள நிர்வாக நடைமுறை களையும் சிக்கன நடைமுறைகளையும் மற்ற கழகங்களிலும் செயல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** டி.வி.எஸ். நல்ல முறையில் இயங்கி வந்தது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் டி.வி.எஸ். இடமிருந்து பஸ்களை எடுத்து நாம் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பித்த போது, நல்ல முறையில் இலாபம் இல்லாத நிலை தான் இருந்துகொண்டிருந் தது. நாம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக கடந்த ஆண்டு முதல் தான் அது நல்ல இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருந்த போக்குவரத்துக் கழகங்கள் மெல்ல மெல்ல இலாபத்தில் இயங்க ஆரம்பித்திருக் கின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நஷ்டத்தில் இயங்கிய காலத்தில், என்ன காரணத்தால் அவைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது? நஷ்டம் ஏற்படக் காரணமாக இருந்த காரணஸ்தர்கள் யார் என்று ஆராய்ந் தார்களா? அப்படி நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஆய்வு நடத்தப்பட்டது. இன்னார் தான் அதற்குப் பொறுப்பு என்று யாரையும் கூற முடியாது. அப்பொழுது கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள், அணுகுமுறைகள் தவறாக இருந்தன. அனுபவரீதியாக, பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் போதிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு, நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தவைகள் கூட நஷ்டம் போய் இலாபம் சம்பாதிக்கத் தொடங்கியிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படாதது என்பதைக் குறிக்கும்).

## 2. கவன ஈர்ப்பு.

**(1) திருநெல்வேலி மாவட்டம் தென் கல்வி மாவட்டத்திலுள்ள தனியார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சென்ற ஆண்டிலிருந்து எல்லா மாதமும் முதல் தேதி சம்பளம் பெறாதது குறித்து.**

**திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :** தலைவரவர்களே,

திருநெல்வேலி மாவட்டம் தென் கல்வி மாவட்டத்திலுள்ள தனியார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சென்ற ஆண்டிலிருந்து எல்லா மாதமும் முதல்

தேதி சம்பளம் பெறாது 3 ஆம் தேதிக்கு மேல் 10 ஆம் தேதிக்குள் பெ நிலையைப் பற்றி" மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5-10)

**(2) வட ஆற்காடு மாவட்ட அரிசன நலத் துறைப் பள்ளிகளில் ஆசிரியர் கோரிக்கைகளைச் செயல்படுத்தாதது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர் "வடாற்காடு மாவட்ட அரிசன நலத்துறைப் பள்ளிகளில் பணியா ஆசிரியர்களின் முக்கியமான, நியாயமான கோரிக்கைகளைச் செயல்படுத் இருப்பதாலும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் முறையீடுகளை நிருவா அலட்சியப்படுத்தியதாலும், ஆசிரியர்கள் பழி வாங்கப்படுவதாலும், களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தி குறித்து".
மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தி கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மேலவை தலைவரவர்களே, அவையின் முன் விவர அறிக்கை† ஒன்று வைக்கப் டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அரிசன நலத் து அமைச்சர் அவர்கள் இதில் ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று அடிப்ப யில் மேற்கொண்டிருக்கிற முயற்சிகள் குறித்து என்னுடைய நன்றியையு பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும் இரண் விளக்கங்களை மட்டும் கேட்க விரும்புகிறேன். 1—10—1978-க்குப் பிற தான் தேர்வுநிலை அளிக்கப்படும் என்று குறிப்பில் காணப்படுகிறது. அதை போலவே பணியாற்றுகிற வார்டன்கள் கோடை காலத்தில் இருக்

* 259-260 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

† 260-265 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ள



விடுமுறையை ஈட்டிய விடுப்பிற்குக் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது என்றும் குறிப்பில் இருக்கிறது. எனவே இவ்விரண்டையும் மாற்றி, Non-vacation Department ஆக இதைக் கருதி அவர்களுக்கு அனைத்து ஈட்டிய விடுப்பும் கொடுக்கவும், தேர்வுநிலை மற்ற ஆசிரியர்களுக்கு எவ்வாறு கொடுக்கப்படுகிறதோ அதைப்போலவே இவர்களுக்கும் கொடுக்கவும், அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவர அறிக்கையைக் கவனமாகப் படித்திருப்பார்கள் என்றுதான் கருதுகிறேன். கோரிக்கை 18-ல்

"அரசு ஊழியர்களுக்கு (விடுமுறையில்லாத்துறை) இருப்பதுபோல் ஈட்டிய விடுப்புப் பயனை விடுதிக் காப்பாளர்/காப்பாளனிகளுக்கும் அளித்தல்" காப்பாளர் மற்றும் காப்பாளனிகளுக்கு விடுமுறைத் துறையைச் சார்ந்தவர் களாதலால் (Vacation Department) விடுமுறைத் துறைகளுக்கு ஈட்டிய விடுப்பு அனுமதிப்பதற்கான விதி இவர்களுக்கும் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு இந்த அரிசன நலத் துறை ஆசிரியர்கள் என்னென்ன கோரிக்கைகளைக் கொடுத் திருக்கிறார்களோ அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து அவைகளில் பெரும்பான்மையானவற்றை நிறைவேற்றியிருக்கிறது. அப்படியிருந்தும், பணி யாற்றும் அலுவலர்கள் அவைகளை நிறைவேற்றாமலிருந்தால், அதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் மீண்டும் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரிசன நலத் துறைப் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்கள் படுகிற சிரமங்கள், இன்னல்கள், தொல்லைகள் இந்த மாநிலம் முழுவதுமே கொஞ்ச நஞ்சமல்ல. எனவே, அரிசன நலத் துறையில் இருக்கிற பள்ளிகள்—அவைகள் உயர் நிலைப் பள்ளிகளானாலும் சரி, தொடக்கப் பள்ளிகளானாலும் சரி, நடுநிலைப் பள்ளிகளானாலும் சரி—அவை களனைத்தையும் ஒரே நிருவாகத்தின் கீழ் கொண்டுவந்து, அவைகளுக்கு என்று தனியாகக் கல்வி அதிகாரிகளை நியமித்து, அவர்களுடைய குறைகளை உடனுக்குடன் தீர்த்தால், பள்ளிகளின் நிலையும் கல்வியின் தரமும் உயரும் என்ற காரணத்தால், அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்** தற்போது இருக்கிற நிருவாக அமைப்பும், பணியாற்றுகிற பணியாளர்கள் இந்தத் துறைக்கு என்று நிரந்தரமாக இல்லாமல் இருப்பதும்தான் இவையனைத்திற்கும் காரணம

என்று நான் பொறுப்பேற்றுக்கொண்ட உடனே உணர்ந்திருக்கிறேன். எனவே தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஏற்கெனவே கேட்ட கேள்வியொன்றிற்குப் பதில் சொல்லும்போதுகூட, 'இவைகளுக்கெல்லாம் விடிவு காலம் விரைவில் வர இருக்கிறது' என்று சொன்னேன். உறுப்பினர் அவர்களை அதுவரை கொஞ்சம் பொறுத்திருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். காலம் வரும். எல்லாம் தீர்த்து வைக்கப்படும்.

### 3. 1979-80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு ஒரு அறிவிப்பு. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் 7 நாட்களுக்கு நடக்கலாம் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. கடைசி நாள் எதிர்க் கட்சி தலைவர் அவர்களுக்கும் ஆளும் கட்சியின் சார்பில் பதில் சொல்வதற்கும் என்று ஒதுக்குவது மரபு. ஆகவே 6 நாட்களில் ஏற்கெனவே 4 நாட்கள் முடிவடைந்து விட்டன. தயவு செய்து உறுப்பினர்கள் தங்களின் நேரத்தைக் குறைத்துக் கொண்டு, சுருக்கமாக, ஆனால் உருக்கமாக தங்களுடைய கருத்துக் களைச் சொல்லி ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சைத் துவங்குவதற்கு முன்பாக ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது தங்களுடைய கருத்துக்களைத் தாராளமாகச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் மேலும் ஒரு சில நாட்களுக்கு அவையை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதை நான் செய்ய இயலாது. அலுவல் ஆய்வுக் குழுதான் அதைச் செய்ய வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அலுவல் ஆய்வுக் குழுவின் கவனத்திற்குச் சேர்த்துத்தான் இந்தக் கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது :** தலைவர் அவர்களே, ஆசிரியர் களின் பிரதிநிதியான மாண்புமிகு உறுப்பினர், அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது பேசலாம். அதிலும் குறிப்பாக கல்வித் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதிக்க இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதுவேகூட போதாது என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதில் மிக முக்கியமான கருத்துக்களை மிக அதிகமான நேரத்தை எடுத்துக்கொண்டு வலியுறுத்திச் சொல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பாக ஒரு முன்னுரையாக ஒருசில கருத்துக்களை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதில் மிக முக்கியமான கருத்து என்ன வென்றால் திட்டமிடுவதிலும், திட்டங்களை அமுல்படுத்துவதிலும் நாம் தற்போது பின்பற்றுகிற முறையை, போக்கை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் வந்திருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். நாம் பத்தாம் பசலித்தனமாக, இன்னமும் குவியல் முறையிலேயே திட்டத்தைப் போடுவதி லும், செயல்படுத்துவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குவியல் முறைத் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு விரைவாகவும் நாம் விரும்புகிற வகையிலும் நலன்களை, நன்மைகளைக் கொண்டு சேர்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இனி திட்டமிடும் போதும், திட்டத்தைச் செயல்படுத்தும்போதும் நம்முடைய அணுகுமுறை மாற வேண்டும். இன்னும் சொல்லப் போனால் 'லோகல் பிளானிங்' அல்லது 'ஏரியா பிளானிங்' அல்லது 'டி-சென்ட்ரலைஸ்டு பிளானிங்' என்ற தத்துவங் களை மிகப் பெரிய அறிஞர்கள், அனுபவம் மிக்க அறிஞர்கள் சொல்லி வருகிறார்கள். அப்படிப்பட்ட பரவல் முறையில் திட்டமிட்டு அதைப்பரவ லான முறையில் செயல்படுத்த வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைய தினம் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் இல்லை. அதிக அதிகாரத்தை உறுதி செய்யும் வகையில், இருக்கிற விதிமுறைகளை மாற்றி, மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிகமான அதிகாரம் கொடுத்து, அவைகளை 'மினி சட்ட சபைகளாக'—சிறிய சட்ட மன்றங்களாக—மாற்றும் வகையில் சட்ட திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறு செய்தாலொழிய, மக்களுக்கு மிக விரைவாக நாம் போடுகிற திட்டங்களுடைய பலன் போய்ச் சேராது.

தற்போது சாதாரணமாக பல்பு (Bulb) வாங்கக்கூட சென்னையிலுள்ள அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டிய நிலையில்தான் பெரும்பாலான பஞ்சாயத்துக்களும், ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. எப்படி இந்த அரசும் பல்வேறு கட்சிகளும் மாநில சுயாட்சி என்ற பெயரில் அதிக அதிகாரத்தை மாநில அரசுக்கு வேண்டுமென்று வற்புறுத்துகின்றனவோ

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அதைப் போலவே மாவட்ட சுயாட்சியை நான் இங்கே வற்புறுத்த
கிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிகமான அதிகார
கொடுத்து, அதன் மூலம் மக்களுக்கு விரைவாகப் பலன்கள் கிடைக்க
வேண்டும். இந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டு
கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால்தான், திட்டங்களின் ப
சாதாரண பாமர மக்களை விரைவில் சென்றடைய முடியும். அந்த
யில் சிந்திக்க வேண்டிய கால கட்டத்தை நாம் அடைந்து விட்டோம்.
கான அவசியம் தற்போது வந்துவிட்டது என்பதை இந்த அரசின்
திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் கிராமப்புறங்களில் உறுதியான வேலை வாய்ப்
திட்டம் ஒன்றைச் செயல்படுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற
இதை நான் வரவேற்கிற அதே நேரத்தில், இந்தத் திட்டத்தைப் பற்றிய
தெளிவான, விரிவான விவரம் எதும் தரப்படவில்லை. இருப்பினும் அ
திட்டத்தின் நோக்கம் மிக நன்றாக இருக்கிறது. எனவேதான் மாண்பு
உறுப்பினர்கள் பேசும்போது, இந்தத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு
எந்த அளவுக்கு நிறைவேற்றப்படும் என்ற சந்தேகத்தை வெளிப்படுத்தி
கள். அந்தச் சந்தேகம் எனக்கும் இருக்கிறது. காரணம் இந்த அறி
யில் குறிப்பிட்டிருப்பதைப் போல், கிராமப்புறங்களிலுள்ள 18 வயதுக்கு
பட்ட அத்தனை இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பும், அதன் காரண
அவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபாய் மூன்றும், கோதுமையும்,
கிடைக்கும் என்றால், கிராமங்களைப் பொறுத்தவரையில், அது ஒரு
காலமாகத்தான் அமையும். ஆனால், இந்தக் குறிப்பில் அப்படிப்
திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, அந்தத் திட்டத்திற்
எந்த விவரமும் தரப்படவில்லை. அப்படிப்பட்ட திட்டம் செயல்படுத்த
மானால், நாங்கள் அதை முழு மனதுடன் வரவேற்போம் என்று சொ
கொள்வதுடன், அந்தத் திட்டத்தைச் சிறப்பான முறையில் செயல்ப
வேண்டும் என்றும் இந்த அரசை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து அறிக்கையில் கால்நடை பராமரிப்பு பற்றிக் குறிப்பிட்டிருக்
கள். உலகத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையில் நாலில் ஒரு ப
இந்தியாவிலே இருக்கின்றது. அந்த விகிதத்திலேயே நமது மாநிலத்தி
கால்நடைகள் இருக்கின்றன. ஆனால் உலகத்தில் இருக்கிற எல்லா கால்நடை
களிலும் மிகவும் மோசமான, தரம் குறைந்த கால்நடைகள் இந்தியாவி
இருக்கின்றன என்பதை ஆய்வுக்குப் பிறகு தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்
உண்மையான நிலையுங்கூட. கால்நடைப் பராமரிப்பு பற்றிப் பேசும்போ
நாம் கால்நடைகளின் மிக முக்கிய தேவையான 'புல்வெளிகளை', மேய்



[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

நிலங்களைப்பற்றிச் சிந்திப்பதேயில்லை. நமது நாட்டில் அதிலும் குறிப்பாக நமது மாநிலத்தில் தரிசு நிலம் ஏராளமாக இருக்கிறது. அந்தத் தரிசு நிலத்தில் நிரந்தரமான மேய்ச்சல் பகுதியை, புல்வெளிப் பகுதியை உருவாக்குவது என்பது கால்நடை வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதால், அரசாங்கம் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் என்று குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 7.12 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களின் எண்ணிக்கையையும், அந்தக் கிராமங்களில் வாழும் மக்களுடைய எண்ணிக்கையையும் வைத்துப் பார்த்தால் ரூபாய் 7.12 கோடி என்பது மிகக் குறைவான தொகை என்பது புரியும்.

(பிற்பகல் 5-20)

ஆக, இந்த ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்காக, முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இந்த அரசு, கிராமப்புற மக்களுடைய வளர்ச்சிதான் எங்களுடைய முக்கியமான நோக்கம் என்று சொல்லுகின்ற இந்த அரசு அதற்கென அதிகத் தொகையை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது மிக மிக அத்தியாவசியமான ஒன்று. இந்தத் திட்டத்திற்கு சிறிய தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தையொட்டி மற்றொரு கருத்தையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் பல்வேறு நேரங்களிலே, பல்வேறு சமயங்களிலே இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்திருக்கிறோம். கிராமப்புறங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் கிராம ஈட்டுப்படி, கிராமப்புற வீட்டு வாடகைப்படி, இந்த இரண்டும் தர வேண்டும் என்று நாங்கள் நீண்ட காலமாக இந்த அரசை வற்புறுத்திக் கேட்டிருக்கிறோம். மூன்றாவது ஊதியக் குழு உண்மையிலேயே இந்தக் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து நீதி வழங்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அந்தக் குழு நியாயம் வழங்கவில்லை. ஆகவே, கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் நியாயம் வழங்குகின்ற வகையிலே இந்தப் பிரச்சினையை மறு பரிசீலனை செய்ய வேண்டும். கிராமப்புற மக்களுடைய முன்னேற்றத்திற்காகப் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய, அரசு ஊழியர்களுடைய இந்தக்

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், 'எந்த அரசியல் கட்சியும் குறிப்பிடாததை' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த அரசும் என்று சொன்னால் சரி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, நான் சொல்ல அரசியல் கட்சிகள் தங்களுடைய தேர்தல் பிரகடனத்திலே குறிப்பிட்ட சொன்னேன். அதிலே குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வெற்றி வைக்கப்படும் என்ற நம்பிக்கையில் இருந்தோம். ஆனால் அது இ வரை நிறைவேற்றி வைக்கப்படவில்லை என்ற கருத்தை வருத்தத்தோ அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அந்தத் தேர் பிரகடனத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு உட யாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு களுக்கும் அவர்களுடைய சம்பளத்தில் பாகுபாடு, வேறுபாடு காலமாகவே இருந்து வருகிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் உள்ள வேலை ஒரேவிதமான வேலைதான். சாராருக்கும் ஒருவிதமான வயிறுதான் இருக்கிறது. இரண்டு சாராருக் ஒரேவிதமான தேவைகள்தான் இருக்கின்றன. அப்படி இருக்கும்பே மத்திய அரசு ஊழியர்களுக்கு என்று ஒருவிதமான ஊதியமும், மாநில ஊழியர்களுக்கு என்று இன்னொரு விதமான ஊதியமும் யித்திருக்கின்ற இந்த ஏற்றத்தாழ்வை நீண்ட காலமாக அரசு ஊழியர் சங்கங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தும், அதைக் தற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கு அரசு விரைந்து, வேகமாக நடவடிக்கை வேண்டும். தேவைப்பட்டால் போராட வேண்டும். மத்திய அரசுடன் காக மோதினால், நான் அதை வரவேற்கத் தயார். இங்கே, நம்மு மாநிலத்தின் சார்பாக நாடாளுமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் காகப் போராட வேண்டும். மத்திய அரசு, மாநில அரசு ஊழியர்களு வேலை நிலைமை, சர்வீஸ் கண்டிஷன் என்பவற்றில் எந்தவிதமான தாழ்வும் இல்லாதபோது, ஊதியங்களிலும் எந்தவிதமான ஏற்றத்தாழ் இருக்கக்கூடாது. அந்த உன்னதமான நிலையை அடைவதற்கு அனைவரும் சேர்ந்து போராட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறே அப்படிப்பட்ட ஒரு போராட்டத்திற்கு, தமிழகத்தில் உள்ள அரசு ஊழி களும், ஆசிரியர்களும் மொத்தம் 7½ லட்சம் பேர்களும் உறுதுணையாக இ பார்கள் என்ற கருத்தினையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அரசுக் தெரிவித்துக்கொள்கிறேன்.



.. குழந்தைகள் நலத் திட்டத்தைப்பற்றி நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்காக அரும்பொருள் காட்சியகம் ரூ. 6 லட்சம் செலவில் துவக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் அதை வரவேற்கிறோம். பாராட்டத்தக்க ஒன்று இது. அதே சமயத்தில், அதையொட்டி இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உலகக் குழந்தைகள் ஆண்டு விழா கொண்டாடுகின்ற இந்த நேரத்திலே எப்படி அமெரிக்காவிலே டிஸ்னி லேண்ட் என்று ஒரு உலகத்தை குழந்தைகளுக்காக என்று மட்டுமல்ல, பெரியவர்களுக்காகவும் அவர்கள் உருவாக்கி, அது எப்படி உலகப் புகழ் பெற்றிருக்கிறதோ, அப்படிப்பட்ட ஒரு உலகத்தை, ஒரு டிஸ்னி லேண்டை இங்கேயும் நாம் அமைக்க வேண்டும். இந்த ஆண்டிலே நாம் அமைத்தால், அது மிகப் பொருத்தமுடையதாக இருக்கும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இது பண விவகாரம் ஆயிற்றே என்று குறிப்பாக சைகை காட்டுகிறார்கள். இது நிதி சம்பந்தமான விவகாரம் தான், இருந்தாலும், இப்படிப்பட்ட ஒரு திட்டத்தின்மூலம் ஏழைக் குழந்தைகள், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள், அனாதைக் குழந்தைகள் மேம்பாட்டிற்காக, அவர்களுடைய மன வளர்ச்சிக்காக மேற்சொன்ன குழந்தைகளுடைய உலகம் உருவாக்கப்படுமேயானால், இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு தமிழகம் வழிகாட்டியாக இருக்கும் என்பதால், நிதிச் சுமையைத் தள்ளி வைத்துவிட்டு, இதை ஒரு முக்கியமான திட்டமாக ஏற்றுக்கொண்டு அரசு செயல்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஊனமுற்ற குழந்தைகளுக்குச் சில சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை வரவேற்கிறோம். அதே சமயத்தில், தமிழகத்திலே ஊனமுற்று இருக்கின்ற குழந்தைகள் அத்தனை பேருக்கும், இலவசக் கல்வி—தற்போது துவக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி அளவிலே இருக்கிறது—குறிப்பாக கல்லூரிக் கல்வியிலும் கூட, இலவசக் கல்வி என்ற திட்டத்தை அறிவித்தால், அந்த ஊனமுள்ள குழந்தைகளுடைய வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு ஒரு புரட்சிகரமான திட்டத்தை இந்த அரசு அறிவித்தது என்ற பெருமையினை அடையும். இதிலே இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்க முடியாது. ஆக, அனைவராலும் பாராட்டப்படுகின்ற இத் திட்டத்தினை அரசு செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி, நகர்ப்புறங்களாக இருந்தாலும் சரி, மிக முக்கியமான அடிப்படைத் தேவை ஒன்று இருக்கிறது. மூன்று வயது முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்புக்

கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சான்றாக கிராமப்புறங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் மொத்தம் 2 இலட்சம் என்று வைத்துக்கொண்டால், அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் 10 என்று கொடுத்தால்கூட 2.4 கோடி ரூபாய்தான் அரசுக்குச் செலவாகும் என்ற கருத்தையும் இங்கே தெரிவித்துக் கொண்டு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு மிகப் பெரிய தொகை அல்ல. எல்லோரும் வற்புறுத்தி வருகின்ற இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு, இந்த 2.4 கோடி ரூபாய் ஒரு அதிகமான தொகை அல்ல என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, கிராமப்புறத்திலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி, கிராம ஈட்டுப்படி ஆகியவற்றை வ அளித்துச் செயற்படுத்தும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் என்ன திட்டங்கள் தீட்டினாலும், என்ன நிகழ்ச்சிகள், விழாக்கள் நடத்தினாலும், கிராமப்புறங்களை நாம் புறக்கணிக்கிறோம். தமிழர் திருநாள் என்று நடத்துகிறோம். இவைகள் எல்லாம் நகரங்களிலேதான் நடத்துகிறோம். கிராம மக்களுக்கு மிக முக்கியமான இந்தத் தமிழர் திருநாளை, ஒரு 200 கிராமங்களுக்கு மையமாக இருக்கும் ஒரு பொது இடத்தில் 'ப்ளே பெஸ்டிவல்' என்று நடத்தினால், நாம் கிராமப்புற இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பளித்ததாக அமையும். ஆகவே, இக்கருத்தை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமப் புறங்களிலே இருக்கும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படியும், கிராம ஈட்டுப் படியும் வழங்க வேண்டும் என்று சொல்லும்போது, கிராமப்புறங்களிலே பணியாற்றும் மற்ற ஊழியர்களின் நிலையைப் பார்த்தால், மின்சார வாரியத்திலே பணியாற்றுபவர்களுக்கும், மற்றும் போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகின்றவர்களும், கிராம ஈட்டுப்படியையும், கிராம வீட்டு வாடகைப் படியையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மூன்றாவது ஊதியக் குழுபற்றி நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஊதியக் குழு யாருக்கு நன்மை செய்ததோ செய்யவில்லையோ, ஆசிரியர்களுக்கு மிகப் பெரிய தீங்கைச் செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஊதியக் குழுவும் ஆசிரியர்களுக்கு மாபெரும் தீங்கைச் செய்தது. இந்த மூன்றாம் ஊதியக் குழு ஒரு படி மேலே சென்று ஆசிரியர்களுக்குப் பல குறைபாடுகளை ஏற்படுத்





யிருக்கிறது. அதைத் தெளிவாக குறிப்பிடுவதற்கு நேரம் அனுமதிக்காது என்ற காரணத்தினால், குறிப்பாக இரண்டு கருத்துக்களைக் குறிப்பிடுகிறேன்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், உயர்நிலைப் பள்ளிகளிலேயும், மேல் நிலைப் பள்ளிகளிலேயும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களில் இரண்டு பிரிவினர் மிக முக்கியமானவர்கள். ஒன்று பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் அதற்கு இணையான ஆசிரியர்கள். இரண்டாவது, இடைநிலை ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் அதற்கு இணையாக உள்ள ஆசிரியர்கள். அவர்களுடைய அடிப்படைக் கல்வித் தகுதி, அவர்களுடைய வேலைத் திறன், இவைகளின் அடிப்படையிலே இந்த ஊதியம் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றதா, என்று ஒரு சாதாரண குடிமகனிடம் கேட்டால் கூட, இல்லை என்று அவன் ஒத்துக்கொள்வான். காரணம் பட்டதாரி ஆசிரியர்கள் நான்காண்டு பட்டப்படிப்பு படித்து, மேலும் ஓராண்டு தொழிற் பயிற்சி படிக்க வேண்டியிருக்கிறது. அந்த ஓராண்டு படிப்பிற்கு உரிய மதிப்பை ஊதியக் குழு கொடுக்கவில்லை. அதைப்போல இடைநிலை ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்துவிட்டு இரண்டாண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெறுகிறார்கள். ஆனால், அதற்குரிய மதிப்பை, முக்கியத்துவத்தை மூன்றாவது ஊதியக் குழு அளிக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஊதியக் குழுவில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைவதற்குத் தனியாக ஒரு குழு அமைக்கப்படாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், அவர்கள் ஆளுநர் உரைக்கு பதில் அளிக்கும் போது, சட்டபூர்வமான குறைகள் ஆராய்ந்து நீக்கப்படும் என்றும் சொன்னார்கள். சட்டபூர்வமான முறையிலே அந்தக் குறைபாடுகள் தீர்க்கப்படும் என்று அவர்கள் சொன்னதற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே, அதை விரைந்து செயல்படுத்தி, இந்த மூன்றாவது ஊதியக் குழு ஆசிரியர்களுக்கு இழைத்த குறைகளை ஒரு மாத காலத்திற்குள்ளே நீக்கி, களைந்து ஆசிரியர்களுடைய மனதிலே நீங்காத ஒரு இடத்தை இந்த அரசு பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே, ஆசிரியர்களுடைய குறைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. வேறு எந்த அரசியல் கட்சியும் குறிப்பிடாத ஒரு நல்ல அம்சத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் குறிப்பிட்டிருந்தது.

களை அளிப்பதற்கு நர்சரி பள்ளிக்கூடங்கள், கின்டர்கார்டன், மாண்டிசோ பள்ளிக்கூடங்கள் போன்றவைகளை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

இது சமுதாயத்தினுடைய இன்றையத் தேவை. மூன்று வயது முத ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அப்படிப்பட்ட பள்ளி ஏற்படுத்தினால், அவர்களுடைய மன வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, உட வளர்ச்சி ஆகியவற்றுக்கு அது உறுதுணையாக அமையும் என்று தெரிவித் கொள்ளுகிறேன். அயல் நாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவு மக்கள் வளர்ந்திருக்கிறார்கள் என்றால், அங்கே இதற்கு அடிக்கல் நாட்டப்ப டிருக்கிறது. இதைக் கருதி அப்படிப்பட்ட குழந்தைகள் பள்ளிகளை துவக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் சொல்லப்போனால், வருமானம் உள்ளவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கலாம். அனைவருக்கும் இலவசமாகக் கல்வியளிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நேற்றுகூட நான் ஒரு கருத்தைச் சொன்னேன். அலுவல களுக்குச் செல்லக்கூடிய, விவசாயத்திற்குச் செல்லக்கூடிய, தொழிற்சாலை களுக்குச் செல்லக்கூடிய பெற்றோர்கள் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளை கண்காணிக்க யாரும் இல்லாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட குழந்தை களைக் கண்காணிக்க சில குழந்தைக் காப்பு நிலையங்களை பகல் நேரங்களில் துவங்க வேண்டும் என்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென் தலைமைச் செயலகத்திலே அப்படிப்பட்ட காப்பகம் இருக்கிறது என்று சொன் னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் இரண்டு நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அந்தக் காப்பகங்களைப் பரவலாக கிராமப் புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், கல்வி மானியக் கோரிக்கையின்போது வேறு சில கருத்துக்களைச் சொல்ல இருந்தாலும், நிதிநிலை அறிக்கை யொட்டி மூன்று முக்கியமான கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரியைத் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. திருக்கோ பகுதியிலே அரசு வனத் துறைக்குச் சொந்தமான 400 ஏக்கர் நிலம்





கிறது. நிலமும் இருக்கிறது. அங்கே தேவையும் இருக்கிறது. கோரிக்கையும் இருக்கிறது. ஆகவே தென்னாற்காடு மாவட்டத்திலே விவசாயக் கல்லூரியைத் துவங்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே அரசைக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

தமிழகத்திலே இருக்கிற பெரும் பல்கலைக் கழகங்களில் ஒன்றான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பைப் படிக்க எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. எனவே, அங்கே மருத்துவப் படிப்பைத் துவக்க அனுமதி தருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அடுத்த ஆண்டிலிருந்தாவது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மருத்துவப் படிப்பைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே அடிக்கடி ஒரு கோரிக்கை வைக்கப்படுகிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே, மேலும் இரண்டு பாலிடெக்னிக்கு களைத் துவக்க வேண்டுமென்று நீண்டகாலமாகவே ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. அதற்கான தேவையும் அங்கேயிருக்கிறது. ஆகவே வட ஆற்காடு மாவட்டத்திலே மேலும் 2 பாலிடெக்னிக்குகளைத் துவக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இந்த நிதிநிலை அறிக்கையிலே சில விவரங்களைப் பார்த்தேன். சென்னை மாவட்டத்திற்கு மேலும் ஒரு புதிய மாவட்டக் கல்வி அதிகாரி நியமிக்கப்படுவதாக ஒரு குறிப்புக் காணப் படுகிறது. அதைப் போலவே தர்மபுரி மாவட்டத்திற்கும் ஒரு முதன்மைக் கல்வியதிகாரி நியமிக்கப்படுவதாகவும் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. உண்மையிலேயே அதை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். புதுக் கோட்டை மாவட்டத்திற்கும், நீலகிரி மாவட்டத்திற்கும் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று நீண்ட காலமாகவே ஒரு கோரிக்கை இருக்கிறது. ஆகவே புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், நீலகிரி மாவட்டத்திற்கும் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரிகளை நியமிக்க வேண்டு மென்ற கோரிக்கையை இங்கே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கடலூர் கல்வி மாவட்டத்தில் தனியார் பள்ளிகள் அதிக அளவில் இருப்பதால், ஒரு கல்வியதிகாரியால் நிர்வாகப் பணிகளைக் கவனிப்பதில் கடினமும், சிரமம் இருக்கின்றது. ஆகவே, சிதம்பரத்தில் ஒரு தனி மாவட்டக் கல்வி அதிகாரியை நியமித்து அதற்கான அலுவலகத்தையும் துவங்க வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் மொத்த வருவாய் ரூ. 2,093.84 கோடி ; மொத்த செலவு 2,103.80 கோடி ரூபாய். பற்றாக்குறை 9.98 கோடி ரூபாய். வருவாய்த் துறைக் கணக்கிலே பார்த்தால் வருவாய் 849.82 கோடி ரூபாய், செலவு 849.24 கோடி ரூபாய், உபரியாக இருப்பது 0.58 கோடி ரூபாய். பொதுக்கணக்கின் கீழ் வருவாய் 938.74 கோடி ரூபாய், செலவு 904.97 கோடி ரூபாய் என்று அமைந்துள்ளன. உபரியாக இருப்பது 33.77 கோடி ரூபாய். மூலதனச் செலவுகள் 72.25 கோடி ரூபாய். ஆகவே சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு மொத்த வருவாய் 306 கோடி கூடியுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-40)

குறிப்பாக மத்திய அரசு வரிகளின் பங்கில் 8.29 கோடி ரூபாய் கூடுதலாகவும், விற்பனை வரியில் 9.17 கோடி ரூபாய் கூடுதலாகவும், மின் வருவாயில் 7.44 கோடி ரூபாய் கூடுதலாகவும் கிடைத்துள்ளது.

பற்றாக்குறை மொத்த வருவாயில் 1 சதவிகிதம் கூட இல்லை. எனவே இப்பற்றாக்குறையை வரி விதிக்காமலேயே சிக்கன நடவடிக்கைகள் மூலமாகவும், வரி ஏய்ப்பைத் தடுத்தும் சரிக்கட்ட முடியும். எனவே தற்போது விதிக்கப்பட்ட வரிகள் தேவையில்லை என்ற கருத்தை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தேங்காய், தீப்பெட்டிகளுக்கு வரிவிதிப்பதன் மூலம் விலைவாசிகள் உயர்ந்து விடுகின்றன. தேங்காய், தீப்பெட்டி போன்ற சாதாரண ஏழை எளிய மக்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்களுக்கு வரி போட்டிருப்பது சரியல்ல. கொப்பரை தேங்காய் வியாபாரிகள் சரியாக வரி கட்டவில்லை என்ற அளவில், அதைச் சரிக்கட்ட வேண்டும் என்ற காரணத்திற்காக வரியை அதிகரித்திருப்பது சரியல்ல. இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே மத்திய அரசு விதித்துள்ள வரிக் கொடுமையினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் மாநில அரசும் இத்தகைய பொருள்கள்மீது வரி விதித்திருக்கிறது. கொப்பரைத் தேங்காய் வியாபாரிகள் வரியைச் சரியாகக் கட்டவில்லை என்று சொல்லி, ஏழை மக்கள் உபயோகிக்கும் பொருள்கள் மீது வரி விதித்திருப்பது சரியல்ல.

மின் வருவாய் 7.44 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளபோது, விவசாயிகளுக்கு விதிக்கும் மின் கட்டணத்தைக் குறைக்க வழியுள்ளது. இதைச் செய்வதன் மூலம் விவசாயிகள் சுமையைக் குறைக்க முடியும். மாண்புமிகு எதிர்க் கட்சித்



தலைவர் அவர்கள்கூட விவசாயிகள் பிரச்சினைபற்றி எடுத்து விவரமாகப் பேசியிருக்கிறார்கள். விவசாயிகளின் சுமையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக வருவாய்க் கணக்கில் உபரி காணப்படும் போது ஊழியர்களுக்கு எவ்விதச் சலுகையும் கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு என்று சலுகைகள் வழங்கப்பட்டன. அந்நிலைப் படியை உயர்த்துவதைப்பற்றி அரசு எதனையும் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவையில் அங்கத்தினர்கள் குறிப்புக்களை வைத்துக்கொண்டு பேசலாமே தவிர, அதையே படிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லும்போது, ...றார்கள். அதனால் தான் படிக்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லும்போது, அதைப் பார்த்துத்தான் புள்ளி விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உபரி பட்ஜெட்டாக வருவாயிலே இருக்கும்போது, இன்றைக்கு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தாமலிருப்பது சரியானதல்ல. பே கமிஷன் அறிக்கையில் உள்ள முரண்பாடுகளை நீக்கவேண்டுமென்று அரசுக்குப் பலமுறை எடுத்துச்சொல்லியும் இன்னும் அது குறித்து பட்ஜெட் உரையிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை. தேர்வு நிலை வழங்குவது 1—10—1978லிருந்து என்று இருக்கிறது. மற்ற எல்லா ஊழியர்களுக்கும் 1—4—1978 முதல் அமுல்படுத்த வேண்டும் என்று இருக்கிறது. இந்தச் சலுகைகளைக் கொடுப்பது 1—10—1978 முதல் என்று இருப்பதை மாற்றி 1—4—1978 முதல் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையில், கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது ரூபாய் 205 கோடியாகும். இதில் தொடக்கக் கல்விக்காக ரூபாய் 101 கோடியும் இடைநிலைக் கல்விக்காக ரூபாய் 57 கோடியும், முன் பல்கலைக் கழகக் கல்விக்காக ரூபாய் 15 கோடியும், இன்றைய மேல்நிலைக் கல்விக்காக ரூபாய் 15 கோடியும், உயர்நிலைக் கல்விக்காக ரூபாய் 20 கோடியும், தொழிற் கல்விக்காக ரூபாய் 7 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டுக்கு ஒதுக்கியது ரூபாய் 180 கோடி. மொத்த வருவாயில் கல்விக்காக ஒதுக்கப்பட்டது 10 சதவிகிதம்தான். அதே சமயத்தில் தொடக்கக் கல்விக்கு ஒதுக்கியிருக்கும்

குடி தண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில், வீராணம் குடிநீர்த் தி அரைகுறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட அளவிலே அப்படியே இரு அந்தத் திட்டத்தினுடைய கதி என்ன, மேற்கொண்டு என்ன செய்யப் றார்கள் என்பதை அரசு இன்னும் தெரிவிக்கவில்லை. எங்களுடைய கோ யெல்லாம் அத்திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ அளவுக்காவது அதைச் செய்ய வேண்டும் என்பதுதான். தென்னா மாவட்டத்திலே குழாய்கள் போடப்பட்டு இணைக்கப்பட்டிருக் இணைக்கப்பட்டுள்ள அந்தக் குழாய்களை வைத்துக்கொண்டு, மேலும் களைப் பூர்த்தி செய்து, தென்னாற்காடு மாவட்டத்திலே வறட்சியால் கப்பட்டுள்ள பல்வேறு கிராமங்களுக்கு, நகரங்களுக்குக் குடிதண்ணீர் ஏற்படுத்தித் தரலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகி ஏற்கெனவே ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டத்தைப் பாழடி விட, அதை முழுவதுமாகப் பயன்படுத்துகிற அளவுக்கு நிறைவேற்றி, னாற்காடு மாவட்டத்திலே வறட்சி மிக்க பகுதிகளுக்குக் குடிதண் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே அ கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய பட்ஜெட்டை மாநில அரசினுடைய பட்ஜெட் ஒப்பிட்டுப் பார்க்க விரும்புகிறேன். அண்மையிலே வந்த மத்திய பட் டைப் பார்க்கும்போது, அது பொதுமக்களுடைய, அரசு ஊழியர்களு ஆசிரியர்களுடைய முதுகிலே குத்தியிருக்கிறது என்பதைக் வேதனை குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசி இப்போதே விஷம் போல் ஆரம்பித்துவிட்டது. விலைவாசிகளை ஏற்றக்கூடிய அளவிலே மத்திய தன்னுடைய பட்ஜெட்டை அறிவித்திருக்கிறது. மத்திய அரசு மிகப் சுமையை ஏற்படுத்தியிருக்கிற நேரத்தில், மாநில அரசு நிவாரண ஏதாவது செய்யுமென்று பொதுமக்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பார்த்தார்கள். அப்படி நிவாரணமாகச் செய்யாவிட்டாலும்கூட, அரசு பொதுமக்களுடைய முதுகிலே குத்தியிருக்கிறதே, நாங்களும் குத்துகிறோம் என்று சொல்லாமல், அந்த அளவிலே நின்றுவிட்டு ஆறு ஒரு பட்ஜெட்டை அறிவித்திருக்கிறது என்ற அளவிலே இந்த பட்ஜெட்டை வேற்கலாம். ஆனால் புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் இடம் வில்லை என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு

(துணைத் தலைவர் மணி அடித்தார்.)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : முடிக்கப் போகிறேன். மேலும் அதிகச் சுமையை ஏற்படுத்தாமல், ஆறுதல் பட்ஜெட் என்ற இருந்ததற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பாராட்



இறுதியாக, என்னுடைய உரையை முடிக்கும் முன்பு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இப்போது இருக்கிற வசதிகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்பற்றி விரிவாக 'பாலிசி நோட்' விவாதத்தில் சொல்லவிருக்கிறேன். சட்டமன்றத்திலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளைச் சட்ட மன்ற விடுதிகளிலே இருக்கிற நாங்கள் கேட்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். காலையில் பேரவை நடக்கிறபோது, மேலவை உறுப்பினர்கள் சட்ட மன்ற விடுதியிலும், மாலையில் மேலவை நடக்கிறபோது சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் விடுதியிலும் இருக்கிறார்கள். சட்டமன்றத்தில் நடக்கும் விவாதங்களை அவர்கள் கேட்பது என்பது ஒரு ஜனநாயகப் பயிற்சியும்கூட. அந்தப் பயிற்சியை அவர்களுக்கு அளிக்க, மன்றங்களில் நடக்கக் கூடிய விவாதங்களைப் பற்றிய அனுபவத்தைப் பெற, இங்கே நடைபெறுகிற நிகழ்ச்சிகளைச் சட்ட மன்ற விடுதிகளில் ஒலி பெருக்கி மூலமாக இணைப்பை ஏற்படுத்தி அங்கே ஒலி பரப்ப வேண்டுமென்ற கருத்தை இந்தச் சமயத்திலே அரசுக்கு வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், தங்களுடைய தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்ய, சுற்றுப் பயணப் படி, தொகுதி அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. ஆகவே அந்த அலவன்ஸைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நிதி நிலை அறிக்கையின் பேரில் நான் அதிகமான கருத்துக்களைச் சொல்ல விரும்பினாலும், மேலவைத் துணைத் தலைவருடைய ஆணைக்கிணங்க சுருக்கமாக என்னுடைய உரையை இந்த அளவோடு முடித்துக்கொண்டு, இந்த அளவுக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகப் பேசி முடித்ததற்காக மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்துப் பேச வருகிறவர்களும் இதை முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் நாட்டினுடைய பல்வேறு விஷயங்களை இங்கே எடுத்து வைக்க வேண்டியிருப்பதால், விரிவாக விவாதிப்பதிலே காலம் சற்று கூடினாலும் தலைவர் அவர்கள் அனுமதிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு தொடர்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பல உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். தலைவர் அவர்கள் என்னிடத்திலே குறிப்பிட்டது தங்களுக்கு 15 நிமிடம் என்று. 5 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுத்தாலும், தாங்கள் 20 நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும்.

நிதி குறைவு. தொடக்கக் கல்விதான் இந்த நாட்டிலே முதுகெ என்பதை அரசு உணரும். கிராமப்புறங்களில் படிக்கும் திறமையான மாண களுக்கு ஸ்காலர்ஷிப் அளிக்க ஒதுக்கப்பட்ட தொகை 21 லட்சம் ரூபாய் கிராமங்கள் நிறைந்த மாநிலம் தமிழ் நாடு. இந்தியா முழுவதிலும் கிரா பகுதிதான் அதிகமான பகுதி. கிராமப்புற மக்களை அதிகமாக வித்து அங்குள்ள மாணவர்களுக்கு அதிகமான ஸ்காலர்ஷிப் ஒதுக்க வேண் கிராமப்புறங்களுக்காகத் திட்டம் திட்டுவதுபற்றித் தேர்தல் நேரத் அமைச்சர்கள் பல கொள்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். நேரத்திலே ஒதுக்கப்பட்டுள்ள 29 லட்சம் ரூபாய் மிகமிகக் குறைவு. உயர்த்த வேண்டுமென்று நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற் கொண்டு வருகிறேன்.

தொடக்கப் பள்ளிகளுக்கு நல்ல கட்டிடங்கள் இல்லை. தொடக்கப் பள் களுக்கு இன்று செலவு ரூபாய் 15.35 கோடி. மொத்தம் இன்றைக்கு கல்விக் ரூபாய் 342 கோடி செலவிடப்படுகிறது. இதிலே ரூபாய் 15 கோடி தொடக்கக் கல்வி சம்பந்தமாக ஒதுக்கப்பட்டாலும், அதிலே ரூபா 26 லட்சம் மட்டுமே தொடக்கக் கல்விக்காகச் செலவாகிறது என்ப வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 36 ஆயிரம் பள்ளிகள் இருக்கின் கிராமப்புறங்களில் எந்தப் பள்ளிக்கும் சரியான கட்டிடங்கள் இல் கூரைக் கொட்டகைகளில்தான் பள்ளிகள் நடக்கின்றன. இப்படி பட்ட நிலைமையில் அந்த நிறுவனங்களுக்கு 26 லட்சம் ரூபா போதாது என்பதை உடனடியாக அரசு மறுபரிசீலனை செய் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வரவு-செலவிலே கல்விக் ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவு. அதிலும் ஆரம்பக் கல்விக்கு மிகக் குறைவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதியோர் கல்வியைப் பொறுத்த அளவில், மத்திய அரசும் ஒதுக்கியிருக்கின்ற நிலை இருக்கிற அந்தத் தொகைகளை மாநில அரசு மூலமாகத்தான் செலவழிக்க வேண் மத்திய அரசுத் திட்டத்தில் நிர்வாகச் செலவிற்கும், தனியார் மானி களுக்கும்தான் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். முதியோர் க யைப் பொறுத்தவரையில், மாநில அரசு மூலமே பணத்தைச் செலவு வேண்டும். இருக்கின்ற தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களில் குழந் களுக்குப் பள்ளி நடந்து முடிந்த பிறகு, பள்ளி நேரம் அல்லாத நேர முதியோர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதற் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 100 சிறப்பூதியம் கொ வேண்டும். இந்தத் திட்டத்தைச் சரிவர நல்ல முறையில் நடத்த வேண்



தமிழ்நாடு அரசைப் பொறுத்த அளவில், மாநில அரசு மூலமாக இந்த நிதி செலவழிக்கப்பட வேண்டும். இந்தியா பூராவும் அந்தக் கொள்கை வந்தாக வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி அலுவலகங்களைப் பொறுத்த அளவில் டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ. இருக்கட்டும். ஆங்காங்கே கல்விப் பணியிலே சேர்ந்தவர்களாக இருக்கக் கூடியவர்கள் அந்தப் பொறுப்புக்கு வருகிறார்கள். அங்கே நிர்வாகப் பணியைச் செய்வதற்கு நிர்வாக அதிகாரிகள் இல்லை. அங்கே உள்ள கல்வி அதிகாரி களுக்கு அங்கே உள்ள நிர்வாகப் பணிகளில்தான் நேரம் சரியாகப் போய் விடுகிறது. நிர்வாகத்திற்கு என்று தனியாக அதிகாரிகளை நிர்வாக அலுவலர்கள் என்று நியமித்து இவர்கள் கல்விப் பணியை மட்டும் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளுக்காக சட்டங்கள் இயற்றப்படுகின்றன. எத்தனைமுறை கல்வி அமைச்சர் அவர்களிடம் சொல்லியும், ஆசிரியப் பிரதிநிதிகள் கேட்டும், அச்சட்டங்களை அமல் படுத்துவதில்லை. கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நாட்டிலே கல்வித் துறையிலே ஒரு உத்தரவிடும்போது, இந்த உத்தரவை அமல்படுத்தும் அதிகாரிகள் ஆசிரியர்களைப் பாதுகாப்பது என்பதில் செயல் படவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த அதிகாரிகள் தனியார் பள்ளியிலே இருக்கக்கூடிய ஆசிரி யர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க சரியான முறையில் உத்தரவுகளை அமல் படுத்துவதில்லை. அந்த மேனேஜர்கள் நிர்வாகத்தில் இருப்பவர்கள். ஆசிரியர் களுடைய நிலைமைகளைக் கவனிப்பதில்லை. மேனேஜர்களுக்கு உத்தரவிட்ட பிறகும் அவர்கள் ஒன்றும் செய்வதில்லை. அவர்களுக்குத் துணையாகத்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். நடவடிக்கை எடுக்க சட்டத்திலே விதியிருந்தும், அதிகாரிகள் செயல்படவில்லை. கல்வித் துறை கவனிக்காது இருக்கிறது. இதை நிவர்த்திக்க ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். ஆசிரியப் பெருமக்களுடைய பிரச்சினைகளை, கல்வி அதிகாரிகள் மாவட்டத் தலைமையிடங்களிலிருந்து சொல்லும்போது, அவற்றைத் தீர்க்க கவனித்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு மேலவையில் பட்ஜெட் மீது விவாதம் நடந்துகொண்டிருக்கின்றது. ஒரே ஒரு அமைச்சர்தான் அமர்ந்துகொண்டிருக்கின்றார். 18 அமைச்சர்களில் ஒருவர் இருந்தாலே போதும் என்று அரசில் முடிவு எடுத்திருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. இங்கே பார்க்கும்போது, எங்களுக்குப் பேசுவதற்குக்கூட மன எழுச்சி வரவில்லை. பொதுவாக அவையிலே சம்

[திரு. செ. முத்துசாமி] [1979 மார்ச்

பந்தப்பட்ட துறை அமைச்சர்களிடம் பட்ஜெட் விவாதத்தின்போது
பிரச்சினைகளைப் பற்றி நேரடியாகச் சொல்ல முடியும். அப்படிச் சொல்
போது அவர்களிடமிருந்து அவர்களின் கருத்துக்களை நாம் பெற முடியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தின
அவர்கள். மேலவையிலே துணை அமைச்சர்கள் என்று கூறுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அவர்கள் சொன்னது துணை
அமைச்சர்கள் என்று. துணை அமைச்சர்கள் என்று சொல்லவில்லை.

* **திரு. க. இராமமூர்த்தி:** அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு
அமைச்சர் தான் இருக்கிறார் என்று சொன்னார்கள். இரண்டு அமைச்சர்
இருந்த நேரத்தில், ஒருவர் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களில் யார்
அமைச்சர் பதவியிலிருந்து விலக்கிப் பேசினார்கள் என்று அறிய விரும்
கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, ஒரு அமைச்சர்
இருக்கையிலே அமர்ந்திருக்கின்ற காரணத்தினாலே, நான் கவனிக்கவில்லை
இருந்தாலும்கூட அவர்கள் எங்கள் சமுதாயத்தினைச் சேர்ந்தவர் என்பதா
தவறாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

அடுத்து, சிறுபான்மைப் பள்ளிகளைப்பற்றி ஓரிரு கருத்துக்கள்
விரும்புகிறேன். இப்போது உயர் நீதிமன்றத்திலே வழக்கு மூலமாக
சட்டப் பிரிவுகள் அடிபட்டிருக்கின்றன. கல்வி அமைச்சரவர்களிடம்
முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தச் சட்டத்திலே 19-வது பிரி
சிறுபான்மைப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணி
பாதுகாப்பு கொடுக்க வரையறை செய்து அதிகாரம் வழங்கும் பிரிவாகும்
அந்தப் பிரிவு உயர் நீதிமன்றத்தால் ஸ்டாக்-டவுன் செய்யப்படவில்லை. அந்
விதி உயர் நீதிமன்றத்தால் செல்லாது என்று சொல்லப்படாமல் இருக்கும்
போது, அதன் அடிப்படையிலே விதிகளை வகுத்து ஆசிரியர்களுக்கு
பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் கல்வி
அமைச்சரவர்கள் 19-வது பிரிவு குறித்து மீண்டும் பரிசீலனை செய்து
விரைவாக, ஒரு வார காலத்திற்குள் அந்த விதிகளை வெளியிட்டு, ஆசிரி
களுக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 மார்ச் 8] [திரு. செ. முத்துசாமி]

ஆசிரியர்-மாணவர் விகிதத்தைப் பொறுத்த அளவில், 1964ஆம் ஆண்டிலே
தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்து 250ஆம் எண் ஆணை வெளியிடப்
பட்டது. அந்த விகிதப்படி இன்றைக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டு
மானால், இன்றைக்குள்ள மாணவர்கள் அடிப்படையிலே 10,000 முதல் 20,000
ஆசிரியர்கள் வரை நியமிக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் அந்த
ஆணை அமுலில் இல்லை. அந்த ஆணையின் அடிப்படையிலே ஆசிரியர்கள்
நியமனம் செய்யப்படவில்லை. ஆயிரம் ஆசிரியர்களுக்கு நிதிநிலை
அறிக்கையிலே வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 44,000
ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள், ஆனால் வேலை வாய்ப்பு
ஆயிரம் பேர்களுக்கு என்றால் என்ன நியாயம்? எனக்குப் புரியவில்லை.
இந்த நாடு முற்போக்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டு, முன்னேறிக்
கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறதென்று சொல்லும்போது, கல்வித்
துறையைப் பொறுத்தவரையில், 1,000 ஆசிரியர்களுக்குத்தான் வேலை
என்று சொல்லுவது என்ன நீதி என்று கேட்க விரும்புகிறேன்.
இதை நிதி அமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் எண்ணிச்
செயல்பட வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக ஆயிரமாவது இருக்
கட்டும் என்று அச்சாரமாகச் சொல்கிறார்கள். ஆனால் வேலையில்லா
மல் இருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, ஆசிரியர்-மாணவர்
விகிதப்படி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில்
வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எதற்கெடுத்தாலும் ஆசிரியர்கள்
போராடுகிறார்கள் என்று எண்ணக்கூடும். ஆசிரியர்கள் மாதச் சம்பளம்
வாங்குகிறவர்கள், இவர்களைப் போல் யார் இருக்கிறார்கள் என்று பலர்
சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எத்தனையோ துயர்கள் இருக்கின்றன.
அவற்றைப் பல முறை இங்கே எடுத்துச் சொல்லியும், அவர்களுடைய
பிரச்சினைகள் தீர்க்கப்படுவதாக இல்லை.

காது கேட்பிக்கும் கருவி, கண்ணாடி வாங்க முன் பணம் தரவேண்டு
மென்று கேட்டோம். அரசுப் பள்ளிகளில் இருக்கிறவர்களுக்கும், அரசு
அலுவலகங்களில் இருக்கிறவர்களுக்கும் மாத்திரம்தான் காது கேட்காமல்
போகுமா? அவர்களுக்கு மட்டும்தான் காது கேட்க வேண்டுமா? கண்ணாடி
அவர்களுக்கு மட்டும்தான் வேண்டுமா? சாக் பீஸ் எடுத்து தனியார் பள்ளி
ஆசிரியர்கள் எழுதினால், அவர்கள் கண்ணில் விழாதா? அவர்களுக்குக்
கண்ணாடி வேண்டாமா? திரு. தாம்ஸ் அவர்கள் தனியார் பள்ளியில் இருக்
கிறார். அவருக்கு வேண்டாமா என்றால், அவர்கள் போட்டிருக்கிறார்கள்.
அதனால் தரவில்லை என்று சொல்லுவது என்ன நியாயம்? நீண்ட காலத்
திற்கு முன்னாலிருந்தே அரசு ஊழியர்களுக்கு இருக்கும் சலுகைகள் ஆசிரியர்
களுக்கு இல்லை. 1969-ல் ஆசிரியர்கள் எழுச்சி பெற்று, அதன் காரணமாக

[திரு. செ. முத்துசாமி] [1979 மார்ச்

ஒரு முன்னேற்றமான நிலைமை வந்தது. அன்றைக்கு இருந்த வளர் தொடர்ந்து வர வேண்டுமென்ற நிலை இன்று இல்லை. இன்றைக்கு கொடு திருக்கும் சலுகைகள் இல்லையென்று சொல்லுவது தர்மம்தானா? இந்த நி நிலை அறிக்கையிலே சைக்கிள் வாங்கக் கொடுக்கப்பட்டுள்ள முன்பணம் அர ஊழியர்களுக்கும், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மட்டும்தான் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லையா? பஞ்சாயத் யூனியனை பாதி அரசுத் துறை—செமி-கவர்ன்மென்ட்—என்று சொல் கிறார்கள். அவர்களுக்கு இல்லை. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அந் முன்பணம் இல்லை. மீண்டும் ஏன் எங்களை அப்படிச் சிந்திக்க வைக்கிறீர்கள் அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் எங்களுக்கும் வேண்டும். ஊட்டியி எங்களுக்கும் குளிருகிறது, விண்டர் அலவன்ஸ் வேண்டுமென்று அண்ணா சாலையில் ஊர்வலம் வந்தோம். அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்த வர்கள் விண்டர் அலவன்ஸ் தந்தார்கள். இன்றைக்கு ஒரு துறைக்கு கொடுத்து, இன்னொரு துறைக்கு இல்லை என்று சொல்லுவது நியாயமல் நிதித் துறை எங்களைச் சரியாகக் கவனிப்பதில்லை. இந்தக் குற்றச்சாட் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறோம். இந்த நாட்டிலே தேர்ந்தெடு கப்பட்ட அரசு இருக்கிறது. ஏன் தனியார் பள்ளி என்று வைத்திருக்கிறீர் கள்? அரசுக்கு எல்லாப் பள்ளிகளும் சமமானவைதான். முதலமைச்சரவ கள் இருக்கும்போது, ஒரு பிரச்சினை வந்தது. 10,000 ரூபாய் அரசு ஊழியர் களுக்கு அளிக்கப்படுமென்று சொன்னார்கள். அப்போது கேட்டேன், அர ஊழியர்கள் என்று சொல்லும்போது, ஆசிரியர்களுக்கு உண்டா, இல்லையா என்று. பஞ்சாயத்து யூனியன், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு உண்டா இல்லையா என்று கேட்டேன். அரசு ஊழியர்கள் என்றால், அதில் அவ களும் அடங்குவார்கள் என்றார்கள். அவர்களும் அதில் அடங்க வேண்டு மென்றுதான் கேட்கிறோம். அந்தப் பட்டியலில் ஆசிரியர்கள் இருப்பார்களா என்று கேட்டேன். உண்டு என்று சொன்னார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்கள், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 750 ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்குபவர்கள் தனியார் பள்ளி களிலேயும் இருக்கிறார்கள். அவர்கள் ஸ்கூட்டர் ஓட்டக் கூடாதா? தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய தலைமை ஆசிரியர்களுக்கு ஸ்கூட்டர் ஓட்ட தகுதியில்லையா? அவர்களுக்கு அது தேவையில்லையா? அதை ஏன் நிதித் துறை மறுக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.



1979 மார்ச் 8] [திரு. செ. முத்துசாமி]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பின ரவர்கள் ஐந்து நிமிடங்களுக்குள்ளாகப் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: நானும் விரைவாக முடித்துக் கொள்ள விரும்பு கிறேன். எங்களுடைய பிரச்சினைகள் முடிக்கப்பட வேண்டுமென்றுதான் பேசுகிறேன். பிரச்சினைகள் எவ்வளவு விரைவாக முடிகின்றதோ அவ்வளவு விரைவாக எங்கள் பேச்சுக்கள் முடியும். பேசாமலேயே, அதிகமான செயல்கள் செய்யப்பட வேண்டுமென்றுதான், இந்த விஷயங்களை இங்கே பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டியில்லாத கடன் கொடுக்கிறார்கள். அரசு ஊழியர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளில் படிக்க வைத்தால் 1,000 ரூபாய்; பாலிடெக் னிக்கில் படிக்க வைத்தால் 500 ரூபாய் முன் பணம் தரப் போகிறார்கள். ஏன் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வேண்டாமா? அவர்கள் குழந்தைகள் படிக்கக்கூடாதா? பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியரின் குழந்தைக்கு எங்கே அந்த உதவிப் பணம் தரப்பட்டிருக்கிறது? இது ஆசிரியர் களுக்கும் பொருந்துமென்று சொல்ல வேண்டாமா? நிதித் துறை ஒரு சலுகையை அளிக்கும்போது, அது ஆசிரியர்களுக்கும் பொருந்துமென்ற வாசகம் இல்லாமல் இருக்கிறதென்பதை நிதியமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆசிரியப் பெரு மக்களை தயவு செய்து இந்த விஷயத் தில் வேறுவிதமாகச் சிந்திக்க விடாதீர்கள். எங்களைப் பட்டியலிலிருந்து நீக்கினால், நாங்கள் நீதி கோரத் தயங்க மாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சரவர்கள் கடைசியில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் கடை கோடியிலிருக்கும் மக்கள்"—'மக்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள்—நான் அதை ஆசிரியர்கள் என்று சொல்ல விரும்புகிறேன்—'ஆசிரியர்கள் பொறுமையை தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையும் ஏமாற்றிவிட முடியாது என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பலமுறை கேட்டுப் பார்த்து விட்டோம். இன்றைக்கு மேல்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பெரிய சாதனைகளை எதிர்பார்க்கிறோம். நாட்டிலே, வரும் ஆண்டுகளில் மாண வர்கள் தொழிற் கல்வி பெற்று, வேலைக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க் கிறோம். அதை நான் வரவேற்கிறேன். அது நல்ல நோக்கம். வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன். அந்தக் கல்வியைச் சொல்லிக்

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்களுக்குச் சலுகை வழங்கப்படும் போது, ஒரு துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகை ஏனைய துறைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நெடுங்காலமாகவே வற்புறுத்தப்பட்டு வருகிறது. அந்த நிலையில் ஒரே துறையில் பணியாற்றும் ஆசிரியர்களில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1973-ஆம் ஆண்டு முதலும், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு 1974-ஆம் ஆண்டு முதலும் தேர்வு நிலை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பாகுபாட்டினைக் களைய வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. எனவே, எங்களின் இந்தக் கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பாகுபாடு ஏற்பட்ட நேரத்திலேயே இது கேட்கப்பட்டிருக்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இக்கோரிக்கை 1973-ஆம் ஆண்டிலிருந்தே இருக்கிறது என்றாலும்கூட, அதை நிறைவேற்றுகிற பொறுப்பில் இருந்தவர்கள் நிறைவேற்றாமல் இருந்திருக்கிறார்கள். இப்போது இருக்கிற அமைச்சர் அவர்கள் ஆசிரியராகவே பணியாற்றியவர்கள். ஆசிரியர்களுடைய குறைகளைத் தெளிவாக உணர்ந்தவர்கள். முன்னாலே இருந்த அரசு செய்யவில்லை என்பதற்காக இந்த அரசும் செய்யாமலிருப்பதைத் தவிர்த்து எங்கள் கோரிக்கையை ஏற்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

## பள்ளி ஆய்வுக் குழு.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளி ஆய்வுக் குழு முறையின் நிறைகளையும், குறைகளையும் அரசு மதிப்பிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) பள்ளி ஆய்வுக்குழு முறையை நீக்க செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(எ) பள்ளி ஆய்வுக்குழுவின் உறுப்பினர்கள், பயணப்படி, அகவிலைப் படி ஆகியவற்றை உறுப்பினர் எந்தப் பள்ளியில் பணியாற்றுகிறாரோ அந்தப் பள்ளியின் தனிச் சம்பளங்களிலிருந்து, பெறுகின்றனர் என்பது உண்மையா ?

(ஐ) ஆம் எனில், எந்தப் பள்ளியில் ஆய்வு நடத்தப்படுகிறதோ அந்தப் பள்ளியின் தனிச் சம்பளங்களிலிருந்து, இந்தப் படிகளை வழங்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) பழைய ஆய்வு முறையின்படி, மாறுபட்டு வருகின்ற கல்வி முன்னேற்ற நிலையில் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் மகளிர் பள்ளி ஆய்வாளர்களினால் திருப்திகரமாக ஆய்வினை செய்ய இயலாது என்கிற அடிப்படையில், கோத்தாரி குழுவினரின் பரிந்துரைகளையும் கல்வித் திட்ட மற்றும் நிர்வாக அலுவலர்களின் தேசிய கல்லூரியின் ஆய்வுக் குழுவினரின் பரிந்துரையையும் கவனத்தில் கொண்டு, பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு ஏற்று புதிய ஆய்வு முறையை அங்கீகரித்தது. கல்வித் தரத்தின் வளர்ச்சிக்கு இந்த முறை உகந்ததாகும்.

(உ) இல்லை.

(எ) ஆம்.

(ஐ) இதனால் பல நிர்வாகச் சிக்கல்கள் உண்டாகுமாதலால் அவ்விதம் செய்வதற்கில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பள்ளி ஆய்வுக் குழுவில் ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியரே பக்கத்திலுள்ள பள்ளி ஒன்றுக்குச் செல்லக்கூடிய நிலை இப்போது இருக்கிறது. அதைப் போலவே அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியரும் இந்தப் பள்ளிக்கு வருகிற வாய்ப்பு இருக்கிறது. இதன் காரணமாக அந்தத் தலைமையாசிரியர்கள் பள்ளிகளில் காணக்கூடிய குறைகளை



எடுத்துச் சொல்லாமல், ஒருவருக்கொருவர் அனுசரணையாக நடந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுகிறது. ஒருவருக்கொருவர் வேண்டாதவர்கள் இரண்டு பள்ளிகளின் தலைமையாசிரியர்களாக இருந்து, அவர்கள் இவ்வாறு மாறி மாறி, பள்ளி ஆய்வுக் குழுவில் அங்கம் வகித்துச் செல்லும்போது, வேண்டுமென்றே ஒருவர்மீது ஒருவர் பழி சுமத்தவும் வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தைப்பற்றி அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குழு பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு செய்யும்போது, மாவட்டக் கல்வியதிகாரி, மகளிர் பள்ளி ஆய்வாளர் போன்றவர்கள் நிர்வாக சம்பந்தமான குறைகளையும், தலைமை ஆசிரியர்கள் சம்பந்தமான வேலைகளையும்தான் ஆய்வு செய்கிறார்கள். அங்கே இருக்கிற தலைமை ஆசிரியர், மற்றும் பிற ஆசிரியர்கள் எந்த அளவுக்குக் கல்வி கற்பிக்கிறார்கள் என்பதைத்தான் உடன் செல்லும் தலைமை ஆசிரியர் ஆய்வு செய்கிறார். எனவே இரண்டு தலைமையாசிரியர்களும் ஒன்றாகச் சேர்ந்து, குறைகளை வளர்த்துக் கொள்ளும் அபாயமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது இந்த ஆய்வு நல்லமுறையில் நடைபெற்று வருகிறது என்ற செய்திகள்தான் அரசாங்கத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. மேலும் இந்த ஆய்வு முறையை இப்போதுதான் துவக்கியிருக்கிறோம். ஆகவே இப்போது அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : இந்தப் பள்ளி ஆய்வுக் குழுவில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் மற்ற ஆசிரியர்களும் இடம் பெறுகிறார்கள். அதன் காரணமாகச் சில சிரமங்கள் ஏற்படுகின்றன என்ற ஒரு கருத்திருக்கிறது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றும் போராசிரியர்கள், ஆசிரியர் பயிற்சி பெற்ற கல்லூரி ஆசிரியர்கள், மற்றும் எஸ்.ஈ.ஆர்.டி. என்று சொல்லப்படும் கல்வி ஆராய்ச்சி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியவர்களையும் இந்த ஆய்வுக்குழுவில் இணைத்துக்கொண்டு ஆய்வு செய்ய அரசு முன்வருமா ? அதற்கான திட்டத்தை அரசு உருவாக்குமா ?

[illegible]ண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த ஆய்வு செய்யும் திட்டமே [illegible]போதுதான் துவக்கப்பட்டிருக்கிறது. திட்டம் துவங்கி ஓராண்டுதான் [illegible]. ஆகவே இந்தத் திட்டம் எந்த வகையில் செயல்படுகிறது என்று [illegible] காலத்திற்குப் பார்த்த பிறகுதான் உறுப்பினர் கருத்தைப் [illegible]லாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதிய கோரிக்கைகளை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. அறிவழகன் : கல்வியமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது, இக்குறைபாடு ஏற்பட்ட நேரத்திலேயே இக்கோரிக்கையை எழுப்பியிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் அப்போதே இக்கோரிக்கையை எழுப்பியிருக்கிறேன். எனவே அமைச்சர் அவர்கள் இப்போது அதைப் பரிசீலனை செய்ய முன்வருவார்களா, பரிந்துரைப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

## *Upgrading of Higher Grade Teachers.*

* 146. *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to upgrade all the Higher Grade Teachers as Secondary Grade Teachers; and

(*b*) if so, the stage at which the matter now stands?

### இளநிலை ஆசிரியர்களைப் பதவி உயர்த்துதல்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) இளநிலை ஆசிரியர்கள் அனைவரையும் இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இளநிலைப் ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக மாற்றும் திட்டம் சர் சி.பி. இராமசுவாமி அய்யர் அவர்கள் திருவிதாங்கூர்—கொச்சின் சமஸ்தானத்தின் திவானாக இருந்த காலத்தில் அன்றைய அரசாங்கத்தால் ஏற்கப்பட்டது. அதனடிப்படையில் 10 ஆண்டு காலம் பணி முடிவடைந்தவர்கள் இளநிலையிலிருந்து இடை நிலை ஆசிரியர்களாக மாற்றப்பட்டார்கள். அந்த முன்னுதாரணத்தை வைத்துத்தான் நீண்ட



காலமாக இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டு இதற்கு முன்னாலே இருந்த அரசு செய்வதாக வாக்களித்திருந்தது. நீண்டகாலமாக இருந்துவரும் இந்தக் கோரிக்கை இன்னும் பரிசீலிக்கிற நிலையிலேயே இல்லாமல், மிக விரைவில் நிறைவேற்றப்படும் வகையில் இதில் அரசு முனைப்புக் காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையான இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று இளநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களை இடைநிலை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுத்து, அதற்கான ஊதியமும் அளிக்க வேண்டும் என்பதை இந்த அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டது. அந்த அடிப்படையில் 1967-68 முதல் 1978-79 வரையிலான காலத்தில் 42,950 இளநிலை ஆசிரியர் பணி இடங்கள் இடைநிலை ஆசிரியர்களின் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன. இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறும்.

திரு. க. அறிவழகன் : கல்வி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று உறுதியளித்திருக்கிறார்கள். தற்போது இளநிலை ஆசிரியர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள். ஏற்கெனவே 42,000 இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர் தரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே மிகக் குறைவான எண்ணிக்கையில் இருக்கும் அந்த இளநிலை ஆசிரியர்கள் பெரும்பாலும், தலைவர் அவர்களே, தங்களைப் போல் வயதான முதியவர்களாக இருக்கிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு அரசு அவர்களையும் இடைநிலை ஆசிரியர்களாக மாற்ற முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இளநிலை ஆசிரியர்களாக சுமார் 68,000 பேர் இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேருக்கும் இடைநிலை ஆசிரியர் பதவி அளித்து ஊதியம் அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்பினால், அதற்காக 7 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு செய்கின்ற ஒரு கோரிக்கை பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைப் போலவே, புலவர் பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்களைத் தமிழாசிரியர்களாகவும், பி.டி. பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்களைப்

பட்டதாரி ஆசிரியர்களாகவும் பதவி உயர்த்த வேண்டும் என்ற பல நாட்களாகவே இருந்து வருகிறது. அவர்களுடைய ஊ 4 ஆயிரம், 5 ஆயிரம் என்ற அளவிலேதான் இருக்கிறது. ஆசிரிய களுக்குப் பதவி உயர்வு அளிக்கும் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது பதவி உயர்வு என்ற படையிலே இல்லாமல், இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் உயர்வுக்கு வரும்போது, வேலை அடிப்படையிலே தான் இருக்கிறது. பேரும், ஒரே வேலையைத்தான் செய்கின்றார்கள், இருந்தாலும், கு சம்பளம் பெறுகிறார்கள் என்ற இந்த அடிப்படையிலேதான் அனு வே

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இளநிலை ஆசிரியர்களிலே 42 பேர்கள் பதவி உயர்வு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். இ ஆசிரியர்களை 'அப்கிரேட்' தான் செய்திருக்கிறார்கள். கேள்வி அ இளநிலை ஆசிரியர்களாக இருக்கின்ற, இடைநிலை ஆசிரியர்கள் என்ற பெறாத அத்தனை பேரையும் அவர்கள் 10 ஆண்டுக் கால முடித்திருந்தால், அவர்கள் அத்தனை பேருக்கும் இடைநிலை ஆசிரியர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று பல முறை வேண்டுகோள் விடுத் நான் வேண்டுமானால் எழுத்து மூலமாக அமைச்சர் அவர்களு தருகின்றேன். அப்படித் தருகின்றபோது, இதை ஏற்றுக்கொண்டு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேள்வி இளநிலை ஆசி இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்தப்படுவார்களா என்பது. பகுதி யாக உயர்த்திக்கொண்டு வருகிறோம். எல்லா ஆசிரியர்களுக்கும் பதவி என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதிலே, நிதித் அதிகம் இல்லை என்கின்ற நிலைமைகள் இருப்பதால், இதிலே எந்த சிரமங்களும் இல்லை.

திரு. பி. ஆர். தாமஸ்: சில தொடக்கப் பள்ளிகளிலே சில ஆசி இடங்களை 'ப்ரொட்டக்டட்' போஸ்ட் ஆக வைத்திருக்கிறார்கள். அதிலே இடைநிலை ஆசிரியர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். களுக்கு இளநிலை ஆசிரியர்கள் ஊதியம் வழங்கப்படுகிறது. அ நிலைமைகளை மாற்றி, பணியாற்றுபவர்கள் இடைநிலை ஆசிரி இருந்தால், அவர்களுக்கு அந்தப் பதவிக்கு உள்ள ஊதியம் வழங்க அ அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இளநிலை ஆசிரியர்கள் பணியிடங்கள் அங்கே இருப்பது, கல்லூரிகளிலே இருக்கும் பயிற்றுநர்கள், விளக்குநர்கள் பணியிடங்களைப் போன்றவையாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Minimum Wages Act*, 1948.

* 147 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) the categories of employment as on 1st July 1978, wherein the Minimum Wages Act, 1948 (Central Act XI of 1948), has been brought into force in the State; and

(*b*) whether there is any proposal to extend the application of the Act to (i) the workers employed in Salt Production and (ii) the Weavers working under Private Business concerns?

### 1948ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டம்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர்நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் 1—7—1978ஆம் நாள் நிலவரப்படி, எந்தெந்த வகையான வேலைகளுக்கு, 1948ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டம் (மத்திய சட்டம் (11/1948) செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது?

(இ) (i) உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களுக்கும் (ii) தனியார் வணிக நிறுவனங்களில் வேலை செய்துவரும் நெசவாளர்களுக்கும், இச்சட்டம் பொருந்தச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: விபரங்கள் அடங்கிய அறிக்கை @ ஒன்று மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. டி. சந்தோஷம்: குறைந்தபட்ச ஊதியம் சில தொழில்களுக்கே பொருந்தும், சிலவற்றுக்குப் பொருந்தாது என்ற நிலைமை இருக்கிறது. அப்படியானால், அந்தக் குறைந்தபட்ச ஊதியம் எந்த அடிப்படையில் உள்ள தொழில்களுக்கு அமுலாக்கப்படுகிறது. எந்தெந்த அடிப்படையில் உள்ள தொழில்களுக்கு அமுலாக்கப்படவில்லை? எல்லாத் தொழில்களுக்குமே இந்தக் குறைந்த பட்ச ஊதியத் திட்டத்தை அமுலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 365-367ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

trades and non-hazardous trades, will be taken into account because this will have a very telling effect upon the employment of children in the various non-hazardous occupations?

The Hon. THIRU S. RAGHAVANANDAM: The employment is not considered but the prevention of employment or not employing the children in the industry is considered now. The complaint is that children are being employed and that child labour is being utilised in match factories and other things. How to avoid it, what alternate arrangements should be made for them and what should be given to the parents who depend on these children—all these things were taken into consideration in the Cabinet meeting. It would be let known later.

THIRU A. R. DAMODARAN: My reason in asking this was this. If a blanket decision is taken to ban child labour, it will have a tremendous economic impact on children who are being employed in what are known as non-hazardous trades, where for example, in shops, establishments and boat-working where children are employed. I wanted to know if the Government would consider making a distinction when they considered this question.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதைப் போல, அதை 'சாம்பிட் பேசிஸ்' செய்ய வேண்டும். இந்த எண்ட்க்கும் போகாமல், அந்த எண்டுக்கும் போகாமல் எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப் பார்த்து முடிவு எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 4-30)

திரு. க. இராமமூர்த்தி: நெசவாலைகளில் குறைந்தபட்ச ஊதியம் அமுலில் இருக்கிறது என்றாலும் கூட, தனியார்கள் சிலர் நெசவுத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி அவர்கள் நெய்யும் துணிகளை நிறுவனங்களில் ஒப்படைப்பது போன்ற வேலைகளைச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட நெசவாளர்களுக்குப் பெரும்பாலும் குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பதில்லை. அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: குறைந்தபட்ச ஊதியம் பற்றி வழக்கு மன்றத்தினுடைய தீர்ப்பை இங்கு நான் சொல்லியாக வேண்டும். **An industry which is not in a position to pay the minimum [illegible] has no right to exist.**



என்பது வழக்கு மன்றத் தீர்ப்பாகும். அரசாலே நிர்ணயிக்கப்பட்ட ஊதிய என்பது வழக்கு மன்றத் தீர்ப்பாகும். அரசாலே நிர்ணயிக்கப்பட்ட— அருகதையற்றது என்றே வழக்கு மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. எங்கே கொடுக்கவில்லை என்று அதற்குரிய அதிகாரிகளிடம் சொன்னால், அதை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆ. திராவிடமணி: ஓட்டல் தொழிலாளர்களுக்கும், துணிகளுக்குச் சாயம் இடுகிற தொழிலாளர்களுக்கும், கைக்குப் பிள்ளைகளாக இருந்து பேரேடுகளை எழுதுகிறவர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அரசு ஆவன செய்ய இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அருள்கூர்ந்து படிக்க வேண்டும். பட்டியல் 1—7—1978இல் எந்தெந்த வகையான தொழில்கள் கவர் ஆகியிருக்கின்றன என்று கேட்டிருக்கிறீர்கள். இந்தக் கேள்வி அதற்குத் தொடர்புடையதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### *Market in Annanagar*

*148 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether it is a fact that the Tamil Nadu Housing Board has allotted a site to the Madras Corporation free of cost for the construction of a Market in Sector-3 of Annanagar, Madras; and

(*b*) if so, when the market will be constructed in that site?

### அண்ணா நகர் பகுதியில் அங்காடி.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை, அண்ணாநகர் பகுதி 3-ல் அங்காடி (market) கட்டுவதற்காக, சென்னை மாநகராட்சிக்கு நிலம் இனாமாக ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், அந்த நிலத்தில் எப்பொழுது அங்காடி கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) நிலம் ஏதும் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. இராமமூர்த்தி : நிலம் ஒதுக்காத நிலையிலே அங்கே இன்றைக்கு (என்குரோச்மென்ட்) ஆக்கிரமிப்பு இருப்பதாக எனக்குத் தகவல். அப்படி இருக்குமானால், அதை உடனடியாக நீக்க அரசு முன்வருமா? அப்படி இதன் தொடர்பாக மற்றவர்களும் இதுபோன்று ஆக்கிரமிப்பு செய்கின்ற நிலையைத் தவிர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு அதற்கான காரியங்கள் செய்யப்படும். நிலம் ஒதுக்கப்படவில்லையே தவிர, அவர்களுடைய எண்ணம் பூர்த்தியாகியிருக்கிறது. அண்ணா நகரில், சாந்தி காலனியில் நடுத்தரப் பிரிவினருக்கான குடியிருப்பில் பிளாக் 115இன் அருகே உள்ள மனையில் சிறப்பு அங்காடி கட்ட உத்தேசிக்கப்பட்டு, வரைபடமும், திட்ட மதிப்பீடும் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், ஒப்புதல் பெற்ற பின்னர் பணி ஆரம்பிக்கப்படும் என்று வீட்டுவசதி வாரியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அண்ணா நகரில் உள்ள சாந்தி காலனி பகுதியிலே கட்ட இருக்கிற திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். வீட்டு வசதி வாரியம், மாநகராட்சிக்கு இலவசமாக இடம் கொடுக்காவிட்டாலும்கூட, வளர்ந்து வருகிற அண்ணா நகருடைய மேம்பாட்டைக் கருதியும், அந்தப் பகுதியிலே 4 ஆயிரம் பேருக்கு மேல் குடியிருப்பதாலும், கடைகள் அவசியம் என்பதை உணர்ந்து விலைக்குக் கொடுத்தாவது நிலத்தை வாங்கி மாநகராட்சியே கடைகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைப்பற்றி நான் முன்பே சொன்னேன். பகுதி ஒன்றிலும், இரண்டிலும் ஏற்கனவே ஒரு சிறப்பு அங்காடி (சிந்தாமணி)-யும், பகுதி 4-ல் வாரியத்தால் கட்டப்பட்ட 14 அங்காடிகளும் செயல்பட்டு வருகின்றன. மற்றும் ஏலத்தில் விடப்பட்ட மனைகளில் 6 கடைகள் கட்டப்பட்டு அண்ணா நகரில் பல பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. அங்காடிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் 1979-80-ஆம் ஆண்டில் 11 அங்காடிகளையும், 1980-81-ல் 7 அங்காடிகளையும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அந்தக் கடைகள் எல்லாம் தனியார் கட்டுகிற கடைகள், வீட்டு வசதி வாரியம் கட்டுகிற கடைகள். பொதுவாக பெரியமேட், சூளை, மைலாப்பூர் போன்ற அதிகமான மக்கள் வசிக்கும்



பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலும் மாநகராட்சியே மார்க்கெட்டைக் கட்டி மக்களுக்கு வசதியைச் செய்து கொடுக்கிறது. அதேபோல அண்ணா நகரிலும் சென்னை மாநகராட்சியே ஒரு மார்க்கெட்டைக் கட்டி, வேண்டிய கடைகளைத் திறக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாநகராட்சியே இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளுமா என்பதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சரைக் கேட்க வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன் : உள்ளாட்சித்துறை அமைச்சர் பதில் சொல்ல வேண்டியதற்கெல்லாம், தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்லுகிறார்கள். (சிரிப்பு) ஆனால் என் கேள்விக்குத்தான் பதில் சொல்ல வேண்டியதற்கு சொல்ல மறுக்கிறார்கள்.

## *Fat Content in Milk.*

* 149 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) whether the Tamil Nadu Dairy Development Corporation is allowed to sell Buffalo's Milk as Standardised Milk with only 4.5 per cent fat content and Toned Milk with a fat content of only 3 per cent; and

(b) if so, whether there is any proposal to extend similar permission to private milk vendors also?

### பாலில் கொழுப்புச் சத்து.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனம், எருமைப்பாலை, 4.5 சதவீத கொழுப்பு மட்டும் அடங்கிய தரப்படுத்திய பால் என்ற முறையிலும், 3 சதவீத கொழுப்பு மட்டும் அடங்கிய பதப்படுத்திய பால் என்ற முறையிலும் விற்க அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், பால் விற்பனை செய்யும் தனியார்களுக்கும், அதே போன்ற அனுமதியை நீட்டிப்பதற்கான கொள்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: குறைந்த பட்ச ஊதியச் சட்டப்படி ஒரு 'ட்ரேட்' அல்லது தொழிலிலே ஒரு மாநிலம் முழுவதும் ஆயிரம் பேர் இருந்தால் அல்லது அதற்கு மேலும் இருந்தால், அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கலாம் என்று இருக்கிறது. அதை ஏற்கனவே, பகுதி 1, மற்றும் பகுதி 2 என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். பகுதி 2-ல் விவசாயம் வருகிறது. மற்ற தொழில்கள் எல்லாம் பகுதி 1-ல் வருகிறது. இந்தத் தொழில்கள் இருக்கிற பட்டியலில் இல்லை என்று சொன்னால், அவற்றைச் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்ப்பதற்கு 3 மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னர் ஒரு குழு அமைக்க வேண்டும். அந்தக் குழு தனது பரிந்துரையை வெளியிடும். பிறகுதான் இந்த அறிவிப்பைக் கொடுக்க வேண்டும். மூன்று மாதம் கழித்துத்தான் அது அமுலுக்கு வரும். இடையிலே அரசே கூட ஒரு குழு அமைக்காமலேயே சம்பளம் நிர்ணயிக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி: முந்திரித் தொழிற்சாலை, தீப்பெட்டித் தொழிற்சாலை போன்றவற்றில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், தற்போது அங்கெல்லாம் குழந்தைகளையும் சிறுவர்களையும் வேலைக்குப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை அமுல்படுத்துவதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட தொழிலதிபர்களை இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: குழந்தைகளை வேலையில் வைப்பதைப் பொறுத்தவரையில், பரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது. குறிப்பாக, குறிப்பிட்ட இடத்தில் தவறுகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், அங்கு அதிகாரிகளை அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த முந்திரித் தோல் உரிப்புத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அங்கெல்லாம் குழந்தைகளை வேலைக்கு வைக்கும் நிலை இருக்கிறது. அது போலவே, இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அதிர்ச்சி தரக்கூடிய அளவிலே இருக்கும் நிலைமைகள் எல்லாம் நமக்கே தெரியும். ஆகவே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை உடனடியாகத் [illegible] அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைத்தான் நான் சொன்னேன், இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினைபற்றி அமைச்சரவையிலே பேசி, தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இந்தக் கேள்வியிலே நெசவாளர்கள் பற்றியும், உப்புத் தொழிலாளர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வகைத் தொழிலாளர்களுக்கும் 'மினிமம் வேஜ்' கடைசியாக அறிவிக்கப்பட்டது எப்போது? அதை உயர்த்துவதற்கு அரசுக்கு அபிப்பிராயம் ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இந்த ஆட்சி வந்த பிறகு, 1—2—1978ல் குறைந்த பட்ச ஊதியம் அமுலாக்கப்பட்டது. ஹேண்ட்-லூம், வீவிங் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், குறைந்தபட்ச ஊதியம் 31—7—1974-ல் நிர்ணயிக்கப்பட்டது. அதிலே ஹேண்ட்-லூம், சில்க் வீவிங் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு 9—3—1974-ல் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது.

திரு. ஆ. நல்லசிவன்: இந்த முந்திரித் தொழிலிலே குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தின்கீழ் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றனவா? இருக்கிறதென்றால், அவை கேரளாவிலே உள்ள விகிதங்களுக்கு ஒப்ப இருக்கின்றனவா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்பதால் தனிக் கேள்வி போட கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மூலக் கேள்வியிலே எந்தெந்த வகையான வேலைகளுக்குச் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று இருக்கிறது. ஆகவேதான் இந்த முந்திரித் தொழிலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று கேட்கிறேன். உண்டு, இல்லை என்று சொல்லலாமே.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister mentioned that the Tamil Nadu Government were considering whether to ban the use of child labour in factories. May I request him kindly to inform the House whether, in considering this question, the viewpoint of the Government of India, which has been expressed, that there should be a distinction between hazardous

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** எருமைப் பாலுக்கும் பசும் பாலுக்கும் அடிப்படையிலேயே உள்ள வித்தியாசம் இந்தக் கொழுப்புச் சத்துத்தான். ஆதாவது எஸ்.என்.எப். என்று சொல்லக்கூடிய நான் சாலிட்ஸ் ஃபேட் கன்டென்ட் என் பொருட்களை, கொழுப்புப் பொருள்களை எடுத்துக் கொள்கிறோம். ஓரளவுக்கு அதை எடுத்துவிட்டு, அந்தப் பாலை ஸ்டாண்டர்டைஸ் செய்கிறோம். அதில் 4.5 சதம் கொழுப்புச் சத்து இருக்கும். கிட்டத்தட்ட பசும் பாலிலே என்ன சத்து எதிர்பார்க்கின்றார்களோ அந்த அளவுக்கு இதிலே இருக்கும். இப்படி நிலைப்படுத்தப்பட்ட பாலைத்தான் நாம் பொதுவாக விநியோகம் செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Production of Meat from Milk.*

* 150 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) whether there is any proposal to produce meat from milk by the Tamil Nadu Dairy Development Corporation, as is being done in certain countries; and

(b) if so, the stage at which the matter now stands?

## பாலிலிருந்து இறைச்சி தயாரித்தல்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சில நாடுகளில் செய்யப்படுவதுபோல, தமிழ்நாடு பால் பண்ணைக் கழகத்திடம் பாலில் இருந்து இறைச்சி உற்பத்தி செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (அ) பாலிலிருந்து இறைச்சி தயாரிக்கும் திட்டம் எதும் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் இடையாது. முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் இத்திட்டத்தினை பரிசோதனைக்காக எடுத்துள்ளன. இத்திட்டம் பரிசோதனையளவில்தான் இருப்பதாகத் தெரிய வருகிறது.

**(ஆ) வினா எழவில்லை.**



**திரு. க. அறிவழகன் :** பாலிலிருந்து இறைச்சி தயாரிக்கும் திட்டம் எதும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் அந்தத் திட்டம் இடையாது என்று சொன்னதால், அது சைவர்களைக் காப்பாற்றுகிற திட்டமாக இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'விப்' அவர்கள் இப்போதெல்லாம் ரொம்ப விறுவிறுப்பாக இருக்கிறார்கள்.

**திரு. க. அறிவழகன் :** இந்த வினாவில் நிறைய கேள்விகள் கேட்க இருக்கிறார்கள். அதற்குள்ளாகவே முடிக்கப் பார்க்கிறீர்கள். உலகக் குழந்தைகள் ஆண்டாக இந்த ஆண்டு இருக்கிறது. அதற்கான குழுவிற்கு நம் முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கின்றார்கள். எனவே, பாலிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பால் பவுடர்களை ஆரம்பப் பள்ளிகளிலே ஒரு சிறு பகுதியையாவது, ஒரு 10 சதவிகித அளவுக்காவது வழங்குவதற்கு பால்வள நிறுவனம் ஒதுக்க முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதிலே இரண்டுவிதமான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று பாலிலிருந்து இறைச்சி தயாரிக்கும் திட்டம் இல்லை என்று சொன்னதற்குப் பாராட்டியிருக்கிறார்கள். அந்தப் பாராட்டு எதற்கு என்று தெரியவில்லை. பால் சைவப் பொருளாகக் கருதி உண்மைப்படுகிறது. பாலிலிருந்து இறைச்சி தயாரிக்கக்கூடிய திட்டம் வெளி நாடுகளிலே, மேல் நாடுகளிலே பரிசோதனைக் கட்டத்தில் இருக்கின்றது. அது வெற்றிகரமாக இருந்தால், அதைச் செயல்படுத்துவதற்கு முயற்சி செய்யலாம். அது நன்மையாக இருக்கும். இந்தத் திட்டம் வரவேண்டும் என்று கருதுகிறோம். ஜப்பானிய விவசாயப் பண்ணைக் கழக மாணவர்கள் அங்கே உள்ள பால் கூட்டுறவுப் பண்ணையிலே இது பற்றிய ஆராய்ச்சியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பொருளைப் பாலுடன் கலந்து பால் இறைச்சி தயாரிக்க முடியும் என்று விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்கிறார்கள். அது வெற்றிகரமாக இருந்தால், அந்தத் திட்டத்தை நம் பால் வள நிறுவனமும் எடுத்துக்கொள்ளும்.

இரண்டாவதாக, குழந்தைகள் ஆண்டு குறித்துச் சொன்னார்கள். குழந்தைகளுக்குப் பால் வழங்க சமூக நலத் துறை பல்வேறு திட்டங்களை வகுத்துச் செய்துகொண்டிருக்கின்றது. அவர்களோடு கலந்துபேசி, இந்தத் துறை எதை எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறதோ, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று நிச்சயமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) இல்லை. எருமைப்பாலை நிலைப்படுத்திய பாலாக விற்பனை செய்ய தமிழ்நாடு பால்வள நிறுவனம் அனுமதிக்கப்படவில்லை. இந்நிறுவனம் எருமைப் பாலையோ, பசும் பாலையோ அதே நிலையில் விற்பதில்லை. பால் உற்பத்தியாளரிடமிருந்து பெறப்படும் பசும் பால், எருமைப் பால் ஆகியவற்றை ஒன்றாக்கி, நிலைப் படுத்திய பாலாகவும், பதப்படுத்திய பாலாகவும் 1954 உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் விதிகளின்கீழ் தயாரித்து நுகர்வோருக்கு வழங்குகிறது.

(இ) உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நிர்ணயித்துள்ள தர நிர்ணயங்களை அனுசரித்திருக்கிற நிலைப்படுத்திய பாலை விற்க தனிப்பட்ட பால் விற்பனையாளர் எவருக்கும் தடை விதிக்கப்படவில்லையாதலால், இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. சந்தோஷம்: உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு அவதிக்குள்ளாகியிருப்பவர்கள் சிறிய பால் வியாபாரிகள்தான். அது அவர்கள் செய்த குற்றமல்ல. பசுக்களுக்குக் கொடுக்கப்படுகிற தீவனம், இளங்கன்று போன்ற காரணத்தால் சில சமயத்தில் பாலில் கொழுப்புச் சத்துக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும் வகையிலே, பாலை வியாபாரம் செய்யும்போது, கொழுப்புச் சத்துக் குறை வாக இருந்தாலும், வழக்குப் போடாத வகையில் அறிவுரை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கை எதிர் பார்க்கிறார்கள். மிகச் சிறந்த வழக்கறிஞராக இருக்கிற அவருக்கு இதிலே உள்ள சட்டப் பிரச்சினை தெரியும் என்று கருதுகிறேன். இப்போது இருக்கக் கூடிய சட்டம்கூட அவ்வளவு கடுமையானது என்று சொல்ல முடியாது. இங்கேயுள்ள குறிப்புகளின்படி, எருமைப் பாலை அப்படியே விற்க வேண்டும் என்றால், கொழுப்புச் சத்து 5 சதவீதம்தான் இருக்க வேண்டும். கொழுப்பு பற்ற இதர சத்து 9 சதவீதம் இருக்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். பசும் பாலை அப்படியே விற்க வேண்டுமென்றால், 3.5 சதவீதம் கொழுப்புச் சத்து இருந்தாலே போதும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சாதாரண மாக எருமைப் பாலைச் சோதனை செய்தால், 7 சதவீதம் கொழுப்புச் சத்து அதில் இயற்கையாகவே இருக்கும். ஒரு சதவீதம் குறைந்தாலும், 6 சத வீதம் இருக்கும். ஆனால் 5 சதவீதம் வரையில் இருந்தாலே போதும் என்று இப்போதுள்ள சட்டத்திலே நாம் அவர்களுக்கு இப்போது சலுகையைக் கொடுத்திருக்கிறோம். அதிலே அவர்கள் பதப்படுத்திய பால் என்று போட் டால், 3 சதவீதம் கொழுப்புச் சத்து இருந்தாலே போதும் என்று



விலக்கு இருக்கிறது. நிலைப்படுத்திய பால் என்றால் 4.5 சதவீதம் இருந்தால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் வியாபாரிகள் எந்த அளவுக்கு இதில் ஒழுங்குடன் செயல்படுகிறார்கள் என்பதுபற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. இதை இன்னும் குறைத்தால், அதைப் பால் என்று சொல்லாமல் வேறு ஏதாவது சொல்லி அழைக்க வேண்டியிருக்கும். இப்போது இருக்கிற சட்டமே அவர்களைத் துன்புறுத்தாத சட்டம் என்பதை மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அரசாங்க நிறுவனத்தின் 'பாரிலே' கொடுக்கப்படுகிற பாலில் 4 அல்லது 5 சதவீதம் கொழுப்புச் சத்து மட்டும் அடங்கியிருக்கிறது என்று இங்கிருக்கக் கூடிய குறிப்பிலே போடப்பட்டிருக் கிறது. ஆனால் இயற்கையாகவே 8 அல்லது 9 சதவீதம் கொழுப்புச் சத்து பாலில் இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூடுதலாக உள்ள அந்தக் கொழுப்புச் சத்தை அரசு எடுத்துக்கொள் ளுகிறதா ? அதை எடுத்து என்ன செய்கிறது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : பொதுவாக நாம் தனியாக எருமைப் பால், பசும் பால் என்று பிரித்து விற்பதில்லை. எருமைப் பாலையும், பசும் பாலையும் உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று இரண்டை யும் கலந்து நிலைப்படுத்திய பாலாக 4.5 சதவீதம் கொழுப்புச் சத்துடன் விற்கிறோம். எஞ்சியிருக்கக் கூடிய பொருளை நாம் எடுத்து மற்ற உபப் பொருளாகத் தயாரித்து விற்பனை செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : குடிசை வாழ் மக்கள் பாலை வாங்க முன் பணம் கட்ட முடியாத நிலையில் இருப்பதால், அவர்களுக்குக் குறைந்த அளவு முன்பணத்திற்குப் பாலை வழங்கும் திட்டம் அரசின் கவனத்திலே இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : அரசுத் துறையின் மூலமாக நிலைப்படுத்தப்பட்ட பால் மட்டும் விற்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பல பேர் பழக்கத்தின் காரணமாக, பசும் பால் மட்டுமே சாப்பிடுகிறார்கள், சிலர் எருமைப் பால் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையிலே நிலைப்படுத்தப்பட்ட பாலோடு, எருமைப் பால், பசும் பால் ஆகியவற்றையும் தனித்தனியாக விற்க அரசு முன்வருமா ?

**புலவர் புலமைப்பித்தன் :** நான் பால் இறைச்சி சைவமா அசைவமா என்று கேட்க நினைத்தேன். அவர்களே அதைப்பற்றிச் சொல்லிவிட்டதால், நான் கேள்வி கேட்க இடமேயில்லாமல் போய்விட்டது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** பாலிலிருந்து இறைச்சி தயார் செய்யக் கூடிய ஆராய்ச்சி நடக்கிறது என்று சொன்னார்கள். அந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றுவிட்டால், அந்த இறைச்சி சைவப் பொருளா அல்லது அசைவப் பொருளா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது என்றால், மூலப்பொருளுக்கும் அந்த உற்பத்தியான பொருளுக்கும் தொடர்பு இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1979).

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979).



## 3. மேலவை விதி 82ன் கீழ் அமைச்சரின் விவர அறிக்கை.

### விவசாயிகளுக்கான மின்கட்டணம், மின் துண்டிப்பு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவை விதி 82ன் கீழ் விவசாயிகள் பிரச்சினை குறித்து அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்கள்.

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

7—3—1979 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் கொண்டு வந்த விவசாயிகளுக்கான மின் துண்டிப்பு சம்பந்தமான ஒத்தி வைப்புத் தீர்மான விவாதத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்துக் கட்சியினரையும், விவசாய சங்க பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசிப்பதென அவைக்கு அறிவித்தார். அதற்கேற்ப நேற்றையதினம் (8—3—1979) அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடனும், விவசாய உச்ச மட்டக் குழுவின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடப் பெற்றது. அப்பொழுது மின் கட்டண பிரச்சினைகள் 10—5—1978 அன்று விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் பேசியபொழுதே முடிவெடுக்கப்பட்டது என்பதையும் கூட்டுறவுக் கடன், வட்டி, கொள்முதல் விலை, போன்ற மற்ற பிரச்சினைகள்தான் உச்சமட்ட குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டது என்றும் தெளிவாக்கப்பட்டது. 10—5—1978 அன்று விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு யூனிட் 1-க்கு, 16 பைசா என்பதை, பெரு விவசாயிகளுக்கு 14 பைசா சிறு விவசாயிகளுக்கு 12 பைசா என்றும், மீட்டர் வாடகையை 5 ரூபாயிலிருந்து 4 ரூபாயாக குறைத்தும் முடிவெடுக்கப்பட்டது. இம்முடிவை எல்லோரும் ஒரு மனதாக வரவேற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த அடிப்படையில் உச்ச மட்டக்குழு பரிந்துரைக்கு அனுப்பப்பட்ட ஆய்வு வரம்பிலிருந்து மின்கட்டணம்பற்றி கோரிக்கையும் அப்போதே நீக்கப்பட்டு விட்டது.

அரசுக் கடன், கூட்டுறவுக் கடன் அவைகளின் மீதுள்ள வட்டி, அபராத வட்டி ஆகியவைகள் குறித்து உச்சமட்ட குழுவின் பரிந்துரை எதிர்பார்க்கப் படுகிறது. அத்தகைய பரிந்துரைகள் அரசுக்கு கிடைக்கும் வரை ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபடாது என்பதை ஏற்கெனவே அறிவித்ததோடு மட்டுமல்லாமல் இப்போதும் வலியுறுத்துகிறோம்.

மின்கட்டணம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது என்றாலும், மின் கட்டணத்தை செலுத்த விரும்பும் விவசாயிகளுக்கு ஒரே நேரத்தில், 2, 3 ஆண்டுக்கால நிலுவைத் தொகையைக் கட்டுவது கடினமாக இருக்கும்;

## மதுரை மாவட்டம் உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி நிர்வாகத்தை வக்ஃப் போர்டே ஏற்று நடத்த வேண்டுமென்ற போராட்டத்தில் பல ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டது குறித்து



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது கல்வித் துறையின் அதிகாரத்தில் இல்லை. 6 மாதச் சம்பள பாக்கியில் 3 மாதச் சம்பளத்தை கொடுத்துவிட்டார்கள், இன்னும் 3 மாதச் சம்பளம்தான் பாக்கியிருக்கிறது நிர்வாகத்திடமிருந்து 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கை வரப்பெற்றால், அவற்றைத் தணிக்கை செய்து, தகுதிப்படி மானிய அளிக்கப்படும். அதைக்கொண்டு ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** தலைவரவர்களே, அந்தக் கல்லூரியில் பல வேலை யாற்றும் ஆசிரியர்களும், ஏனைய பணியாளர்களும் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வருவதால், அந்தக் கல்லூரியில் பாட போதனை நடைபெறாமல், பெரும் தொல்லை ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்களுக்குத் தொல்லை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த நிலையை உடனே முடிவிற்குக் கொண்டுவர மாண்புமிகு கல் அமைச்சரவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறி விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பணம் இல்லாததால், அங்கே நிர்வாகம் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையைத் தவிர்க்க, கல்வித் துறை தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, 1933-லிருந்து 1978 வரை, அந்தக் கல்லூரியில் இருந்த முந்தைய நிர்வாகத்திற்கு உரிய தொகைக்கும் மேலாக மானியம் வழங்கப்பட்டிருக்கிறதென்று அறிக்கையில் காணப்படுகிறது. அப்படியானால், உரிய தொகைக்கு மேலாக மானியம் கொடுத்திருந்தும், ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்காததற்கு அந்த நிர்வா கத்தின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அறிக்கை பெறப்பட்டவுடன், அவர்கள் செய்த தவறுகளுக்கு நடவடிக்கையை கல்வித்துறை எடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நிர்வாகத்தினுடைய சொத்துக்கள் ... மதுரை பட்டவர்களுக்கு உரியதாக இருப்பதால், அதுகுறித்து ... நிர்வகிக்க அவ மன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்து, சொத்துக்களை ஏற்று நிர்வகிக்க ... கேட்டுக்கொள்ள செய்யுமாறு மதுரை தெற்கு பிராந்தியக் கண்காணிப்பாளர் கேட்டுக்கொள் பட்டிருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. எப்போது அவருக்கு அந்த குறிப்பு அனுப்பப்பட்டது? அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திரு கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்லூரிக் கல்வி நிர்வாகம் தான் பதில் சொல்ல முடியும். மற்றபடி அது வக்ஃப் போர்ட் பற்றிய





## (2) தென் ஆற்காடு மாவட்டம், நெல்லிக்குப்பத்திலுள்ள இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலையில் டர்பைன் வெடித்ததால் இருவர் உயிரிழந்தது குறித்து.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தென் ஆற்காடு மாவட்டம், நெல்லிக்குப்பத்திலுள்ள இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலையில் 12—2—1979 அன்று காலை 10.35 மணியளவில் டர்பைன் வெடித்ததினால் இருவர் உயிர் இழந்ததையும் இதர சிலர் காயமடைந்ததும் குறித்து"

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், நெல்லிக்குப்பத்திலுள்ள இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலையில் 12—2—1979 அன்று காலை 10.35 மணியளவில் க்ரஷர் டர்பைன் வெடித்ததினால் திரு. எம். எஸ். சச்சிதானந்தம், மேற் பார்வையாளர், திரு. ஐ. பொன்னுசாமி, தொழிலாளி ஆகிய இருவரும் உயிரிழந்தார்கள். மற்றும் இருவர் காயம் அடைந்தார்கள். காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

(2) நிர்வாகத்தினர் கருணை அடிப்படையிலான உதவித் தொகையாக (Ex-Gratia) ரூ. 1,000மும் மேலும் உயிரிழந்த மேற்பார்வையாளர் குடும்பத்தினருக்கு ரூ. 250-ம் மற்றும் தொழிலாளியின் குடும்பத்தினருக்கு ரூ. 300-ம் இறுதி ஈமச்சடங்கிற்காக அளித்துள்ளனர். பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த தொழிலாளிக்காக (திரு. ஐ. பொன்னுசாமி) நட்ட ஈடுத் தொகைக்கான இணை தொகையாக ரூ. 23,100ஐ தொழிலாளர்கள் நட்ட ஈடுத் தொகைக்கான ஆணையாளர்–II ஆணையராக இருக்கும் சென்னை துணை தொழிலாளர் நல ஆணையாளர்–II அவர்கள் வசம் நிர்வாகத்தினர் ஒப்படைத்துள்ளனர். உயிரிழந்த மேற் பார்வையாளரின் (எம். எஸ். சச்சிதானந்தம்) ஊதியம் மாதத்திற்கு ரூ. 1,000-க்கும் மேம்பட்டுள்ளதாலும் தொழிலாளர்கள் நட்ட ஈடுச் சட்டத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டுள்ளதாலும் நிர்வாகத்தினர் அவரைச் சார்ந்துள்ள குடும்பத்தினருக்குக் கொடுக்கப்பட வேண்டிய நட்ட ஈடுத் தொகையினை தாங்களே நேரிடையாக நிர்ணயம் செய்து கொள்வதாக கூறியுள்ளனர்.

3. இந்த விபத்தினை காஞ்சிபுரம் தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர் அவர்கள் நேரில் சென்று புலன் விசாரணை செய்துள்ளார். அவர் தனது அறிக்கையில், இந்த டர்பைன் ஆனது புதிதாக நிர்மாணிக்கப்பட்டது என்றும்

ஆகவே, அது எளிதாக்கப்படவேண்டும் என்று நேற்று நடை கூட்டத்தில் பல்வேறு நாரிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்ட காரணத் அரசு அத்தகைய கருத்துக்களுக்கு நன்மதிப்பளித்து கீழ்க்கண்ட சலுகைக அறிவிக்க முடிவெடுத்துள்ளது.

நிலுவைத் தொகைகளைத் தரவில்லை என்ற காரணத்துக்காக துண்டிப்பு பற்றி அறிவிப்பு பெற்றவர்கள்; அறிவிப்பு பெற்றவுடன் கடை யாகப் பெற்ற மாதாந்திர பில்தொகையை மட்டும் உடனடியாகச் செலுத்தின மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது. அவர்கள் நிலுவைத் தொகை உடனடியாகச் செலுத்தவேண்டியதில்லை. மேலும் மின்துண்டிப்பு அறிவி பெறாதவர்களும் கடைசியாகப் பெற்ற மாதாந்திர பில்தொகையை உட யாகச் செலுத்தினால், அவர்களும் நிலுவைத் தொகையை உடனடியா செலுத்தவேண்டியதில்லை.

மேற்கூறியவர்கள் அடுத்த மாதம், அதாவது ஏப்ரல் முதல் அந்தந்த ம நடப்புத் தொகையையும் பழைய பாக்கியில் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொ மாதத் தொகையையும் செலுத்தி வரவேண்டும்.

இவ்வாறு செலுத்த முன்வருபவர்களுக்கு 31—3—1979 வரையில நிலுவைக் கட்டணங்களுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

சென்ற சில நாட்களில் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டு, இன்னும் மீ இணைப்பு மறுபடியும் பெறாதவர்கள், உடனடியாக கடைசியாகப் பெ மாதாந்திர பில்தொகையையும் மறு இணைப்புக்கான கட்டணத்தையு செலுத்தினால், மின் இணைப்பு தரப்படும். அவர்களும் ஏப்ரல் மாதம் முத ஒரு மாத நடப்புத் தொகையையும், ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு மா நிலுவையையும் செலுத்தி வரவேண்டும். இவர்களுக்கும் 31—3—1979 வரை யிலான நிலுவைக் கட்டண வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, பாக்கிகளை முற்றிலும் செலுத் மீண்டும் மின் இணைப்பு பெற்றவர்களுக்கும், நிலுவைக் கட்டணங்களு வட்டி முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும். இந்தச் சலுகைகளைப் பயன் படுத்திக்கொண்டு, கட்டணங்களைச் செலுத்தாதவர்களுக்கு மின் இணைப் துண்டிக்கப்படுவதுடன், மின் இணைப்பு மீண்டும் பெறுவதற்கு நிலுவை தொகைகள், நிலுவைக்கான முழுவட்டி, மறு இணைப்புக் கட்டணம் ஆ வற்றை ஒட்டுமொத்தமாகக் கட்டிய பிறகே மின் இணைப்பு தரப்படும்.

முன்பு தீவிர ஆலோசனைகளுக்குப் பிறகு முடிவு எடுத்த பிறகும், எ கட்சித் தலைவர்களும், விவசாயிகள் சங்கத் தலைவர்களும் விடுத்த வே கோளின்படி மீண்டும் ஆராய்ந்து சலுகை தந்து, அரசு இப்போது எடுத்



முடிவுகளை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன். வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான மின்வழங்கு திட்டங்களை விரைந்து நிறைவேற்றவும் தட்டுப்பாடின்றி மின்வழங்க ஏற்ற வசதிகளை உருவாக்கவும் மின்வாரியத்துக்கு ஒத்துழைப்பு தந்து இதுவரை மின்கட்டணம் செலுத்தாத விவசாயிகள் அனைவரும் மின்கட்டணங்களை விரைந்து செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4.50)

## 4. கவன ஈர்ப்பு.

1) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி நிர்வாகத்தை வக்ஃப் போர்டே ஏற்று நடத்த வேண்டுமென்ற போராட்டத்தில் பல ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன்**: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி ஆசிரியர்கள் அக்கல்லூரியினுடைய நிர்வாக சீர்கேடுகளைக் களைந்தெறியவும், வக்ஃப் போர்டே அக்கல்லூரி நிர்வாகத்தை ஏற்று நடத்தவும் வற்புறுத்தி நடத்திவரும் அறப் போராட்டத்தினையொட்டி பல ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டதினால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து"

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: தலைவரவர்களே, ஓர் அறிக்கை @ அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன்**: தலைவரவர்களே, இந்தக் கல்லூரியிலே வக்ஃப் போர்டால் நியமிக்கப்பட்ட நிர்வாக கமிட்டி இருக்கிறது. தனியார் ஆக்கிர மிப்பில் உள்ள அந்தக் கல்லூரியின் சொத்துக்களைப் பெற இயலவில்லை. கல்லூரிக்குச் சாதகமாக சிவில் கோர்ட்டில் டிக்கிரியான 3 லட்சம் ரூபாயை அந்தக் கல்லூரியால் பெற முடியவில்லை. ஆசிரியர்களுக்கு 3 மாதச் சம்பளம் கொடுக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்க வில்லை. அந்த நிர்வாகம் ஸ்தம்பித்துள்ளது. எனவே அங்கே ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமிக்க வேண்டுமென்று கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும், பொது மக்களும் விடுக்கும் கோரிக்கையை அரசு ஏற்குமா?

---

@ 367-368 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* THIRU A. R. DAMODARAN : Sir, I rise on a point of order. The Business Advisory Committee had decided the Bills will be placed before this House on the 12th and 13th March and there are also rules in the Council Rules which state that three days' notice should be given before taking up the Bills. This Bill has been passed at 1'O-clock by the Assembly and after 3 hours, at 4 p.m. it is placed here and we are expected to pass it at 5 p.m. May I request now as under what provisions, this Bill has been introduced within three hours of its passing?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்ற மேலவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்று, கால அவகாசம் இல்லாதபடியால், உடனடியாக அவையில் வைத்து நிறைவேற்ற வேண்டியிருந்ததால் உடனடியாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் ஏதாவது விளக்கம் சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

* THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, the Ordinance which is now sought to be replaced by the present Bill expires on 15th March and there are hardly a few days now. We are already on the 9th and tomorrow is the only working day. Sunday is a holiday. We have got to get the concurrence of the Central Government—the President of India and the concerned Ministries will have to go through the Bill. There are at least four or five Ministries through which the Bill has to go for scrutiny and concurrence must be given by the concerned Departments. Therefore, there is this urgency for bringing this Bill before this House. The scope of this Bill is rather very narrow. The Ordinance provided for extension of the ban up to 15th March 1979 and all that this Bill seeks to do is only to extend it by another three months.

* THIRU A. R. DAMODARAN : One submission, Sir. The question whether this Bill is an ordinary Bill or an extraordinary Bill will be subject to the wisdom of the Members concerned.. My only point is that the Ordinance was passed on the 13th January 1979 and we met for the Governor's Address



on 9th February and a lot of official business was transacted. My only intention in placing this matter before the House is that the Legislature is being treated with a certain degree of contempt, if you expect it to pass this Bill within two hours after it is passed by the Assembly. I can understand extraordinary circumstances. But this Bill, as the Hon. Minister himself has mentioned, is a very ordinary Bill with ordinary implication and it should have been introduced in the ordinary way instead of bringing it in this extraordinary fashion. That is what I want to mention.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவின் படிகள் சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட பின் அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்னறிவிப்பு கொடுத்த நாளிலிருந்து 3 நாட்களுக்குப் பின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பது விதி. இருப்பினும் இந்தக் கால அளவைத் தளர்த்தி முன்னதாகவே எடுத்துக்கொள்ள அவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்கலாம். (விதி எண் 128). அவை முன் உள்ள சட்டமுன்வடிவு அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதால், அதன் முக்கியத்துவத்தைக் கருதி நான் அந்தக் கால அளவைத் தளர்த்தியுள்ளேன். எனவே இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் எழவில்லை. இருப்பினும் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகளை இந்த அவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் முன், இவ்வவை உறுப்பினர்கள் அச்சட்ட முன் வடிவுகளைப் படித்து அறிந்துகொள்வதற்குத் தகுந்த அவகாசம் அளிக்க வேண்டும். இதை அரசு பின்பற்றும் என்று கருதுகிறேன்.

* THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Chairman, Sir. I beg to move:

"That the Tamil Nadu Pawn Brokers (Amendment) Bill, 1979 @ (L.A. Bill No. 12/1979), as passed by the Assembly, be taken into consideration".

By section 12-A of the Tamil Nadu Pawn Brokers Act, 1943, as amended, the sale by the pawnbrokers of the pledges pawned with them had been barred up to and inclusive of the 15th January 1979.

---

@ 369-ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru K. Narayanaswamy] [1979 மார்ச் 9

Government decided that this ban should be extended for a further period of two months so as to enable the pawners who had not redeemed their pledges by 15th January 1979 to have some more time to pay dues in instalments and to have their pledges redeemed. Accordingly, the Tamil Nadu Pawnbrokers (Amendment) Ordinance, 1979 was promulgated by the Governor.

The present Bill before the House is to replace the above Ordinance. The Government are examining the nted for further extension of this ban and have decided to extend the ban for three more months up to and inclusive of the 15th June 1979. Necessary provision has been made to provide for this also in the Bill.

Sir, I commend the motion for the acceptance of the House.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம் "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்;"

* THIRU A. R. DAMODARAN : Sir, only five words are being altered by this Bill. The words '15th day of January' are sought to be substituted by the words '15th day of June 1979'. We have had other Bills also in respect of elections to local bodies, Panchayat Unions, etc., where some very minor amendments have been carried out. In fact, a major amendment also was carried out in 1976 when we postponed the elections even to the Parliament and Assembly by only substituting dates. My only submission is that this is not as ordinary a Bill as the Hon. Minister wished to make it out to be because this will affect not only 10,000 pawn-brokers but probably 50,000 to 60,000 creditors who have to redeem their pledges before the due date of 15th June 1979.



1979 மார்ச் 9] [Thiru A. R. Damodaran]

திட்டம் முடித்திருக்கிறதோ, அதற்குத்தான் பணம் கொடுப்பார்கள். இந்தத் திட்டத்தை எடுத்திருக்கிறோம், முடிக்கப் போகிறோம் என்று சொன்னால், முடித்துவிட்டு வாருங்கள், அப்போது பணம் தருகிறோம் என்று சொல்வது தான் அவர்கள் வழக்கம். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிதி ஆணைக் குழு போடப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போதுகூட, மது விலக்கை ரத்து செய்துவிட்டு, பின்னால் மதுவிலக்கைக் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லி, அதனால் இழப்பு 120 கோடி ரூபாய் இருக்கும், அதற்கு ஏதாவது பணம் கொடுக்க வேண்டுமென்று நிதி ஆணைக் குழுவிடம் வற்புறுத்தினார்கள். அப்போது என்ன சொன்னார்கள் என்றால், தாங்கள் கருத்திலே எடுத்துக்கொள்கிறபோது நீங்கள் மது விலக்கு கொண்டு வந்து, அதனால் 120 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருந்தால், அதை நிறைவு செய்திருப்போம்; நீங்கள் செய்வதாகச் சொல்லப் போவதற்குப் பணம் கொடுக்க மாட்டோம் என்றார்கள். அப்போது ராஜாஜி அவர்கள் ஒரு கருத்தை எழுதினார்கள், நீங்கள் மது விலக்குக் கொண்டுவருவதாக இருந்தால், அதை நிதியாணைக் குழு பரிந்துரை செய்வதற்கு முன்னே கொண்டு வந்திருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்திருப்பதாகக் கருதுவேன் என்று சொன்னார்கள். நிதி ஆணைக் குழு வரும்போது, ஊதியக் குழுவின் பரிந்துரை வரப் போகிறது என்று சொன்னார்கள். அந்தப் பரிந்துரைகள் வந்திருந்து, கொடுத்துவிட்டி ருந்தால், இன்னும் அதிகமான அளவிற்குப் பொருளைப் பெற்றிருக்கக் கூடும். அதிலும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொண்டு வந்த மது விலக்கு போன்று இல்லை இது. ஊதியக் குழுக்களை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நியமிக் கிறோம். ஆனால் நிதி ஆணைக் குழு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. நிதியாணைக் குழு வருவதற்கும், ஊதியக் குழு பரிந்துரைகள் வருவதற்கும் இடையே காலதாமதம் இருக்கிறது. நம் 10 ஆண்டுகளுக்கும், அவர்கள் 5 ஆண்டுகளுக்கும் இடையே இடைவெளி இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன. அந்தக் காரணத்தாலே இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. எனவே அரசுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியக் குழுக்களைப் போட்டால், தொந்தரவுகள் இல்லாமல் இருக்குமென்று சொல்லிக்கொள்வேன். அதன்மூலம் இன்னும் அதிகமான பொருள் கிடைக்கக்கூடும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியக் குழு போடுவது என்பது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உருவானது. ஆனால் இப்போது விலைவாசி ஏற்றத்தைப் பார்க்கும்போது, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதியக் குழுக்களை நியமிக்க வேண்டுமென்ற முறை இருக்க வேண்டுமா என்று தோன்றுகிறது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வைத்தால் என்ன? அதனால் பிரச்சினைகள் தோன்றலாம், சிக்கல்கள் தோன்றலாம். என்றாலும் ஆராயக்கூடிய ஒன்று என்று சொல்லுவேன். திராவிட முன்னேற்றக்

[1979 மார்ச் 9]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : வைக்கப்படுகிற புத்தகங்களை
பினர்கள் படிக்கிறார்களா இல்லையா என்பது அல்ல பிரச்சினை.
என்ற ஒரு புத்தகம் இருக்கிறது. அதை யாரும் பூராவாகப் படிப்பதில்
இருந்தாலும் அது பாதுகாக்கப்படுகிறது. அதுபோலத்தான்
புத்தகங்களும். அவை தொடர்ந்து இந்த அவையில் வைக்கப்பட வேண்டும்

திரு. ஜி. சுவாமிநாதன் : உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய
கருத்தைச் சொல்கிறேனேயல்லாமல், துணைத் தலைவர் என்கிற முறையில்
நான் சொல்லவில்லை. துணைத் தலைவராகையால், நான் சொன்ன
அதை முடிவு செய்து விடுவார்கள் என்ற கருத்திலும் சொல்லவில்லை.
ஆண்டுகளாக நிபுணர்களையெல்லாம் கலந்தாலோசித்து, இவ்வளவு புத்தகங்கள்
வைக்கப்பட வேண்டுமா என்ற கேள்வியை நானே கேட்டு, அதன் அ
படையில்தான் என்னுடைய சொந்தக் கருத்தைச் சொன்னேன். வேண்டும்
மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து வாங்கிக்கொள்ளலாம். மற்றவர்
லைப்ரரி, புத்தகசாலைக்குச் சென்று படிப்பதிலும் தவறு இல்லை. நான்
சொன்ன கருத்தை என்னுடைய சொந்தக் கருத்தாக ஏற்றுக்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்து
விடுகிறேன். வணக்கம்.

* திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,
இந்த நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு ஒருசில
கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். நேற்றையதினம் இந்த மன்றத்
திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும்
திரு. முத்துசாமி அவர்களும் மிகவும் குறைபட்டுக் கொண்டார்கள்.
"தாங்கள் வெற்றிடத்தைப் பார்த்து, எத்தனை நாட்கள்தான் பேசிக்கொண்
டிருப்பது" என்கின்ற கருத்தினைச் சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர்
அவர்கள் அவையில் அமர்ந்திருக்கின்ற காரணத்தால், இன்றையதினம்
மாண்புமிகு உறுப்பினர்களுடைய குறை போக்கப்பட்டு, இந்த சபை நிறைவு
பெற்றிருப்பதால், அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய
நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நிதிநிலை அறிக்கை என்ற
புத்தகத்தை 44 பக்கங்கள் அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒன்றும்
இல்லையென்று சொல்வதற்கில்லை. ஒருசில திட்டங்கள் பழைய திட்டங்
களாக இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களைப் போற்றுகின்ற
வகையில், பாராட்டுகின்ற வகையில் சில திட்டங்களையும் அறிவித்திருக்
கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், முதியவர்களுக்கும்
பென்ஷன் கொடுக்கின்ற திட்டம். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்
காலத்தில் அமுல்படுத்தப்பட்ட திட்டம். அன்றைய 20



1979 மார்ச் 9] [திரு. ஆ. பாலசுப்ரமணியம்]

மாதந்தோறும் உதவித் தொகை என்று வழங்கப்பட்டது. இன்றைக்கு அதை
25 ரூபாய் என்று உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்குப் பொங்கல்
பண்டிகையின்போதும் சுதந்திர தினத்தின்போதும் கைத்தறி வேஷ்டியும்
கைத்தறி சேலையும் அளிப்பதாக அறிவித்திருப்பது பாராட்டத்தக்கது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், கண்ணொளி
இழந்தவர்களுக்கு, ஆதரவற்றவர்களுக்கு வயது வரம்பு பார்க்காமல், இந்த
உதவியைக் கொடுக்க முன் வந்திருப்பது குறித்து உள்ளபடியே நான்
பெருமைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, 'அரசு அலுவலர் நலன்' என்ற பகுதியில் பல சலுகை
களை அரசு அளிக்க முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. சைக்கிள்
வாங்க முன்பணமாக முன்பு 300 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்ததை இப்பொ
ழுது 400 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோல ஸ்கூட்டர்
வாங்க முன்பணமாக முன்பு 4,500 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்ததை இப்
பொழுது 5,000 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். பண்டிகை முன்பண
மாக முன்பு 250 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்ததை 300 ரூபாய் என்று
உயர்த்தியிருக்கிறார்கள். மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள்
மீது அரசு முடிவெடுத்ததன் காரணமாக, அரசுக்கு உடனடியாக அதிகச்
செலவு ஆண்டொன்றுக்கு ரூபாய் 37 கோடி என்றும் நாளடைவில் போகப்
போக அது ரூபாய் 67 கோடியாக உயரும் என்றும் அறிவித்திருக்கிறார்கள்
இதெல்லாம் பாராட்டக்கூடிய அம்சங்கள் என்றாலும் கூட, நான் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் சொல்லுகின்ற மிக
முக்கியமான கருத்து என்னவென்றால் கிராமப்புறங்களில் அனைவருக்கும்
வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டமான "உறுதியான வேலை வாய்ப்புத்
திட்டம்" என்பது பற்றித்தான். இந்த உறுதியான வேலை வாய்ப்புத்
திட்டத்திலே 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். அவர்கள் படித்தவர்களாக இருந்
தாலும் படிக்காதவர்களாக இருந்தாலும், அவர்களுடைய பெயரைப் பதிவு
செய்து கொண்டால், அவர்களுக்கு வேலை இருந்தால், நாளொன்றுக்கு
ரூபாய் மூன்றும், அரிசியும், கோதுமையும் கொடுக்கப்படும் என்று கூறியிருக்
கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்
பினர் அவர்கள் "வேலை செய்பவர்களுக்கு" என்று மாற்றிக்கொள்ள
வேண்டும்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : பதிவு செய்திருப்பவர்களுக்குக் கொடுப்
பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வேலை இல்லாத காலத்திலே அவர்களுக்கு
ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ

வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும்
மல் விட்டுவிட்டார்கள். இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்
றார்கள் என்பதுதான் அது. எப்படி இந்தத் திட்டத்தை அமுல்
போகிறார்கள் என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை. எனக்கு மு
பேசிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மேற்கு வங்
கோளாவையும் ஒப்பிட்டுப் பேசினார்கள். நடைமுறையிலுள்ள சிக்
யெல்லாம் சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொ
வரை, இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்லு
செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் எப்படி
திட்டத்தை நிறைவேற்றப் போகிறார்கள் என்ற விளக்கம் இல்லை
தான், நான் இதைக் கேட்கிறேன். இன்றைக்கு இவ்வளவு காரி
யெல்லாம் செய்து விட்டு, எதை மிக முக்கியமாகச் செய்ய வே
அதைச் செய்வதாகச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். அதுதா
குள்ள வருத்தமெல்லாம். அழகான விருந்து வைத்திருக்கிறார். உணவெ
டின் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறுஞ்சுவை
வைத்திருக்கிறார்கள். ஆனால் உப்பு மட்டும் போடாமல் விட்டு விட்டா
அதுதான் எனக்கு ரொம்ப வருத்தம். அதுதான் விவசாயிகள் பிரச்
இலை இருக்கிறது. உணவு இருக்கிறது. ஆனால் உப்பு மட்டும் இ
விவசாயிகள் பிரச்சினை இன்றைக்கு பெரிய பிரச்சினையாக ரூபமெடு
கிறது.

ஒரு மாண்புமிகு உறுப்பினர் : உப்பு இல்லாமல் கூட உணவு சாப்
உண்டு.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : உப்பு இல்லாமல் உணவு சாப்பிட முடி
ஆனால் நோயாளிகளுக்குத்தான் உப்பு தேவையில்லை. மற்றவ
உப்பு அவசியம் தேவை. அறுசுவையாக இருந்தாலும் கூட உப்பு
யென்றால், உப்பில்லாப் பண்டமாகி விடுகிறது. விவசாயப் பிரச்
பொறுத்தவரை, தமிழகத்தை எடுத்துக்கொண்டால், வேறு எந்த மா
லும் இல்லாத அளவுக்குக் கொந்தளிப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, செ
மிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்களுக்கு ஒரு
சொல்ல விரும்புகிறேன். வெளி நாடுகளில் இங்கே மாட்டு வண்டி
வருகின்றார்களே, இது போல டிராக்டரில் ஊர்வலம் வருகிறார்கள்,

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அது பணக்கார நாடு. நம்முடை
ஏழை நாடு. அவர்கள் டிராக்டரில் ஊர்வலம் வருகிறார்கள். நம
மாட்டு வண்டியில் ஊர்வலம் வருகிறார்கள். மாண்புமிகு முதல





நினைவுபடுத்தியதற்கு நன்றி. ஆக இன்றையதினம் அத்தகைய ஒரு கொந்த
ளிப்பு அவர்களிடத்தில் இருக்கிறது. இதற்கெல்லாம் மூல காரணம் என்ன
என்பதைப் பார்க்க வேண்டும். உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது என்று
அவர்கள் சொல்லுகிறார்கள். பொதுச் சந்தையிலே அவர்கள் உற்பத்தி
செய்கின்ற உற்பத்திப் பொருள்களைக் கொண்டு போனால், உரிய விலை
கிடைக்கவில்லை என்று குறைபடுகிறார்கள். அதோடு இன்றையதினம் மின்
இணைப்பு துண்டிக்கப்படுகிறது என்று ஆங்காங்கே பேசப்படுகிறது. ஒரு
புறத்திலே அரசை அச்சுறுத்துகிற விதத்தில் வரி கொடா இயக்கம் நடத்தப்
போகிறார்கள் என்று பேசப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம்

(பிற்பகல் 6-10)

என்ன ? இதற்கான காரணங்களைக் கண்டு அவைகளைத்
தீர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவி செய்ய
முன்வர வேண்டும். அதைப் போலவே இந்த நிதிநிலை அறிக்
கையின் வாயிலாக விவசாயிகளுக்கு ஆறுதலாக எதையாவது குறிப்பிட்டிருக்
கிறார்களா என்று பார்த்தால், ஒன்றுமில்லை. நான் இரவெல்லாம் இந்த நிதி
நிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஆனாலும் விவசாயிகள்
முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் என்
னாலே உணர முடிகிறது. அரசு ஊழியர் நிலையைப்பற்றிச் சொல்லி அவர்
களுக்குச் சில சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் வர
வேற்கத் தக்கவை என்ற அடிப்படையில் வரவேற்கும் அதே நேரத்தில்
'விவசாயிகளின் நிலை' என்று போட்டிருந்தது, அவர்களுக்கும் சில
சலுகைகளை அறிவித்திருந்தால், நான் இந்த அரசை மிகவும் பாராட்டி
யிருப்பேன்.

விவசாயிகளின் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இன்றைக்கிருக்கிற
சூழ்நிலையில் அதை அமைதியாகத் தீர்த்திருக்க முடியும் என்று நான் நம்பு
கிறேன். முதலமைச்சர் அவர்கள் நேற்று பேசும்போது, அதைத்தான் குறிப்
பிட்டார்கள். என்றாலும் நாம் இப்போது விவசாயிகளின் உண்மையான
நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். நேற்றையதினம் அருப்புக்கோட்
டைப் பகுதியிலிருந்து ஒரு விண்ணப்பம் விவசாயிகளால் எனக்கு அனுப்பப்
பட்டிருக்கிறது. அதாவது முதலமைச்சர் அவர்களுக்கு எழுதப்பட்ட விண்
ணப்பம். அதன் நகல் எனக்கு வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கு
வந்திருக்கிறதோ என்னவோ தெரியாது. காரியாபட்டி, திருச்சுழி, நரிக்குடி
ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் எழுதிய விண்ணப்பம். "நாங்கள்
உயிரோடு இருப்பதா இறப்பதா என்றே புரியவில்லை. அந்த அளவுக்கு
எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. நாங்கள் இறந்த பிறகு, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் எப்படி ஆளப்போகிறார்கள்?" இப்படி அவர்களுடைய

[திரு. ஆ. பாலசுப்ரமணியம்] [1979 ம

கஷ்டத்தைச் சொல்லி அந்த விண்ணப்பத்தை அனுப்பியிருக்கி
மேலும் "விவசாயிகளான நாங்கள் மிகவும் அலுத்துவிட்டோம். பத்து
நிலம் இருந்தால்கூட, 10,000 ரூபாய் கடன் கட்ட முடியாது இருக்கி
எங்கள் நிலத்தையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்
ஏதாவது மான்யமாவது கொடுக்கச் சொல்லுங்கள். நாங்கள் அதற்கு
ராக இருக்கிறோம்" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், விவசாயிகள் ம
மிகவும் வேதனையான சூழ்நிலை இருக்கிறது. இதற்கு முன்பெல்லாம்
மைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்கிறபோது, விவசாயிகள் அ
மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த அளவுக்கு முதலமை
அவர்கள் விவசாயிகள் மத்தியில் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தார்கள்.
யாரும் மறுக்க முடியாது. பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்ற
முதல்வர் அவர்கள் தமிழ் நாட்டில் இடைவிடாது சுற்றுப்பயணம் செ
போது, அவரைப் பார்க்க வேண்டுமென்றும் அவர் பேசுகிற வார்த்தை
கேட்க வேண்டுமென்றும் விவசாயிகள் கால்நடையாகவும், வண்டிகள் மூல
கவும், சைக்கிள்கள் மூலமாகவும் பெருமளவுக்குக் கூடி அவருடைய பேச்
கேட்டார்கள். அப்போதெல்லாம் அவர்கள் முதல்வர் அவர்கள்மீது அ
அளவுக்கு நம்பிக்கை வைத்திருந்தார்கள். முதல்வர் அவர்களும் விவச
களிடத்தில் அந்த அளவுக்குச் செல்வாக்கு பெற்றிருந்தார்கள். இதன் கா
மாகத்தான் முதல்வர் அவர்களே சட்டமன்றத் தேர்தலில் நகர்புறத்
தேர்ந்தெடுக்காமல் கிராமப்புறத்தைத் தேர்ந்தெடுத்து அங்கேயிருந்து போ
டியிட்டார்கள். கிராமப்புறத்து விவசாயிகள் முதல்வர் அவர்
பேச்சைத் தவறாமல் கேட்டார்கள். அவைகளை நம்பி அவருக்கு அப்
வாக்களித்தார்கள். அவர்களின் வாக்கைப் பெற்று இந்த அரசு
அமைந்தபோது, அவர்கள் "இதை ஏழை விவசாயிகளின் அரசு
அரசாங்கம் ஏழை விவசாயிகள் பக்கம்தான் நிற்கும்" என்று எண்ணி
கள். இது ஏழை விவசாயிகளின் அரசு என்று அவர்கள் மார்தட்டிக் கொ
ருந்தார்கள். அப்போது முதல்வர் அவர்களும் விவசாயிகளுக்காக
திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொன்னார்கள். அதாவது
பாதுகாப்புத் திட்டம் அமுலாக்கப்படும் என்று சொன்னார்கள்.
விவசாயி இரவுபகலாக உழைக்கிறான். விலா எலும்பு உடைய உழைக்
அப்படி உழைத்துப் பயிரிடும் பயிருக்கு ஆபத்து என்றால், அதற்குப் பயிர்
காண பயிர் பாதுகாப்புத் திட்டம் கொண்டுவருவேன் என்று கூறினார்
விவசாயிகளைப் பாதுகாக்கவில்லை என்றாலும், பயிர்களைப் பாதுகாக்கும்
திட்டம் கொண்டு வந்திருக்கலாம் என்றுதான் இதைக் குறிப்பிடு
விவசாயிகள் இன்றையதினம் தங்கள் உழைப்புக்கு உத்தரவாதமில்



1979 மார்ச் 9] [திரு. ஆ. பாலசுப்ரமணியம்]

தங்கள் பயிர்களுக்குப் பாதுகாப்பில்லாமல் வாழ்கிறார்கள். எனவே அவர்
களுடைய பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நான் குறுக்கிடக் கூடாது.
ஏனென்றால் நிதியமைச்சர் அவர்கள் இந்த விவாதத்திற்குப் பதிலளிக்க
இருக்கிறார்கள். குறுக்கிடுவதற்குக் காரணம் இதுதான். 18 வயதுக்கு
மேற்பட்ட அத்தனை பேர்களுக்கும் கிராமப்புறத்தில் வேலை வாய்ப்புக்கு
உறுதி செய்திருக்கிறோம், அவர்களுக்கு ஊதியம் தரப்படும் என்று சொல்லு
கிறபோது, அவர்களில் விவசாயப் பெருங்குடி மக்களும் கலந்திருக்கிறார்கள்
என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்கள்
ஏனோ மறந்துவிடுகிறார் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இந்த வகையில் நான் மாண்புமிகு முதல
மைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து
கிராமப்புறத்திலுள்ள விவசாயிகளைச் சோம்பேறிகளாக்கி விடாதீர்கள்.
வீட்டிலே அவர்களை உட்கார வைத்துக்கொண்டு வேலைக்குப் போகாமல்
ஊதியம் பெற சோம்பேறியாக்கிவிடாதீர்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நிச்சயமாக ஆங்கிலேய
நாட்டில் ஏற்பட்ட விபத்தை இந்தத் தமிழக அரசு ஏற்படுத்தத் துணியாது.
**என்றால்,**

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நான் எதற்குச் சொல்லுகிறேன் அதை அமுல்
மிக அருமையான திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவசர காலத்தின்
படுத்த வேண்டும் என்றுதான் கேட்கிறேன். அடுத்து, என்ற அடிப்
போது ஒரு திட்டம் இருந்தது. அதாவது ரூரல் பேங்க்ஸ் அப்போது
படையில் கிராமங்களில் வங்கிகள் ஏற்படுத்தப்படும் என்று விவசாயி
சொன்னார்கள். அதன்மூலமாக அந்தப் பகுதியிலுள்ள ஏழை அப்போது சொன்
களுக்குக் கடன் எளிதாகக் கிடைக்க வழிமுறைகளையும்
னார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நான் சொன்னதை மறந்து
விடவில்லை. அண்மையில் கூட மேடைகளில் பேசுகிறபோது, எங்களுடைய
தேர்தல் அறிக்கையையும் இப்போது வெளியிட்டிருக்கிற நிதிநிலை
அறிக்கையையும் பார்த்துப் படித்து உங்களுடைய கருத்துக்களைச் சொல்
லுங்கள் என்று பொதுமக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்த
திண்ணவோடு சொல்லுகிறேன், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குற்றச்
சாட்டுக்களுக்கு பதில் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது என்ப
தைப் புரிந்துகொள்ள வேண்டும். பயிர் பாதுகாப்பு சுட்டுறுதிக் கழகம்

என்று சொல்லுகிறபோது, சாதாரண இன்சூரன்ஸ் முறையில் அ
யார் யார் பணம் கட்டி அந்தப் பாதுகாப்பு சட்டுறுதித் திட்டத்தி
கொள்ளுகிறார்களோ அவர்களுக்கு மட்டும் உரிமை என்ற அடிப்ப
இல்லாமல், விவசாயிகள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வ
இத்திட்டம் இருக்க வேண்டும். மத்திய அரசு இந்த வகையில் ஒரு
தைச் செயல்படுத்தத் தொடங்கியதாகப் பத்திரிகையில் படித்தோம்.
யும் நாங்கள் விவாதித்தோம். அதற்கு ஆதரவையும் தெரிவித்
திறோம் என்பதை இந்த அவையிலே சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : நான் இவைகளைச் சொல்வது மி
நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் என்பதை இங்கே சொல்லிக்கொ
விரும்புகிறேன். மறைந்த தலைவர் காமராஜர் அவர்கள் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : உறுப்பினருடைய
லெண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : பெருந்தலைவர் காமராஜர் அவர்
டைய ஆட்சி போய்விட்டாலும்கூட, இன்றைக்கும் காமராஜர் என்
சொன்னால் 'கல்விக் கண் கொடுத்த காமராஜர்' என்றுதான் மக்கள் சொ
லுகிறார்கள். 'மதிய உணவு கொடுத்த காமராஜர்' என்றுதான் மக்
பேசுகிறார்கள். அதைப் போலவே முன்னாள் முதலமைச்சரும் தற்
தைய எதிர்க் கட்சித் தலைவருமான கலைஞர் அவர்களைப்பற்றிச் சி
லும்போது, 'பணிக் காலத்தில் இறந்துவிட்டால் 10,000 ரூபாய் கொடு
கலைஞர்' என்று அரசு ஊழியர்கள் பேசுகிறார்கள். அதைப் பே
தற்போதைய முதலமைச்சர் அவர்களைப்பற்றிப் பொதுமக்கள் பேசும்
ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறே
அதைப் போன்ற காரியத்தை நமது முதலமைச்சர் அவர்கள் செய்ய வே
டாமா? அதிலும் விவசாயிகளைப் பொறுத்து, அப்படி ஒரு நன்மை
செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். விவசாயம் செய்
போது, இரவு நேரத்தில் நிலத்திற்குச் சென்று தண்ணீர் பாயச்சும்போ
கரும்புத்தோட்டத்தில் இதர விவசாய இடத்தில் பாம்பு அல்லது வி
பூச்சி இருந்து அது அந்த விவசாயியைக் கடித்து அதனால் அவன் இ
தால், அவனுடைய குடும்பத்திற்கு ரூ. 5,000 உதவித் தொகை வழ
படும் என்று அறிவிக்கலாமே. அதைச் செய்தால், விவசாயிகள் எப்போ
தற்போதைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டி
ருப்பார்கள். அது ஒரு புரட்சிகரமான திட்டமாகக்கூட இருக்குமே.





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அப்படிப்பட்ட அறிவிப்பு
மட்டுமல்ல, அதைவிட இன்னும் அதிகமாகச் சொல்ல வேண்டும் என்று
உறுப்பினர் அவர்களைவிட மிகுந்த ஆசைதான் எனக்கும் இருக்கிறது. நிதி
நிலை அறிக்கையைப் படித்து, நிதி வசதிக்கும் இதைப் போலவே யோசனை
சொன்னால் நிச்சயமாக நாங்கள் நடைமுறைப்படுத்தத் தயங்க மாட்டோம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : நிதியைத் தேடுகிற பொறுப்பில் தாங்கள்
இருப்பதால்தான், ஆளுகிற வரிசையில் இருக்கிறீர்கள். தாங்கள் யோசனை
தான் சொல்ல முடியும். ஆகவே, அதுபோன்ற புரட்சிகரமான திட்டம்
கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத் துறையில் நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்
கிறார்கள். மின்சார உற்பத்திக்காக பலகோடி ரூபாயை ஒதுக்கியிருக்கி
றார்கள். ஹரிஜனக் குடியிருப்புகளில் 3/4 பகுதிக்கு மேல் மின்சாரம்
கொடுக்கப்பட்டுவிட்டது. மீதி இருக்கிற வீடுகளுக்கும் மிக விரைவில்
கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். குடிசைகளில் வாழ்கிற
மக்களுக்கு மீட்டர் இல்லாமலேயே மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்
படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கிறோம். ஆனால் இன்றைக்
கும் விவசாயி தன்னுடைய பம்புசெட்டுக்கு மின்சார இணைப்புக் கோரி
டி.ஈ. ஆபீசுக்கும், எஸ்.ஈ. ஆபீசுக்கும் நடந்துகொண்டிருக்கிறான். இன்று
வரை எத்தனை விவசாயிக்கு மின்சார இணைப்பு கொடுப்பது பாக்கி இருக்
கிறது என்ற கணக்கைப் பார்த்து, அவர்களுக்கு இந்தக் காலத்திற்குள்
மின் இணைப்பு வழங்கப்படும் என்று ஒரு வரி இந்த அறிக்கையிலே சொல்லி
யிருக்கக்கூடாதா? அவர்களெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு மின்
இணைப்புக் கேட்டு அதிகாரிகளிடம் நடந்துகொண்டிருப்பது?

இந்த நேரத்தில் மற்றொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். நான்
எனது தோட்டத்திற்கு கடந்த 5 ஆம் தேதி சென்றிருந்தேன். பொதுவாக
முன்பெல்லாம் என்னுடைய தோட்டத்தில் மத்தியானம் 2 மணியிலிருந்து
மின்சாரம் வழங்குவார்கள். ஆனால் 5 ஆம் தேதி நான் போயிருந்தபோது,
திடீரென்று அதை மாற்றி காலை 9 மணியிலிருந்து மத்தியானம் 2 மணி
வரை மின்சாரம் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்த மின்சாரம் இரண்டு
பேஸ் மின்சாரமாக இருந்த காரணத்தால், எங்கள் பகுதியில் சுமார் 40
மோட்டார்களுடைய காயில்கள் போய்விட்டன. ஒரு கிலோ கம்பி முன்பு
48 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அன்றையநாளில் 56
ரூபாய்க்கு விற்கப்பட்டது. எப்படி விவசாயி கம்பி வாங்கி காயில் கட்ட
முடியும்? ரூ. 300-க்குக் காயில் கட்டிக்கொண்டிருந்த நிலை மாறி
இன்றைக்கு ரூ. 500 ஆகிவிட்டது. இது உரிய முறையில் முறையாக மின்சாரம்

[திரு. ஆ. பாலசுப்ரமணியம்]

வழங்காததால் ஏற்படுகிற சம்பவம். எனவே மின்சாரத்தைத்
மல் முறையாக வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமெ
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தில் போடுகிற திட்
லாம் நல்ல திட்டங்களாக இருந்தாலும், அதை அமுல்படுத்து
தவறு ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
கத்தின் திட்டத்தை நான் சந்தேகிக்கவில்லை. எனவேதான் சொ
விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் முறையாக மின்சாரம் வழ
வேண்டும். நெல் வயலாக இருந்தால், இரவு நேரத்தில் மின்சாரம் வ
லும், வரம்புகள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து
ரைப் போட்டு தண்ணீர் பாய்ச்ச முடியும். ஆனால் சோளக் காட்
கரும்புக் காட்டிலும் இதை எப்படிச் செய்ய முடியும்? இரவில்
லாம் தண்ணீர் பாய்ச்சுவது என்பது மிகவும் கஷ்டம். எனவேதான்
யிகளுக்கு மின்சாரத்தைக் காலை நேரத்திலேயே வழங்கவேண்டும்
கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-20)

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு மின்சாரத் துறை அமைச்சர் அ
கூட இங்கே இன்றைக்கு மின்சாரக் கட்டண பாக்கியை எப்படிக்
என்று சொன்னார்கள். நான் இந்த மன்றத்திலே குறிப்பிடுவ
மின்சாரக் கட்டண பாக்கியைக் கட்டக்கூடாது என்ற கெட்ட எ
எந்த விவசாயிக்கும் இல்லை. அப்படிக் கட்டாமல் இந்த அரசை
துக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. ஆனால்
யிகள் தங்களது விளை பொருட்கள் உரிய விலைக்கு விற்கப்படா
மின் கட்டணத்தைக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். கூட்டுறவுக் கட
அரசு அளித்திருக்கிற கடன்கள், தனியாரிடமிருந்து வாங்கிய கட
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அளித்த கடன்கள், இதுபோன்ற
சுமைகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே சம
அவர்கள் உற்பத்திப் பொருட்கள் விற்பனையாகவில்லை. ஆகவே தான்
முடியவில்லை என்று சொல்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்
தம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகள் மேலே ஒரு
இருப்பதாக அறிகிறேன் . . .

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : யாரோ சொன்ன
ஏமாந்து மிகப் பெரிய ஒரு பழியை இப்படிச் சுமத்தி விட்
'அறிகிறேன்' என்று சொல்கிறார்கள். அந்த வார்த்தை சரியான வா
இல்லை. கேள்விப்படுகிறேன் என்று சொன்னால் கூட, ஒத்து





லாம், வாதத்திற்காகவாவது ஒத்துக்கொள்ளலாம். அறிகிறேன் என்பதால்
எந்த வகையில் என்று நான் கேட்கவேண்டியிருக்கிறது. ஆதாரம் கேட்க
வேண்டியிருக்கிறது. தயவு செய்து வார்த்தைகள் எந்த அடிப்படையிலே
சொல்லுகிறோம் என்று கவனித்துப் பேச வேண்டும். இந்த 'அறிகிறேன்'
என்ற வார்த்தையை வைத்துக்கொள்ளப்போகிறார்களா? அப்படியென்
றால், ஆதாரம் தேவை. சில பத்திரிகைகளிலே தப்பித்துக் கொள்வதற்
காகப் போடுவார்களே, தெரிகிறது, சொல்லப்படுகிறது என்றெல்லாம், அது
போல என்றால் தப்பில்லை. தயவு செய்து அறிகிறேன் என்ற வார்த்தையை
மீண்டும் வற்புறுத்தினால், ஆதாரம் வேண்டும் என்ற அவசியத்திற்கு ஆளா
வீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அடுத்தவர் சொல்லித்தான் அறிந்தேன்
என்பதுதான். கேள்விப்பட்டேன் என்பதுதான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அறிந்தேன் என்ற வார்த்
தையை கேள்விப்பட்டேன் என்று மாற்றலாம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : கவர்னர் அவர்கள் உரைக்கு பதிலளிக்கும்
போது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகள் போராட்டம்
நடத்தப்பட்டபோது, அவர்களால் கடன்களைக் கட்ட முடியவில்லை என்ற
போது இதையெல்லாம் "யார் சொல்கிறார்கள் என்றெல்லாம் தெரியும்",
என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் அடிக்கடி குறுக்கிடு
வதைத் தவறாகக் கருதக்கூடாது. நான் சொல்லியது விவசாயிகள் சாதா
ரண ஏழைகள். அவர்களுக்கு இந்த நுணுக்கங்கள் தெரிவதற்கு நியாயம்
இல்லை என்று சொன்னேனே தவிர, விவசாயிகள் தான் முழுக்க முழுக்க
இதைச் செய்தார்கள் என்ற வார்த்தை என்னுடைய பேச்சிலே இல்லை
என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : பெரிய விவசாயிகள் சிறிய விவசாயி
களைத் தூண்டி விடுகிறார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பெரிய விவசாயிகள்
போராட்டங்களைத் தூண்டி விடுகிறார்கள் என்பதற்கும் இந்தக் காரியங்
களைச் செய்வதற்கு ஏழை விவசாயிகளுக்குத் தெரியாது என்பதற்கும்
வித்தியாசம் கிடையாதா?

[திரு. ஆ. பாலசுப்ரமணியம்] [1979 மார்

"Water Board function has been fixed at Sendamangal without our knowledge on 4th March. We are ignored by officials. . . . . Tension prevails among the public. P gramme may be fixed to some other date according to convenien of the Hon. Minister Please postpone the function."

ஏ. பாலசுப்ரமணியம், எம்.எல்.சி., தியாகராசன், எம்.பி., எஸ். வி. ராமலிங் பிரசிடென்ட், டவுன் பஞ்சாயத்து என்று தந்தி கொடுத்திருந்தோம். இதற் பிறகும் அங்கே வந்திருந்து, அந்தத் திட்டத்தை அங்குள்ள பிரசிடென் இல்லாமல், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் இல்லாமல் அங்கே துவக் வைத்துவிட்டு வந்திருக்கிறார்கள். இந்த அமைச்சரவையிலே வேண்டுமான விரிசல் இருக்கலாம். அதை ஏன் மக்களிடத்திலே காண்பித்துக்கொள் வேண்டும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே அவர்கள் பேசிக்கொண்டே போவதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை "ஆனால் வேண்டுமானால் அமைச்சரவையிலே விரிசல் இருக்கலாம், அதை ஏன் எங்களிடத்திலே காட்ட வேண்டும்?" என்று சொன்னதினாலே நான் சொல்கிறேன். அமைச்சரவையிலே விரிசல் இல்லை என்பது எல்லோரு க்கும் தெரியும். விரிசல் இருந்தாலும், இது எங்களுடைய கட்சி, எங்களு கட்சியைப்பற்றிச் சொல்வது சரியில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். உங்களுடைய தந்தி வந்தது. உடனே நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் களிடத்திலே கேட்டேன். நீங்கள் போய்த்தான் வர வேண்டும் என்று சொன்னார்கள். அதுமட்டும் போதாது என்று, சட்டமன்றப்பேரவையிலே இருக்கிற உங்களுடைய கட்சித் தலைவர் ஏ. ஆர். மாரிமுத்து அவர்களிடத் திலே தந்தியைக் காண்பித்தேன். இங்கே இருக்கிற அழைப்பிதழையும் பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினர் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய் ருக்கிறார்கள். பார்லிமென்டரி செயலாளர் பெயரும் அதிலே போட் வந்திருக்கிறது. பார்லிமென்டரி செயலாளர் பெயரைப் போடுவதற்கு முன்னே, அமைச்சருக்குப் பிறகு உங்களுடைய பெயரையும், துரைராஜ் அவர்களுடைய பெயரையும், அங்கே இருக்கிற பஞ்சாயத்துத் தலைவர் அவர்களுடைய பெயரையும், அதுமட்டுமல்ல, இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழ உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்களுடைய பெயரையும் போட்டிரு தது. எப்போதும் உங்களுக்குத் தெரியும், அரசு நிகழ்ச்சிகளில் அங்கே அந்த வட்டாரத்தில் இருக்கிற எல்லோருடைய பெயரையும் போட்டு நட வது இல்லை. இருந்தாலும் எல்லோருடைய பெயரையும் போட்டிரு கிறார்கள். நான் திரு. தேவராசனோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொ டேன். அவர் டெல்லி சென்றுவிட்டார் என்று தெரிந்தது. தேவராச



1979 மார்ச் 9] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

டெல்லி சென்றிருக்காவிட்டால், அவர்களும் வந்திருப்பார்கள் என்று பேசி னேன். அது மட்டுமல்ல, அங்கு மேடைக்குச் சென்ற பின்புகூட, விழாவை ஆரம்பிக்காமல் அரை மணிநேரம் இருந்து, அவருக்கு ஆள் அனுப்பி, அவரைப் பார்த்து வரச் சொன்னேன். அவர் டெல்லிக்குச் சென்றுவிட்டு வரவில்லை என்று தகவல் கிடைத்தது. இத்தனைக்கும் பிறகுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, "அமைச்சரவையில் வேண்டுமானால் விரிசல் இருக்கலாம், அதன் விளைவாக இப்படித்தான் நடைபெற வேண்டுமா ?" என்று கேட்டார்கள். அவருக்காக நான் அனுதாபப்படுகிறேன். சில சமயம் நாம் கண்ணாடியைப் பார்க்கும்போது, நம்முடைய முகத்தின் கோடுகள் அங்கே தெளிவாகத் தெரியும். அதைப் போல எங்களைப் பார்க்க வேண்டாம். வேறு வகையில் எங்களைப் பாருங்கள் என்று உறுப்பினர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** எங்களுடைய கண்ணாடியின் மூலமாகப் பார்க்க வில்லை. ஆனால் உங்கள் அமைச்சர்கள் அதைத் திட்டவட்டமாக மறுக்க முடியவில்லை. ஆகவே விரிசல், குழப்பம் இருக்கிறதோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, பணிவோடு சொல்லிக்கொள்ளுகிறேன், உறுதியாகச் சொல்லு கிறேன். ஆழமாகப் பதியும்படி சொல்லுகிறேன், எங்கள் கட்சியில் பிளவோ, விரிசலோ, குழப்பமோ கிடையாது. யாருக்கும் அந்தச் சந்தேகம் வேண்டவே வேண்டாம்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நான் கட்சியைப்பற்றிச் சொல்லவில்லை. அரசுக் கண்ணாடியைப் பாருங்கள், கட்சிக் கண்ணாடியைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பாக என்று எடுத்துக்கொண்டாலும், அமைச்சரவை என்று எடுத்துக்கொண்டாலும் சரி, இங்கே ஒன்றும் இல்லை. வீணாகக் குழம்ப வேண்டாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நான் குழம்பவில்லை. அந்தப் பகுதி மக்கள் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நான் சொல்ல வந்தது.

[1979 மார்ச்

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய பதிலுக்குப் பதிலை நான் இங்கே பேசிக்கொண்டிருப்பது சரியல்ல என்றாலும், ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். நடந்த நிகழ்ச்சி, சட்ட மன்ற உறுப்பினர்களை, மேலவை உறுப்பினர்களைக் கலக்காமல் நடந்தது என்ற குற்றச்சாட்டு இருக்குமானால், அதைச் சிந்திக்கத்தான் வேண்டும். போனவாரிலே என்னிடம் ஒரு குறை கூறப்பட்டபோது, அவருடைய பெயரைப் பட்டியலில் சேர்க்காமல் அடிக்கல் நாட்டு விழாவை நடத்தினார்கள் என்று மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் சொன்ன போது, உடனடியாக ஒரு செய்தியை அனுப்பி அங்கிருந்த பலகையை மாற்றி, அவருடைய பெயரைப் பதித்திருக்கிறேன் என்பதைச் சொல்லும்போது, நாங்கள் எவ்வளவு நேர்மையாக நடக்கிறோம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த அழைப்பிலே தாமதம் ஏற்பட்டு விட்டு, முந்திக் கொண்டு விட்டார்கள், அவர்களாகவே செய்து விட்டார்கள் என்று சொல்லும்போது, விரைவிலே மக்களுக்குக் கிடைக்க வேண்டிய குடிநீர், அதுவும் மதிப்பிற்குரிய காமராசர் அவர்கள் காலத்திலே ஆரம்பித்து இடையிலே தொடர்ந்து இப்போதாவது முடிந்திருக்கிறதே என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, இந்தப் பிரச்சினையை வேறு வகையிலே திருப்பாமல் பேச வேண்டும். உண்மையிலேயே சொல்லுகிறேன். அந்தத் தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக அதிலே கலந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும் என்ற அக்கறை எங்களுக்கு இருக்கிறது. இது தொடக்கம்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இது முடிந்து பயன்படுகிற நேரத்தில், விரைவிலே பயன்படுகிற வாய்ப்பு வரும்போது, உங்கள் பெயரும் சேர்க்கப்படும், நீங்களும் இருப்பீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு முதலமைச்சருடைய நல்ல எண்ணத்தை, நல்ல கருத்தை நான் பாராட்டுகிறேன்! இதை நான் விவாதத்திற்கு வைக்க வேண்டும், விமர்சனம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லவே இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் அங்கே போய் 30 நிமிடம் இருந்தேன் * * *

**திரு. க. இராமமூர்த்தி :** Sir, that is a charge. தலைவர் அவர்களே, இது குற்றச் சாட்டு என்கிற காரணத்தால், ஆதாரத்தோடுதான் குற்றச் சாட்டு வரவேண்டும்.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member may please resume his seat and he may speak later.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1979 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சருடைய பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கிட்டத்தட்ட 35 நிமிடங்களாகப் பேசியிருக்கிறார்கள்.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம் :** முதலமைச்சர் அவர்களே பாதி நேரத்தை எடுத்துக்கொண்டார்கள். நான் என்ன பண்ணட்டும்?

சேலம் மாவட்டத்திலே செந்தமங்கலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியேற்று விழாவும் குடிநீர்த்திட்ட துவக்க விழாவும் என்று ஒரு நோட்டீசைப் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தலைவருடைய அனுமதியைப் பெற வேண்டும்.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம் :** தலைவரிடத்திலே அனுமதி பெற்றாகி விட்டது. ஆகவே அதை முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கிறேன். (முதலமைச்சரிடம் சில நோட்டீசுகளைக் கொடுத்தார்.)

இந்தக் குடி நீர்த் திட்டத்தைப் பொறுத்த வரையில் நான் மிகச் சிரத்தை எடுத்து அவசர நிலைக் காலத்திலேயே துவக்கி ஃபைனான்ஸ் சாங்ஷன் செய்யப்பட்டது. அப்போது திரு. மாதவ சர்மா அவர்கள் மேனேஜிங் டைரக்டராக இருந்தார்கள். . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்தத் துண்டுப் பிரசுரத்தைக் கவனிக்கும்போது வேதனையடைகிறேன். இது எப்படி நடந்தது என்பதை விசாரித்து நடவடிக்கை எடுப்பேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. இரத்தின பாலகுருசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்

[1979 ம

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவசாயிகள் பிரச்சினை முடிந்தாகி விட்டது. நேற்றைய தினம் பேசி முடிந்து அறி கொடுந்தாகிவிட்டது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** ஆகவே, எதற்காகக் குறிப்பிடு என்றால், விவசாயிகள் பிரச்சினையிலே முழு கவனமும் செலுத்த வே என்பதற்காக, விவசாயிகள் இப்போப்பட்ட அப்பாவிகளாக இருந் கூட, முதல்வர் அவர்கள் மனது வைத்து உறுதிமொழிகள் கொ உடனே. . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** உறுதிமொழி கொடுத்து மக்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை. தவறான உறுதிமொ களைக் கொடுத்து அவர்களை எங்கள் பால் ஈர்க்க விரும்பவில்லை. ம எப்படி வாழ வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோமோ அ செயல்பட நாங்கள் விரும்புகிறோமே தவிர, உறுதிமொழி கொடுத்து அவர் ஏமாற்ற விரும்பவில்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** முதல்வர் அவர்கள் அளிக்கும் உறுதிமொ பொய்யான உறுதிமொழியாக இருக்காது என்ற நம்பிக்கை எ இருக்கிறது. இன்றைக்கு விவசாயிகள் மத்தியிலே ஒரு நிரந்தரமான பரி ஏற்பட வேண்டும். அவர்களுடைய உறவு முறைகள் சீராக அமைய வே என்பதற்காகச் சொல்கிறேன். விவசாயிகளைப் பழித்துக்கொண்டு அரசும் இருக்க முடியாது. இன்றைக்கு அரசவைக் கவிஞராக இரு கவிஞர் கண்ணதாசன் கூட சொல்லும்போது, " கிராமத்திலே இரு ஏரோட்டம் நின்றுபோனால், உங்கள் காரோட்டம் என்னவாகும்," என சொல்கிறார். இன்றைக்கு Key-stone என்று தெ களே அந்த ஜீவாதார சக்தி, விவசாயிகள் தான் என்பதைத் தெரி கொள்கிறேன். அப்படிப்பட்ட பெரிய சமுதாயத்தை நாம் புறக்க விடக் கூடாது. அந்தப் பெரிய சமுதாயத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டு வகையிலே, அவர்களுக்கு ஆறுதல் சொல்லுகின்ற அளவிலே ஒரு தி தைத் தீட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் முதலமைச்சர் அவர் கும், இந்த அரசுக்கும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேந்தமங்கலத்திலே குடிநீர்த் திட்டம் ஒன்று அதற்கு முதலமைச்சராக பெருந்தலைவர் காமராஜர் இருந்தபோது நாட்டினார். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் திட்டப்பட்டு, பின்பு திராவிட முன்னேற்றக் கழகத்தால் முயற்சி செய்யப்பட்டு, பிற கால நிலைமையிலே அதற்கு உருவம் கொடுக்கப்பட்டு, இப்போ



1979 மார்ச் 9] [திரு. ஆ. பாலசுப்ரமணியம்]

திட்டம் வந்தது. அதற்கு 'சாங்ஷன்' ஆகிய தொகை 24.27 லட்சம் ரூபாய். கொல்லிமலை அடிவாரத்திலிருந்து கிணறுகள் போட்டு, அந்தக் கிணறுகள் வழியாக பைப்கள் கொண்டு வந்து, சேந்தமங்கலத்திலே குடிநீர்த் திட்டம் அமைக்கப்படும். அது பக்கத்தில் உள்ள, அதாவது எங்கள் ஊரான ராமநாதம்புத்தூர் என்ற மைனர் பஞ்சாயத்துக்கும் சேர்ந்த திட்டம். பெயர் சேந்தமங்கலம் பேரூராட்சித் திட்டம். அங்குள்ள பஞ்சாயத்து உறுப்பினர்களும், தலைவரும் எப்படியாவது அந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று என்னிடத்திலே சொன்னார்கள். நீங்கள் எப்படியாவது முதலமைச்சர் அவர்களிடத்திலே நாள் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். நான் இரண்டு நாட்கள் முதலமைச்சர் அவர்களைப் பார்க்க முயன்றேன். முடியவில்லை. அவர்களுக்குப் பல வேலைகள், தொல்லைகள் காரணத்தினால், என்னால் அவர்களைப் பார்க்க முடியவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு குடிநீர் வாரிய அமைச்சராக இருக்கக் கூடிய திரு. இராகவானந்தம் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். பேசிய போது, அவர்கள் "இப்போது பட்ஜெட் செசன் நடந்துகொண்டிருப்பதால் எனக்கு அவகாசம் இல்லை, பின்னாலே ஒரு மாதம் கழித்து வைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னார்கள். 11—1—1979 ஆம் நாளன்று நான் மரியாதைக்குரிய அவை முன்னவர் அவர்களிடத்திலே கூட சொன்னேன். அவர்களும் வருகிறேன் என்று சொன்னார்கள். நான் கேட்டுவிட்டு ஊரிலே போய் எல்லோரிடமும் சொன்னேன். நம் ஊருக்கு மாண்புமிகு திரு. இராகவானந்தம் வருகிறார், நம்முடைய அமைச்சர் மாண்புமிகு இராசா முகமது அவர்கள் வருகிறார்கள் என்றெல்லாம் சொல்லிவிட்டேன். அதற்குப் பின்னாலே எனக்குத் தெரியாமல் திடீரென்று ஒரு நோட்டீஸ் வந்தது. அச்சடித்துக் காண்பித்தார்கள். தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேந்தமங்கலம் பேரூராட்சி குடிநீர்த் திட்ட அடிக்கல் நாட்டு விழா என்று. என்னையும் கேட்கவில்லை. அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர் அவர்களையும் கேட்கவில்லை. உறுப்பினர்கள் யாரையும் கேட்கவில்லை. அதற்குப் பிறகு நான் போய் விசாரித்ததில், தெரிந்தது என்னவென்றால், அங்கே போயிருக்கிற அந்த எஞ்ஜினியர் அவர்கள் அந்தப் பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களை வற்புறுத்தியிருக்கிறார், மிரட்டியிருக்கிறார். "நீங்கள் இந்த நிகழ்ச்சியை முன்னின்று செய்யவில்லை என்றால் உங்களுடைய சேந்தமங்கலம் 'வாட்டர் ஸ்கீமை' கேன்சல் செய்துவிடுவேன்" என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லி மிரட்டியதற்குப் பிறகு, எப்படி வேண்டுமானாலும் செய்யட்டும் என்று அவர்கள் விட்டுவிட்டார்கள். அதற்குப் பின்னாலே எனக்கு இந்த விஷயம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட உடனே இதற்கு மாண்புமிகு திரு. எஸ். டி. எஸ். அவர்கள் வருவதாக இருந்தது—நான் நாமக்கல்லிலே இருந்து ஒரு தந்தியைக் கொடுத்தேன்.

கிறார்கள். அந்த அறிக்கையின் மீது உள்ள எனது கருத்துக்களை அவையின் முன் வைக்க நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், தமிழ் நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு சமர்ப்பிக்கும் மூன்றாவது நிதி நிலை அறிக்கை இது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப மக்களுக்கு வேண்டிய அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதும், படித்து வேலை வாய்ப்பை எதிர்நோக்கியுள்ள இளைஞர்களுக்கு மேலும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், கிராமப் பகுதிகளில் வாழ்கிற ஏழைஎளிய மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதும், கல்வி, மருத்துவ வசதிகளை விரிவாக்கி அவற்றை தொடர் முறையில் செயல்படுத்த அரசு மேற்கொண்டிருக்கிற பணிகளும், பொருளாதார வளர்ச்சிக்காக தொழில்களைப் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கி, பொருளாதார வளர்ச்சி ஏற்படச் செய்திருப்பதும் இந்த அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

நெசவாளர்களின் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில், அவர்களுடைய நீண்ட நெடுநாட்களாக உள்ள துயரைத் துடைக்க வேண்டுமென்று அமரர் அறிஞர் அண்ணா அவர்களால் 1952 ஆம் ஆண்டிலேயே பணி துவக்கப்பட்டது. நெசவாளர்களுடைய குறைகளைப் போக்க நாங்கள் எல்லாம் துணிக்கட்டுகளை தோளில் சுமந்து விற்று ஓரளவுக்கு அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற வகையில் எடுத்த நடவடிக்கையை மையமாக வைத்து, நம்முடைய புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்குகிற அனைந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அண்ணா வழியிலே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு நாட்டை வழி நடத்திச் செல்லுகிறது என்பது புலனாகிற ஒன்றாகும். ஆகவே இப்படிப்பட்ட அரசு எப்படி அண்ணா வழியில் இயங்குகிறது என்பதற்கான மேற்கோளைக் காட்ட விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர் காமராஜ் போன்ற தலைவர்களுடைய விழாக் காலங்களில் கைத்தறித் துணிக்கான தனிச் சலுகையை (ரிபேட்) தந்து, நல்ல துணிகளையும், தரமான ரகங்களையும் விற்பனை செய்து நெசவாளர் துயரைத் துடைத்து நாமெல்லாம் மன நிறைவு பெறுகிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மாதிரி விழா

(பிற்பகல் 6-40)

காலங்களில் விற்பனையை அதிகரிக்க, கைத்தறி வளர்ச்சிக்கு வேண்டிய நல்ல திட்டத்தை வகுத்துக்கொடுத்து உதவியிருக்கிறார்கள்.



இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது, அதிலே 5 நவீன சாயத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 5 நவீன சாயத் தொழிற்சாலைகளில் சிதம்பரத்திற்கு அருகில் நெசவாளர் அதிகமாக உள்ள புவனகிரியில் ஒரு சாயத் தொழிற்சாலையை அமைத்துக்கொடுக்க வேண்டும். பொதுவாகவே நெசவாளப் பெருமக்கள் அங்கே அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த 5 நவீன சாயத் தொழிற்சாலைகளில் ஒரு தொழிற்சாலையை நம்முடைய அரசு அங்கே நிறுவ வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பாசன வசதியைப் பொறுத்தவரையில், இங்கே பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பல நல்ல கருத்துக்களை இங்கே வைத்திருக்கிறார்கள். பாசன வசதிகளைப்பற்றி விவசாயிகளுக்காக நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவன் ஆவேன். பாசன வசதியைப் பொறுத்த வரையில், தஞ்சை மாவட்டத்தை அடுத்த காட்டுமன்னார்குடி, புவனகிரி, சிதம்பரம் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் நல்ல பாசன வசதிகளைச் செய்ய வேண்டும். திட்டங்கள் தீட்டுகின்றபோது, நம் அரசு திட்டங்களுக்காக ஏராளமான நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. கிட்டத்தட்ட ரூ. 21 கோடிக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். பாசன வசதிகள் செய்துகொடுக்கிற நேரத்திலே புதிய புதிய வடிகால் திட்டங்களை உருவாக்கி, பாசன வசதிக்கு என்று இருக்கின்ற வாய்க்கால்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி பாசனத் திட்டங்களை நன்கு உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாசன வசதிகளை மேற்கொண்டு அபிவிருத்தி செய்து, உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவுக்கு இருந்தால், விவசாயிகளுக்கு நிரம்ப வேலையை உண்டுபண்ணுகின்ற நிலைமைகளும் உருவாகும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆர்டர் பிளீஸ். அமைதியாக இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. இரத்தின பாலகுருசாமி :** அது போலவே வீராணம் ஏரித் திட்டத்தைப்பற்றியும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. வீராணத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற 33 வாய்க்கால்களை சீரமைக்க வேண்டும். வீராணம் ஏரியில் நீர் உச்ச மட்டத்திற்கு வந்தால், உடைத்துக்கொள்ளக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. வீராணம் ரோடு அகலம் கிட்டத்தட்ட 20 அடிக்கு இருக்கிறது. அதில் பேருந்துகள்கூட போய்க்கொண்டிருக்கின்றன. அந்த ரோட்டை 25 அடி அளவுக்கு அகலப்படுத்த வேண்டும். அதன் அகலத்தைத் அதிகமாக்கித் தராவிட்டால், இந்த வீராணம் ஏரியில் விரிசல் ஏற்பட்டுவிட்டால், சிதம்பரம் நகரம் தாங்காது. இங்கே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் இதுபற்றி மகஜர்கள்கூட கொடுத்திருக்கிறார்கள். அந்த வீராணம் ஏரிக்கரைகளைப் பலப்படுத்த வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டிலேயே அதற்கு வழி கள் செய்யப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட் கிறேன். அந்த வீராணம் ஏரிக்கரையை நன்றாகப் பலப்படுத்த வேண் அப்படிச் செய்தால்தான், கிட்டத்தட்ட சிதம்பரம் உட்பட 140 கிராம பாழாகிவிடாமல் இருக்கும். புயல் வெள்ளக் காலங்களில் அந்தப் பகுதி பாதிக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் புயல் அடித்தால்கூட, பாத்திலே வெள்ளம் வந்துவிடுகிற நிலைமைகள் இருக்கின்றன. அதை அக்கரை பி. டி. ராஜன் வாய்க்கால் இருக்கிறது. மேற்குப்பக்கம் இ பி. டி. ராஜன் வாய்க்கால் ஒன்று இருக்கிறது. இந்த இரண்டும் பி ஓடுகின்றன. ஒரு வாய்க்காலைப்பற்றி இங்கே குறிப்பிடவில்லை. இ ராஜன் வாய்க்காலைப் பற்றிக் குறிக்கவில்லை. அதையும் எடுத்துக்கொ இரண்டுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாகப் பாசன வசதி ஏற்படுத்தி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வாய்க்கால்களை அ படுத்த வேண்டும், புதிய வாய்க்கால்களை வெட்டி வெள்ளம் வரும்பே தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமெ நான் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். காரணம் அந்த வீராணம் ஏரி, அ போய் வந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். நிரம்பப் பேர் வந்திருக்கி கள. அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். 9 அடி அகலத்திற்குள் கள் அங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. இப்படி பஸ் போகின்ற கார தினாலே, கரை பலப்படுத்தப்படாமல் விட்டுவிடுவோமானால், வெ காலங்களிலே கரை உடைத்துக்கொண்டு எத்தனையோ கிராமங்கள் பா விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதையும் இந்தத் திட் திலே சேர்த்துக் கொண்டு அதை செய்துதரவேண்டும் என்று கேட்டுக்கொ கிறேன்.

அதுபோலவே, கல்வியைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு திட்டங்களைத் தீட்டியிருக்கின்றது. இங்கே ஒன்றை எடுத்துக் கொள்ள கல்வி வளர்ச்சிக்கு நம் அரசு நல்ல பல திட்டங்களை வகுத்திருக்கி கல்வியைப் பொறுத்து எனக்குத் தெரிந்த கருத்துக்களைச் சொல்கி கல்வியைப் பொறுத்த அளவில், ரொம்பப் பேர் இங்கே பேசியிருக்கிறா தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் வந்திருக்கிறது. அந்தத் தமிழ் எழுத்து திருத்தத்தைத் தந்தை பெரியார் அவர்கள் நெடுங்காலமாகச் சொ கொண்டிருந்தார்கள். அதை இன்று அமலுக்குக்கொண்டு வந்திருக்கிறார் நம் புரட்சித் தலைவர் அவர்கள். அதை யாராவது பாராட்டிப் பேசியிருக்கி களா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதைப் பற்றி யாரும் இங்கு கு பிட்டுப் பேசவில்லை. பெரியார் "தமிழ் வளர்ச்சி அடையவேண்டும். தமி மக்கள் நிரம்ப படித்து வாழவேண்டும். நூற்றுக்கு நூறு பேர்க படித்துப் பயன் பெறவேண்டும்" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டி



பார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டு வரும்போது, பெரியார் அவர்கள் ஒரு திட்டத்தைச் சொல்லுவார்கள். குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அம்மை குத்தவில்லை என்றால், தண்டனை அளிக்கின்ற ஒரு முறையை வைத்திருக்கிறார்கள். அதேபோன்று கல்வியை குழந்தைகளுக்குக் காடுக்கவில்லை என்றால், பெற்றோர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் ன்று சொன்னால், தமிழ் நாட்டில் நூற்றுக்கு நூறு பேர்களும் படித்திருக்கும் ரு நிலை ஏற்படும் என்ற எண்ணத்திலேதான் அப்படிச் சொல்லியிருக் றார்கள். அதைப்பற்றி ஒரு சட்டத்தைத் தீட்டினாலும்கூட, அது நல்லதாக ருக்கும் என்று சொல்கிறேன். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து பார்க்க வண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட திட்டங்களைக் கிட்டத்தட்ட 29 பகுதிகளாகப் பிரித்து இந்த நிதி நிலை அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வளவு செம்மை பான திட்டங்களை நாட்டிற்கு அறிவித்திருக்கிறார்கள். இதிலே உப்பு இல்லை, புளி இல்லை, மிளகாய் இல்லை என்று எல்லாம் இங்கே பேசியிருக் கிறார்கள். ஏன் அப்படிப் பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள்கூட ரத்தினச் சுருக்கமாக நிதி ஆணைக் குழுவினைப்பற்றியும், திட்ட ஆணைக்குழுவைப்பற்றியும் அவர்களுடைய அனுபவபூர்வமான விஷயங்களைப் பற்றி இங்கே எடுத்துப் பேசுகின்றபோது, இவ்வளவு பெரிய விஷயங்களை ஆராய்ந்து பார்த்து, அதிலே உண்மை நிலை என்ன என்பதையும் தனிப்பட்ட அவருடைய கருத்துக்களாக இங்கே வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களை, நல்லதை நல்லது என்று சொல்வது நியாயம். நல்லதைக் கெட்டது என்று சொல்வது எப்படி நியாயம்? அப்படியெல்லாம் சொல்வதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நாட்டு மக்களுக்கு, கிராம மக்களுக்கு வேண்டிய திட்டங்களாக 29 திட்டங்களைப் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அறிவித்த திட்டங்கள் எல்லாம் அந்தக் காலத்திலே, தேர்தல் காலத்திலே சொன்னவைகள்தான். நம்முடைய அரசு புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. அந்தக் காலத்திலே என்ன சொல்லி, எங்கே இசைத்தட்டு மூலமாக நாட்டு மக்கள் மத்தியிலே பேசினார்களோ, சொல்லி வோட்டு வாங்க முயற்சி செய்தார்களோ அதைத்தான் நம்முடைய அரசு சொல்லியிருக்கிறதே தவிர, வேறு எந்தத் திட்டங்களையும் இதிலே சொல்லவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக, உப்பு இல்லை, மிளகாய் இல்லை, புளி இல்லை என்று சொல்வது சுலபமான காரியம். இந்தத் திட்டங்களைத்

Unfortunately, our ALADMK Government which is proclaiming the name of Anna has forgotten his words "We shall see God in the smile of the poor". The Government have forgotten these words and have not allocated any funds for this monumental scheme. Anyway, I am requesting this Government to allocate some funds for this scheme because Kotturpuram and other places have been severely affected by the recent floods.

Sir, coming to the Madras Metropolitan Water-Supply and Sewerage Board, the Government have taken a decision to divide and take away the twin-subjects, namely, water-supply and sewage from the Corporation of Madras and to set up a separate Board to tackle and redress the grievances of the people and to meet the aspirations of the people. But the Board is not at all functioning in a proper way. Today, sewage is flowing right into the streets thereby causing cholera and other diseases.

(பிற்பகல் 7-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பேச்சு முடியும் வரை அவை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

THIRU P. YELLAMANDA: A number of slums are without basic amenities such as water facilities. I am requesting the Government to provide water facilities, particularly in North Madras, in places like Tondiarpet, Kamarajar Nagar, Sastri Nagar, Coronation Nagar and other areas which are all not benefited by protected water-supply. Now the Corporation is supplying the water through tanks. So, I am requesting and urging on Government to provide drinking water facilities by means of public taps in those colonies.

Coming to the benefits to Government employees, I say that it is nothing but an eye-wash. At the time of taking advances, they may be happy but when the question of repayment comes, they will be bitterly disappointed because they will have to go home with empty pay-packets. Unfortunately, the dearness allowance has not been enhanced.

Sir, one of the important, crucial and fundamental things I wish to mention is that the sanitary worker is not given the ten thousand rupees namely, the Death Relief Fund. The scavenger is doing the most essential service to the city. The scavenger is struggling for his existence and he is subjected to contagious



diseases like T. B. and cholera. He is removing nightsoil of another human being. He is not given the sum of Rs. 10,000. This is rather shameful for this Government. During the regime of Kalaignar, all Government Servants were benefited by the scheme of payment of Rs. 10,000 on their death while in service. I ask this Government which is always proclaiming the name of Anna and Periyar why this monumental benefit is denied to these scavengers. Then, what right have this Government to mention the names of Anna and Periyar? The scavengers have been neglected, while the Clerks, Supervisors and others in the Corporation are getting this benefit. That is the beauty of this Government. I charge this Government with being anti-Harijan and anti-weaker sections because the scavengers have been neglected. Fortunately during the regime of Kalaignar, during the period of the D.M.K. Government, all the N.G.Os., irrespective of any differences, were benefited. I request the Government at least to come forward to extend this scheme of giving Rs 10,000 to the scavengers also.

Another important point. A scavenger is doing essential service. His service has been acclaimed and appreciated by Gandhiji and Periyar and recognised by Anna. He is not getting pension while every other member of the staff who is sitting and working in the Corporation is getting it.

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member may please withdraw the word 'fellow' and use the words 'other staff'.

THIRU P. YELLAMANDA: Sir, I correct myself. When every other staff is getting this benefit, I request the Government to extend this facility to the scavengers also.

Regarding the problem of Harijans, the episode of Thiru Murugaiyan, the way in which he has been murdered is inhuman . . . .

தீட்டிச் செயல்படுத்துகின்றபோது ஏற்படும் கஷ்டங்களை நாம் உணர வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களுக்கு நாம் உறுதுணையாக இருந்து, அவைகளை மேற்கொண்டு செயலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் துறை பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தினால், அதைப்பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன். போக்குவரத்துத் துறையிலே சிலபல இடங்களிலே கழிவு அறைகள் இல்லை. சில இடங்களில் பேருந்துகள் நிற்கும் இடங்களில் கழிவு அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக எடுத்துக்காட்டாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். செங்கற்பட்டை அடுத்த மாமண்டூரிலே பேருந்துகள் எல்லாம் நிற்கின்றன. பேருந்துகள் நிற்கின்ற அந்த ரோடிலே இரண்டு கழிவறைகள் இருக்கின்றன. அங்கே கழிவறைக்குப் போய்விட்டு வெளியே வரமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அவ்வளவு மோசமாக இருக்கிறது. குறைகளைப் போக்க அரசு சார்பிலே புதிய கழிவு அறை கட்ட முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

மற்றும், சில ஊர்களிலே குளியல் அறைகள் தேவை. பிரயாணிகள் அங்கே தங்குகிறார்கள். மேலும் அந்த இடங்களில் வருகின்ற பஸ்கள் 15 நிமிடம், 20 நிமிடம் நிறுத்தப்படுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட வசதிகளை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* 154. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government propose to compile the books of Thanthai Periyar and Arignar Anna and publish them as cheap editions; and

(*b*) if so, when it will be published?

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா நூல்கள்.

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோருடைய நூல்களைத் தொகுத்து மலிவுப் பதிப்பாக வெளியிட அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது வெளியிடப்படும்?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) ஆம்.

(இ) தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் நூல்களை அரசு சார்பில் வெளியிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அரசின் சார்பாக இவ்வாறு முயற்சி எடுத்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய கேள்வியில் இரண்டாவதாக 'எப்போது வெளியிடப்படும்' என்று கேட்டிருக்கிறேன். எனவே எப்போது அந்த நூல்கள் வெளியிடப்படுமென்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. தந்தை பெரியாருடைய நூல்களைத் தொகுத்து வெளியிட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதைப் போல, பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களைத் தொகுத்து வெளியிட ஒரு குழு அமைக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இவைகளுக்கு இடையிலே அந்த

நூல்களுடைய உரிமைகள் யார் யாரிடம் இருக்கின்றன, அதைப் என்ன தடைகள் இருக்கின்றன என்பவை பற்றியெல்லாம் அரசு பரிசீ கொண்டிருக்கிறது. அந்தப் பரிசீலனைகள் முடிந்த பிறகு முறைப் எவ்வளவு சீக்கிரத்தில் வெளியிட முடியுமோ அவ்வளவு சீ வெளியிடப்படும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தந்தை பெரியார், பேரறிஞர் அண் ஆகியோருடைய நூல்கள் தொகுத்து வெளியிடப்படும் என்று மகிழ்ச்சிய செய்தியை அறிவித்தார்கள். அப்படித் தொகுத்து வெளியிடும் நேரத் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்களோடு மட்டுமல்லாமல், அ நாடாளுமன்றம், சட்டமன்றம் இன்னும் இந்த மன்றங்களுக்கு அப்பா ஆற்றிய நல்ல உரைகளையும் தொகுத்து, வெளியிடுகின்ற நூல்களோ இணைக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் எழுதிய நூல் என்று சொல்லப்படவில்லை. அதிலிருந்து, நூல்கள் என்றாலே அவ எழுதிய, பேசிய, பல்வேறு துறைகளைச் சார்ந்த கருத்துக்கள் அடங்கு மென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Government Secondary School for Girls, Madurai.*

* 155. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government Secondary School for Girls at Madurai, is working without proper accommodation ; and

(b) if so, the action proposed to be taken thereon ?

**மதுரை, அரசு பெண்கள் இடைநிலைப் பள்ளி.**

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரையில் உள்ள அரசு பெண்கள் இடைநிலைப் பள்ளி, இடவசதியின்றி நடத்தப்படுகிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளியின் இடவசதியை அதிகரிப்பதற்காக ஏற்கெனவே பழுதான நிலையில் இருந்த மூன்று கொட்டகைகள் ரூ. 19,500 செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளன. மேலும் ரூ. 52,300 செலவில் ஏற்கெனவே உள்ள கல்கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட்டு அவற்றில் சில மேம்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. பி. ஆர். தாமஸ் : முன்பு இந்தப் பள்ளி இருந்த மாநகராட்சிக் கட்டிடத்திற்கே அந்தப் பெண்கள் பள்ளியை மீண்டும் மாற்ற வேண்டுமென்று பல முறை அந்தப் பகுதி மக்கள் கூறியிருக்கிறார்கள். தற்போது அந்தக் கட்டிடம் இடிக்கப்பட்டு வரும் நிலை இருக்கிறது. எனவே அந்த இடத்திற்கு மீண்டும் அந்தப் பள்ளியை மாற்றும் நிலை உள்ளதா ? தற்போது இரண்டு இடங்களில் அந்தப் பள்ளி நடைபெற்று வருகிறது. அதனால் பள்ளி மாணவிகளுக்கும், ஆசிரியைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டு, சரியாக போதனை நடக்கவில்லை. அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதுரை மாநகராட்சி அக்கட்டிடத்தைக் கொடுக்க இயலாது என்று தெரிவித்ததன் பேரில், இப்போது இந்தப் பள்ளி இயங்கி வரும் கட்டிடத்தையே சீர் செய்து, பள்ளியை அங்கேயே நடத்தலாமென்று முடிவெடுத்து, கட்டிடத்தைப் பழுது பார்க்கும்படி உரிய ஆணை வெளியிட்டுத்தான், இந்தக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

திரு. டி. சந்தோஷம் : அந்தப் பள்ளி இப்போது நடந்து வரும் இடம் மிகக் குறைந்த விஸ்தீரணம் உள்ளது. எவ்வளவுதான் கட்டிடம் கட்டினாலும், போதிய இட வசதி இராதென்று நினைக்கிறேன். ஆனால் பக்கத்தில் தெப்பக்குளமாக இருந்த இடம், தூர்ந்துபோய் சமதளமாக இருக்கிறது. அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து, மற்ற வசதிகளோடு, விளையாட்டு மைதானத்தோடு கூடிய பள்ளியாக அந்தப் பள்ளியை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுகுறித்துப் பரிசீலிக்கலாம்.

*Appointment of Tamil Teachers in Higher Secondary Schools.*

* 156 Q.—THIRU D. SANTOSHAM : } Will the Hon. the
AND THIRU P. R. THOMAS : }
Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to appoint B.T. Teachers possessing Post-Graduate Degree in Tamil in the proposed Higher Secondary Schools ; and

(b) if not, the reasons therefor?

பணியாற்றுகிறவர்களுக்கு இதிலே நல்ல அனுபவம் இருக்கிறதெ பொருளாகும். எனவே அப்படிப்பட்ட தமிழாசிரியர்களை, புலவர் பட்ட பெற்றவர்களை, மேல் நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களாக நியமிக்கு இட்டம் பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொதுவாக ஆசிரியர்களை பொறுத்தமட்டில், அனுபவத்தின் அடிப்படையில் திறமை அதிகரிக்கிற என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஆகவேதான் ஆசிரிய பெருமக்களுக்கு நாம் பணியிடைப் பயிற்சியை பல்வேறு சந்தர்ப்பங்களில் தந்து, அவர்கள் அறிவு வளர்ச்சிக்கு வழி செய்கிறோம். தமிழாசிரிய களைப் பொறுத்த மட்டில், உறுப்பினர்களுடைய கருத்துக்களையு ஆராய்ந்து, நிரந்தரமான விதிமுறைகள் வகுக்கப்படும்.

(பிற்பகல் 4-20)

திரு. பி. ஆர். தாமஸ் : சரித்திர பாடத்திலே மேற்பட்டப் படிப் படித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை தராததால், அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். சரித்திரத்தைப் போதிப்பதிலே அவர்களுக்கு முன்னுரிமை தரப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சரித்திரப் பாடத்திலே ஆசிரிய பயிற்சியைப் பெற்றிருப்பார்களேயானால், அவர்களுடைய கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

## Teacher-Pupil Ratio.

* 157. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. Minister for Education be pleased to state whether there is any proposal with the Government to reduce Teacher-Pupil ratio, with a view to provide employment to more than forty thousand un-employed teachers ?

## ஆசிரியர்—மாணவர் விகிதம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

வேலையில்லாமல் உள்ள நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரிய களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வசதி செய்யும் வகையில் ஆசிரியர்—மாணவர் விகிதத்தைக் குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக தற்பொழுது அமுலில் உள்ள ஆசிரியர்—மாணவர் விகிதத்தைக் குறைக்கத் தேவையில்லை. காரணம் இப்பொழுது அமுலில் உள்ள விகிதத்தின்படியே, பெரும் எண்ணிக்கையில் கூடுதல் ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்த இடமுள்ளது. ஆயினும் அரசு நிதிநிலை இடம் தரும் அளவுக்கே ஆண்டுதோறும் கூடுதல் ஆசிரியர் பதவிகளை அரசு ஏற்படுத்த முயல்கிறது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, தற்போது இருக்கக்கூடிய அரசாணையின்படி, ஆசிரியர்—மாணவர் விகிதத்தை அமுல்படுத்தும்போதே, ஏராளமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அரசு நிதிநிலையைக் காரணம் காட்டி, ஒருசில ஆசிரியர்களை மட்டும் நியமிப்பது நியாயந்தானா ? கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்காமலும், உரிய ஆசிரியர்—மாணவர் விகிதத்தை அமுல்படுத்தாமலும் இருப்பது கல்வியின் தரத்தைக் குறைப்பது ஆகாதா ? ஆசிரியர்—மாணவர் விகிதத்தைக் குறைத்து அதிகமான ஆசிரியர் களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதி ஆதாரம் என்பது நம்மைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒன்று. அதற்கு உட்பட்டுத்தான் நாம் காரியங்களைச் செயல்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையிலே எவ்வளவு ஆசிரியர்களுக்கு வேலை தர முடியுமோ அவ்வளவு ஆசிரியர்களுக்கு வேலை தர அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. க. அறிவழகன் : வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துக்காக தற்பொழுது அமுலில் உள்ள ஆசிரியர்—மாணவர் விகிதத்தைக் குறைக்கத் தேவையில்லையென்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் சொன்னார்கள். பொதுவாக கிராமப் பகுதிகளிலேயிருக்கிற பள்ளிகளில் மாணவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சென்னை போன்ற பெரிய நகரில் இருக்கக் கூடிய பள்ளிக்கூட வகுப்புகளில் ஒரு வகுப்பில் 60 பேர் கூட இருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளியானாலும் சரி, அல்லது உயர்நிலைப் பள்ளியானாலும் சரி, எல்லா நிலைகளிலும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. பொதுவான ஒரு கணக்கை வைத்துப் பார்க்காமல், நெருக்கடியான, சென்னை போன்ற, பகுதிகளிலே இருக்கக்கூடிய பள்ளிகளிலே, அதாவது குறிப்பிட்ட

விகிதத்திற்கு அதிகமான மாணவர்கள் படிக்கின்ற பகுதிகளிலே இருக்கின்ற பள்ளிக்கூடங்களிலே, கூடுதலான ஆசிரியர்களை நியமிக்கின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதி வசதியைப் பொறுத்துதான் இவற்றுக்கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : அண்மையில் பள்ளிக் கல்வி இயக்குநர், 25 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படும் என்று ஒரு கூட்டத்தில் பேசியதாகச் செய்தி வந்தது. அது அவருடைய சொந்தக் கருத்தா அல்லது அரசினுடைய கருத்தா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. செ. முத்துசாமி : நிதி வாய்ப்பு இல்லை என்பதும் நிதி ஆதாரம் இல்லை என்பதும் அமைச்சரவையுடைய கொள்கையைப் பொறுத்தது. அதேமாதிரி நிதி ஒதுக்கீடு என்பதும் அமைச்சரவையுடைய கொள்கையைப் பொறுத்தது. ஏதோ ஆயிரம் ஆசிரியர்களுக்கு மட்டும் வேலை வழங்கி விட்டு, உரிய ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தை அமுல்படுத்தாமல் இருப்பது நியாயமில்லை. கல்விக்கென்று குறிப்பிட்ட நிதியை ஒதுக்கி அதை ஒரு வரையறைக்குட்படுத்துவது நாட்டு முன்னேற்றத்திற்கும் கல்வி முன்னேற்றத்துக்கும் சரியானதாக இருக்காது. முன்பு 4 ஆயிரம், 5 ஆயிரம் ஆசிரியர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு கொடுத்துக்கொண்டிருந்த நிலைமையை மாற்றி இன்றையதினம் ஆயிரம் பேர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கிறோம் என்று சொல்வதில் நியாயமில்லை. வேலையில்லாமல் ஏராளமான ஆசிரியர்கள் இருப்பதால் ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைச் சரிவர அமுல்படுத்தி இன்னும் அதிகம் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலையில்லாத ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற பிரச்சினை மட்டும் அல்ல கல்வித் துறையிலே இன்றையதினம் இருப்பது, அதைத் தவிர, பல்வேறு பிரச்சினைகள் கல்வித் துறையிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் மனதிற்கொண்டு நிதி ஆதாரங்களை மனதில் வைத்தும் செலவுகளைச் செய்து வருகிறோம். இப்பொழுது நாம் செய்து வருவது நம்முடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்துதான்.



THIRU A. R. DAMODARAN : Sir, the Government of India are having a massive programme of adult education. May I know whether the Government will think of forming Teachers' Associations amongst the unemployed teachers to take some interest in this adult education programme, which would also give them some immediate employment ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முதியோர் கல்வித் திட்டத்தில், ஆசிரியப் பெருமக்கள் தாங்களாகவே சேர்ந்து, ஒரு Voluntary Agency-சேவை நிலையத்தை அமைத்துக் கொண்டு அனுமதி கேட்பார்களேயானால், அவர்களுக்கு அரசு அந்த அனுமதியைச் சந்தோஷத்துடன் வழங்கும்.

திரு. டி. சந்தோஷம் : உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் கூறியது போல, மதுரையில் சில உயர்நிலைப் பள்ளிகளில் சில வகுப்புகளில் 60 மாணவர்கள்கூட இருப்பதை நான் அறிவேன். ஆங்கில மீடியம் வகுப்புகளில் 80, 82 மாணவர்கள்கூட படிக்கிறார்கள். குறிப்பாக செயின்ட் மேரிஸ் பள்ளிக்கூடத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. நகரங்களில் இருக்கக்கூடிய அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களிலாவது ஆசிரியர்—மாணவர் விகிதத்தை மனதிற்கொண்டு கூடுதல் ஆசிரியர் பதவிகள் சேங்ஷன் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்ற முயற்சியில்தான் ஒரு குறிப்பிட்ட அளவு ஆசிரியர்களை நாம் நியமித்திருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துக்காக தற்பொழுது அமுலில் உள்ள ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைக் குறைக்கத் தேவையில்லை என்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் சொன்னார்கள். இத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் கல்வியைப் போதித்தால்தான், அவர்கள் போதிக்கின்ற அந்தக் கல்வி மாணவர்களுக்கு சரியாகப் போய்ச் சேர முடியுமென்று கல்வித் துறை வல்லுநர்களாலும் நிபுணர்களாலும் ஆராய்ந்து கணக்கிடப்பட்டு, அந்த மாணவர்—ஆசிரியர் விகிதாசாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஆசிரியர்களைப் போடாமலிருப்பது கல்வியைப் பாதிக்காதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்வியைப் பொ
நாம் இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு, பெரும்ப
மக்களுக்கு, இதுவரை வசதி வாய்ப்புக் கிடைக்காம
லுள்ள கிராமப்புற மக்களுக்கும், இந்தக் கல்வியைத் தர வே
ஆர்வத்தில் பெரும் திட்டங்களை நாம் அமுல்படுத்துகின்ற நோக்
நாம் முக்கிய கவனத்தைச் செலுத்துகிறோம். வேலையில்லாத
எல்லோருக்கும் அரசுதான் வேலை தர வேண்டுமென்கிற நியதி
மானால், அந்த நியதி முன்னாலேயே ஒழுங்காகக் கடைப்பி
வந்திருக்குமானால், இப்பொழுது 40 ஆயிரம் ஆசிரியர்கள் வேலை
இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்காது என்பதை மாண்புமி
னருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : நாட்டு ஆண்டில் அனைவருக்கும் வேலை
அளிக்கும் பொதுவான வேலை வாய்ப்புத் திட்டத்தை அரசு அமு
செயல்படுத்தப் போகிறது. கிராமப்புறத்திலே வேலையில்லாது இ
ஆசிரியர்களுக்காக கிராமப்புறக் கல்வித் திட்டம் என்று தனியா
திட்டத்தை வகுத்து, வேலையில்லாது இருக்கின்ற ஆசிரியர்களுக்கு
வாய்ப்புத் தருகின்ற வகையில், இந்த வாய்ப்பினை அவர்களுக்கு
ஊதிய அவர்கள் வருமானம் பெறுகின்ற வகையில், ஒரு ஏற்பா
செய்து அந்த மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அமுல்படுத்துவார்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலையில்லாத ஆசிரிய
வேலை தர வேண்டுமென்ற நல்ல எண்ணம் அரசுக்கு இருக்கிறது.
கருத்து எப்போதும் அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டு
அந்த அடிப்படையில்தான், நாம் அவ்வப்போது ஆசிரியர்களைப்
கூடங்களில் நியமிப்பதற்காக பணியிடங்களை அதிகப்
கொண்டிருக்கிறோம்.

(திரு. முத்துசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது மாண்புமிகு உறுப்பினர்
போகின்ற நான்காவது துணைக் கேள்வி. ஒரு உறுப்பினருக்கு
துணைக் கேள்விகளா ?

திரு. செ. முத்துசாமி : பயிற்சிபெற்று வேலையில்லாத
ஆசிரியர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க நிதிநிலை இடம்
என்று மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள்
... பாதிகளில் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு



போல், பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை உதவித் தொகையாகத் தருகின்ற திட்டம் பற்றி அரசு பரிசீலித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுவும் நிதி ஆதாரத் தொடர்புடையதுதானே ?

## *Safeguarding of services of Teachers*

* 158 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon the Minister for Education be pleased to state the steps proposed to be taken by the Government to safeguard the services of teachers, who would be found surplus due to the proposed abolition of P.U.C. Classes in the forthcoming academic year?

## ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

புகுமுக வகுப்புக்கள் வருகின்ற கல்வி ஆண்டில் நீக்கப்பட இருப்பதால், உபரியாகக் கருதப்படுகிற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்க அரசு என்ன திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புகுமுக வகுப்புக்கள் வருகின்ற கல்வி ஆண்டில் நீக்கப்பட இருப்பதால், உபரியாகக் கருதப்படுகிற ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இது பற்றி அரசு விரைவில் ஒரு முடிவு எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரே ஒரு புகுமுக வகுப்புக் கல்லூரிதான் இருக்கிறது. புகுமுக வகுப்புகள் வருகின்ற கல்வி ஆண்டில் நீக்கப்பட இருப்பதால், உபரியாகக் கருதப்படுகிற ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பணிப் பாதுகாப்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்பில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் உண்டா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாம் மற்ற எல்லாக் கல்லூரிகளிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு என்ன பணிப் பாதுகாப்பு தருகின்றோமோ அதை இவர்களுக்கும் தந்திருக்கின்றோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண். 159, 160 ஆகிய இரண்டும் ஒரே விஷயத்தைப் பற்றியிருப்பதால், இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொள்கிறேன்.

## Concession for Members

* 159 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal with the Government to grant the concession of allowing one more person to travel along with the Members of the Legislature in the State Transport buses, free of cost?

உறுப்பினர்களுக்குச் சலுகை

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சட்டமன்ற உறுப்பினர்களுடன் கூடுதலாக ஒருவர் அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும் வகையில், சலுகை வழங்க அரசின் கருத்துக் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

160 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether it is a fact that the Members of Legislature are not allowed to travel in the air-conditioned Government buses free of cost; and

(b) if so, whether the Government will come forward to remove this barrier?

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —



1979 மார்ச் 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (இ) சட்டமன்ற உறுப்பினர்கள் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் சாதாரண விரைவுப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

குளிர்சாதனம் பொருத்தப்பட்டுள்ள விரைவுப் பேருந்துகள் குறைந்த இருக்கைகள் கொண்டுள்ளதாலும், அவற்றில் பயணக் கட்டணம் விரைவுப் பேருந்து கட்டணத்தைவிட மிக அதிகமாக இருப்பதாலும், விரைவுப் பேருந்துப் பயணக் கட்டணத்திற்கும் குளிர்சாதனப் பேருந்துப் பயணக் கட்டணத்திற்கும் உண்டான வித்தியாசத்தை செலுத்தி குளிர்சாதனப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்யலாம் என அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நாடாளுமன்ற உறுப்பினர்கள் புகை வண்டிகளிலே பயணம் செய்யும்போது, அவருடன் ஒரு (Attendant) துணைவரும் செல்லலாம். இரண்டு பேர் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பினை மத்திய அரசு கொடுத்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர்கள் நாட்டளவில். நாம் மாநில அளவில். (சிரிப்பு)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நம்முடைய மாநிலத்தில் உள்ள போக்குவரத்துத் துறையிலும் அத்தகைய வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் பெரும்பான்மையான மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து. இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இன்னொரு உண்மையை நான் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1976-77 ஆம் ஆண்டில் மேலவை உறுப்பினர்களின் பயணச் செலவுக்கென்று போக்குவரத்துத் துறைக்கு 62,500 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 62,500 ரூபாய் அளவுக்கு உறுப்பினர்கள் பயணம் செய்வதில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்விலிருந்து அறியலாம். இந்த ஒரு சலுகையை அவசியம் அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுடன் வேறு ஒரு துணைவரும் பயணம் செய்யலாம் என்ற உரிமையை வழங்குவது பற்றி அரசு பரிவுடன் பரிசீலித்து முடிவு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

## மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர் நியமனம்.

**திரு. டி. சந்தோஷம் : &**
**திரு. பி. ஆர். தாமஸ் :** } மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளி வேண்டுகிறோம்—

(அ) உத்தேசிக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் தமிழில் புப் மேற்படிப்புப் பட்டம் பெற்ற பி. டி. ஆசிரியர்களை நியமிக்கும் செயற் குறிப் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) உயர்நிலை பள்ளிகளில் தமிழாசிரியர்களாகப் பணி செய்பவர்கள் தமிழில் எம்.ஏ தேர்ச்சி பெற்றவர்களை மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியராக நியமன செய்தது போக, மீதமுள்ள மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் பதவிகளுக் தமிழல்லாத பிற பாடங்களில் பட்டம் பெற்று தமிழ் அல்லாத பிற பாட களுக்கான ஆசிரியர்களாக பணியாற்றுபவர்களில் தமிழ் எம்.ஏ பெற்றவர்களை நியமிக்கலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** இத்தகைய ஆணை பிறப்பித்திருந்தும், ப எம்.ஏ. (தமிழ்) பட்டம் பெற்ற, பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. எனவே, வருங் ஆண்டிலாவது அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, பணியிடங்களில் வாய்ப்பு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்களுக்கு வாய்ப்புக் கிடை வில்லை என்றால், அவர்களைவிடத் தகுதி அதிகமாக உள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பொருள். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களாகப் பணியாற்றும் தமிழ் வித்வான்கள், புலவர்கள், தமிழ் எம்.லிட்., பி.எட். படித்திருந்தால், அவர்களுக்கு முதல் வாய்ப்பு இட அப்படி அதிகத் தகுதி பெற்றவர்கள் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டு கலாம். மேலும் தமிழாசிரியர்களிடமிருந்து இன்னொரு கோரிக்கை வந்திருக்கிறது. 'பணிமூப்பு அடைந்தவர்கள், தமிழிலே சொல்லித் பயிற்சி பெற்றவர்கள் நாங்கள் இருக்கும்போது, தமிழில் சொல்லித் பயிற்சி பெறாதவர்களை நியமிப்பது சரியல்ல' என்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் இத்தோடு சேர்த்து பரிசீலித்து முடிவெடுக்கும்.



**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழாசிரியர் களுடைய கோரிக்கையை எடுத்துச் சொன்னார்கள். புலவர் பட்டம் பெற்று, தமிழிலே பயிற்சிக்கான திறமையும் பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்கு, மிக்க அனுபவம் பெற்ற ஆசிரியர்களுக்கு, முதன்மை இடம் தந்து மேல் நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தை விரைவில் அரசு கொண்டுவருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** முதன்மையிடம், தமிழாசிரியர் களாக, வித்வான்களாக, புலவர்களாக இருந்து எம்.ஏ., பட்டம் பெற்றவர் களுக்குத்தான் தருகிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த விதிமுறைகளை எதிர்த்து, தனிப் பட்ட ஆசிரியர்கள் உயர்நீதி மன்றத்தில் ஏதாவது வழக்குத் தொடுத்திருப்ப தாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது குறித்து உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு எண் 2876/78 தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது. தற்போது அது 'சப்ஜுடிஸ்' ஆகும். எனவே மேற்கொண்டு உடனடியாக எந்தவித மாற்றங்களும் செய்வது நல்லதல்ல என்ற கருத்தைத் தெரிவித்திருக் கிறார்கள். எனவே இது குறித்து நிரந்தரமான விதிமுறைகளை வகுக்கும் போது, இவையெல்லாம் பரிசீலிக்கப்படும்.

**புலவர் புலமைப்பித்தன் :** புலவர் பட்டம் பெற்று, பிறகு எம்.ஏ., படித்தவர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளில் முன்னுரிமை அளிப்பது பாராட்டத்தக்கதாகும். அடுத்தபடியாக பி.ஏ., பி.டி. போன்ற வேறு பட்டங்களைப் பெற்ற பிறகு, தமிழ் படித்தவர்களுக்குத் தரப்படும் முன்னுரிமையைக் காட்டிலும், 10 ஆண்டுக் காலம் புலவராக இருந்த அனுபவம் உள்ள பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை தருவதுதான் தமிழை முறையாகக் கற்றுத்தர வாய்ப்பாக இருக்குமென்று அரசு உணர்ந்து, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நிரந்தரமான விதிமுறைகள் வகுக்கின்றபோது, இவைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

**திரு. க. அறிவழகன் :** ஆசிரியராக ஒருவர் பணியாற்றுகிற அனுபவம் மிக முக்கியமானதாகும். பட்டங்களைவிட அனுபவம் மிக முக்கியமானதாகும். அப்படிப் பார்க்கும்போது, புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியர்களாகப்

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மத்திய அரசு நாடா
உறுப்பினர்களுக்கு இரயில்வேயில் அந்தச் சலுகையை அளிக்கிறது.
பேருந்துகளை இரயில்வேயுடன் ஒப்பிடுவது என்பது சரியாக இரு
தமிழக அரசுக்கு என்று சொந்தமாக இரயில்வே இருந்தால்,
சலுகையை மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கலாம்.
சலுகையைப் பேருந்துகளில் கொடுப்பது என்பது சிரமமாக இருக்கும்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** உறுப்பினர்கள் பயணம் செய்யும்போது,
ளுடைய துணைவியார்களையாவது தங்களுடன் அழைத்துச் செல்லும்
வகையில். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பன்மையில் இருக்கக்கூடாது.
வியார் ஒருமையில்தான் இருக்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. செ. முத்துசாமி :** சில நேரங்களில் மரியாதை காரணம்
ஒருமையில் சொல்லப்பட வேண்டியவைகளைப் பன்மையில் சொல்
றனர். அந்த வகையில்தான் குறிப்பிட்டேனே தவிர பன்மையில் அல்லாம
ஒருமையில்தான் என்று தெரிவித்துக் கொண்டு, உறுப்பினர்
துணைவியாரைப் பேருந்துகளில் அழைத்துச் செல்ல வாய்ப்புத் தரு
வகையில் இந்தச் சலுகையை அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அப்படிப்பட்ட பரிசீலனை
அரசின் எண்ணத்தில் இல்லை. தற்போது உறுப்பினர்கள் மட்டும்
லாம் என்றிருக்கிறது. இதை மாற்றி மொத்தம் இத்தனை மைல் தொ
வுக்கு உறுப்பினர்கள் பயணம் செய்து கொள்ளலாம் என்று ஒரு வரைய
யைச் செய்தால், அந்த நிலையில் இரண்டு பேராகச் செல்லலாம். அதாவ
ஒரு குறிப்பிட்ட தூரம் பயணம் செய்யலாம் என்று நிர்ணயித்து,
தூரத்தை இரண்டுபேருமாகச் சேர்ந்தும் பயணம் செய்து கொள்ள
என்ற விதிமுறையைக் கொண்டு வரலாமா என்று அரசு ஆய்ந்து வரு
ஆய்விற்குப் பிறகு அரசு அதில் ஒரு முடிவெடுக்கும்.

**திரு. க. அறிவழகன் :** சட்டப் பேரவையில் பேசும்போது மா
நிதியமைச்சர் அவர்கள், தற்போது உறுப்பினர்களுக்குக் கொடுக்க
இரயில்வே கூப்பன்களைப் பயன்படுத்தி உறுப்பினர்கள் தங்கள் துணை
யரையும் உடன் அழைத்துக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்



1979 மார்ச் 10]

உறுதிமொழியைக் கொடுத்தார்கள். இன்னும் அது விதியாகச் செய்யப்பட
வில்லை. பயணம் செய்யும்போது, எங்கள் துணைவியரையே உடன்
அழைத்துச் செல்ல அனுமதிப்பதற்கு அரசு யோசனை செய்யுமானால் உறுப்
பினர்களுடைய நிலை பரிதாபமாக ஆகிவிடும் என்பதால், இதனை உடனடி
யாகப் பரிசீலனை செய்து ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.
அடுத்து, குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட பேருந்துகளில் பயணம் செய்
வதில் உள்ள மாறுபாடுபற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்
சர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இரயிலில் சாதாரண முதல் வகுப்புப்
பெட்டிகளிலும் பயணம் செய்யலாம், குளிர்சாதனம் பொருத்தப்பட்ட
வகுப்புகளிலும் பயணம் செய்யலாம் என்றிருக்கிறது. எனவே இதை
உறுப்பினர் விஷயத்தில் மட்டும் பாகுபடுத்திப் பார்ப்பதைத் தவிர்த்து
உறுப்பினர்களுக்கும் இந்தச் சலுகை விஸ்தரிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** உறுப்பினர் அவர்கள் கேட்ட முதல்
வினாவைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் தாங்கள் பயணம் செய்யும்
போது, தங்களுடன் அவர்களுடைய துணைவியரையும் அழைத்துச் செல்
வதற்கு இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, எந்தவித ஆட்சேபணையும்
இல்லை. அவர்களுக்கு இந்தச் சலுகையை அளித்துத்தான் அழைத்துச்
செல்ல வேண்டும் என்று கேட்கும்போதுதான் சங்கடமாக இருக்கிறது.

உறுப்பினர் கேட்ட இரண்டாவது துணை வினாவில் அமைச்சர்கள்
ங்களின் இரயில் பயணத்தில் இரண்டு பெட்டிகளிலும் பயணம் செய்யலாம்
ன்றும் அதைப்போலவே உறுப்பினர்களும் பேருந்துகளில் பயணம் செய்ய
அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டார்கள். பேருந்துகளில் அதைப்
போன்ற பெட்டி வசதிகள் இல்லை. இரயில்வேக்களுக்கு அது பொருத்த
மாக இருக்கும். பேருந்துகளுக்கு அது பொருத்தமாக இருக்காது.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** சட்டமன்ற உறுப்பினர்களுக்கான
ஊதியம், படிகள் போன்றவற்றைக் கூறும் புத்தகத்தில் பக்கம் 7-ல் உறுப்
பினர்கள் எந்த அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளிலும் பயணம் செய்ய
லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "by any bus run and operated by
the State Transport Departments" என்று தான் சொல்லப்
பட்டுள்ளது. எனவே அதில் (Ordinary) ஆர்டினரி பஸ் என்று
குறிப்பிடப்படவில்லை. அப்படி ஏதும் குறிப்பிடாத நிலையில், 'any bus '
என்றால், அது எவ்வளவு வசதிகளைக் கொண்ட பஸ்ஸானாலும் சரி,
10 டீலக்ஸ் மாடி பஸ்ஸானாலும் சரி, அதில் உறுப்பினர்கள் பயணம்

திரு. செ. முத்துசாமி : சமீபத்தில் உத்தரப் பிரதேசத்திலிருந்து மன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு தமிழகத்திற்கு வந்திருந்தது. அவர்களைக் கேட்டபோது, ரயில்களில் பயணம் செய்ய, தங்களுக்கு ரூ. 3,000-க்கான டோக்கன் தரப்படுவதாகவும் அதை ஓராண்டுக்குள் மன்ற உறுப்பினர்கள் பயன் படுத்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்கள். இங்கே தமிழகத்தில் ரூ. 1,800-க்கான கூப்பன்கள்தான் வழங்கப்படுகின்றன. எனவே இதை உயர்த்தக்கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மத்திய அரசைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு பலகோடி ரூபாய் வருவாய் இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில், அதனுடைய வருவாய் அந்த அளவுக்கு இல்லை என்பதால் நாம் மத்திய அரசைப்போல் எதையும் செய்ய முடியாது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உத்திரப் பிரதேசத்தில் உள்ள நிலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுபற்றிய குறிப்பு என்னிடமில்லை. எனினும் அதுபற்றி ஆராயப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) தகவல் கோரல்.

### 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவையில் கேட்ட ஒரு வினா பற்றிய செய்தி குறித்து.

THIRU A. R. DAMODARAN : Sir, I am not raising this as a question of privilege. But today a report has appeared in the 'Indian Express' about a question that I asked about child labour. Since the heading has been put as "Ban on Child Labour", I have asked the newspaper to correct its report, because an impression has been conveyed that I had asked whether a blanket ban would not affect many industries. My question was not pertaining to industries. I was least concerned about the industries. What I asked was whether a complete ban on child labour would not affect the economic conditions of certain poorer classes of families whose children were employed either in urban areas or agricultural areas. I wanted a distinction to be made between hazardous and non-hazardous occupations. I would, therefore, request through you that this



report may kindly be corrected. I have received half a dozen calls from people connected with social service protesting against my reported encouraging of child labour in industries.

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதை அந்தப் பத்திரிகை நிருபர்கள் குறிப்பு எடுத்துக் கொண்டு அதைப் பிரசுரிப்பார்கள் என்று நம்புகின்றேன். ஆகவே, அதை இதோடு விட்டுவிடலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், அவரும் அதை உரிமைப் பிரச்சினையாக எழுப்பவில்லை.

## 3. கவன ஈர்ப்பு.

### (1) அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் தங்களது கோரிக்கைகளை வற்புறுத்தி நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, " அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் தங்களது கோரிக்கைகளை வற்புறுத்தி நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது, 5—3—1979 அன்று முழு வேலை நிறுத்தம் செய்திருப்பது, சிதம்பரம் நகரில் ஊர்வலம் நடத்தி துணை ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை அளித்திருப்பது, ஊழியர்களுக்கு ஆதரவாக பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும் நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது, 12—3—1979 முதல் காலவரையறையற்ற தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்திருப்பது ஆகியவற்றினால் பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும், பல்கலைக் கழகத் தேர்வுகள் பாதிக்கப்படுவது குறித்தும் " மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை (@) அவைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, மூன்றாவது ஊதியக் குழுவினுடைய அறிக்கைப்படி, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு ஊதியத்தை அமுல்படுத்துவதானால் கூடுதல் செலவாக சுமார் 42 லட்சம் ரூபாய் ஆகும் என்று ஒரு குழு அறிக்கை வந்திருக்கிறது. அந்தத் தொகையை அரசிடம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கேட்டிருக்

@ 450 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செய்யலாம் என்பதுதான் பொருள். எனவே, இந்த விதிமுறை[illegible] உறுப்பினர்களுக்கும் பயணம் செய்ய அனுமதி அளித்து அரசு [illegible] பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** விதிமுறைகளுக்கு எப்போ[illegible] விதிவிலக்கு உண்டு. அந்த விதிவிலக்கின் அடிப்படையில்தான் குளிர்சா[illegible] பொருத்தப்பட்ட பேருந்துகளில் பயணம் செய்ய உறுப்பினர்களுக்குச் ச[illegible] இல்லை என்று உத்தரவிட்டிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** கேட்கப்பட்டிருக்கும் வினாவில் "சட்ட[illegible] மன்ற உறுப்பினர்களுடன் கூடுதலாக ஒருவர் அரசுப் பேருந்துகளில் இலவ[illegible] மாகப் பயணம் செய்யும் வகையில் சலுகை வழங்க அரசிடம் செயற்[illegible] இருக்கிறதா" என்று கேட்கப்பட்டிருக்கிறது. தற்போதும் உறுப்பினர்க[illegible] இலவசமாகப் பயணம் செய்வதில்லை. உறுப்பினர்கள் செய்யும் பய[illegible] ஈடாக என்று அனைத்துப் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களு[illegible] அரசாங்கம் பணம் செலுத்திக்கொண்டிருக்கிறது. இந்த மாதிரி அ[illegible] பேருந்துகளில் பயணம் செய்ய வாய்ப்பளிக்கப்பட்டிருந்தாலும், உறுப்பின[illegible] களில் பலர் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளாத சூழ்[illegible] இருக்கிறது. எனவே தற்போது ரயில் பயணம் செய்து கொள்வதற்கு [illegible] மாதிரி கூப்பன்கள் கொடுக்கிறோமோ அதைப் போலவே பேருந்துகளி[illegible] பயணம் செய்யவும் கூப்பன்களாகக் கொடுத்துவிட்டால், பயன்படுத்[illegible] கூப்பன்களைக் கொண்டுவந்து திருப்பிக் கொடுத்துவிடும்போது அரசா[illegible] தற்போது கொடுக்கும் அளவுக்குப் போக்குவரத்துக் கழகங்களுக்கு [illegible]யிரக் கணக்கான ரூபாயை அதிகமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் [illegible] பல் இருக்கும் என்பதைக் கருதி, பேருந்துகளிலும் உறுப்பினர்கள் [illegible] செய்வதற்கென்று கூப்பன்கள் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** உறுப்பினர் திரு. லெட்சுமிகா[illegible] அவர்கள் கூட இதைத்தான் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்[illegible] திரு. வீராசாமி அவர்களின் யோசனையை இந்த அரசு பரிசீலனை செய்[illegible]

**புலவர் புலமைப்பித்தன் :** பேருந்துகளில் சென்னை போன்ற புறப்[illegible] மூலைகளிலிருந்து பயணத்தைத் தொடங்கும்போது மட்டும் உறுப்[illegible] களுக்கு முதலிடம் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இடையில் [illegible] இற பல இடங்களில் ஏறும்போது, மிகத் தொல்லையாக இருக்கிறது. இடையில் பயணத்தைத் தொடங்கும் உறுப்பினர்களுக்கு வசதியாக [illegible] வகையில் புதிய முறையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்[illegible]



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அப்படிப்பட்ட இடங்கள் பொது வாக மாவட்டங்களின் தலைநகரங்களாக இருந்தால், அங்கிருந்துங்கூட தனி யாகப் பேருந்துகள் இயங்குகின்றன. தற்போது விரைவுப் பேருந்துகளில் தொலைதூரப் பயணிகளுக்கு வாய்ப்பாக இருக்கும் வகையில்தான் முன் னுரிமை அளிக்கப்படுகிறது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** பிற மாநிலங்களில், ரெயில்வே கூப்பன்களை உபயோகித்து ஆண் உறுப்பினர் தன் மனைவியையும், பெண் உறுப்பினர் தன் கணவனையும் அழைத்துச் செல்ல உரிமையளிக்கப்பட்டிருப் பதை அரசு அறியுமா? அதைப்போன்ற சலுகை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுமா? ஏற்கெனவே மிகுந்த காலதாமதமாக இந்த ரெயில்வே கூப்பன்கள் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவை உபயோகப்படுத்தப்படாமலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை யெல்லாம் மே மாதத்திற்குள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்தக் கூட்டத் தொடரிலேயே இதுபற்றிய முடிவினை அரசாங்கம் அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரெயில்வேயைப் பொறுத்தவரையில், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சலுகை சில மாநிலங்களில் தரப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் சட்டமன்றப் பேரவையில் பல உறுப்பினர்கள் பல வினாக்களை எழுப்பியிருக்கிறார்கள். அரசு அதுபற்றி ஆராய்ந்து வருகிறது. விரைவில் முடிவு செய்யும்.

THIRU J. M. MIAKHAN : May I ask the Hon. Minister what has happened to the scheme to give railway passes to the spouses of the legislators?

The Hon. THIRU C. PONNAIYAN : Hon. Chairman, Sir, my answer to a previous question holds good for this question also.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** வருஷத்திற்கு ஒருமுறையாவது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் துணைவியருடன் சுற்றுலாவாக உல்லாசப் பயணம் செய்ய பேருந்துகளில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இதுவரை உறுப்பினர்கள் கேட்ட தெல்லாம் வருஷத்திற்கு எத்தனை முறையானாலும் மனைவியர்களோடு சேர்ந்து பயணம் செய்வதற்குத்தான். நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மொத்தமாக இவ்வளவு தூரம் உறுப்பினர்கள் பயணம் செய்யலாம் என்று முடிவெடுத்து அதனடிப்படையில் ஏதாவது ஒரு முறையில் சலுகை அளிக்க லாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

4. 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவா
தொடர்ச்சி

* THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Budget for 1979-80 refers to the Madras Metropolitan ment. It has been referred to in paragraph 43 of the sp the Hon. the Finance Minister. Sir, I am proud of Mad and I hope that the development of that City will be ma more planned and deliberate fashion.

(மாற்றுத் தலைவர் திரு. சு. எஸ். வெங்கடேசன் தலைமை

Madras City was one of the most beautiful metropolitan c the whole of this country. But, of late, population growth sion of population as well as indiscriminate planning have reducing its efficacy as well as destroying the value of some buildings which are in this City.

Sir, may I start with the High Court? The High Court be in Madras City is one of the most beautiful places in the who India. Unfortunately, so many things are surrounding it today I am afraid that the beauty of the building is being taken awa a long list of buildings that are coming around it. Sir, firstly is the bus stand and secondly there is a Police Station. Then is the Fire Service Station which, of course, is essential within High Court premises. Then, near the old Small Causes C there is a City Civil Court building and yet another building come in. Then there is the Government Printing Press as we three buildings for Chambers for the Advocates, which, of co is necessary. Between the High Court building and the Law Col there is an auditorium for the Law College students. All buildings have been cramped inside this High Court premises the beauty has been taken away from this building which was the most beautiful High Court in the whole of this country. vouch for this fact because I think I have appeared in almost out of the 20 High Courts in this country and I know th Madras High Court is second to none and that it is a beau building the like of which cannot be built today. Unfortun during the wartime, the shutters with coloured glass-pieces those in a Roman chapel which were inside the High Cou removed for the purpose of safety. But they were never because in the process of removal most of them have been and have gone to pieces. It is a pity that these pieces could not b placed. The paintings on top of the ceiling of the High C



[Thiru G. Vasantha Pai]

have also been removed and some linoleum substitutes have been put there. In spite of all these, the building still remains one of the most beautiful buildings in this country. Unfortunately, in recent times, a lot of bunkers have come all round the High Court building. Sir, this is taking such enormous shape that one is not able even to get into the High Court and it looks as though you are going through a crowd on a festive occasion with all sorts of persons selling all sorts of things on the pavements near the bus-stand. I see this phenomenon only for the last 1½ years and this is a phenomenon which ought to be stopped. Those bunkers near the High Court should be removed. I do not know who has given permission for this. If it is the Corporation, the Corporation does not exist. If it is the Special Officer posted by Government, he should be asked to remove these bunkers. I say this for two reasons. Firstly, we have to take into consideration the safety of the bus passengers who get into the buses because all the bus-stops are between the Rajaji Statue and the Law College. The Rajaji Statue has been newly installed and it is a good piece. I commend the installation of that statue because it is good piece of work. In between these two places, there is the Bar Council. Then there is the Law College. The walls of the Law College have been raised and the beauty of the building has been completely spoiled.

(பிற்பகல் 4-50)

Sir, these are buildings which should be preserved in their pristine glory. They are really national monuments because the lighthouse on top of the High Court building was attracting a large number of tourists and I know that several Americans were escorted even by our Law Minister, when he was a member of the Bar, to the top of the lighthouse. Many people had come and witnessed the beautiful view of the City that was available from the top of the lighthouse. Unfortunately, the lighthouse has been moved over to a place near the office of the Inspector-General of Police. The beauty of the lighthouse building in the High Court has gone but the lighthouse building, as a piece of architecture, I hope, will not be taken away by the Government and the Government will try to preserve it in its original glory, of course, without the light. Because of the formation of several new courts, the interior arrangements of the High Court building are being changed. I do not object to the coming of new Courts but I hope the changes in structure made will be in tune with the beauty of the

[Thiru G. Vasantha Pai]

building and that it will not be destroyed. I do not mind any number of Courts being situated there. I request the Government to see that on the whole the beauty of the building is preserved and that there is no more encroachment on the building or the compound. Our High Court completed its centenary in 1962 and it is really in the shape of an ancient monument. People have come here from far-off places. I know many delegations of lawyers and persons like Mr. D. N. Pritt and Mr. Lord Justice Denning have come. Everyone of them paid glorious compliments for the architecture of this building. I remember Mr. Lord Justice Denning saying "This is one of the best buildings I have seen in the whole of India". Today I find that a number of buildings that have come up are out of tune with the beauty and architecture of this building. The City Civil Court buildings are there and unfortunately, they will crash down any day because the cement that has been used in its construction is a poor compliment to the manufacturers of cement. I would like this Government to take note of the fact that when they are putting up buildings, they should see that the architectural beauty of the old buildings nearby is not spoilt.

Then, I come to the buildings of the Nawab of Arcot which were being used by the Board of Revenue. In front of the old building, the new construction called 'Ezhilagam' has been put up. Nobody would say that this building is worth any mention, and it gives a look of a grotesque piece of architecture in the Beach Road. Behind that new building, the palace of Arcot Nawab which is of much tourist value, is situate. Even in your presentation of the tourist spots in Madras, it finds a place. Why should this new building be put up in front of the old building, by which the beauty of the building is taken away? As I go still further on the Beach Road, I am glad that up to the I.G.'s office things are not bad. Beyond that, there are buildings occupied by the Police Rest Office Quarters and there comes a new colony named Karpagam Avenue. I do not object to the coming up of the new colony, but you would see that behind that, there is an open space, low-lying land, in which the Fisheries Department has got its office. Between 'Oceanic' and Greenways Road, there is a vast open space which gives free air though there is sme ozone smell on account of the sewage which is coming there; but this can be converted into a beautiful park. I request the Government to think over it because if they are developing a metropolis like Madras, they must have parks and open spaces for all degrees and types of buildings they may have in the City. Now, the land between the place around



[Thiru G. Vasantha Pai]

the Fisheries Department and the road near the 'Oceanic' coming from Mandavelli, that is, the R.K. Mutt Road, must be preserved as an open lung because it will help the people in the Foreshore Estate, the fishermen, people in places like the Ramanathan Chettiar Avenue and Karpagam Avenue as well as people round about Mylapore with having an open space in that place so that they may breathe some fresh air. If this place is made a park and if trees are grown on it, it would be something like Lal Bagh or Cubbon Park. It is absolutely essential for the preservation of the beauty of the metropolis and also for providing fresh air to the inhabitants. I would, therefore, request the Government to stop all building activities in that vacant piece of land. Not only that. If the portion of land near the Adyar river is a Government Poramboke land, I request the Government not to alienate it to anybody else but instead use it as a park. I now find that garbagt is being put there. I hope that no buildings are going to come up there to spoil the beauty of that place. I hope that the garbage which is being put there will be closed up and that a small canal or rivulet would be formed there so that the place could be turned into a beautiful park; I also hope that no more encroachments of any sophisticated or ordinary nature would come up there and spoil the beauty of the place.

Sir, there is another thing which I want to ask. I do not know why our Ministers want to be enclosed in walls. Previously, one used to have a beautiful view as one went from the place where Thiru Raja Mohammed is living to the Beach. Sir, I refer to the open land near Greenways Road in front of the houses now occupied by Thiru S. Ramachandran and Thiru Edmund. I do not know why a 6½ feet wall has been put up there and the beauty of that landscape taken away. I do not think any Minister should have allowed it. Instead of a 6 1|2 feet wall, it could have been a 3 feet wall with iron-railings so that we could see the scenery in the vacant space. Previously, it used to be such a pleasure for us if we went from Adyar to Beach, with all these vacant spaces to see and it also used to be such a relief for us when we returned to Adyar. Now, we find so much of building activity all over. The vacant spaces are also being sliced up particularly because of the land ceiling laws. At least the Government could substitute the extent of land that a person could possess by giving these vacant spaces more and more to the inhabitants so that they may compensate for the loss which is occasioned by these land ceiling laws. I would request this Government earnestly to consider all these and see that these spaces and lungs in the City are not destroyed.

[Thiru G. Vasantha Pai] [1979 மார்ச் 10]

Sir, I would also like to mention another thing. As we go along the Adyar river, there is a big park area which was originally demarcated by the Government when Gandhi Nagar was built by the Madras House Construction Co-operative Society. I was one of the first inhabitants of Gandhi Nagar. There was a park area which was divided between Bala Mandir and the Cricket Club of Gandhi Nagar of which I am the President. That Club was built up by us at an enormous cost with money collected from individuals. We went begging from door to door in the colony and collected from Rs. 50 to Rs. 5,000 from individuals and industrialists. We put 3,600 cart-loads of sand brought from Tiruvanmiyur, raised the ground level and made it into a pucca cricket-ground. Today, when I am passing that way, I find that the Mallikuppam Cheri or some other cheri is extending to the cricket-ground. Thiru Raja Mohammed himself could see from his house the invasion of these cheri people. By putting up tenements, they have come to the northern side of the ground. This is not a very favourable sign because, afterwards they will start using it for a public convenience; the whole place will become dirty and the object for which we meant it would be destroyed. For that, the Government have been threatening to levy an urban land tax of Rs. 36,000. Already there have been demands against us. We have consistently stated that we could not afford to pay because we collect only Rs. 3 from a Member. Sometimes, for laying the pitch, etc. I pay Rs. 500 or Rs. 600 a year. We auction the free ticket that we get and by that we get Rs. 250 a year. Like that, we collect a few thousand rupees and that is how we are able to run the club. Against it, an exorbitant demand of Rs. 36,000 for the last so many years has been made for Urban Land Tax. It will only end in liquidation of the Club. I am only saying that many people and young children irrespective of caste, creed or colour who have an aptitude for the game have been using it for Rs. 3 per month. How can the Government charge a club like that a sum of Rs. 36,000 as tax? I am only referring to it in passing and I do not want to dwell on it at length.

(பிற்பகல் 5-00)

Then, I proceed further, and you have got the Guindy Road renamed as Sardar Vallabhbhai Patel Road. That road takes to Raj Bhavan. There is not a single day when that road is not dug either by the Sewerage people, or by the Electricity Department or by the Corporation people for water tap connections or for drainage



[1979 மார்ச் 10] [Thiru G. Vasantha Pai]

பல்லாண்டுகளாக உள்ள இந்த அவல நிலையைப்பற்றி மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள்கூட ஒரு முறை பேசியிருக்கிறார்கள். அதேபோல, முன்னாள் துணைவேந்தரான நமது ஆற்காடு டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்களும்கூட கைத்தறி நெசவாளர்களைப்பற்றி இந்த அவையில் ஒரு முறை பேசியிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பிரச்சினையில் இது வரையில் தீர்வு காணாமல் இருக்கிற நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இதற்கு ஒரு நல்ல சட்ட வடிவம் அமைத்து நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இந்த நிதிநிலை அறிக்கையிலே காணப்படுகிறது.



1979 மார்ச் 10] [திரு. சி. இராமலிங்கம்]

நூல் விலை ஏறிக்கொண்டே போகிறது என்று கடந்த முறை ஆளுநருடைய உரையின் மீது பேசுகிறபோது சொன்னேன். நூல் விலைகள் ஏறிக்கொண்டே போவதால், இன்றைக்கு நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்திலே பிரச்சினைகள் ஏற்பட்டு, அவர்களுடைய கூலி குறையுமோ என்ற சந்தேகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, நம்முடைய மாநில அரசு மத்திய அரசிடத்திலே சில கோரிக்கைகளை வைத்துக் கேட்க வேண்டும் என்று சொன்னேன். மத்திய சர்க்காரில் உள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் கடந்த 10 நாட்களுக்கு முன்னால், 'நூல் விலையை விரைவிலே குறைப்பேன்' என்று பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்று வரையில் நூலின் விலை குறைந்தபாடில்லை என்பதை, தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு அதைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பல ஏழை எளிய மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்புத் திட்டங்களை இங்கே வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் காண்கிறோம். காடு வளர்க்கிற திட்டத்தின்கீழ் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. வெளியே நான் சுற்றிப் பார்த்த வகையில், கடந்த அரசுகள் காடுகளை வளர்ப்பதில் ஏராளமாகப் பணம் செலவழித்து முயற்சி செய்திருந்தாலும், காடுகள் வளரவில்லை. காடுகளில் நிறைய சின்னச் சின்ன செடிகள் வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். நம் நாட்டில் பழங்காலங்களில் பாரம்பரியாக, இலுப்பைத் தோப்பு, மாந்தோப்பு, நெல்லித் தோப்பு, பனந்தோப்பு என்று பல தோப்புகள் இருந்தன. அவைகள் எல்லாம் இப்போ இல்லை. கனி தரும் தோப்புகள் நிறைய முன்பு இருக்கும். சாலைகளின் ஓரங்களில் எல்லாம் பழம் தரும் மரங்கள் இருக்கும். இலுப்பை மரத்தினுடைய பயன் என்னவென்று இன்றைக்குப் பல பேருக்குத் தெரியவில்லை. இலுப்பைப் பழத்தைச் சாப்பிடலாம். இலுப்பைக் கொட்டையிலிருந்து எண்ணெயை எடுக்கலாம், மீதமுள்ள சக்கையை சியக்காய்க்குப் பதிலாக அரப்புக்கு என்று பயன்படுத்துவார்கள். இப்போது அந்த மரங்கள் இல்லை. இப்பேர்ப்பட்ட மரங்களையெல்லாம் காட்டிலாக்கா வளர்க்க வேண்டும். நெல்லி மரத்தை வளர்க்கலாம், மாமரத்தை வளர்க்கலாம். கனி தரும் மரங்கள் இருந்தால், பறவைகள் கூட பழங்களைத் தின்ன நிறைய வரும். பறவைச் சரணாலயங்களில் தங்குவதைவிட பறவைகள், கனி தரும் மரங்கள் இருந்தால், அங்கு வந்து தங்கும். ஆகவே மரங்களை வளர்த்தால், மக்களுக்குப் பயன்படும், பறவைகளுக்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, காடு வளர்க்கும் திட்டத்திலே இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏரி, குளங்களை ஆழப்படுத்த வேண்டுமென்ற திட்டத்தை இங் குறிப்பிட்டிருக்கிறார்கள். சங்கங்களை வைத்துக்கொண்டு கோஷங்களை எழுப்பி, கோரிக்கைகளை வைத்து, படித்து உத்தியோகத்தில் இருப்பவர்கள் பலன் அடைகிறார்கள். கிராமங்களில் சங்கங்களை ஆரம்பித்து வாதாட ஆட்கள் இல்லாமல், குடி தண்ணீர் இன்றி, தலையில் வைத்துக்கொள்ள எண்ணெய் இன்றி வாடுகின்ற மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக சங்கம் வைத்துக்கொள்ள முடியவில்லை. காலையில் எழுந்தவுடனே கூலி வேலையைத் தேடிப் போகிறார்கள். கூலி வேலையும் அவர்களுக்குக் கிடைப் பதில்லை. கையைத் தலையில் வைத்துக்கொண்டு தரையில் படுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வறுமையைப் போக்க மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் கோதுமையைக் கொடுப்பது என்றும், ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் கொடுப்பது என்ற அடிப்படையிலேயும் ஒரு திட்டத்தை நமது அரசு இங்கே கொண்டு வந்திருக்கிறது. இது பாராட்டிற்குரியது.

நமது அரசு இப்போதுள்ள குளங்களையெல்லாம் தூர் வாரச் செய்ய வேண்டும். அந்த நாட்களிலே, வல்லவர்கள் என்று சொல்லுவார்களே, செல் வாக்கு உள்ளவர்கள் என்று சொல்லுவார்களே, அவர்கள் எல்லாம் ஏரியுள்ள பகுதியை, நீர்பிடிப்புப் பகுதியைக்கூட ஆக்கிரமித்து பயிர் வைத்துக் கொண் டார்கள். சாலையில் போகிறபோது பார்த்தால், ஒவ்வொரு ஏரியிலும் முக்கால் பகுதிக்குமேல் ஆக்கிரமிப்புச் செய்திருப்பது தெரியும். இப்படி ஆக்கிரமிப்புச் செய்ததால்தான், மழைக் காலங்களில் அங்கு தேங்க வேண்டிய தண்ணீர் வெளியே வந்து வெள்ளப் பெருக்காகிறது. ஆகவே, இப்பேர்ப்பட்ட ஏரிகளையெல்லாம் தூர் எடுக்க வேண்டும். மதுராந்தகம் ஏரியில் அரை அடி தூர் வாரினார்கள். மூன்று மாதங்களுக்கு வேண்டிய தண்ணீர் தேங் கியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, ஒவ்வொரு ஏரியையும் தூர் வாரினால் வெள்ளப் பெருக்கு வராது.

சென்னையைச் சுற்றியிருந்த ஏரிகளில் கிட்டத்தட்ட 32 ஏரிகள் ஒழிக்கப் பட்ட காரணத்தாலும், ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டதாலும்தான் தண்ணீர் தங்குவதற்கு இடம் இல்லாமல், அடையாறு, கூவம் இந்த இரண்டு ஆறுகளில் தான் கலக்க வேண்டும் என்பதால் இன்றைக்கு சென்னைக்கு அபாயகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 30 மைல் சுற்றளவுள்ள பகுதிகளில் 32 ஏரிகள் பாழ் அடைந்துவிட்டன. ஆகவே, தமிழகம் பூராவும் உள்ள நீர் நிலையங்களை ஆக்கிரமித்துக்கொள்ளக் கூடாது என்று இந்த சர்க்கார் ஓர் உத்தரவு போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



கிராமங்களில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். கதர் வாரியத்தின் சார்பிலே பனை ஓலை பின்னுதல், அதன் மூலம் பல பொருள்களை உற்பத்தி செய்தல், நூல் நூற்பது போன்ற பல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. எங்கள் ஊரிலே நான்கு பனந் தோப்பு முன்பு இருந்தது. இப்போது நான்கு பனை மரம்கூட இல்லை. கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலிக்கு வருகிறபோது வழி நெடுக நிறைய பனை மரங்களை முன்பு பார்க்கலாம். ஆனால், இப்போது அப்படியில்லை. ஆகவே, நிறைய பனை மரங்களை வளர்க்கலாம். பனை ஓலைகளிலிருந்து பொருள்கள் பல உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்தால், அதன் மூலம் வேலை வாய்ப்பைக் கொடுக்கலாம். பனையிலிருந்து வெல்லம் எடுக்கலாம், சர்க்கரை எடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இது உண்மையும்கூட. ஆகவே, நிறைய பனை மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமங்களுக்கு அம்பர் சர்க்காவைக் கொடுக்க வேண்டும். கிராமங்களுக்கு அம்பர் சர்க்காவைக் கொடுக்க வேண்டுமென்பதைக் காங்கிரஸ்காரர்கள் ஒரு காலத்திலே ஏற்றுக்கொண்டார்கள். சாராயம் காய்ச்சிவிட்டு சிறைக்குள்ளே போகிறவர்களைக் கேட்டால், "எங்களுக்கு வேலை வாய்ப்பில்லை. ஆகவே, சாராயம் காய்ச்சுகிறோம்" என்று சொல்கிறார்கள். ஆகவே, சிறையிலேயே அம்பர் சர்க்காவை வைத்து, அப்படிப்பட்டவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களை வெளியே அனுப்பும்போது, சர்க்காரே ஒரு அம்பர் சர்க்காவையும் அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தால், அதன் மூலம் அவர்கள் ஒரு நாளைக்கு நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் சம்பாதிக்க முடியும். அதனால் அவர்களுடைய பெண்டு பிள்ளைகள்கூட நல்ல முறையிலே வாழ முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

கைத்தறித் துறையிலேகூட பாலிஸ்டர் நூலை நெய்கிற புதிய திட்டம் வந்திருக்கிறது. பாலிஸ்டர் வந்தால், இழை அறுந்துவிடாது. நூலைப் போட்டு நெய்தால் நூல் அறுந்துவிடும். ஆனால், பாலிஸ்டர் நிறைய உற்பத்தியாகவில்லை. மத்திய சர்க்கார் அதற்காக நிறைய செலவு செய்கிறார்கள். பாலிஸ்டர் ரகத்தை நெய்தால் 50 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று மத்திய சர்க்கார் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, கைத்தறிக்குத் தேவையான பாலிஸ்டர் முழுவதையும் மத்திய சர்க்கார் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்று நம்முடைய சர்க்கார் அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். மில்லிலே பாலிஸ்டர் நெய்யப்படுகிறது, கைத்தறித் துறையிலும் பாலிஸ்டர் நெய்யப்படுகிறது. மில்லில் நெய்யப்படுகிற பாலிஸ்டர்

[திரு. சி. இராமலிங்கம்]

என்று அழைக்க வேண்டும். பெருநகர் பிரிவிலே அரை டிக்கெட் என்
இடையாது. வெளியூர்களில் பேருந்துகளில் அப்படி இருக்கிறது. அ
இந்தப் பெருநகர் பிரிவிலேயும் அரை டிக்கெட் என்று வர வேண்டும்.
டிக்கெட் என்று வருவதனால், பள்ளிகளுக்குப் போகும் பிள்ளைகளுக்
ஏழை நெசவாளிகளின் பிள்ளைகளுக்கும், எங்காவது வேலைக்குப் போ
பிள்ளைகளுக்கும், கூலி வேலைக்கு, குமாஸ்தா வேலைக்கு அல்லது
பெஞ்சு துடைக்கின்ற வேலைக்கு என்று போகின்றவர்களுக்கும்
இருக்கும். அவர்களுக்கு முழு டிக்கட் என்று இல்லாமல், அரை
என்றால், அது மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்பதைச்
கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்களுக்கு வீட்டுவசதி ஏற்பாடுகள் செய்துதர வே
மென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கூட்டுறவுத் துறைகள்
வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. நெசவாளர்கள் குடும்பங்கள்
செய்கிறபோது, அவர்களுக்கு மாதச் சம்பளம் என்று இடைக்கவில்லை
சொல்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டும். வீட்டு
செய்துகொடுப்பதற்கு, நெசவாளர் என்ற உடனே அவர்களைப் பதிவு
கொண்டு, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் வசதியை ஏற்ப
கொடுக்க வேண்டும். மூன்று வருடம், ஆறு வருடம் என்று
கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் செய்து கொடுக்க வேண்டும்.
மெத்தனம் காட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. யார் மனுப்
டாலும், அவர்களுக்கு 15 நாட்களுக்குள்ளாக அனுமதிக்கப்பட்
தெரிவிக்க வேண்டும். பின்னர் 15 நாட்கள் கழித்து பதில் வர
இப்படி படிப்படியாக அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு வேண்டிய
களைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த
அரசு செய்த தவறுகளை இனியும் நாம் செய்யவிடக் கூடாது என்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று முதியோர்க்கு உதவி செய்கின்ற திட்டத்தை எங்களுடைய
திலே மட்டுமல்ல, இன்று நான் காலையிலே காஞ்சிபுரம் போயிரு
அங்கேயும் பெரியார் விழாவிலே என்னைப் பார்த்தவர்கள் எல்லாம்
பேசினார்கள். முதியோர் உதவித் தொகை ரூபாய் 20 என்று
ரூபாய் 25 என்று உயர்த்தியிருப்பதையும், விழாக்காலங்களில்
வேட்டி, சேலைகள் வழங்குவது பற்றிச் சொல்லியிருப்பதையும்
கிறேன். அது ஒரு வரவேற்க வேண்டிய திட்டம்,



(திரு. சி. இராமலிங்கம்)

தேங்காய் மீது வரி போட்டிருப்பதுபற்றி இங்கு பேசினார்கள். அதைப்
பற்றியும் நான் சொல்கிறேன். வரி போடக்கூடாது என்று சென்ற தூதுக்
குழுவிலே நான்கூட போகயிருந்தவன். திரு. ப. உ. சண்முகம் அவர்களிடம்
அந்த மகஜரைக்கூட கொடுத்தார்கள். கடந்த கால ஆட்சியிலே, புரட்சித்
தலைவர் அவர்களின் பிரதிநிதியாக இருந்தபோது, வரி போடக்கூடாது
என்று சென்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுங்கட்சியிலே இருந்து போனீர்களா
அல்லது எதிர்க் கட்சியில் இருந்து போனீர்களா ?

**திரு. சி. இராமலிங்கம் :** ஏன் சென்றேன் என்றால், வியாபாரிகள், அழுகும்
பொருள், அந்தப் பொருள், இந்தப் பொருள் என்றெல்லாம் வரி போடக்
கூடாது என்று சொன்னார்கள். வரி போடாமலிருந்தால், தேங்காய் விலை
குறையும் என்று சொன்னார்கள். அப்போது தேங்காய் முக்கால் ரூபாய்க்கு
விற்றார்கள். வரி குறைந்த அடுத்த நாளே ஒரு ரூபாய்க்கு விற்றார்கள்.
இன்றைக்கு தேங்காய் வியாபாரம் பெரிய வியாபாரமாக இருக்கிறது.
அன்றைக்குக்கூட சொன்னார்கள். கொப்பரைக்கு இரண்டு பைசா வரி
என்று இருந்தது. அதற்காக கொப்பரை எல்லாம் தேங்காய் என்று சொன்
னார்கள். கொப்பரை எல்லாம் தேங்காய் என்று சொல்லி வரியில்லாமல்
செய்துவிடுகிறார்கள். கடவுள் பக்தர்களுக்கு நாங்கள் காணிக்கையாகத்
தேங்காய் விற்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, வியாபாரிகள் கொள்ளை
லாபம் அடிக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொண்டு, அதற்கு வரி போட
வேண்டியதுதான் என்று கூறிக்கொள்கிறேன்.

இங்கே நமது அருமை நண்பர் திரு. எல்லமந்தா அவர்கள் நேற்று பேசி
னார்கள். அவருடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஹரிஜன பெண்ணை
* * * என்று சொன்னார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவர்கள் மருமகளாக ஏற்றுக்கொண்
டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஹரிஜனப் பெண்ணை மருமகளாக
ஏற்றுக்கொண்டார்கள் என்றுதான் பேசினார்கள்.

**திரு. சி. இராமலிங்கம் :** அவர் பேசியதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இல்லை, இல்லை. அவர் அப்படிப்
பேசவில்லை.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

துணி மீட்டர் 28 ரூபாய் என்றால், கைத்தறியில் நெய்யப்படுகிற பாலிஸ் துணி 26 ரூபாய் ஆகிறது. இரண்டு ரூபாய் வித்தியாசம். ஆனால், மில் நெய்யப்படும் துணிகளில் 'ஷைனிங்' இருக்கிறது என்று சொல்லுகிறார்க அதே நேரத்தில் 26 ரூபாய் என்று சொல்லும்போது, கூலிகூட குறைவ இருக்கிறது. ஆனால், மில்லில் பாலிஸ்டர் நூல் உற்பத்தி செய்கிறார்க அதை எப்படியாவது விற்க வேண்டும் என்று சொல்லி விற்கிறார்கள். அதற் சலுகை அளிக்கிறார்கள். நமது மாண்புமிகு தலைவர் அவர்களுக்குக் தெரியும். ஒரு முறை கைத்தறி நெசவாளர்களின் மாநாடு அரண்மனை காரன் தெருவில் கூட்டியபோது, கைத்தறி நெசவாளர்களுக்குள்ள கஷ்ட தைப்பற்றிப் பேசினார்கள். நூல் கிடைக்கவில்லை என்பதையும் சொ னார்கள். இன்றைக்கு 13 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. அதனா உற்பத்தி செய்யப்படும் நூல் கைத்தறித் துறைக்குப் போதாது. ஆகவே தனியார் மில்களிலிருந்து வாங்குகிறோம். தனியார் மில்களில் நூல்களை சிட்டங்களாகச் செய்வதில்லை. cone ஆகத்தான் உற்பத்தி செய்கிறார்கள் உற்பத்தியில் 100-க்கு 40 சதவீதம் cone என்றும் 60 சதவீதம் சிட்டங்கள் என்றும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. ஆனால், இப்போது 20 சதவீதம் சிட்டங்களாகவும், 80 சதவீதம் cone களாகவும் உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே, நூல் இன்றைக்கு நெசவாளர்களுக்குக் கிடைப்பதில்லை. நூல் வழங்கும் அதிகாரம் மத்திய சர்க்காரின் பிடியில் இருக்கிறது. கைத்தறித் துறைக்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக மத்திய சர்க்காரிடத்திலேதான் இருக்கிறது அந்த அதிகாரம். அதனால்தான் நான் சென்ற கூட்டத் தொடரிலேயே, ஜவுளி ஆம் டெக்ஸ்டைல் கமிஷனருடைய கிளை அலுவலகம் ஒன்று சென்னையிலே இருக்க வேண்டுமென்று சொன்னேன். ஏனென்றால், அப்படிப்பட்ட ஒரு அலுவலகம் இங்கேயிருந்தால் நம்முடைய பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னால், மத்திய சர்க்காரிலே அன்றைக்கு இருந்த, மறைந்த திரு. டி. டி. கே. அவர்கள் மில் துணிகளுக்கு செஸ் போட்டிருந்தார். அந்த செஸ் வரியைக் கொண்டு கைத்தறி நெசவாளர் களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக அந்த வரி போடப் பட்டிருந்தது. கைத்தறி நெசவாளர்களுக்கு ஊக்க போனஸ் போல கொடுக்கவும், வீடு கட்டிக் கொடுக்கவும், நூல் விலையைக் குறைத்துக் கொடுக்கவும் பயன்படுத்தப்படும் என்று அந்த செஸ் வரி போடப்பட்

(பிற்பகல் 6-00)

அன்றைக்கு ஒரு கெஜத்திற்கு ஓரணா செஸ் போட்டார்கள். இன்று முக்கால் ரூபாய் போடுவதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா



தெரியவில்லை. இந்த நிதி முழுவதையும் இன்றைக்கு மத்திய சர்க்கார்தான் எடுத்துக்கொள்கிறார்கள். மாநில சர்க்காருக்கு, கைத்தறிக்குக் கொடுப்பதில்லை. ஆகவே அதைப் பெற்றுத்தர வேண்டும் என்று பணி வோடு கேட்டுக்கொள்கிறேன். அரசு அதற்கு ஆவன செய்யும் என்று நம்பு கிறேன். பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் காலத்திலே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆங்காங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவர் காலத்தில்தான் கட்டிக்கொடுக்கப்பட்டன. நெசவாளர்கள் காலனிகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. சைதாப்பேட்டையில், திருப்பூர் குமரன் காலனி என்று கட்டிக்கொடுக்கப்பட்டது. அதுபோலவே சேலத்திலும், திருச்சி யிலும்கூட கட்டிக்கொடுக்கப்பட்டது. அன்றைக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட காலனிகள் இன்று வரையில் அந்த நெசவாளர்களுக்கு உரிமையாக்கப்பட வில்லை. அவர்களிடத்திலே வாங்குகின்ற வாடகையை வட்டிக்கே கழித்து விடுகிறார்கள். 15 ஆண்டுகளாக அவர்கள் வாடகையாகக் கொடுக்கிறார்களோ வட்டியாகக் கொடுக்கிறார்களோ, அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இந்த மன்றத்திலே மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, அவர்களிடமிருந்து வட்டியோ, வாடகையோ வாங்காமல், அந்த வீடுகளை அவர்களுக்கே உடமையாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பற்றி நல்ல ஏற்பாடுகள் எல்லாம் இந்த பட்ஜெட்டிலே இருக்கின்றன. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு பொதுமக்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். நான் எதிர்க் கட்சிக்காரரைப் போலப் பேசுகிறேன் என்று நினைக்கிறேன். நான் எதிர்க் கட்சியிலே இருந்தாலும், எதிர்க் கட்சிக்காரர்களைப் போன்று பேச வேறாக நினைக்காதீர்கள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்ல வேண்டும்.

திரு. சி. இராமலிங்கம் : ஆளுங்கட்சி சார்பிலே சில ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். நகரங்களில் பஸ்களில் கூட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைச் சரி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். நகரங்களில் பஸ்களில் கூட்டம் இருக்கிறது என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். பஸ்களில் மூன்று வயதிலிருந்து 10 வயதிற்குள் இருப்பவர்களுக்கு அரை டிக்கட் என்ற திட்டத்தை மாற்றி ஐந்து வயதி லிருந்து 15 வயதிற்குள் உள்ளவர்களுக்கு, இளைஞர்களுக்கு அரை டிக்கெட்

**திரு. சி. இராமலிங்கம்** : பருபகளாக ஏற்றுக்கொண்டார்கள் என்றெல்லாம் பேசினார்கள். நான் அதை வரவேற்கிறேன். எங்களுடைய திட்டம்தான் அது. நாங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தபோது, கலைஞர் அவர்களும் நானும் இணைந்தவர்களாக இருந்தபோது எடுத்துக்கொண்ட ஒரு கொள்கை தான் அது. 1946-லே . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அங்கத்தினர் அவர்கள் மாற்றிக்கொண்டார்கள். இருந்தாலும்கூட அந்த வார்த்தைகளை நீக்க வேண்டும். அந்த வார்த்தைகளை எடுத்துவிடலாம். அவைகளைப்பற்றிப் பத்திரிகைகளிலே பிரசுரிக்க வேண்டாம். அங்கத்தினர் அவர்கள் சொன்னதை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம்** : நான் கலைஞர் அவர்களைப்பற்றிச் சொன்னதை * * * என்று சொன்னதை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். அவருடைய மகனுக்கு ஹரிஜனப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார்கள் என்பதை வரவேற்கிறேன். 1946-லே குறிஞ்சிப்பாடியிலே ஒரு ஆதிதிராவிடர் கல்யாணத்திற்கு நானும் திரு. கே. எ. கிருஷ்ணசாமி அவர்களின் அண்ணனாகிய திரு. கே. எ. மதியழகன் அவர்களும் போயிருந்தோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : ரொம்ப நேரம் அவகாசம் எடுத்துக் கொண்டால், பேச கஷ்டமாக இருக்கிறது.

(திரு. சி. இராமலிங்கம் அவர்கள் தண்ணீர் குடித்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அங்கத்தினர் அவர்கள் தண்ணீர் குடிப்பதைப் பார்த்தால், இன்னும் ரொம்ப நேரமாகும்போல் இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சி. இராமலிங்கம்** : இல்லை, இல்லை. சீக்கிரமாகவே முடித்துக் கொள்கிறேன். 1946-லே அந்த ஆதி திராவிடர் கல்யாணத்திற்குப் போய் கல்யாணத்துக்குப் பிறகு சாப்பிட்டோம். திரு. மதியழகன் அவர்கள் வெளியூர் சென்றுவிட்டார். அண்ணாமலை யுனிவர்சிடி கல்லூரிக்குப் போய் விட்டார். நான் என் ஊருக்குச் சென்றேன். நான் வீட்டிற்குப் போன உடனே, வீட்டு வாசற்படியிலேயே என்னை நிற்கவைத்து, 'உன்னை

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



கட்டுப்பாடு செய்திருக்கிறோம், இந்த வீட்டுக்குள்ளே வராதே' என்று சொல்லிவிட்டார்கள். நான் எனக்குச் சொந்தமான சொத்து, சுதந்திரம் அத்தனையையும் விட்டுவிட்டு குறிஞ்சிப்பாடியிலேயிருந்து அனகாபுத்தூர் சென்று அங்கு குடியேறினேன். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், நாங்கள் எல்லாம்கூட அந்த உணர்வோடுதான் இருக்கிறோம் என்பதற்காகச் சொல்கிறேன்.

புரட்சித் தலைவர் என்னென்ன புரட்சிகள் செய்தார்கள் என்று திரு. எல்லமந்தா அவர்கள் நேற்று கேட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் வீட்டிலே இரண்டு சமையல்காரர்கள் இருக்கிறார்கள். அதில் உதவி சமையல்காரர் இன்றைக்கு ஆதி திராவிடர்தான். அவர்தான் நாங்கள் எல்லாம் போனாலும் வந்தாலும் எங்களுக்கெல்லாம் பரிமாறுவது. ஜாதியைவைத்து மட்டும் நாம் ஒருவரைத் தலைவராக ஏற்றுக்கொள்வது தகாது என்று சொல்கிறேன். அதே நேரத்தில் 'என்ன புரட்சித் தலைவர்' என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த பிறகு, 1952-லே புரட்சித் தலைவர் அவர்கள் இந்த இயக்கத்திலே வந்து இணைந்தார்கள். அன்றைக்கு அவருடைய எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்கு டிரேட் மார்க், 'எம்ப்ளம்' ஆக திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை அதில் பொறித்துக்கொண்டு, இந்த உலகத்திற்கெல்லாம் எடுத்துக்காட்டினார் மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர். அதனாலே தான் அவர் புரட்சித் தலைவர். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம். அதே நேரத்திலே, கலைஞர் அவர்கள்கூட சொல்லியிருக் சொல்லியிருக்கிறார்கள். அவரைப் புரட்சி நடிகர் என்று சொல்லியிருக் கிறார்கள். ஏன் சொன்னார்கள்? ஒரு புரட்சி செய்திருக்கிறார். அன்றைக்கு சென்னை மாநகராட்சியிலே திரு. அ. பொ. அரசு அவர்களை மேயராக ஆக்கியிருக்கிறார்கள். கலைஞரும், புரட்சித் தலைவரும் அப்படி ஆக்கியிருக் கிறார்கள். கலைஞருடைய மூளை, புரட்சித் தலைவருடைய பணம், அன்றைக்கு முதன் முதலாக திராவிட முன்னேற்றக் கழக மேயரைக் கொண்டு வந்தன. அவர் புரட்சித் தலைவர் என்பது திரு. எல்லமந்தாவுக்குத் தெரியாமல் இருக்கலாம். நாங்கள் எல்லாம் ஒத்துக்கொள்கிறோம், ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் உங்களை ஒத்துக்கொள்ளச் சொல்லவில்லை. அது மட்டுமல்ல பிரச்சினை. இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஹரிஜனங் களுக்கு விரோதமாக இருக்கிறார், அப்படி, இப்படி என்று சொன்னால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இந்த நாடும் ஏற்றுக்கொள்ளாது. புரட்சித் தலைவர் என்பது சாதாரணம் அல்ல. அவர் நல்ல உள்ளம் படைத்தவர், பொன்மனச் செம்மல். உங்கள் கலைஞர் அவர்களே ஏற்றுக் கொண்டவர். சினிமாவிலே புரட்சி நடிகர், அரசியலில் வந்த பிறகு

[திரு. சி. இராமலிங்கம்] [1979 மார்

புரட்சித் தலைவர். இதற்குப் பிறகும் பேசமாட்டார்கள் என்பதை
சொல்லிக் கொள்கிறேன். இந்த வாய்ப்பைக் கொடுத்த
அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. எல்லமந்தா : அவர் நாட்டிற்குக் கொண்டு வந்த புரட்சி என்ன
என்றுதான் கேட்கிறேன். புரட்சித் தலைவர் என்று கூப்பிடாமல் இருக்க
வேண்டும் என்ற எண்ணம் இல்லை.

What revolutionary changes has he brought into society? That is
what I wanted to know. The mere taking of two persons for work-
ing as cook is not the criterion for the abolition of caste system.
Creating blood-relationship is the most important thing.

(பிற்பகல் 6-10)

* திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தலைவரவர்களே, 1979
ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுவதிலே நான் பெரு
மிதம் கொள்கிறேன். வரிப் பளு இல்லாமல், மக்கள், குறிப்பாக ஏழை எளிய
வர்கள், பிற்பட்டோர், ஹரிஜனங்கள் இன்னும் கிராம மக்கள் மேம்
பாடடைய சிறந்த முறையிலே வழி வகைகளைச் செய்கிறது இந்த பட்ஜெட்
என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதனால் இதை வரவேற்று
ரொம்ப மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் நல்ல
அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. பல அம்சங்கள் அதில் இருந்தாலும்,
ஒன்றிரண்டை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லி, எனது உரையை
கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லப்போனால், கிராம மக்களுக்கு வேலை
உறுதி என்ற திட்டம் மிகவும் போற்றத் தக்க திட்டமாகும். அ
எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள் பேசியபோதுகூட, திட்டம்
திட்டம்தான், ஆனால் அதைச் செயல் முறைக்குக் கொண்டுவர
அதற்குப் பணம் போதாது, மக்கள் அதிகமாக இருக்கிறார்கள்
முறைக்கு அது ஒவ்வாது என்று பேசினார்கள். அதற்கு நல்ல மு
மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பதிலளித்தார்கள்.
பதிலை நான் மகிழ்ச்சியோடு ஏற்று, ஆதரிக்கிறேன். அந்தத் திட்
சிறந்த திட்டம். அதனால் அதற்கு வெற்றி கிடைக்குமென்று
கிறேன்.



1979 மார்ச் 10] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

இந்தத் திட்டத்தை அமுல்படுத்துகின்ற அரசுக்குத் தலைமையாக இருக்
கிறவர் நினைத்ததை முடிக்கிற பண்புடையவர், திறமையுடையவர்.
அவருடைய ராசி அப்படி இருக்கிறது. அதனால் அந்தத் திட்டம் சிறப்
படையுமென்று உறுதியாக நம்புகிறேன்.

அடுத்தபடியாக, குடி நீர்த் திட்டம் பற்றியும் நிதிநிலை அறிக்கையில்
சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மிகச் சிறந்த முறையிலே செயல்
படுகிறது. அது எனக்கு நேரடியாகவே தெரியும். Madras Metropolitan
Water Supply and Sewage Board வெகு சிறந்த முறையில் செயல்
படுகிறது என்பது எனக்கு நேரடியாகத் தெரியுமாதலால், அது பற்றி
ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னையில், ஜியார்ஜ்
டவுன் பகுதியில் உள்ள மக்களுக்கு ஒருசில மாதங்களுக்கு முன்னால் வடிகால்
வாரியம் சரியாக இயங்கவில்லை என்ற குறை இருந்தது. தெருவெல்லாம்
தண்ணீர் போகிறதென்ற நிலை ஏற்பட்டு, அவர்கள் ஹர்த்தால் செய்கின்ற
நிலைக்கு வந்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் நான் அதைக் கேள்விப்
பட்டு, முதல்வர் அவர்களிடமும், வடிகால் வாரிய அமைச்சர் அவர்களிடமும்
தொடர்பு கொண்டு, ஆவன செய்யக் கேட்டேன். அதற்கு உடனே
நடவடிக்கை எடுத்தார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பகுதிக்கு
வந்தார்கள். வந்தது மட்டுமல்ல. அந்தத் தண்ணீர் அசுத்தமானதாக இருந்
தாலும், தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு, அந்தத் தண்ணீரிலே நடந்து,
தெருத் தெருவாக வந்தார்கள். மக்கள் அவர்களை வரவேற்றார்கள்.
இரண்டு மூன்று முறை அமைச்சரவர்கள் வந்தபோது, கார்ப்பரேஷனைச்
சேர்ந்த, வடிகால் வாரியத்தைச் சேர்ந்த அத்தனை பெரிய அதிகாரிகள்,
நிர்வாக இயக்குநர், சேர்மென் எல்லோரும் கூட வந்தார்கள். எல்லோரும்
வந்து, பார்த்து, தக்க நடவடிக்கைகள் எடுத்து அந்தப் பகுதியைச் சிறந்த
முறையில் இப்போது வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றிச் சந்தோஷப்
படுகிறேன். ஜார்ஜ் டவுன் சிட்டிசன் கமிட்டித் தலைவர்கள் மகிழ்ச்சியோடு,
நல்ல முறையில் அந்த வாரியம் செயல்படுவதாகச் சொல்கிறார்கள். தொடர்ந்து
தொடர்ந்து அப்படி நடக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லாச்
அந்த வாரியம் சிறப்பாகக் காரியங்களைச் செய்ய வேண்டும், கேட்டுக்
பகுதிகளுக்கும் அப்படிப் பணியாற்ற வேண்டுமென்று
கொள்கிறேன்.

குடிநீர் பற்றியும் நல்ல பல திட்டங்களை வைத்திருக்கிறார்கள்.
சமீபத்தில்கூட பெசன்ட் நகரில் புதிதாகத் தொட்டி கட்டி, அந்தப் பகுதி
மக்களுக்குத் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேலும

சமீபத்தில் 10 நாட்களுக்கு முன்னால் திருவான்மியூரில் ஒரு ... கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து தண்ணீரை எடுத்து, ... மக்களுக்கு சப்ளை செய்ய இருக்கிறார்கள். அதே போன்று எம். ஜி. ஆர். நகர், கோடம்பாக்கம் பகுதிகளிலும் கிணறுகளைக் ... பிடித்திருக்கிறார்கள். அங்கிருந்தும் சீக்கிரமாகக் குடிநீர் கொடுத்து எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்க ஏற்பாடு செய்து, நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். இந்த இரண்டு திட்டங்களைப் பற்றியும் ... குறிப்பிட்டுச் சொல்லக் காரணம், எனக்கு அவைகளைப் பற்றி நேரடியாகத் தெரியும்.

அடுத்து, கோர்ட் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நீதிபதி திரு. வரதராசன் அவர்கள் தலைமையிலான கமிட்டியின் பரிந்துரையை ஏற்று 11 கோர்ட்டுகளை ஏற்படுத்த இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு அதிலே தனிப்பட்ட மகிழ்ச்சி உண்டு. காரணம் நான் தர்மபுரி மாவட்டத்திலே குற்றவியல் தலைமை நீதிபதியாக இருந்தபோதும், செங்கற்பட்டு மாவட்டத்தில் குற்றவியல் தலைமை நீதிபதியாக இருந்தபோதும், திரு. வரதராசன் கமிட்டிக்கும், உயர்நீதி மன்றத்திற்கும் என்னென்ன இடத்தில் எந்த மாதிரிக் கோர்ட்டுகள் இருக்க வேண்டுமென்று நேரடியாக அல்லது எழுத்து மூலமாக வற்புறுத்திச் சொன்னேனோ, அந்த மாதிரி கோர்ட்டுகள் இப்போது இந்த 11-ல் அடங்கியிருக்கின்றன. எனக்கு மகிழ்ச்சியும் பாராட்டும் நிறைந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தர்மபுரியில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்; பாலக்கோட்டில் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்; செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூரில் சப்-கோர்ட்; பொன்னேரியில் சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்; செங்கற்பட்டில் முதல் வகுப்பு கோர்ட்; திருக்கழுக்குன்றத்திலும், அரக்கோணத்திலும் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் ஏற்படப் போகின்றன. ... மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு இதனால் தனிப்பட்ட ... கிடைக்கிறது. இப்படி கோர்ட்டுகள் மட்டும் ஏற்பட்டால் போதாது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். சப்-கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில், அவைகள் எல்லாம் மாவட்டத் தலைநகரங்களில் கிடக்கின்றன. அவைகளைக் கூடியவரையில் டிசென்ட்ரலைஸ் செய்து, மக்களுக்கு உதவக்கூடிய வகையிலே, அவைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோர்ட்டுகள் ஏற்படுத்தினால் மட்டும் போதாது. அதற்கான நல்ல கட்டிடங்கள் அமைக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த...





கூடப் பேசினார்கள். ஹைக்கோர்ட் அழகு கெடுகிறது, சிட்டி சிவில் கோர்ட் அழகு கெடுகிறது என்று சொன்னார்கள். ஆனால் சில இடங்களிலே நீதிபதிகள் உட்காரக்கூட சரியான இடமிராது. சில கோர்ட்டுகளிலே சிறுநீர் கழிக்கக்கூட இடமில்லை. எனக்கு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு சமயம் ஒரு நீதிபதி யூரினல்ஸ் வேண்டுமென்று எழுதிக் கேட்டிருந்தார். நிதிநிலை சரியில்லை, இப்போது யூரினல்ஸ் கட்ட வாய்ப்பில்லை, பின்னால் கேளுங்கள் என்று பதில் சொன்னார்கள். அதைப்பற்றிப் பேசும்போது அவர் தமாஷாகச் சொல்லுவார், "I cannot stop urination till the financial position of the Government improves", என்று. எனவே நிதிநிலையைக் காட்டி, இதுமாதிரிக் கட்டிடங்கள் கட்டுவதைத் தள்ளிப் போடுவது சிறந்ததாகாது. கட்டிடங்கள் கட்டுவதைத் தள்ளிப் போடுவது சிறந்ததாகாது. கட்டிடங்கள், கோர்ட்டுகளின் கண்ணியத்திற்கும், கவுரவத்திற்கும் ஏற்ற முறையில் இருக்க வேண்டும். அதனால் அவற்றின் கட்டிடங்கள் நல்ல முறையில் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சில இடங்களில், சென்னையிலேகூட எழும்பூரில் வராண்டாவில் கோர்ட்டுகள் இருக்கின்றன. அவற்றை வராண்டா கோர்ட் என்று தமாஷாகச் சொல்லுவார்கள். கோர்ட்டுகளின் கண்ணியத்தையும், மரியாதையையும் காப்பாற்றும் முறையில் கட்டிடங்கள் இருக்க வேண்டும். அந்த வகையிலே அரசு கவனம் செலுத்தி, புதிய கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிபதிகளின் வருவாய் மிகவும் குறைவாக இருக்கிறது. உங்களுக்கெல்லாம் தெரியும், மற்ற அதிகாரிகளைப் போல் அவர்கள் யாரோடும் அதிகமாகப் பழக முடியாது. மற்ற அதிகாரிகளுக்கு இருக்கும் சாதாரணச் சலுகைகளைக் கூடப் பெற முடியாது. நீங்களெல்லாம் பார்த்திருக்கக்கூடும், மாவட்ட நீதிபதிகள் வேண்டுமானால் கார் வைத்திருக்கலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாற்றுத் தலைவரவர்களே, மற்ற அதிகாரிகளுக்குச் சலுகைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தச் சலுகைகள் என்ன என்று அறியலாமா?

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** போலீஸ் அதிகாரிகள், மாவட்டக் கலெக்டர் முதலியவர்களுக்கு அரசாங்கக் கார் இருக்கிறது. அந்த வசதி நீதிபதிகளுக்குக் கிடையாது. மாவட்ட நீதிபதிகள் கார் வைத்திருப்பார்கள். மற்ற நீதிபதிகள் நடந்து போவார்கள் அல்லது சைக்கிளில் போவார்கள்.

(திரு. எ. எஸ். வெங்கடேசன்) [1979 மார்ச் 10

பென்ஷன்தாரர்களுக்கு ஒரு உதவி செய்தது போல் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே அது ஒரு புது உதவி அல்ல. ஒரு அநீதியைப் போக்கியிருக்கிறார்கள். மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையைப் பொறுத்தவரை, அரசாங்கத்தில் இப்பொழுது வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு 1—4—1978 முதல் அமுல்படுத்தப்படும் என்று என்று சொல்லிவிட்டு ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டும் 1—10—1978 என்று தேதியிட்டு அமுல்படுத்தியிருந்தார்கள். ஓய்வூதியம் பெற்று வருபவர்கள் சார்பில் முன்பே அநீதியைக் குறிப்பிட்டு இந்த அவையில் பேசியிருக்கிறேன். அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து 1—10—1978 என்பதை 1—4—1978 என்று அரசாங்கம் தேதியை மாற்றியமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. பல கோரிக்கைகள் இருக்கின்றன. மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைத்தும் அவைகள் இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. நான் கமிஷனின் சில பரிந்துரைகளை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

Regarding the recommendations of the Pay Commission, in the matter of restoration of commuted pension after the expiry of the period of commutation, the Pay Commission recommended the restoration of one-third of the pension commuted.

As regards monthly medical allowance, it was recommended that the present procedure may be simplified to get re-imbursement without much difficulty.

Regarding grant of Family Pension irrespective of the date of retirement, the Pay Commission recommended the coverage of widows and eligible dependants of pensioners who retired before 1st April 1974. It recommended that the son and daughter may be made eligible to get Family Pension, that the son may get it till the age of 21 and that marriage need not disqualify the daughter from the benefit.

The Commission has recommended that the amount of pension may be sent to all pensioners, irrespective of the pension rate, the teachers throughout the State by Money Order.

இதுபோன்ற பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து அவைகளையாவது [illegible] நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். [illegible] இருக்கின்றவர்களுக்கு மட்டும் பரிந்துரைக்கு மேலேயே அதிகச் [illegible] கொடுத்து அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. பென்ஷன்தாரர்களைப் [illegible] பொறுத்தவரை, 1—10—1978 முதல் அமுல்படுத்தப்படும் என்று



1979 மார்ச் 10] (திரு. எ. எஸ். வெங்கடேசன்)

தேதியை ஓய்வு பெற்றவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 1—4—1978 என்று தேதியை மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி கூறி பென்ஷன்தாரர்களுக்கு நான் கேட்ட எல்லாச் சலுகைகளையும் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு பேசுவதற்கு எனக்கு நேரம் கொடுத்ததற்காக மாற்றுத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

*திருமதி சி. தமிழரசி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட இருப்பதாக அமைச்சர்களாலும், ஆளுங்கட்சியினராலும் முன்னதாகவே முழங்கப்பட்டது. ஆனால் நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது வரலாறு, விலா நோகச் சிரிக்கும்படியாக இருக்கிறது.

வரும் ஆண்டில் தமிழகத்தில் வளர்ச்சித் திட்டங்களுக்கு விடை கொடுக்கப்பட்டிருக்கிறது. வறுமையைப் போராடி வெல்வதைவிட அதனுடன் சமரசம் பேசி, சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதை இந்த நிதிநிலை அறிக்கையில் காண்கிறோம். மக்களை வாழ வைப்பதற்குப் பதிலாக அவர்களைச் சாகாமல் பார்த்துக் கொள்வதையே ஒரு சாதனையாகப் பறை சாற்றியிருப்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் காண்கிறேன்.

வெறும் அரசாங்க ஆணைகள் மூலமாக நிறைவேற்றப்படக் கூடியவற்றையெல்லாம் சாதனைகளாக நிரப்பி, மக்களை ஏமாற்றுவதைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்மால் காண முடிகிறது.

நீர்த் துளியிலும் நெருப்புப் பொறி பறக்கக்கூடும் என்பதை உணர்த்திய பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டே நெருப்புத் திட்டங்களையும் நீர்த் துளிகளாக நினைத்து, இந்த அரசு விளையாடிக் கொண்டிருக்கிறது.

வெறும் கித்தாப்புகளும் ஆர்ப்பாட்டங்களும்தான் அரசோச்சுகின்றனவே தவிர, காலத்திற்கேற்ப வளம் சேர்க்கும் திட்டங்கள் எதையும் சேர்க்க திறமையற்றுக் கிடக்கிறது இந்த அரசு.

டாக்டர் கலைஞர் தலைமையிலான கழக அரசு தீட்டிய திட்டங்கள், சாதித்த சாதனைகள், சேமித்த வளங்கள் ஆகியவற்றின் நிழலில்தான் இவர்கள் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்களே தவிர, புதிதாக எந்த சாதனையையும் எந்தத் திட்டத்தையும் பாராட்டத் தக்க அளவுக்கு இந்த அரசு தீட்டியதாக எனக்குத் தெரியவில்லை. 1974–75 ஆம் ஆண்டின் நிலையிலிருந்து ஒரு அங்குலம் கூட இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்த இந்த ஆட்சியாளர்களால் இயலவில்லை. கழக அரசுக் காலத்தில் வேலை வாய்ப்பு பெற்றவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தால், சில ஆயிரம் பேர்கள் கூட இவர்களின் ஆட்சிக் காலத்தில் அதிகமாக வேலை வாய்ப்புப் பெற்றதாக எனக்குத் தெரியவில்லை.

“சாலை ஓரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் நெஞ்சங்களிலே விபரீத எண்ணங்கள்” என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் ‘சொர்க்க வாசல்’ திரைப்படத்தில் நெஞ்சில் நிற்கும் வசனக் கருவூலம். அப்படிச் சாலையோரத்தில் நிற்கும் வேலையற்றதுகள், அந்த வேலையற்றோருடைய நெஞ்சங்களிலே எழும் விபரீத எண்ணங்களைப் பற்றி இந்த அரசு ஒரு பொருட்டாகக் கருதுவதாக எனக்குத் தெரியவில்லை. அப்படிக் கருதியிருக்குமானால், தொழில் திட்டங்களைக் கவலையோடு கவனித்திருக்கும். சாலையோரத்திலே இருக்கும் மக்களின் நிலை இப்படி இருக்க, கிராமப்புறத்து மக்களுக்கு, அதிலும் கிராமப்புறத்தில் இருக்கிற, வயலோரத்து மக்களுக்குக் கரிசனம் காட்டுவதாக முதலைக் கண்ணீர் வடிக்கப்பட்டிருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கையில். அந்த வரிகள் :

“வேலை வாய்ப்பு எதும் கிடைக்காத, படித்த, படிக்காத, வேலை இல்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு ‘உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்’ செயலாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வேலை கோரி தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.” அப்படியானால், அந்தந்த மாவட்டங்களிலேயே வேலை வாய்ப்புக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படுமா அல்லது ஆங்காங்கே தேவையான திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்காக வேலையில்லாதவர்கள் பயன்படுத்தப்படுவார்களா என்று புரியவில்லை. நான் என்ன நினைக்கிறேன் என்றால், அரசாங்கச் செலவிலே, மக்கள் தருகிற வரிப் பணத்தில் தேனை வாங்கி, வேலையில்லாதவர்களின் நாக்கில் தடவி, காலத்தை ஓட்ட இந்த அரசு முயற்சிக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை என்று எண்ணுகிறேன். ஏனென்றால் ‘yield’ இல்லாத திட்டங்களில் எத்தனை நாளைக்கு



ாற்றப் போகிறது இந்த அரசு? ரோமானிய சீசருடைய காலத்தில் னனுடைய கொடுங்கோன்மையையும், திறமையின்மையையும், ஆடம்பரச் லவுகளையும், பித்துக்குளித்தனமான போக்குகளையும் மக்கள் தெரிந்து ள்ளாமலிருப்பதற்காக அரசாங்கச் செலவில் இலவச உணவு ழங்கப்பட்டது என்று வரலாற்றில் படித்திருக்கிறேன். அந்த இலவச ணவும், இலவசக் கேளிக்கையும் ரோமானிய சர்வாதிகாரிகளின் காலத்தை டிக் கொடுத்தது. ‘Divide and Rule’ என்பது 18–19 ஆம் ற்றாண்டில் ஏகாதிபத்தியத்தின் கோட்பாடாக இருந்ததைப்போல் Dole and circus’ என்பது ரோமானிய சீசர்களுடைய ாட்பாடாக இருந்தது. அந்த முறையை இந்த அரசு கையாண்டு விடுமோ ன்று கூட நான் எண்ணுகிறேன். அப்படியில்லையென்றால், மக்களுக்கு த்திரவாதமான வேலைவாய்ப்பைத் தருவதில் மனப்பூர்வமான எண்ணத்தை ந்த அரசு கொண்டிருக்குமானால், அவர்கள் என்ன செய்திருக்க வண்டும்? உத்தரவாதமான வேலைவாய்ப்பை நாங்கள் பெற்றுத் ருகிறோம் என்று சொல்லி, அப்படி உத்தரவாதமான வேலைவாய்ப்பைத் ரும் வரையில் மாதத்திற்கு இவ்வளவு தொகை தருகிறோம் என்று ணிச்சலாகச் சொல்லியிருக்க வேண்டும். நான் கேள்விப்பட்டேன், கரில் அப்படி ஒரு திட்டம் இருப்பதாக. அந்த அளவுக்கு யார் யார் வலை இல்லாமல் இருக்கிறார்களோ, தங்கள் பெயர்களைப் பதிவு செய்து காள்கிறார்களோ, அவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, கர்ப்புறத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அத்தனை பேருக்கும் அரசு த்தரவாதமான வேலைவாய்ப்பைத் தருகிற வரையில், மாதத்திற்கு இவ்வளவு ரூபாய் தருகிறோம் என்றாவது துணிச்சலாக அறிவித்திருக்கலாம். அதை விட்டுவிட்டு நாளொன்றுக்கு மூன்று ரூபாயும், கோதுமையும், அரிசியும் தருகிறோம் என்று சொன்னால், அது எத்தனை நாளைக்கு? அவர்கள் வேலை பெறுகிற வரையிலுமா அல்லது இந்த அரசு நினைத்துக் கொண்டிருக்கிற திட்டங்கள் நிறைவேறும் வரையிலா? இதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

இதை விரிவாகப் பேசுவதை விடுத்து, ஒன்றைத் தெளிவாகப் புலிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேலை வாய்ப்பு அளிக்கும்போது, அந்தந்த மாவட்ட எல்லைக்குள்ளே, அதாவது அந்தந்த மாவட்ட அளவிலே, என்று சொல்லப்பட்டிருக்கிறது. இராமேசுவரத்தில் இருப்பவர்களை மதுரை நகரத்திற்கு அருகில் கொண்டு வந்து மாவட்ட எல்லை என்று சொல்லி வேலை வாய்ப்புப் பெற வேண்டுமென்றால், 3 ரூபாய்க்கும், கோதுமைக்கும் அரிசிக்கும் அங்கே வரமுடியுமா? அதற்கு

[திருமதி சி. தமிழரசி] [1979 மார்ச் 10]

பொது தங்கும் வசதி இடையாது. அத்தனை பேர்களும் பிளாட்பார ... நின்று கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் மழை வந்து ... நிலைமையை விவரிக்க வேண்டாம். இதை நான் அமைச்சர் அவர்களிடத்தில் ... ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் இதை ... படுத்துவது என்னுடைய கடமை.

இந்த பஸ்ஸினுடைய மெயின்டினன்ஸ் எதனாலே இந்த அளவிலே ... இறது என்று சொன்னால், குறைந்த அளவு எனக்குத் தெரிந்தவரை ... கேள்விப்பட்டவரையில், முதல் கிரேடு, இரண்டாம் கிரேடு, மூன்றாம் ... என்று 5 மெக்கானிக்குகள் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ... இரண்டு பேர் தான் இருக்கிறார்கள். ஆக, இந்தக் குறைகளைக் களை... இவைகளையெல்லாம் நல்ல முறையிலே பராமரித்தால், எத்தனை ... பஸ்களை விட்டாலும் சரி, நம்முடைய பல்லவன் போக்குவரத்துக் ... மற்ற கழகங்கள், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இவைகள் நிச்சயமாக ... பலனைப் பெற முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள ... கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மீனளத்திலே நடைபெற்றிருக்கிற ஒரு தவறை—ஊ... ஊழல் என்று கூட சொல்லவில்லை—இங்கே குறிப்பிட ... கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய மாவட்டத்தினுடைய, மு... மாவட்டத்தினுடைய, திருவாடானை வட்டம் நம்புதாளை ... 24—11—1978-ம் தேதியில் ஏற்பட்ட பயங்கரக் கோரப் புயலில் பா... பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தவறு நடந்துள்ளது ... தகவல் வந்துள்ளது. எந்தவித சொந்தமான நாட்டுப் படகும் இல்லாத ... 20 மீனவர்களுக்கு அதிகாரத் துஷ்பிரயோகமாக நிவாரணம் வழங்கப்... பட்டுள்ளதாகத் தகவல் வந்திருக்கிறது. இதை விசாரித்து அமைச்சர் அவர்கள் ... ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு ... கூட்டத் தொடரிலே முகவை மாவட்டத்திலே தேவகோட்டை மருத்துவ... பற்றி நான் பேசினேன். பேசிய பிறகு குறைபாடுகள் கள... பட்டிருக்கின்றன. ஆனால் பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்கிற... செவிலியர்கள் போதவில்லை. இ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட்கள் இல்... டென்டல் ஸ்பெஷலிஸ்ட்கள் இல்லை. ஒரு நாளைக்கு 79 பேர் ... மருத்துவ வசதி பெறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் ... ஸ்பெஷலிஸ்ட்கள், இ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட்கள் அந்த மருத்துவ மனை... போட வேண்டும் என்று நான் பணிவன்போடு இந்த அரசைக் ... கொள்கிறேன்.

1979—80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது
பொது விவாதம். 

[1979 மார்ச் 10] [திருமதி சி. தமிழரசி]

அடுத்தபடியாக, நான் இந்த நிதி நிலை அறிக்கையிலே ரசித்தது நம் ... முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அள்ளி வீசப்பட்டிருக்கிற ... அலங்கார வார்த்தைகளை, அந்த வார்த்தைகளைப் படிக்கிறபோது அவை... களைப்பற்றி மட்டும் சில விமர்சனங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்... கிறேன். செல்லரித்துப்போன சித்தாந்தங்கள் உளுத்து மக்கிப் போன ... உதவாக்கரை திட்டங்கள் நாட்டைக் காப்பாற்றாது என்று இலக்கணப் ... பிழையோடு இருக்கிறது. அந்த இலக்கணப் பிழையைப் போலவே இதிலே ... இருக்கின்ற கருத்தும் அவலக் குரலாக இருக்கிறது. செல்லரித்துப்போன ... சித்தாந்தங்கள், உளுத்து மக்கிப்போன உதவாக்கரை திட்டங்கள் என்ற ... இந்த சொற்றொடர்களை எந்த அடிப்படையிலே பயன்படுத்தி இருப்பார்? ... நான் ... பொதுவாகத்தான் பயன்படுத்தி ... எண்ணிப் பார்த்தேன் ... காரணம் பெருந்தலைவர் காமராசர் ... இருக்கக்கூடும் என்று கருதுகிறேன். காரணம் பெருந்தலைவர் காமராச... செய்த அரும் ... செய்த சாதனைகளையோ, பேரறிஞர் அண்ணா அவர்கள் செய்த அரும் ... திட்டங்களையோ, ... பணிகளையோ, டாக்டர் கலைஞர் செய்த அரும்பெரும் ... அந்த நிதிநிலை ... அல்லது சென்ற ஆண்டு இந்த ஆட்சியாளர்களே அறிவித்த, ... செல்லரித்துப்போன ... அறிக்கையிலே வைத்த, அந்தத் திட்டங்களையோ, ... திட்டங்கள் ... சித்தாந்தங்கள் என்றோ, உளுத்து மக்கிப்போன உதவாக்கரைத் ... காரணத்தி... என்றோ சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிற ... ஆனால் அதே ... னால், நான் அவைகளைப்பற்றி விமர்சிக்க விரும்பவில்லை. ... சொல்லிக்கொள்ள ... நேரத்தில் நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குச் ... பெரியார் ... தெல்லாம் செல்லரித்துப்போன சித்தாந்தங்கள் எல்லாம், தந்தை ... புதைக்கப்பட்டுவிட்டன. ... அவர்களுடைய அரும் தொண்டினால் குழி தோண்டி ... அறிஞர் அண்ணா ... உளுத்து மக்கிப்போன உதவாக்கரைத் திட்டங்கள், ... ஆட்சி ... அவர்கள் ஆட்சி செய்த காரணத்தாலே, டாக்டர் கலைஞர் அவர்கள் ... குழி ... செய்த காரணத்தினாலே, அந்த உதவாக்கரைத் திட்டங்கள் எல்லாம் ... செல்லரித்... தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டன. எனவே, மறுபடியும் அந்த ... உதவாக்கரைத் ... துப்போன சித்தாந்தங்களையோ, உளுத்து மக்கிப்போன ... இந்த ஆட்சியாளர்கள் ... திட்டங்களையோ அரியணையில் ஏற்ற தயவுசெய்து ... விரும்பு... படுபடக்கூடாது என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள ... கிறேன்.

அடுத்தபடியாக, நான் மிகவும் ரசித்த வார்த்தைகள் "தந்த மாளிகையில் இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும்" என்பது. எனக்குத் தெரிந்தவரையில், "ivory tower" என்ற ஒரு phrase தான் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, யாரும் தந்த மாளிகையிலே வாழ்ந்ததாக நான் அறியவில்லை. கண்ணாடி மாளிகையிலே உல்லாசம் கண்ட ...

[திருமதி சி. தமிழரசி] [1979 மார்ச் 10]

ஏதாவது உத்தரவாதம் இந்த அறிக்கையிலே இருக்கிறதா என்றால், இல்லை. எனவே இப்படியெல்லாம் பகிரங்கமாக அறிவித்துவிட்டு, கேட்கும்போது இவைகள் நடக்கும் என்றால், எப்படி நடக்கும்? அதைவிட நல்லெண்ணம் மிகுந்த எல்லாத் திட்டங்களுமே நடக்கும் என்று ஒரே வரியில் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கலாம். ஒரு உத்தரவாதமான, விளக்கமான திட்டம் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நேரத்தில் ஒரேயொரு வேண்டுகோளை மட்டும் இந்தத் திட்டத்தைப்பற்றி இங்கே விடுக்க ஆசைப்படுகிறேன். தன்மான இயக்கத்தின் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை மாதந்தோறும் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த அரசு, அன்றாடம் அரசாங்க அதிகாரிகளின் தயவை எதிர்நோக்கி அடுப்பைப் பற்ற வைக்கும் பிச்சைக்காரர்களாக இந்த நாட்டு மக்களை ஆக்கிவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு கோரிக்கைகளை, வேண்டுகோள்களை விடுக்க வேண்டுமென்ற ஆசையோடு நான் வந்தேன். அமைச்சர்களில் ஒரு சில பேர்மட்டும் இருந்தாலுங்கூட, உரிய அமைச்சர்களுக்கு இந்தச் செய்திகள் அறிவிக்கப்படும் என்ற முறையில் ஒரு சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் கூட போக்குவரத்துத் துறை பற்றி சில வேண்டுகோள்களை விடுத்தார்கள். நான்கூட போக்குவரத்துத் துறை பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களை, விடுக்கிற வேண்டுகோள்களை, கோரிக்கைகளை யெல்லாம் கவனத்தோடு கேட்டு, அதற்கு ஆவன செய்யும் ஆர்வம் கொண்ட ஒரு நல்லவர் போக்குவரத்து அமைச்சராக இருக்கிற காரணத்தால், அவருடைய துறையில் ஆங்காங்கே நடைபெறுகிற தவறுகள் கெட்ட பெயரை ஏற்படுத்திவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், இந்த வேண்டுகோள்களை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் பஸ்ஸைப் பொறுத்த அளவில் நடைபெறும் ஒரு குறைபாட்டைச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக திருச்சியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு 8 மணி நேரம் என்று வைத்துக் கொண்டால், சில வேகமாக வருகிற பஸ்கள் இன்னும் சற்றுத் துரிதமாக அதாவது 7 மணி நேரத்திலும் வருகின்றன. ஆனால் பெரும்பாலான பஸ்கள் $9\frac{1}{2}$ மணி நேரம் எடுத்துக்கொள்கின்றன. அதுவுங்கூட [illegible] நம்பிக்கையில்லாமல் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது.



[1979 மார்ச் 10] [திருமதி சி. தமிழரசி]

என்னவென்றால் இந்த பஸ்களுக்கான பராமரிப்பு நேரம் மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு இடத்திலிருந்து பஸ் வந்தவுடனே அதை வேறு ஒரு ஊருக்கு உடனே திருப்பிவிடுகிற காரணத்தால், பராமரிப்பு நேரம் குறைவாக இருக்கிறது. இதன் காரணமாக அந்த பஸ்ஸில் இருக்கும் குறைபாடுகளைக் களைய, அந்த பஸ்ஸை நல்ல முறையில் திருத்தி வைத்துக் கொள்ள இயலவில்லை. தற்போது பராமரிப்பு நேரம் 2 மணி நேரம்தான் கிடைக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். இதைக் குறைந்த பட்சம் 4 மணி நேரம் என்ற அளவுக்காவது உயர்த்த வேண்டும். அப்படிச் செய்தால்தான், துரித வண்டிகளில் நம்பிக்கையோடு பயணம் செய்ய முடியும்.

(பிற்பகல் 6-40)

இரண்டாவது, மிகப் பெரிய தவறுகள் எல்லாம் நடந்து விடுகின்றன. அவற்றை எங்களைப் போன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காண்பிப்பது கடமை. 4—3—1979 அன்று இரவு 10 மணிக்கு திருச்சியிலிருந்து கோவைக்குப் புறப்படும் ரூட் எண் 515 என்ற பஸ் அன்றைக்கு வரவேயில்லை. அத்தனை பேரும் ரிசர்வ் செய்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். அன்று இரவு முழுதும் அந்த பஸ் வரவே இல்லை. மறுநாள் 5—3—1979 அன்று காலை 6-30 மணிக்குத்தான் அந்த பஸ் புறப்படுகிறது என்று சொன்னால், இரவு பூரா என்ன செய்வார்கள் அந்தப் பயணிகள்? அதே நேரத்தில் 4—3—1979 அன்று இரவு 11 மணிக்குப் புறப்படக்கூடிய திருச்சி-நாகர்கோவில் தடம் எண் 551 பஸ் கூட அன்றைக்கு வரவில்லை. அந்தப் பயணிகளும், இந்தப் பயணிகளும் சேர்ந்து திருச்சியிலே நிற்க, மறுநாள் காலையிலே 6 மணிக்கு அந்தப் பஸ் வருகிறது. இப்படி ஆங்காங்கே நடைபெறுகின்ற இந்தத் தவறுகள் இந்தத் துறைக்கு எவ்வளவு பெரிய கெட்ட பெயரை ஏற்படுத்துகின்றன என்பதை சுட்டிக்காட்டத்தான் இதைக் கூறுகிறேன்.

இன்னொன்று மிக வேதனையோடு சொல்ல வேண்டும். நான் சென்னையிலே இருந்து திருச்சிக்குப் போகிறேன். காலை $3\frac{1}{2}$ மணி. அங்கே போகிறபோது விளக்கும் இல்லை. ஏனோ திடீரென்று மின்சாரத்திற்கும் கோபம் வந்துவிட்டது. அதே நேரத்தில் அங்கே தங்குவதற்கு எந்தவித தனி வசதியும் கிடையாது. இதற்கு முன்னாலே திருச்சியினுடைய ஸ்டேட் எக்ஸ்பிரஸ் பஸ் ஸ்டாண்டில் பொது மக்கள் தங்குவதற்கு என்று பெண்களுக்குத் தனியாகவும், ஆடவர்களுக்குத் தனியாகவும் இடமிருந்தது. அந்த இடித்துவிட்டு இப்போது அங்கே அதைப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் தாங்கள் தங்கும் இடமாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆக,

(திருமதி சி. தமிழரசி)

கனவான்களைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நவிர்ச்சி உணர்வு காரணமாக நிதி அமைச்சர் அவர்கள் கரு சொற்றொடரைப் பயன்படுத்தியிருப்பார்கள் என்று நான் வாழ் தலைவர் அவர்களே, இந்த தந்த மாளிகையிலே மாளி தாழ்வாரத்திற்கு வர வேண்டுமென்றால் அந்த ஒரு தாழ்வாரத்திற்குத் தானே? அதுவும் அந்த மாளிகையின் தானே? எனவே, தந்த மாளிகையில் இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வேண்டும் என்று சொல்வதை விட, மாட மாளிகையிலே இருப்பவர்கள் மேட்டுக்கு வரவேண்டும் என்று சொல்வதைவிட, கூட கோபுரத்திலே பவர்கள் குடிசைக்கு வரவேண்டும் என்று சொல்வதைவிட, சொன்னார்களே குப்பை மேட்டைக் கோபுரம் ஆக்க வேண்டும் என்று, அடிப்படையிலே நாம் அடித்தளத்திலே இருக்கிறானே, அல்லல் படு ஆற்றாது அழுகிறானே, எள்ளி நகையாடப்படுகிறானே, ஏறெடு பார்ப்பாரற்று ஏகடியம் செய்யப்படுகிறானே, பொட்டுப் பூச்சி புன்மைத் தேரைகளாய், சாக்கடையில் நெளியும் புழுக்களாய், சமுதாய கேள்விக் குறியாக இருக்கிறானே, அவனை நாம் மாட மாளிகையிலே வேண்டும். டாக்டர் கலைஞர் அவர்கள் செய்தார்களே, 8 அடி குடிசை வாழ்ந்தவனை 8 அடுக்கு மாளிகையிலே ஏற்றி வைத்தார் அடித்தளத்திலே இருப்பவனை உயர்த்தி, அந்த அல்லல்படுபவ கண்ணீரைத் துடைத்து, அவன் மீது ஆதிக்கம் செலுத்துகிறானே விட உயர்த்தி, அவனுக்கு இவன் விடுகிற எச்சரிக்கை—அதிலிருந்து சோஷலிசம் என்று அண்ணா அவர்கள் எழுதினாரே அந்த சமுதாயத்தை, சமத்துவத்தை நாம் ஏற்படுத்த முயற்சி செய்ய என்று கூறி, இந்த அளவிலே நிதி நிலை அறிக்கையைப் அளவிலே, இது ஒரு லிமிடெட் கம்பெனியின் வருடாந்திர அறிக்கை ஒன்றும் மேலானதாக எனக்குத் தெரியவில்லை என்பதைக் கூறி கொள்கிறேன். வணக்கம். நன்றி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி மந்தாகினி திருஞ இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.



(பிற்பகல் 6-50)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

Nil.

*B. Reports, Notifications and other Papers.*

* 52. The Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 12 of 1979), as passed by the Assembly.

** 53. The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979 (L.A. Bill No. 11 of 1979), as passed by the Assembly.

---

* Laid on the table of the House on 9th March 1979.

** Circulated to all M.L.Cs. on 9th March 1979.

# Index to Tamil Nadu Legislative Council Debates

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*6th to 10th March* 1979.

VOLUME CLVII (Nos. 1 TO 5.)

*Pages.*

## A


ABDUL WAHAB, THIRU K. S.—

Bill—Pawnbrokers (Amendment) Bill, 1979 ... 310–311

Budget for 1979–80, general discussion on ... 326

ACCIDENTS(S)—

Bus—at Thamaraikulam on Coimbatore-Pollachi road towards the end of January 1979, calling attention to ... ... ... ... 130—132

Pallavan Transport Corporation bus on Coimbatore–Nagapattinam route involved in accident at Vallam, Minister's attention called to ... 397

ADJOURNMENT MOTION *re*—

Arrest of Communists ... ... 28–31

Electricity, disconnection of electricity to farmers in Coimbatore district ... ... 32–35

Electricity to farmers in Coimbatore, Salem and Ramanathapuram districts, disconnection of. 121–129

Simco Meters Factory, Tiruchirappalli, labour problem relating to ... ... ... 112–121

A—*cont.*

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Annamalai University, statement *re* dislocation caused by direct action pressing their demands by employees of ... ... ... 395-39

